# ஆராதனை வழி ஆசீர்



பிரான்சிஸ்குவின் புனித காணிக்கை அன்னை சகோதரிகள் சபை
நற்செய்தி பணிக்குழு
கோவை – 641 001

# ஆராதனை வழி ஆசீர்



பிரான்சிஸ்குவின் புனித காணிக்கை அன்னை
சகோதரிகள் சபை,
நற்செய்தி பணிக்குழு
கோவை – 641 001

## அணிந்துரை

கடவுளின் கனிவும் இரக்கமும் நிறைந்த பாதையில் இறைவனோடு நடக்க, புதிய பயணத்தை தொடங்கிய ஒரு கனவு நனவானதே. ஆராதனை வழி ஆசீர் என்ற வெளியீடு. இறைமக்களை வழிநடத்தி செல்வது மேகத்தூணா? நெருப்புத்தூணா? இறைவார்த்தையா? நம்பிக்கையா? நற்கருணையா? அருள்சாதனங்களா? அனைத்திற்கும் விடைகாணும் புத்தகமாக இந்நூல் திகழும் என்பதில் ஐயம் இல்லை.

இறையாட்சியின் பயணிகளாகிய திருஅவையிலுள்ள அனைவரும் இறைமகன் இயேசு வழியில் பயணிக்க ஒரு வழிகாட்டியாக அமைந்திருப்பது, எம் சகோதரிகளின் படைப்பாகிய **ஆராதனை வழி ஆசீர்** என்ற வெளியீடு. இது எம் சபை சகோதரிகளின் ஒட்டுமொத்த ஆன்மீகத்தின் வெளிப்பாடு.

சரியான நேரத்தில் இந்நூல் வெளிவர உதவிய புனித காணிக்கை அன்னை சபைத் தலைமைஅன்னை பேரருள் சகோதரி. பபி லினட் அவர்களுக்கும் படைப்புகளை வழங்கிய அருள்சகோதரிகளுக்கும், உரிய நேரத்தில் உதவி கரம் நல்கிய அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

ஆராதனை வழி ஆசீர் என்ற இந்நூல் வழி அனைவரும் இறைப்பாதையில் பயணித்து இறையாசீர் பெற என் வாழ்த்துக்கள்.

**அருள்சகோ. வீணா**

**மைய நற்செய்திப் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்**

**பிரான்சிஸ்குவின் புனித காணிக்கையன்னை சகோதரிகள் சபை, கோவை**

## பொருளடக்கம்


| வ.எண் | ஆராதனை தலைப்பு |
|---|---|
| 1 | நல்ல சமாரியனாம் இயேசுவை ஆராதிப்போம் |
| 2 | எம்மாவுஸ் பயணத்தின் இயேசுவை ஆராதிப்போம் |
| 3 | தூய ஆவியாரில் இணைந்து கனிதந்திட வாஞ்சையோடு ஆராதிப்போம் |
| 4 | வாழ்வின் வழிபாடான வள்ளலை ஆராதிப்போம் |
| 5 | நிலையான நித்தியனை ஆராதிப்போம். |
| 6 | நம்பினோரை கைவிடா இறைவனை ஆராதிப்போம் |
| 7 | நம்பிக்கையின் கடவுளை ஆராதிப்போம் |
| 8 | சீடத்துவ வழிகாட்டியை ஆராதிப்போம் |
| 9 | உருவாக்கும் இறைவனை ஆராதிப்போம் |
| 10 | புகழ்ச்சியின் ஆண்டவரை ஆராதிப்போம் |
| 11 | இன்ப நாமத்தின் இயேசுவை ஆராதிப்போம் |
| 12 | நட்பின் அன்பரை ஆராதிப்போம் |
| 13 | ஒளியாம் இறைவனை ஆராதிப்போம் |
| 14 | புனித காணிக்கை அன்னையின் அருள் வேண்டுவோம் |
| 15 | கை நெகிழா இறைவனை ஆராதிப்போம் |
| 16 | தியாகத்தின் அன்பனை ஆராதிப்போம் |
| 17 | சுகம் தரும் நல்லவரை ஆராதிப்போம் |
| 18 | நற்கருணை வாழ் நல்லவரை ஆராதிப்போம் |
| 19 | வாழ்வளிக்கும் வள்ளலை ஆராதிப்போம் |
| 20 | வழிநடத்தும் இறைவனை ஆராதிப்போம் |
| 21 | கருணையின் கர்த்தரை ஆராதிப்போம |
| 22 | இதயம் வாழும் இறைவனை ஆராதிப்போம் |

| | |
|---|---|
| 23 | நம்மை அவரோடு இணைக்கும் இறைவனை ஆராதிப்போம் |
| 24 | மனித மனம் புரிந்துக்கொள்ளும் இறைவனை ஆராதிப்போம் |
| 25 | காத்திருக்கும் கர்த்தரை ஆராதிப்போம் |
| 26 | நல்லாயனை ஆராதிப்போம் |
| 27 | பகிர்வின் பரமனை ஆராதிப்போம் |
| 28 | சமாதானத்தின் ஆண்டவரை ஆராதிப்போம் |
| 29 | ஆலயம் உறையும் ஆண்டவரை ஆராதிப்போம் |
| 30 | காக்கும் தேவனை ஆராதிப்போம் |
| 31 | மகிழ்வின் தேவனை ஆராதிப்போம் |
| 32 | செபத்தில் அருள்பொழிபவரை ஆராதிப்போம் |
| 33 | இரக்கத்தின் இறைவனை ஆராதிப்போம் |
| 34 | அமைதியின் இறைவனை ஆராதிப்போம் |

| | |
|---|---|
| 35 | அன்பில் நிலைத்திட தூயவரை ஆராதிப்போம் |
| 36 | இறைப்பாறுதல் தரும் இறைவனை ஆராதிப்போம் |
| 37 | வழிநடத்தும் அன்பனை ஆராதிப்போம் |
| 38 | கிளாராம்மாள் பின்பற்றிய இறைவனை ஆராதிப்போம் |
| 39 | ஒற்றுமையின் இறைவனை ஆராதிப்போம் |
| 40 | நற்கருணையில் வாழும் தூய இறைவனை ஆராதிப்போம் |
| 41 | மனிதம் போற்றும் இயேசுவை ஆராதிப்போம் |
| 42 | உடன்பயணிக்கும் உன்னதரை ஆராதிப்போம் |
| 43 | காக்கும் இறைவனை ஆராதிப்போம் |
| 44 | பாதுகாப்பின் பரமனை ஆராதிப்போம் |
| 45 | இரவேல் அடிகளார் வழி இறைவனை ஆராதிப்போம் |

| | |
|---|---|
| 46 | கனிவின் கடவுளை ஆராதிப்போம் |
| 47 | எல்லாமுமான இறைவனை ஆராதிப்போம் |
| 48 | தந்தையாம் இறைவனை ஆராதிப்போம் |
| 49 | சிறுமலரின் தியாக இறைவனை ஆராதிப்போம் |
| 50 | நம்பிக்கையின் நாயகனை ஆராதிப்போம் |
| 51 | வழியாம் இறைவனை ஆராதிப்போம் |
| 52 | இறையன்பில் நிலைத்திட இறைவனை ஆராதிப்போம் |
| 53 | நீயாக நான் மாற உம்மை ஆராதிக்கின்றோம் |
| 54 | இறைப்புகழுக்கான இறைவனை ஆராதிப்போம் |
| 55 | சாட்சிகளாக வாழவைக்கும் இறைவனை ஆராதிப்போம் |
| 56 | ஆசிர்வதிக்கும் ஆண்டவரை ஆராதிப்போம் |



# 1. நல்ல சமாரியனாம் இயேசுவை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்:**

**முன்னுரை**

**“உங்கள் நடுவே உலவுவேன். நானே உங்கள் கடவுள்! நீங்கள் என் மக்கள்!” (லேவி 26:12)**

கார் மேகமாய், அக்னித் தூணாய், எரியும் முட்செடியாய், இடியிலும் மின்னலிலும், வல்லவராய்த் தோன்றிய இறைவன் இதோ நம் மத்தியில் நற்கருணை வடிவில், அருளின் ஊற்றாய் எழுந்தருளி வந்திருக்கிறார். வாருங்கள் தாள் பணிந்து அவரைத் தொழுவோம். பாவிகளும், பலவீனருமான நம்மை உயர்த்தி, அவர் அருகில் வைத்து, நம்மீது கொண்ட அன்பிற்காய், நம்மைத் தமது இரக்கத்தாலும் பரிவாலும் அரவணைத்து வருகிறார். உம்மை ஆவலோ உற்றுநோக்கி, சந்திக்க வந்திருக்கும் எங்கள் ஒவ்வொருவர் மீதும் உம் கருணை கண்களைக் காட்டியருளும். மகிமை நிறைந்த உமது விண்ணக வீட்டினின்று எம்மைக் கண்ணோக்கும். ஆறுதலையும் தேறுதலையும் அளித்து, எங்கள் இதயங்களை உமது ஆசியாலும் அன்பினாலும் நிரப்பியருளும். மகிமையுள்ள தூய உம் மாட்சி விளங்கும் திருப்பீடத்திலே இணைந்து உம் ஆசீர்வாதத்திற்காய் இறைஞ்சி நிற்கின்றோம். எமது எல்லா நேரங்களிலும் குறிப்பாக தேவையான சமயங்களில் உம்மைப் போன்று நாங்களும் நல்ல சமாரியர்களாய் எம் வாழ்வில் உம்மைத் தொடர எமக்கு மன வலிமையைத் தாரும். பிறரது துயரத்தில் உடன் நடக்க

அருள்தாரும். அதற்கான அருளைக் கேட்டுத் தொடரும் தெய்வீக நற்கருணைப் பிரசன்னத்தில் இணைந்து இறைவனிடம் மன்றாடுவோம்.

**நன்றி**

நிகரில்லாத அன்பினால் நற்கருணையில் எழுந்தருளிய இனிய இறைவனை, அனைத்திற்கும்
அதிபதியான மூவொரு இறைவனை, இரக்கமாய் கண்ணோக்கி, என்றும் தம் அரவணைப்பில் பாதுகாக்கும் இறைவனை போற்றி அவர் ஆற்றிய வியத்தகு செயல்களுக்காய் நன்றி கூறுவோம். ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன் என்ற திருப்பாடல் வரிகளுக்கேற்ப, முழு மனதோடு இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.

**பதில்: நன்றி நன்றி இறைவா! நன்றி நன்றி தலைவா!**

* தெபேராவும் அபினோவாமின் மகன் பாராக்கும் நன்றி கீதம் பாடியது போலவும், ஆண்டவரே என் கோட்டை, என் மீட்பர், புகலிடம், வல்லமை, தஞ்சம் என்று மனமகிழ்ந்து பாடிய தாவீது அரசரைப் போன்றும், இறைவனுக்கு மனதார நன்றிப்பண் பாடுவோம்.
* தோபித்தை குணப்படுத்தி, அவரது மகனின் மனைவி சாராவைப் பேயின் பிடியினின்று விடுதலையாக்கி, அவர்களுக்கு ஆறுதலாக வானதூதர் ரபேலை ஆண்டவர் அனுப்பி, வானதூதர் சென்ற பின்பு, தோபித்து மூன்று மணிநேரம் முகங்குப்புற விழுந்து

கடவுளுக்கு நன்றி செலுத்தியது போல இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம்.

* ஓலோப்பெரின் என்ற கொடியவனைக் கொன்று, யூதர்களைக் காப்பாற்றிய யூதித்து, மக்களோடு சேர்ந்து ஆண்டவருக்கு நன்றிப் பாக்கள் பாடி, நன்றி செலுத்தியது போல, துன்பத்திலேயும் இறைவனின் வல்லமையைப் போற்றி நன்றி கூறிய நீதிமான் யோபைப் போல நாம் இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்காகவும் நன்றி கூறுவோம்.

* இறைவன் நம் உடல், உயிர், உணவு, எண்ணம், அறிவு, காலம், தேவைகள், யாவையும் நமக்குத் தந்து பாதுகாத்து வருகிறார். உலகில் சிறு சிறு நன்மைகளைச் செய்யும் நாம் அதற்குப் பரிகாரமாக கைமாறு செய்கிறோம். ஆனால் இறைவன் நமக்கு செய்யும் வியத்தகு செயல்கள் அனைத்தையும் நாம் மறந்துவிடுகிறோம். அனைத்தையும் இலவசமாக நமக்குச் செய்யும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுவோம்.

* எல்லா நன்மைகளின் ஊற்றும் முடிவற்ற நன்றியறிதலுக்குத் தகுதியுடையவருமான இறைவா, நீர் எங்களுக்காக மனிதராகி, எங்கள் மீட்புக்காக உம்மைத் தந்து நற்கருணை வடிவில் எம்மோடு இருந்து, அன்பின் செல்வங்களை எம்மேல் பொழிந்து, அணையா அன்பைக் காண்பித்து,

பேருதவியை எம் வாழ்வில் புரிவதற்காய் இறைவா உம்மைப் போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுகிறோம்.

**மன்னிப்பு:**

நமது மீட்புக்கு ஈடாக விலைகொடுத்து மீட்கப்பட்டது வெள்ளியோ, பொன்னோ அல்ல, விலை மதிப்பில்லா இயேசுவின் திரு இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டார், பாவம் எனும் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்டு விடுதலை கொடுத்துள்ளார். இருப்பினும் முழுமையான விடுதலை பெற முடியாத அளவிற்கு நமது பலவீனங்கள், குற்றங்கள் நமக்கு தடையாய் உள்ளன. இயேசுவின் இரக்கம், அவரது கனிவு மிக்க பார்வை, அவரது உற்றுநோக்கல் நம்மை எல்லாத் தீமையிலிருந்தும் பாதுகாக்கிறது. அவரது பிரசன்னத்தில் நம்மை இணைப்போம். நம்மால் விட்டுவிட முடியாத சிறு சிறு குற்றங்கள், நம்மை அவரது அன்பிலிருந்து விலக்குகிறது. பாவத்தில் பிடிபட்ட பெண்ணைத் துரத்தி சாகடிக்க எண்ணிய மக்கள் மத்தியில், அவளது குற்றங்களை மன்னித்து, அவளை விடுவித்தார். வரி வசூலித்து வந்த மத்தேயுவின் மனதை மாற்றி அவரைத் தம் சீடராக்க எண்ணிய இயேசு அவரை விடுவித்தார். பாவியான சக்கேயுவை பார்த்து உன் வீட்டிற்கு இன்று மீட்பு உண்டாயிற்று என்று கூறி, அவரை தம்மோடு ஏற்று அவரை அடிமை நிலையிலிருந்து மீட்டார். தம் தவற்றை உணர்ந்த நல்ல கள்வனை தம்மோடு நினைவு கூர்ந்த இறைவனின் இரக்கப் பார்வையில் நம்மை இணைப்போம். அவ்வப்பொது நம்மை அறிந்தும் அறியாமலும் செய்யும் குற்றங்களைப் பொருட்படுத்தாது. அதில் மீண்டும் செல்லாமல்

முழுமையான மனமாற்றத்தில் நம்மை இறைவனோடு இணைப்போம். அவரோடு ஒன்றித்து, அவரது அன்பில் நம்மைப் பிணைப்போம், நமது தவறுகளை முழுமையாய் உணர்வோம். நம் பாவங்களை விட்டு விலகுவதற்கான அருளையும் இரக்கத்தையும் இறைவனிடம் கேட்டு திருப்பாடல் 51-ஐ அனைவரும் இணைந்து வாசிப்போம்.

**நற்செய்தி வாசகம் (லூக். 10 : 25 – 37)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! பொதுவாக மக்கள் அவசர காரியமாக வெளியில் செல்லும் பொழுது, பிறருக்கு உதவி செய்யமாட்டார்கள். இயேசு உவமையாகப் பேசும் பொழுது ஒரு மனிதன் எருசலேமிலிருந்து, எரிகோவுக்குப் போகையில் கள்வர் கையில் அகப்பட்டு, அவனது ஆடைகளை உரித்து, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராய் விட்டுச்சென்றனர். அப்போது தற்செயலாக அவ்விடத்தில் குருவும், லேவியனும் ஒருவர் பின் ஒருவராக விலகிப்போன பின்பு, சமாரியர் ஒருவர் மனமிரங்கி, அவரது காயங்களுக்கு மருந்திட்டு, அவனை தம் வாகனத்தில் ஏற்றி, சத்திரத்திற்கு கொண்டு போய், அவரைத் தொடர்ந்து பராமரிக்க பணமும் கொடுத்துவிட்டுச் சென்றார்.

**நல்ல சமாரியனின் பத்து குணநலன்கள்**

1. அடிப்பட்டவனைச் சுற்றிப்பார்த்தான்
2. தன் பயணத்தை நிறுத்தினான்
3. அடிப்பட்டவன் பக்கத்தில் சென்றான்
4. அன்பான வார்த்தைகளைப் பேசினான்
5. தன்னிடம் உள்ளதை மற்றவரோடு பகிர்ந்து கொண்டான்
6. காயங்களைக் கட்டினான்

7. தன் சொந்த வாகனத்தைக் கொடுத்தான்
8. உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் சென்றான்
9. பணம் கொடுத்தான்
10. மீண்டும் வந்து உதவி செய்கிறேன் என்று கூறியது.

இப்பண்புகளைக் கொண்டிருந்த நல்ல சமாரியர், காயப்பட்ட நபரை மீட்டார். அதுவரை கடந்து சென்றவன் அப்போது நல்ல சமாரியனாய் மாறினார். இயேசுவும் நம் வாழ்வில் நல்ல சமாரியர். மனிதாபிமானம் கொண்டு நல்ல மனிதனாக நடந்து கொண்டு, உதவி வேண்டிய இடத்தில் மனிதாபிமானம் உள்ளவராய் நடந்தார். நாமும் நமது பாதையில் கடந்து செல்வோரிலே பலருக்கும் மனிதாபிமானமுள்ளவராய் நடந்து கொள்வோம். பணத்தைவிட, பொருளைவிட, மனித உயிர் உயர்ந்தது. அடிபட்டவருக்கு உதவி செய்து, அதிலிருந்து எந்தக் கைமாறும் பெறப்போவதில்லை என்பதைத் தெரிந்திருந்தும் உதவி செய்தார். கைமாறு கருதாத அன்பை நாமும் பிறருக்குக் காட்டுவோம். சவாலைக் கண்டு அஞ்சாமல், தானே முன்வந்து உதவி செய்தார். நமது வாழ்வில் சவால்களைக் கண்டு தயங்கி நில்லாமல், முன்வந்து உதவும் பண்பை நமதாக்குவோம். பாதுகாப்பாக அவரை செல்ல வேண்டிய இடத்திற்கு சுமந்து சென்றார். இவ்வாறு எல்லா நிலையிலும் காயம் பட்டவருக்கு நல்ல சமாரியராய் நடந்து கொண்டவர் போன்று, இயேசு நம் வாழ்வில் நல்ல சமாரியர். எவ்வாறு? உள்ளத்தளவில் காயப்பட்டு முடங்கிக் கிடக்கும் நமக்கு ஆறுதலையும் தேற்றரவையும் தந்து நல்ல சமாரியராய், பிறர் நம்மைக் கண்டு கொள்ளாத போது நம்மைத் தேடி வந்து நமது

குற்றங்களைப் போக்கினார். இவ்வுவமையில் இருந்த நாமும் பிறர் வாழ்வில் நல்ல சமாரியராய் மாறுவோம். காயப்பட்டவர்களின் சூழலிலும், துன்புறுவோரின் வருத்தத்திலும் உடனிருப்போம். நம்மால் இயன்ற வரை முடிந்த உதவிகளைச் செய்வோம். பொருட்களைப் பயன்படுத்தி, மனிதரை அன்பு செய்யும் நல்லப் பழக்கத்தை நமதாக்குவோம். பெறுபவர்களாக மட்டுமில்லாமல் கொடுப்பவர்களாக மாறுவோம். நாமும் நல்ல சமாரியரே.

**மன்றாட்டுகள்**

கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும் என்று வாக்குறுதி அளித்த இறைவன் நமது தேவைகளை நாம் கேட்கும் முன்னரே அறிந்து, அதனை நிறைவேற்றி வருகிறார். இத்தகைய அன்பு இறைவனிடம் நமது வேண்டுதல்களை சமர்ப்பிப்போம். திரு அவைக்காக, நாட்டை ஆளும் தலைவர்கள் நாட்டை நல் முறையில் வழிநடத்தவும், இளைஞர்கள் வேலை வாய்ப்பினைப் பெறவும், வெளிநாட்டில் பணிபுரிவோருக்காகவும், இறையழைத்தல் பெருகவும், இறைவனிடம் வேண்டுவோம்.

**மன்றாடுவோமாக**

நாளும் பொழுதும் எமக்கு நல்ல சமாரியராய் இருந்து, யாரும் எம்மைக் காணாத நேரத்தில், எம்மைத் தூக்கி விட்டு, கரம் பிடித்து, ஆறுதல் தந்து, உற்ற துணையாய், எல்லாமாய், இருந்து நடத்தி வந்த இறைவா உமக்கு நன்றி. இனிவரும் காலங்களிலும் உமது அருள் நலத்தையும் ஆசீரையும் என்றும்

நிறைவாய்த் தந்து, உம்மில் புது வாழ்வு வாழவும், பிறர் வாழ்வில் நல்ல சமாரியராய் எங்கள் சொல்லால், செயலால், வாழ்வால் நாங்கள் மாற உமது தூய ஆவியின் அருள் வரங்களையும் வல்லமையையும் தந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.



## 2. எம்மாவுஸ் பயணத்தின் இயேசுவை ஆராதிப்போம்

**ஆராதனை பாடல்:**

**தொடக்க செபம் :**

“உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்” என்று மொழிந்த திவ்விய இயேசுவே, உம்மை சந்திக்க வரும் எங்கள் அனைவரையும், எதிர்கொண்டழைத்து வரவேற்று உறவாட மனம் கொண்டுள்ளீர். நீர் ஆண்டவரென்றும் அனைத்திற்கும் அதிபதியான எங்களது இறைவனென்றும் விசுவசித்து உம்மை ஆராதிக்கின்றோம். இயேசுவே எம் தேவனே, அன்பின் நற்கருணையில் வீற்றிருக்கும் உம்மை எம் முழு மனதோடு, எம் ஒன்றுமில்லாமையை உணர்ந்து, நீரே பரிசுத்தர்,

நீரே ஆண்டவர், நீரே உன்னதர் என உம்மை நாங்கள் வணங்கி ஆராதிக்கிறோம். நிகரில்லா அன்பினால் நற்கருணையில் எழுந்தருளியுள்ள இயேசுவே, எம் இதயச் சிந்தனைகளையும், ஏக்கங்களையும் அறிந்தவரே, உமது நற்கருணைப் பிரசன்னத்திலே எம் அருள் வேண்டி உம் தாழ் பணிந்து உம்மை ஆராதித்து வணங்குகிறோம். எம் வாழ்க்கை முழுதும், இன்பத்திலும், துன்பத்திலும், ஏமாற்றத்திலும், உடல் உள்ள வேதனைகளிலும் உம்மோடு, உம் கரம் பற்றி நம்பிக்கையோடு பயணிக்க அருள் வேண்டி, உம் நற்கருணைப் பிரசன்னத்தில் அமர்கிறோம். எம்மை ஆட்கொள்ளும் ஆண்டவரே.

**போற்றுதல்:**

**பதில்:** என் வாழ்நாளெல்லாம் ஆராதிப்பேன்.

* கார் மேகமாய் அக்கினித்தூணாய், எரியும் செடியாய் இரவிலும் பகலிலும் வல்லவராய்த்
  திகழும் இறைவன் இதோ இங்கே இருக் கிறார். வாருங்கள் அவரை ஆராதித்து வணங்குவோம்.
* ‘உன்னதத்திலே இறைவனுக்கு மகிமை’ என அவரது பிறப்பிலே வானகம் நிறைய இசை முழங்கிய, ஆயிரமாயிரம் வானவரைப் போன்று மகிழ்ச்சி உணர்ச்சியோடு இசைபாடி வாருங்கள் அவரை ஆராதிப்போம்.
* இறைவன் குழந்தையாய் அவதரித்தார் என்ற மகிழ்ச்சியூட்டும் அதிசயச் செய்தியை கேட்ட ஆட்டிடையர்

துள்ளிக்குதித்து ஆராதித்ததைப் போன்று வாருங்கள் அவரை தெண்டனிட்டு ஆராதிப்போம்.

* உயிர்த்த ஆண்டவரில் ஐயம் கொண்டு பின் அவரைக் கண்ட போது பணிந்து உருக்கமாக ஆராதித்த புனித தோமாவைப் போல வாருங்கள் நாமும் அவரை மனமுருக ஆராதிப்போம்.

* “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று அன்புக் கட்டளையிட்ட இயேசுவை ஆசையோடு பார்த்து ஆராதித்த, சீடர்களைப்போல வாருங்கள் அவரை வாஞ்சையோடு ஆராதிப்போம்.

* “இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கயிடும்” எனப் புனித பவுல் போற்றும் தூயவரை வாருங்கள் நாமும் தூய்மையோடு ஆராதிப்போம்.

* அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்கெல்லாம் ஆண்டவர்” என யோவான் கூறும் ஆராதனைக்குரியவரை வாருங்கள் நாமும் ஆராதிப்போம்.

* கெத்சமெனிப் பூங்காவில் நமக்காக இரத்த வியர்வை சிந்திய இயேசுவை வாருங்கள் நாமும் கருணை பொங்க ஆராதிப்போம்.

* கல்வாரி மலை நோக்கி கல்லும் முல்லும் கிழிக்க மனுக்குலத்திற்காக சிலுவை சுமந்து சென்றவரை வாருங்கள் அன்பொழுக நாமும் ஆராதிப்போம்.

* என்றும் வாழும் உயிருள்ள இறைவனாக நற்கருணையில் எழுந்தருளியிருக்கும்

நற்கருணை ஆண்டவரை வாருங்கள் மகிழ்ந்து ஆராதிப்போம்.

ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழை தங்களோடு இருந்த போதெல்லாம், இஸ்ராயேல் மக்கள் வலிமையாக, பாதுகாப்பாக, ஆசீர்வாதமாக உணர்ந்தார்கள். புதிய உடன்படிக்கை பேழை நற்கருணை, புதிய இஸ்ராயேல் மக்களாகிய நமக்கு வலிமை, பாதுகாப்பு, நம்பிக்கை தருகிறது. விண்ணக அவையிலே வீற்றிருக்கும் இறைவனை தூயவர்... தூயவர் என்று எந்நேரமும் இடைவிடாமல் ஸ்துதித்தும், போற்றியும், ஆராதித்தும், மகிமைப் படுத்திக்கொண்டே இருக்கும் கோடிக்கணக்கான புனிதர்களோடும்,

நாமும் இணைந்து இறைவனை முக முகமாய் கண்டு தரிசிப்போம். நாம் இருக்கும் இடத்திலேயே நம்முடைய உள்ளத்தையும், நினைவுகளையும் அவர்பால் எழுப்புவோம். விண்ணகம் சென்று தரிசிக்க முற்படுவோம். எம்மாவூஸ் பயணத்தில் இயேசுவோடு பயணித்து அவரைக் கண்டுகொண்ட சீடர்களைப்போல் “இயேசுவோடு ஒரு எம்மாவூஸ் பயணம்” என்ற தலைப்பில் இந்த ஒரு மணிநேரம் இயேசுவோடு பயணிப்போம். புதுவாழ்வு பெறுவோம்.

**தந்தை கடவுளோடு ஒரு பயணம் - ஏதேன் தோட்டத்தில்**

உலகப் படைப்பின் போது தந்தை கடவுள் ஆதாம் ஏவாலோடு பயணித்த அனுபவம் பெற தந்தை கடவுளோடு பயணிப்போம் அவரது படைப்புகளோடு சேர்ந்து...

**முதல் நாள்**: ஒளி தோன்றுக என்றார். ஒளி தோன்றிற்று. முதல் நாள் ஆண்டவர் படைத்த பகலோடும், இரவோடும் சேர்ந்து பயணிப்போம்.

**பாடல்: ஒளியாம் இறையே வாராய்...**

**இரண்டாம் நாள்**: "நீர்த்திரள்களுக்கு இடையே வானம் தோன்றுக" என்றார். அவ்வாறே ஆயிற்று. இரண்டாம் நாள் ஆண்டவர் படைத்த விண்ணகத் தூதரணிகளோடு சேர்ந்து அவரோடு பயணிப்போம்.

**பாடல்: ஆகாயம் உம்மைப் புகழ்கின்றதே**...

**மூன்றாம் நாள்**: நிலத்தையும் கடலையும் தனித்தனியாக படைத்த வல்லமை மிக்க இறைவனை நிலத்திலுள்ள செடி கொடிகள், பறவைகள் விலங்குகளோடும், கடலிலுள்ள அனைத்து உயிரினங்களோடும் சேர்ந்து புகழ்ந்து அவரோடு பயணிப்போம்.

**பாடல்: ஆண்டவரின் படைப்புகளே அவரைப் புகழுங்கள்**

**நான்காம் நாள்**: கடவுள் படைத்த சூரியன் சந்திரன் மற்றுமுள்ள அனைத்து ஒளிப்பிளம்புகளோடு சேர்ந்து, ஆதியும் அந்தமுமான அவரோடு பயணிப்போம்.

**பாடல்: சந்திரன் உம்மைப் புகழ்ந்திடும் வேளை...**

**ஐந்தாம் நாள்**: கடவுள் படைத்த கடல் வாழ் உயிரினங்கள், வானத்துப் பறவைகளோடு சேர்ந்து அவரோடு பயணிப்போம்.

**பாடல்: உம்மை நான் நேசிக்கின்றேன் இறைவா இறைவா...**

**ஆறாம் நாள்**: அவர் படைத்த ஊர்வன, கால்நடைகள், காட்டு விலங்குகளின் கூட்டத்தோடு அவருடன் பயணிப்போம்.

**பாடல்: உம்மை நான் நேசிக்கின்றேன் இறைவா...**

**ஏழாம்நாள்**: தனது உருவிலும் சாயலிலும் கடவுள் படைத்த ஆதாம் ஏவாளோடு சேர்ந்து அவரோடு பயணிப்போம்.

**பாடல்: பார்க்கும் முகமெல்லாம் இறைச்சாயல் தெரிகிறதே...**

ஏதேன் தோட்டத்தில் மூவொரு கடவுளோடு பயணித்த அனுபவம் பெற்ற நாம், ஒன்றுமில்லாமையிலிருந்து உலகையும் நம்மையும் உருவாக்கிய இறைவனை இப்பாடல் வழியாகப் போற்றுவோம்.

**பாடல்: ஒன்றுமில்லாமையில் நின்ற என்னை...**

**நற்செய்தி வாசகம்: லூக்: 24:13-35**

(அனைவருக்கும் நன்கு அறிந்த நிகழ்வாக இருப்பதால் வாசிப்பதற்கு பதிலாக ஒரு சிறிய காட்சி தியானம் மூலம் தியானிக்கலாம்)

“இயேசுவோடு ஒரு எம்மாவூஸ் பயணம்” என்னும் தலைப்பில் தியானித்து செபித்துக் கொண்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டில், படைப்பின் தொடக்கத்தில் ஆண்டவரோடு பயணித்த நாம், புதிய ஏற்பாட்டில் இயேசுவோடு ஒரு அகப்பயணம், மேற்கொள்வோம். இப்பயணத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள நம் புறக்கண்களை மூடியவர்களாய் அகக்கண்களைத் திறப்போம். கற்பனையில் இயேசுவோடு பயணிப்போம். (ஞுழகவ அரளைஉ உயெ டிந ிடயலநன)

எருசலேமிலிருந்து எம்மாவூஸ் செல்லும் சீடர்களோடு நீங்களும் இணைந்து கொள்கிறீர்கள். அவர்கள் இயேசு செய்த வல்ல

செயல்களையும், அவர் யூதர்களால் சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்ததைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்ததையும் கேட்ட நீங்கள், இயேசுவைப்பற்றி நிறையத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வ மிகுதியால் அச்சீடர்களிடம் "நீங்கள் இயேசுவை நேரடியாகப் பார்த்துள்ளீர்களா? அவர் எப்படி இருப்பார்? என்று கேட்கிறீர்கள். "அவர் மிகவும் அழகானவர். சிவந்த மேனி, உயரமான தோற்றம், கருணை நிறை கண்கள், சாந்தமான முகம் கொண்டவர்" என ஒரு சீடர் கூறியவுடன் இயேசுவை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது போன்று நமக்கு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் உங்கள் முகத்தை தொற்றிக் கொண்டது. இப்படி நீங்கள் வழிநடந்து செல்கையில் வழியில் ஒரு இளைஞன் உங்களோடு சேர்ந்து கொள்கிறார், எருசலேமிலிருந்து தானும் எரிகோ செல்வதாக அந்த இளைஞன் சொல்ல, அனைவரும் திரும்பவும் இயேசுவைப் பற்றியே பேசிக்கொண்டு செல்கிறீர்கள். மாலை நேரம் ஆகிறது, அந்த இரு சீடர்களும் சென்று சேர வேண்டிய எம்மாவுஸ் என்ற இடம் வருகிறது. அந்த இரு சீடர்களும் இயேசுவையும் உங்களையும் தங்களோடு தங்கி விட்டு காலையில் செல்லலாம் என்று வற்புறுத்துகிறார்கள். தெரியாத நபர்களோடு எப்படித் தங்குவது என்ற பயம் தயக்கம் உங்களுக்கு, ஆனாலும் அந்த சீடர்களையும், குறிப்பாக உங்களோடு இணைந்த அந்த இளைஞனைப் பார்த்தால் மிகவும் நல்லவர்போல தோன்றவே நீங்களும் சம்மதித்தீர்கள்.

நடந்த களைப்பால், பசி மயக்கத்தில் இருந்த நீங்கள் அனைவரும் கை கால்களைக் கழுவிவிட்டு உணவருந்த அமர்கிறீர்கள். அந்த இளைஞன் அப்பத்தைப் பிட்டு அனைவருக்கும் கொடுக்கிறார், முதலில் உங்களுக்குக் கொடுக்கிறார். பிறகு சீடர்களுக்குக் கொடுக்கிறார். அதை உண்ட உடனே அந்த இரு சீடர்களும், அவர்களது அகக்கண்கள் திறக்கப்பட்டு, இயேசுவைக் கண்டுகொள்கின்றனர். ஆனால் உங்களால் அவரைப் பார்க்க முடியவில்லை. மிகவும் கவலையாக உணர்கிறீர்கள். இயேசுவைப் பார்க்க என்ன செய்யலாம் என யோசிக்கிறீர்கள். “தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” என்ற இயேசுவின் மலைப்பொழிவு வார்த்தை உங்கள் நினைவிற்கு வருகிறது. உடனே உங்களிடமுள்ள தீய பண்புகளை ஒவ்வொன்றாகக் களைகிறீர்கள். கோபத்தை களைகிறீர்கள். பழிவாங்கும் எண்ணம்... மன்னிக்காமை... புரிந்துகொள்ளாமை... ஆணவம்...சோம்பேறித்தனம்... குறை கூறுதல்... பிறர் பெயரைக் கெடுத்தல்... போன்ற குணங்களை ஒவ்வொன்றாகக் களைகிறீர்கள். உடனே இயேசுவைக் கண்டு கொள்கிறீர்கள். இயேசுவைக் கண்டதும் உங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஓடிப்போய் அவரை கட்டித்தழுவிக் கொள்கிறீர்கள். அங்கிருந்து இயேசுவும் நீங்களும் மட்டும் கை கோர்த்து மகிழ்ச்சியாக நடந்து செல்கிறீர்கள். எங்கு செல்கிறீர்கள் என்று தெரியவில்லை ஆனால் இயேசுவோடு பயணிக்கிறீர்கள்... நம்பிக்கையோடு... எம்மாவூஸ் நோக்கி.

**பாடல்: என் கூடவே இரும் ஓ இயேசுவே...**

நம்மைத் தேடி வந்து அழைத்த இறைவன், நாம் எப்போதும் அவரோடு பயணிக்க, அவரைப் போன்று தூய்மையானவர்களாக வாழ இயேசுவின் கரம் பற்றி பயணித்த புனிதர்களின் முன்மாதிரியைத் இன்று நமக்குத் தர இருக்கிறார். எனவே 10-குள் ஒரு எண்ணைத் தேர்வு செய்வோம். தேர்வு செய்தபின், நாம் தேர்தெடுத்திருக்கும் எண்ணில் வரும் புனிதரின் பண்புநலன்களை நமதாக்க முயல்வோம்.

1. **புனித மரிய மதலேனாள்:** நான் பாவியாக இருந்த போதும், இயேசுவின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு மனந்திரும்பி புனித வாழ்வு வாழ்ந்தேன். அன்பு மகளே! என்னைப்போல் பாவத்தை அகற்றி, இயேசுவை அதிகமாக அன்பு செய்து, புனித வாழ்வு வாழ முயற்சி செய்.

2. **புனித கார்லோ அக்குட்டிஸ்:** நான் பாவியாக இருந்த போதும், இயேசுவின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு மனந்திரும்பி புனித வாழ்வு வாழ்ந்தேன். அன்பு மகளே! என்னைப்போல பாவத்தை அகற்றி, இயேசுவை அதிகமாக அன்பு செய்து, புனித வாழ்வு வாழ முயற்சி செய்.

3. **புனித அல்போன்சா:** நான் இயேசுவின் பாடுகளை இரவும் பகலும் தியானித்தவள். அன்பு மகளே, உன் வாழ்வில் வரும் துன்பங்களை பொறுமையுடன் இயேசுவிற்காக ஏற்று கொள், உன் கடமையை சுத்த கருத்தோடு செய். பெரியோர்களுக்குக் கீழ்படி. செபத்தை எச்சூழ்நிலையிலும் கைவிட்டு விடாதே.

**4. புனித அன்னை தெரசா**: நான் ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், அனாதைகளில் இயேசுவைக் கண்டேன். அன்பு மகளே! உன்னால் முடிந்த உதவிகளை ஏழைகளுக்குச் செய், உன் துறவற வார்த்தைப்பாடுகளை பிரமாணிக்கமாய்க் கடைபிடி.

**5. புனித ஆசிர்வாதப்பர்**: நான் தூய வாழ்வு வாழ பாவத்தை வெறுத்தேன். அன்பு மகளே தாழ்ச்சி, மௌனம், மறைந்த வாழ்வு, துறவு மடத்தின் கட்டுப்பாடுகள் இவற்றைக் கடைபிடித்து பாவத்தை விலக்கி வாழ்.

**6. புனித ஜான் மரிய வியான்னி**: நான் என் பலவீனங்களையும் அவமானத்தையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டதால் இன்று புனித நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளேன். அன்பு மகளே! உன் வாழ்வில் வரும் அவமானங்களையும் தோல்விகளையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டால் நீயும் ஒரு நாள் இறை மாட்சியைக் காண்பாய்.

**7. புனித தேவசகாயம் பிள்ளை**: நான் உண்மையான கடவுளைக் கண்டுகொண்டதால் அவருக்காக உயிரையே கொடுத்தேன். அன்பு மகளே! நீயும் உன்னோடு இருக்கும் பிறரை அன்பு செய். பகைமை பாராட்டாதே. பிறரை மன்னித்து ஏற்றுக்கொள். அப்பொழுது கண்ணால் காண முடியாத கடவுளை அன்பு செய்பவள் ஆவாய்.

**8. புனித அந்தோணியார்**: நான் இயேசுவைக் கரத்தில் ஏந்தும் பாக்கியம் பெற்றேன். இறைவார்த்தையை போதித்ததால் நான் அழியா வரம் பெற்றேன். அன்பு மகளே, நீயும் நல்ல வார்த்தைகளைப் பேசு, பிறரை சபிக்காதே.

அல்லலுறுவோருக்கு இறைவாக்கினராயிருந்து கடவுளின் வார்த்தையால் அவர்களைத் திடப்படுத்து.

**9. புனித அசிசி பிரான்சிஸ்:** நான் இயற்கையில் இறைவனைக் கண்டேன். அன்பு மகளே! நீயும் கடவுள் படைத்த இயற்கையை பேணிக் காப்பாற்று. செடிகளை நட்டு அதைப் பேணிக்காப்பாய், அழிந்து போகும் உலகச் செல்வங்களில், பற்றை அகற்றி எளிமை, தாழ்ச்சி இவைகளைக் கடைபிடிப்பாய்.

**10. திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால்:** நான் என்னைக் கொலை செய்ய முயற்சித்தவரை மன்னித்தேன். அன்பு மகளே! நீயும் உனக்கு தீங்கு செய்தவரை மனதார மன்னித்து விடு. எளிமை, உண்மை, தியாகம் போன்ற நற்பண்புகளை அணிந்து உன்னுள்ளிருக்கும் இறைச்சாயலை வெளிப்படுத்து.

அன்பார்ந்தவர்களே நாமும் இயேசுவின் கரம் பற்றி நடக்கும்போது நமது வாழ்வு எளிதானதாக, மகிழ்வானதாக, பொருள் பொதிந்ததாக இருக்கும். இதற்கான வரங்களுக்காய் செபிப்போம்.

- அன்புத் தந்தையே இறைவா, பல நேரங்களில் எங்கள் அன்றாட வாழ்க்கை சுமைகள், அதிக பாரமாக எங்களை அழுத்தும்போது மனம் தளர்ந்துவிடுகிறோம். உம்மோடு சேர்ந்து நடக்கும்போது எங்கள் சுமை எளிதாகும் என்று உணர்ந்து வாழ எங்களுக்கு அருள் தாரும்.

- அன்றாட வாழ்க்கைப் பயணத்தில் உறவுகளின்றி, உறைவிடமின்றி, அடிப்படைத் தேவைகளின்றி அல்லலுறும் ஏழை எளிய மக்களுக்கு, தாயாகவும் தந்தையாகவுமிருந்து அவர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்.
- தங்கள் பாவ நாட்டங்களால் உம்மை விட்டு வெகுதூரம் சென்று, போதைப்பொருட்கள், தீய நட்புகள் இவற்றிற்கு அடிமையானவர்கள் தங்கள் பாவ செயல்களிலிருந்து விடுபட்டு, முழு நம்பிக்கையோடு உம்மிடம் திரும்பி வரவேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்.
- இயற்கைச் சீற்றங்களாலும், விபத்துக்களாலும், அநியாயத் தீர்ப்புகளாலும் குடும்ப உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு நீரே அரணும் கோட்டையுமாக இருந்து தேற்றி வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- உலக அமைதிக்காக உம்மிடம் மன்றாடுகிறோம். போர், வன்முறை, தீவிரவாதம் நீங்கி மத நல்லிணக்கம், மனித நேயம், காக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்.

**செபிப்போமாக:**

நற்கருணைப் பிரசன்னத்தில் சிறந்து வீற்றிருக்கும் ஆராதனைக்குரிய மீட்பராகிய இயேசுவே, உமது விசுவாசிகளாகிய எங்களை, உமது மகிமை நிறைந்த விண்ணக வீட்டினின்று இரக்கமாய் கண்ணோக்கியருளும், 'திவ்விய நற்கருணையே மோட்சத்திற்கு செல்ல சுலபமான, பாதுகாப்பான வழி' என்று திருத்தந்தை 10-ம் பத்திநாதர் கூறுவதுபோல திவ்விய நற்கருணையில் எந்நேரமும் பிரசன்னமாகியிருக்கும் உம்மை முழுமனதோடு வணங்கி ஆராதித்து, உம் கரம் பற்றி எம் வாழ்க்கை பயணத்தைத் தொடர அருள் தாரும். ஆமென்.



## 3. தூய ஆவியாரில் இணைந்து கனிதந்திட

**ஆராதனைப்பாடல்:**

**தொடக்க செபம்:**

தொடக்கதில், கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்த பொழுது, மண்ணுலகு உருவற்று, வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.

"உங்களோடு என்றும் இருக்கும்படி, மற்றொரு துணையாளரை உங்களுக்கு தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்". யோவா 14:16-17, என்று இறைமகன் இயேசுவை

எங்களுக்கு காண்பித்த ஆவியானவரே! உமது உடனிருப்பும், பாதுகாப்பும், நீர் எங்களுக்கு வழங்கும் உமது ஆவியின் வல்லமையும், ஞானமும் எப்போதும் எம்மை வழிநடத்துவதற்காக நன்றி கூறுகின்றோம். “என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். நான் கூறிய அனைத்தையும் நினைவூட்டுவார் யோவான் 14:26, என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப, இறைத்திருவுளம் அறிந்து செயல்படத் தேவையான ஞானத்தையும் கொடுத்து, நாங்கள் செய்ய வேண்டியவற்றை கற்றுத் தந்து, இறைவனின் அன்பில் எப்போதும் நாங்கள் இணைந்திருக்க, எம்மோடு வாழும் உமது அளவிட முடியாத அன்பிற்காய் நன்றி கூறுகின்றோம்.

தூய ஆவியானவரே நாங்கள் உம்மோடு இணைந்து, மிகுந்த கனி தந்திட தேவையான உமது ஆவியின் வரங்களையும் கொடைகளையும், இந்த செப வழிபாட்டின் மூலம் எமக்கு தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**புகழ்ச்சி:**

**பதில்:** உம்மைப் போற்றுகின்றோம்

- எம்மை வழிநடத்தும் ஆவியே..
- எம்மை நெறிப்படுத்தும் ஆவியே..
- எம்மை தேற்றும் ஆவியே..
- எம்மை அரவணைக்கும் ஆவியே...
- எம்மை ஆட்கொள்ளும் ஆவியே...
- எம்மை நிரப்பும் ஆவியே...
- எம்மை திடப்படுத்தும் ஆவியே...

- எம்மை உற்சாகப்படுத்தும் ஆவியே...
- எம்மை உயிர்ப்பிக்கும் ஆவியே...
- திருஅவையை வழிநடத்தும் ஆவியே..
- படைப்பின் தொடக்கத்திலேயே இருந்த ஆவியே..
- நன்மையை எடுத்துரைக்கும் ஆவியே...
- எம்மோடு இருப்பதற்காக வழங்கப்பட்ட ஆவியே..

**இறைவார்த்தையை பயன்படுத்தி ஆவியானவரைப் பற்றி சிந்திப்போம்:**

- பெந்தகோஸ்து நாளில் அன்னை மரியாளும், சீடர்களும் கூடிச் செபித்துக் கொண்டிருந்த போது அவர்கள் மேல் இறங்கி வந்தவர்.
- இறை வார்த்தைகள் வழியாகவும், படைப்புகள் வழியாகவும் தூய ஆவியானர் செயல்படுகிறார்.
- மூவொரு இறைவனில் ஒருவராக இருந்து, நம்மை இறையன்பில் வாழ நம்மை நெறிப்படுத்துபவர்.
- நமது உள்ளம் என்னும் ஆலயத்தில் எப்போதும் உயிருடன் வாழ்பவர்.
- நம்மில் உள்ள அனைத்து ஆற்றல்களுக்கும் ஊற்றாக விளங்குபவர்.

**தூய ஆவியானவரின் செயல்பாடுகள்:**

**அன்னை மரியாளின் வாழ்வில்:**

மரியா வானதூதரிடம் ஷஇது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!’ என்றார். வானதூதர் அவரிடம், “தூய ஆவி உம்மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உம்மேல்

நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். லூக் 1:34

தூய ஆவியானவரின் செயல்பாட்டை முழுமையாக உணர்ந்த அன்னை மரியாள் "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று தன்னையே இறைவனுக்கு முற்றிலும் கையளிக்கிறார். இறைவனின் மீட்புத் திட்டம் நிறைவேற ஆவியானவரின் செயல்பாடுகளைத் தன்னுள் அனுமதிக்கிறார்.

யூதர்களின் திருவிழாவின் நிறைவு நாளான பெந்தகோஸ்து திருநாளில், அன்னை மரியாளும் சீடர்களும் கூடி செபித்துக் கொண்டிருக்கும் போது, நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் வழியாக தூய ஆவியானவர் இறங்கி வருகிறார்.

தூய ஆவியைப் பெற்றுக் கொண்ட சீடர்கள் புதுப்படைப்பாற்றல் மிக்கவர்களாக, வலிமை மிக்கவர்களாக, எவரையும் கண்டு அஞ்சாது அனைவர் முன்னிலையிலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தார்கள்.

**புனித பவுலின் வாழ்வில்:**

"தூய ஆவியாருக்கு கட்டுப்பட்டு நான் எருசலேமுக்குச் செல்கிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடுமென்பது தெரியாது. சிறை வாழ்வும், இன்னல்களும் எனக்காக காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார். என்னைப் பொறுத்த வரையில் எனது உயிரை ஒரு பொருட்டாக நான் மதிக்கவில்லை. இறையருளைப் பற்றிய நற்செய்திக்கு சான்று பகருமாறு ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை

நிறைவேற்றி என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம்” தி.ப 20:23-24

திருத்தூதர் பவுல் தனது ஒவ்வொரு கடிதத்திலும் தூய ஆவியானவரின் செயல்பாட்டைப் பற்றி விளக்கிக் கூறுகிறார் வேண்டுதல் செய்யுங்கள்” எபேசி 6:18, “தூய ஆவியின் செயல்பாட்டைத் தவிர்க்க வேண்டாம்” 1தெச 5:19.

மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் தூய ஆவியாரின் செயல்பாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும். கடவுளின் ஆவியானவர் கூறுவதைக் கேட்டு அதன்படி செயல்பட வேண்டும் என்பதற்காக திருஅவை திருவருட்சாதனங்களை ஏற்படுத்தி அதன் மூலம் தூய ஆவியை நினைவுபடுத்தி நம்மை செபிக்க அழைக்கிறது.

**மன்றாட்டு:**

**தூய ஆவியாரின் கனிகளைப் பெற மன்றாடுவோம்.**

1. **அன்பு:**

**அன்பின் மிகுதியால் எங்களை தினம் பாதுகாத்து வழிநடத்தும் தூய ஆவியானவரே!**

கிறிஸ்தவத்தின் மையம் அன்பே என்று இயேசு தனது நற்செய்தியில் போதித்து வாழ்ந்து காட்டினார். அவரிடமிருந்து நாங்கள் பெற்றுக் கொண்ட தூய அன்பை சமுதாயத்தில் எங்கள் வாழ்க்கையால் வெளிப்படுத்தி, உண்மையுள்ள கிறிஸ்தவர்களாய் வாழ ஆவியின் கனியாம் அன்பால், எம்மை நிறைவாக நிரப்ப வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. பரிவு:

**இரக்கமும், பரிவும் உள்ள எம் இறைவா!** ஏழை எளிய மக்களின் கண்ணீரை துடைப்பவராகவும், அவர்களுக்காக துணை நிற்பவராகவும் இருந்து உண்மையான பரிவையும் இரக்கத்தையும் எங்கள் தேவைகளில் வெளிப்படுத்தி நாங்கள் பரிவுள்ளம் கொண்டவர்களாக வாழ தேவையான ஆவியின் கனியாம் பரிவால் எம்மை நிரப்பும் படியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அமைதி:

**அமைதியின் தெய்வமே இறைவா!** நாங்கள் விரும்பித் தேடுகின்ற அமைதியையும் சமாதானத்தையும் இச்சமுதாயத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் நிறைவாகத் தந்தருளும். நீர் எங்களுக்கு விட்டுச் சென்ற அமைதியை நாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் தந்திடவும், உலக நாடுகளில் போர்கள், வன்முறைகள் குறைந்து எங்கும் அமைதி நிலவ இவ்வுலகத்திற்கு ஆவியின் கனியாம் அமைதியால் நிரப்பிக் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. பொறுமை

**பொறுமையும், சாந்த குணமும் கொண்ட எங்கள் இறைவா!** நாங்கள் தவறும் போதெல்லாம் எங்களை மன்னித்து நீடிய பொறுமையால் நல்வழிப்படுத்துகிறீர். நீர் எங்களை பொறுத்துக் கொள்வது போன்று, நாங்களும் எங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்களை, மன்னித்து ஏற்றுக் கொள்ள, ஆவியின் கனியாம் பொறுமையால் எம்மை

நிரப்பிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. மகிழ்ச்சி:

**நாங்கள் மகிழ்ந்திருக்க வேண்டுமென்று உமது துணையாளரை எமக்கு தந்த இறைவா!**

பெற்றுக் கொள்வதை விட கொடுத்தலே சிறந்தது என்பதை தொடர்ந்து எங்களுக்கு நல்கி, கிறிஸ்துவின் அன்பில் இணைந்து வாழ்வதே உண்மையான மகிழ்ச்சி என்பதை நாங்கள் உணர்ந்து, எத்தகைய துன்பங்களையும், சோதனைகளையும் சந்தித்தாலும் உம்மோடு இணைந்து கனிதர ஆவியின் கனியாம் மகிழ்ச்சியால் எம்மை நிரப்ப வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. நன்னயம்:

**பகைவரையும் மன்னித்து அன்பு செய்யும் இறைவா!**

வாழும் போது, அனைவருக்கும் நன்மையே செய்து வந்தீர். நுன்மையைப் பெற்ற மக்கள் உம்மை சிலுவையில் அறைந்த போதும் ஷஇவர்கள் செய்வது இன்னது என்று அறியாமல் செய்கிறார்கள். தந்தையே இவர்களை மன்னியும்' என்று கூறினார். உமது முன்மாதிரிகையான வாழ்வால் நாங்களும் தீமை செய்பவருக்கு நல்லதையே செய்ய ஆவியின் கனியாம் நன்னயம் எனும் நற்பண்பால் எம்மை நிரப்பிட, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**7. நம்பிக்கை**

**உயிர்ப்பின் மூலம் எம்மை நம்பிக்கை ஊட்டி தேற்றும் இறைவா!** மனித வாழ்வின் மிகப்பெரிய அடையாளம் நம்பிக்கை. மனிதர்கள் மீது நம்பிக்கை வைப்பதை விட படைத்த உம்மீது நாங்கள் அதிக நம்பிக்கை கொண்டு வாழவும், தளர்ந்து போகும் நேரங்களில் நம்பிக்கையினால் ஒருவர் ஒருவரை தேற்றி நிலைவாழ்வை நோக்கி எப்போதும் பயணித்து வாழ்ந்திட உமது ஆவியின் கனியாம் நம்பிக்கையால் எம்மை நிரப்பிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**8. கனிவு:**

**கனிவும், மனத்தாழ்ச்சியும் கொண்ட அன்பு இறைவா!** பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன் என்று உமது இளைப்பாறுதலால் எம்மை அரவணைத்து, பிறரின் நிலையை அறிந்து, இரக்கத்தோடும், கனிவோடும், எளிய மக்களின் தெய்வமாய் இருந்தீர். உமது கனிவால் எம்மை நிரப்பிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**9. தன்னடக்கம்:**

ஏழைகளின் தெய்வமே! நீர் இறைமகனாய் இருந்தும் எளியவர்களோடும், ஏழைகளோடும் உரையாடி, உறவாடி அற்புதங்கள் நிகழ்த்தினீர். உமது வல்லமையும், அன்பும், பேரிரக்கமும் தாராளமாய் எம்மை வழிநடத்தியதை போல், நாங்களும் எல்லா சூழல்களிலும் ஆடம்பரங்களை தவிர்த்து, எளிய

மக்களாக வாழ ஆவியின் கனியாம் தன்னடக்கம் என்னும் உயரிய பண்பினால் எம்மை நிரப்பிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாடல்:** இயக்கம் அளிக்கும் ஆவியே

**மன்றாடுவோமாக:**

எங்கள் அடைக்கலமும். ஆறுதலுமாகிய இறைவா! உமது ஆவியை எமக்கு துணையாக தந்து, நித்தமும் எங்களை வழிநடத்துகிறீர். உமது அருட்காவல் எப்போதும் எம்மோடு இருப்பதை உணர்கிறோம். பரிசுத்த உள்ளத்தோடு நீர் தங்கும் ஆலயமாகிய எம் உடலினால் நாங்கள் தூய வாழ்வை மேற்கொள்ளவும், தந்தையாம் இறைவனின் திருவுளத்தை அறிந்து நல்வழியில் நடக்கவும், இறையரசையும், இறைப்புகழையும் நாடி, நாங்கள் சரியானவற்றை உணரவும், எங்கள் எண்ணங்களைப் புனிதப்படுத்தி, உமது வரங்களால் எம்மை நிரப்பி காத்திட வேண்டும் என்றும், தூய ஆவியானவருக்கு செவி கொடுத்து வாழ உமது கனிகளால் எம்மை வழிநடத்தி காத்திட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் பெயரால் மன்றாடுகின்றோம். ஆமென்.



## 4. வாழ்வின் வழிபாடான வள்ளலை ஆராதிப்போம்

**ஆராதனைப் பாடல்:**

**முன்னுரை:**

“கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும்” (யோவா 4:24)

உள்ளத்தின் ஆழத்திலிருந்து தம் மக்கள் தம்மை வழிபட வேண்டும் என்பதே இறைத்தந்தையின் விருப்பம். நம்மோடு உடனிருக்கவும், பேசவும் இந்தப் புனிதமிகு நற்கருணையில் இறைமகன் இயேசு நம்முடன் அமர்ந்திருக்கிறார். மிகுந்த அன்புடனும், வணக்கத்துடனும், முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் முழு ஆற்றலோம், முழு உடலோடும் இவ்வாராதனையில் பக்தியுடன் பங்கேற்போம்.

**போற்றுதல்:**

“என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே” (தி.பா.103:2) தந்தையாகிய இறைவன் இரக்கம் மிகுந்தவர், நமக்காக அரும்பெரும் செயல்களை ஆற்றுகின்றவர். அவரது கனிவான செயல்களுக்காக இறைவார்த்தையைக் கொண்டு அவரைப் போற்றுவோம்.

**பதில்:** போற்றிப் போற்றிப் பாடுதே, புகழ்ந்து ஏற்றிப் பாடுதே,

ஆண்டவரை நெஞ்சம் பாடுதே

1. “ஆண்டவர் உண்மையாகவே வாழ்கின்றார், என் கற்பாறையாம் அவர் போற்றப் பெறுவாராக” (சாமு 22:47)

2. “தாம் வாக்களித்தபடியெல்லாம் தம் மக்களாகிய இஸ்ரயேலருக்கு அமைதியை அருளிய ஆண்டவர் போற்றிப் போற்றி” (அர 8 : 56)

3. “உம்மை முன்னிட்டு மகிழ்ந்து களிகூர்வேன் உன்னதரே, உமது பெயரைப் போற்றிப் பாடுவேன்” (தி.பா 9:2)

4. “நான் ஆண்டவரைப் போற்றிப்பாடுவேன் ஏனெனில் அவர் எனக்கு நன்மை பல செய்துள்ளார்.” (தி.பா 13:6)

5. “ஆண்டவர் போற்றிப் போற்றி! ஏனெனில், அவர் என் கெஞ்சும் குரலுக்கு செவிசாய்த்தார்” (தி.பா 28:6)

6. “என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள் போற்றி! தம் பேரன்பை என்னிடமிருந்து நீக்காத இறைவன் போற்றி! (தி.பா 66:20)

7. “இரக்கமுள்ள இறைவா போற்றி! என்றும் உம் திருப்பெயர் போற்றி! உம் செயல்களிலெல்லாம் உம்மை என்றும் போற்றுக!” (தோபி 3:11)

8. “என் ஆற்றல் நீரே! உம்மைப் போற்றிப் பாடுவேன் ஏனெனில், கடவுள் எனக்கு அரண், கடவுளே எனக்குப் பேரன்பு” (தி.பா 59:17)

9. “ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள் அவர் பெயரை வாழ்த்துங்கள் அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள்” (தி.பா 96:2)

10. “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது.” (லூக் 1:47)

**மன்னிப்பு:**

“நம் வாழ்வும் வழிபாடும் இயைந்து பயணிக்க வேண்டுமென்பதே இறைத்திருவுளம். அவ்வாறில்லாமல் இருந்த நேரங்களுக்காக இரக்கம் நிறைந்த இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம். ஏனெனில் அவரது இரக்கம் பெரிது” (சாமு 24:14) என்ற தாவீது அரசரின் வரிகளுக்கேற்ப இறை இரக்கத்தில் நாம் நம்பிக்கை வைப்போம்.

**பதில்:** கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்.

1. எங்கள் வழிபாட்டிற்கும், வாழ்விற்கும் தொடர்பில்லாமல் வாழ்ந்த நேரங்களுக்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்…

2. உதட்டினால் மட்டும் கடவுளைப் புகழ்ந்து, உள்ளத்தை வேறு எண்ணங்களினால் நிரப்பியதற்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்…

3. பல நேரங்களில் பரிசேயரைப்போல் வெளிவேடக்காரராய் இருந்ததற்காக இறை வா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்…

4. வரிதண்டுபவரைப் போல் எங்கள் செபத்தில் தாழ்ச்சியில்லாமல் இருந்ததற்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

5. எங்கள் செபங்களில் நம்பிக்கையின்மையைக் கொண்டிருந்தமைக்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

6. உமது பராமரிப்பிலும், பேரன்பிலும் சந்தேகம் கொண்டதற்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

7. எங்கள் அயலாரை தீர்ப்பிட நேரும்பொழுது, இரக்கமின்றி நடந்துகொண்டதற்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

8. எங்கள் எண்ணங்களாலும், சொற்களாலும் பிறருக்குத் தீங்கிழைத்ததற்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

9. உமது நன்மைத்தனத்தை வாழ்நாளெல்லாம் அனுபவித்த நாங்கள், உமக்கு நன்றி கூற மறந்ததற்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

**நன்றி:**

“உரத்த குரலில் உமக்கு நன்றிப்பா பாடுகின்றேன். வியத்தகு உம் செயல்களை எல்லாம் எடுத்துரைக்கின்றேன்” (தி.பா. 26:7)

அன்பின் ஊற்றான ஆண்டவர் நம் வாழ்வில் ஆற்றிய அரும்பெரும் செயல்கள் ஏராளம், ஏராளம். அவற்றிற்கெல்லாம் நன்றி சொல்ல நம் வாழ்நாளே போதாது. இருப்பினும் நமது உளமார, வாயார இப்பாடல் பாடி மாபெரும் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.

**நன்றிப் பாடல்:** ஓயாத கருணையின் இறைவனே….

**நற்செய்தி வாசகம்:** யோவான் 4: 23 -24

“அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறவிக்கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்?” (உரோ 10:14) என்ற பவுலடியாரின் வார்த்தைகளுக்கிணங்க, தந்தை இறைவனின் அன்பை உணரவும், இயேசுவை அறிந்து கொள்ளவும் மிகச்சிறந்த வழி இறைவார்த்தை வாசிக்கப்படும் நற்செய்தி வாசகத்திற்கு பக்தியுடன் செவிமடுப்போம்.

**நற்செய்தி விளக்கம்:**

கடவுள் ஒரு நாள் நினைத்தார், நான் படைத்தவற்றிலேயே மகிகவும் அழகான, ஆழமான, சிறப்பான இடத்தில் மறைந்து கொள்ள விரும்புகிறேன். மனிதன் என்னைத் தேடிக் கண்டடைய வேண்டும் “ஆழ்கடலில் ஒளிந்து கொள்ளலாம்” என்றார் ஒரு வானதூதர் ஷஉயரமான மலையில் ஒளிந்து கொள்ளலாம்’ என்றார். மற்றொருவர் ஷபள்ளத்தாக்கின் நடுவில்...’, ஷஅடர்ந்த காடுகளில்...’, ஷபூமியின் மையத்தில்...’, இப்படி ஒவ்வொரு பதிலாக வந்து கொண்டிருந்தது. இறுதியாக ஒரு குட்டி வானதூதர் சொன்னது. ஷமனிதனின் இதயத்தில் ஒளிந்து கொள்ளலாம். அது மிகவும் ஆழமானது, அழகானது, சிறப்பானது, ஏனெனில் மனிதன் தனக்குள்ளே இறைவனைத் தேடமாட்டான்’ என்றது.

“உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர்”

உண்மையான மற்றும் நேர்மையான தேடல் உள்ளவர்களால்தான் தன் உள்ளத்தில் இறைவனைத் தேட முடியும். தன்னில் இறைவனைக் கண்டவர்களால்தான் தன் உடல், உயிர், ஆன்மா அனைத்தையும் இணைத்து வழிபாடு செய்ய முடியும். அவர்களால்தான் “கடவுளே! நீரே என் இறைவன், உம்மையே நான் நாடுகின்றேன் என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது. நீரின்றி வறண்ட தரிசு நிலம்போல் என் உடல் உமக்காக ஏங்குகின்றது” எனக் கூற முடியும். உயிர் மட்டுமல்ல, உடலும் கடவுளுக்காக ஏங்குவதே உண்மை வழிபாடு உருகும் உணர்ச்சிகள் மட்டுமல்ல, ஆழ்ந்த அன்பே உண்மையான செபம்.

இந்த இறையன்பு, பிறரன்புச் செயல்களில் வெளிப்பட வேண்டும். கண்களில் கருணை தேங்கி நிற்க வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் இறையுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

காலையில் கண்விழிப்பதும்,

பணிக்கான திறனும்,

உடலுக்கான உணவும்,

மனதிற்கான ஓய்வும்,

நிம்மதியான உறக்கமும்

கடவுளின் கருணை. இப்படி சிறுசிறு நிகழ்வுகளையும் அதாவது வாழ்வையும், வழிபாட்டையும் வேறுபடுத்திப் பார்க்காதவர்கள், இறைமகன் இயேசுவின் உண்மைச் சீடர்களாக இருக்க முடியாது.

உண்மையாக உள்ளத்தில் வழிபடுவோரின் நிலை கூட்டுப்புழுவின் நிலைக்கு

ஒப்பாகும். எனவே அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் இறையுடன் இணைத்து, ஒவ்வொரு கணமும் இறைப்பிரசன்னத்தில் நிலைத்து, நம் வாழ்வையே வழிபாடாய் மாற்றிக் கொள்ள தொடர்ந்து செபிப்போம்.

**பாடல்:** வழிகாட்டும் என் தெய்வமே...

**மன்றாட்டு:**

1. “உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள்நலமும் பேரன்பும் என்னைப் புடை சூழ்ந்து வரும் நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்” (தி.பா 23:6) அருளும் தூய்மையும் நினைத்து தந்தையே இறைவா திரு அவைக்காக உம்மிடம் செபிக்கிறோம். உமது அருளும், பேரன்பும் எந்நாளும் அவர்களை வழிநடத்தட்டும். அவர்களது எண்ணங்களை சோதித்து அறிந்து நெறிப்படுத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. “என் மனக்குறைகளை அவர் முன்னிலையில் கொட்டுகின்றேன்” அளவில்லாமல் அன்பும் உயிரும் அளிக்கும் இறைவா,” (தி.பா 142:2) உலகிலுள்ள அனைத்து குடும்பங்களுக்காகவும் உம்மிடம் செபிக்கிறோம். உறவுகள் வளப்படவும், அன்பினால் நிரப்பப்படவும் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். பல்வேறு பொறுப்புகளை சிலுவையாகச் சுமந்து, விரக்தியுடன் வாழ்பவர்களுக்கு உமது பராமரிப்பைத் தந்தருளும் குடும்பங்கள் பேரன்பினால் நிறைக்கப்பட்டு, அருள்

நலமும், மனவலிமையும், பொருள் நிறைவும் பெற்றிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. “என் இடர் நீங்கும்வரை உம் இறக்கைகளின் நிழலையே எனக்குப் புகலிடமாகக் கொண்டுள்ளேன்” (தி.பா 57:1)

வாழ்வளிக்கும் வள்ளலாம் இறைவா, பெண்களுக்காக உம்மிடம் செபிக்கின்றோம். குடும்பச்சுமை, வன்முறை, பணிச்சுமை, பாலியல் சீண்டல்கள் இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு தன் குடும்பத்தையும், தன்னையும் மகிழ்வாக வைத்துக்கொள்ள முயலும் அவர்களை உமது வலக்கரத்தால் தாங்கி உமது தோள்களின் வலிமையால் அவர்களைக் காத்தருளும். ஆணாதிக்க பிடியிலிருந்து அவர்களை விடுவித்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. “பச்சிலையோ, களிம்போ அவர்களுக்கு நலம் அளிக்கவில்லை. ஆனால் ஆண்டவரே, அனைத்தையும் நலமாக்கும் உமது சொல்லே அவர்களுக்கு நலம் அளித்தது.” (சா.ஞா 16:12)

நலமளிக்கும் எம் இறைவா, இவ்வுலகிற்காக உம்மிடம் செபிக்கிறோம் புயல், வெள்ளம், நிலநடுக்கம், காலநிலை மாற்றங்கள், போர்கள், வன்முறை, பஞ்சம், தொற்றுநோய்கள் இவற்றிலிருந்து இவ்வுலகைக் காத்திட உம்மிடம் செபிக்கிறோம். அச்சம், பதற்றம் இவை நீங்கி மக்கள் நீர் அருளும் அமைதியுடனும், அருளுடனும் நலம் பெற்று திகழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. அமைதி அருளும் கடவுள்தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக!

உங்களுடைய உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது குற்றமின்றி இருக்குமாறு காக்கப்படுவனவாக" (1தெச 5:23)

என்றும் உயிர்வாழும் எம் இறைவா, இவ்வுலகில் அகால மரணமடைந்த ஆன்மாக்களுக்காகவும், உத்தரிக்கும் நிலையிலிருக்கம் ஆன்மாக்களுக்காகவும் உம்மிடம் செபிக்கிறோம். சாவின் வழியாய் ஆட்சி செய்யும் பாவத்திலிருந்து இவர்களை விடுவித்து, இயேசு கிறிஸ்துவின் அருளால் அவர்களை நிரப்பி, நிலைவாழ்வுக்கு அவர்களை அழைத்துக்கொள்ள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**செபிப்போமாக!**

என்றும் வாழும் தந்தையே இறைவா, "என் விருப்பப்படியன்று, உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்ற உம் திருமகனின் வார்த்தைகள் எம் வாழ்வாகட்டும். எல்லாம் எனக்கு நீயே என்று, எல்லாவற்றிலும் உம்மை நோக்கி வந்திட, எப்போதும் உம்மில் இணைந்திருக்க அருள்புரியும். எம் எண்ணங்கள் உமக்கு ஏற்றவையாகவும், எம் சொற்கள் உமக்கு உகந்தவையாகவும், எம் செயல்கள் உம் விருப்பப்படியாகவும், மொத்தத்தில் எம் வாழ்வே நாங்கள் உமக்கு செலுத்தும் வழிபாடாகவும் அமைந்திட எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



# 5. இயேசுவில் நிலைத்திருத்தல்

**ஆராதனைப்பாடல்:** நற்கருணை நாதரே துணையாக வாருமே

**துவக்கச் செபம்:**

நற்கருணை வடிவில் எங்கள் மத்தியில் பிரசன்னமாய் இருக்கும் நல்ல இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி இந்த மணி நேரமளவாய் உம்மோடு இணைந்து உம்மில் நிலைத்திருக்க எங்களுக்கு வரம் அருளும். உமது ஆவியின் அருள் இவ்விடத்தில் நிரப்பி எங்களை வழிநடத்துவதாக, அனைத்திற்கும் அதிபதியாகிய உம்மை வானதூதர்களும், புனிதர்களும் போற்றித் துதித்து ஆராதிக்கும் துதி கணங்களோடு நாங்களும் உம்மை ஆராதிக்கின்றோம்.

கீழ் வரும் வார்த்தைகளின் வடிவில் வாழ்வளிக்கும் வள்ளலை ஆராதிப்போம்.

பதில்: உம்மை ஆராதிக்கின்றோம்

- சேனைகளின் ஆண்டவரே....
- மீட்பளிக்கும் ஆண்டவரே...
- நல்ல ஆலோசனையின் ஆண்டவரே...
- வல்லமையுள்ள ஆண்டவரே....
- எங்களை பெயர் சொல்லி அழைத்தவரே...
- எங்களை காக்கும் கண்மலையே...
- கருணையும் அருளும் நிறைந்தவரே...
- தினமும் எங்களை கரம் பிடித்து வழி நடத்துபவரே....
- உள்ளத்தின் காயங்களை குணப்படுத்துபவரே....

நேரம் பொன்னானது. உழைப்பதற்கு ஒரு நேரம், ஓய்வெடுப்பதற்கு ஒரு நேரம். பாசத்தைப் பகிர்வதற்கு ஒரு நேரமுண்டு. இந்த மணித்துளிகள் நமக்கு பொன்னான நேரம். ஆம். அகில உலகையும் படைத்தாளும் பரமன் அப்பத்தின் வடிவில் நம் முன் பிரசன்னமாய் உள்ளார். அந்த அன்பின் தேவனை நாம் உளமார போற்றிப் புகழ்ந்து அவரோடு இணைந்து நிலைத்திருக்கும் நேரம். இறைவன் நம்மோடு, நம் உள்ளத்தில் பேசுவதை செவிமடுப்போம் **(சிறிது மணித்துளிகள் இயேசுப் பேசுவதை கற்பனையில் நாம் உணர்வோம்)**

**இயேசு பேசுகிறார்,** “உன்னை நான் ஆடையாக படைக்க நினைத்தேன். ஆனால் காலத்தில் கந்தலாகி விடுவாய் என்று ஆடையாக படைக்க மறுத்து விட்டேன். வெறும் உயிரற்ற உடலாக உன்னைப் படைக்க நினைத்தேன். இருப்பினால் மக்கிப் போவாய் என்று நினைத்து உயிரற்ற உடலாக படைக்க மறுத்து விட்டேன். எப்பொழுதும் என்னை விட்டு நீங்காமல் என்றும் என்னோடு நிலைத்து வாழ வேண்டும் என்ற ஆவலினால்” படைப்புகளிலே உயர் படைப்பாய் என் ஆவியை ஊதி உயிருள்ள மனிதனாக உன்னைப் படைத்தேன்.

**மன்னிப்பு:**

அன்பான ஆண்டவரே, வீசும் தென்றல் விரைவாய் கடந்து போவது போல, வாழும் காலமும் சட்டென மறைந்து விடும். நுகர்வு கலாச்சாரம், வேலைப்பளு, அலைபேசி, சொந்த விருப்பு வெறுப்புகள் என படைத்த உம்மை பார்ப்பதற்கும் கூட நேரமில்லாமல், வாழ்த்திப்

போற்ற மறந்து வாழ்ந்த நேரங்களை நினைத்து மனம் வருந்துகிறேன். ( 51 ஆம் திருப்பாடல்)

**பதில்:** என் பிழையெல்லாம் பொறுத்தருளும். செந்நீர் வியர்வை வியர்த்தவரே. என் பிழையெல்லாம் பொறுத்தருளும்.

- கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கு ஏற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும், என் பாவம் அற்றுப் போகும்படி என்னை தூய்மைப்படுத்தியருளும்..
- ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன். என் பாவம் எப்போதும் என் கண்முன் நிற்கின்றது. உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன். உம் பார்வையில் தீயது செய்தேன்...
- இதோ, தீவினையோடு என் வாழ்வைத் தொடங்கினேன். பாவத்தோடே என் அன்னை என்னைக் கருத்தாங்கினாள் இதோ நீர் விரும்புவது உள்ளத்து உண்மையையே. மெய்ஞானத்தால் என் மனதை நிரப்பும்...
- கடவுளுக்கு ஏற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை.
சீயோனுக்கு இன்முகம் காட்டி நன்மை செய்யும்...

- எருசலேமின் மதில்களை மீண்டும் கட்டுவீராக. அப்பொழுது எரிபலி முழு எரிபலியெனும் முறையானப் பலிகளை விரும்புவீர். மேலும், இளங்காளைகள் உமது பீடத்தில் பலியாகச் செலுத்தப்படும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அன்பின் தெய்வமாய் இருக்கிறார். “என் மகனும் மகளும் என்னை நேசிக்கிறார்களா? என்னைத் தேடுகிறார்களா?” என்று நம்மை நோக்கிப் பார்க்கிறார். நம்மீது கொண்ட அன்பால் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் நற்கருணை உட்கொள்ளும் பொழுது நற்கருணை வழியாக இயேசுக் கிறிஸ்துவை நம் இதயத்தில் சுமந்து செல்கிறோம். இயேசுவை இதயத்தில் பெற்ற நாம் மறு கிறிஸ்துவாக மாற வேண்டும்.

**நற்செய்தி வாசகம்:** யோவான் 15: 1 - 8

திராட்சை செடியின் கிளை கொடியோடு இணைந்திருக்க வேண்டும். அப்போது தான் மிகுதியான கனி தரும். நாம் உண்மையான கிறிஸ்துவ வாழ்வு, சீடத்துவ வாழ்வு வாழ்கிறோம் என்றால், கடவுளோடு இணைந்து அவரின் வார்த்தைகளைப் பின்பற்றி அன்பில் நிலைத்திருந்து மிகுந்த கனி கொடுக்க வேண்டும்.

**மன்றாட்டு:**

சற்று நேரம் மௌனமாக நம்முன் இருக்கும் நற்கருணை நாதர் முன் உள்ளத்தைத் திறந்து, ஆய்ந்து நம் மன்றாட்டுக்களை ஏறெடுப்போம்.

1.திரு அவையின் தலைவரே எம் இறைவா, உமது புனித திரு அவைக்காக செபிக்கிறோம்.

உம் அடியாராகிய திருத்தந்தை, ஆயர்களுக்காகவும், திருத்தூதர் வழிவரும் அனைத்து குருக்கள், துறவியருக்காக வேண்டுகிறோம். அவர்களை உம் அன்பின் பாதையில் வழிநடத்தவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2.இரக்கமே உருவான எம் இறைவா, இங்கு கூடியுள்ள அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். உம்மைப் புகழவும் உம்மில் நிலைத்து வாழவும், அவர்களின் ஆன்மவாழ்வு செழிக்கவும் வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3.அருளும் இரக்கமும் கொண்ட எம் இறைவா, துன்புறும் மக்களுக்காக மன்றாடுகிறோம். போரினாலும், இயற்கை பேரிடர்களாலும் உறவு உடைமைகளை இழந்து தவிக்கும் அனைவரையும் நினைவு கூர்ந்து, அவர்களுக்கு நலமான வாழ்வு அமைத்துத் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4.சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் என்று கூறிய எம் இறைவா, சிறுவர் சிறுமியருக்காக மன்றாடுகிறோம், நாட்டின் வருங்கால உலகின் செல்வங்கள் இவர்கள் என்பதை உணர்ந்து, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் இருந்து பாதுகாத்து, சிறப்பான எதிர்காலம் அமைத்து தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பாடல்:** உன்னருகில் நான் இருக்கும் ஒரு நொடிப்பொழுதும்.

**இறுதி செபம்:**

இந்த மணி நேரமாக எங்களை வழிநடத்திய நற்கருணை நாதரே உமக்கு

நன்றி கூறுகிறோம். எங்களது அன்றாட வாழ்விலே வருகின்ற குடும்ப விரிசல்கள், தொழில்களில் ஏற்படும் நெருக்கடிகள், ஏமாற்றங்கள், நம்பிக்கை துரோகங்கள், உடலைத் தாக்கும் நோய்களால் நிலை குலைந்து போகிறோம். அவ நம்பிக்கை எங்களை வீழ்த்தும் முன், நற்கருணை நாதர் எங்களோடு, எங்கள் வாழ்வில் பயணிக்கிறார் என்ற விசுவாசத்தோடு எச்சூழலிலும் உம்மை விட்டுப் பிரியாது உம்மில் நிலைத்து துணிவோடும் மகிழ்வோடும் வாழ எங்களுக்கு வரம் அருளும் எங்கள் ஜீவனுள்ள பிதாவே ஆமென்.



## 6. நம்பினோரை கைவிடா இறைவனை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்:** அன்பு கூருவேன். இன்னும் அதிகமாய்...

நம்பிக்கையின் நட்சத்திரமாக எங்கள் நடுவில் ஒளி வீசிக் கொண்டிருக்கிற ஆண்டவராகிய இயேசுவே! உம்மை ஆராதிக்கின்றோம். ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை, மாறுபட்ட சூழ்நிலையிலும் விசுவசித்தார். பெற்ற வாக்குத்தத்திற்கு மாறாக காரியங்கள் நடக்கும் போது கூட அவர் நம்பிக்கையில் தளரவில்லை.

அன்னை மரியா விசுவாசத்தின் அன்னை, லூக் 1:45 ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள் பேறு பெற்றவர்.

நம்மை அழைத்த இறைவன் நம்பிக்கைக்குரியவர். வாக்கு மாறாதவர் நம் நம்பிக்கைக்கு முரண்பாடான சோதனைகள் வரலாம் ஆனால் நம்பிக்கை எனும் நங்கூரத்தை வாழ்வில் கொண்டு செயல்படும் போது இறை பராமரிப்பை உணரலாம். புனித பேதுரு நம்பிக்கையோடு கடல் மீது நடந்ததால் தண்ணீரும் பாறையானது. ஆனால் நம்பிக்கை குறைவு ஏற்பட்ட போது தண்ணீரில் மூழ்க நேரிட்டது.

**புகழ்ச்சி:**

பதில்: உம்மை ஆராதிக்கின்றோம்

- ஆண்டவரும் ஆள்பவருமான இயேசுவே...
- வல்லவரும் வாழ்பவருமான இயேசுவே...
- தூயவரும் துணைநிற்பவருமான இயேசுவே...
- அன்னையும் எம் தந்தையுமான இயேசுவே...
- ஆதியும் அந்தமுமான இயேசுவே...
- மருத்துவரும் நல்மருந்துமான இயேசுவே...
- நம்பிக்கையின் நங்கூரமான இயேசுவே...
- நம்பிக்கையால் எங்களைப் புதுப் பொலிவுறச் செய்யும் இயேசுவே...
- நாளும் நம்பிக்கை எனும் ஒளியை பாய்ச்சுகிறவரே இயேசுவே...
- நம்பிக்கை தான் வாழ்வு என வாழ்ந்து காட்டிய இயேசுவே...
- எங்கள் நம்பிக்கைக்குரிய பாத்திரமாகிய இயேசுவே....

**சுயஆய்வு: (அமைதியில் சிந்திப்போம்)**

நம் நம்பிக்கை எப்படியுள்ளது?

அது ஆழமானதா? மேலோட்டமானதா?

இன்ப துன்பங்களில் நம் நம்பிக்கை எப்படி செயலாற்றுகிறது என்ற உணர்வோடு இப்பாடலைப் பாடுவோம். (விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்)

**மன்னிப்பு:**

**பதில்:** இயேசுவே என் தெய்வமே என்மேல் மனமிரங்கும் **(பாடல்)**

- அன்பான இயேசுவே! எங்களை அழைத்த நீர் நம்பிக்கைக்கு உரியவர் என்று உணராமல் இருந்ததிற்காக...
- நம்பிக்கையினால் தான் நாங்கள் மீட்பு அடைகிறோம் என்று அறிந்தும் அதனை செயல்படுத்தாமல் இருந்ததற்காக...
- கனானியப் பெண்ணின் நம்பிக்கை போல எங்கள் நம்பிக்கை இல்லாமல் இருந்த தருணத்திற்காக...
- உம் ஆடையின் விளிம்பைத் தொட்டாலே குணமடைவேன் என்று கூறிய இரத்தப் போக்கு உள்ள பெண்ணின் நம்பிக்கையை எங்கள் உள்ளத்தில் உதிக்கச் செய்யாதிருந்ததற்காக...
- மனிதர் மேல், பொருட்கள் மேல் கொண்ட நம்பிக்கைக்காக...
- தூய ஆவியின் கனிகளில் ஒன்றான நம்பிக்கையை உயர்வாக மதிக்காமல் இருந்ததற்காக...

**நற்செய்தி: லூக்கா 8:40-56**

**சிந்தனை:**

இயேசு கிறிஸ்து யாயீரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கும் வழியிலேயே இரத்தப் போக்குள்ள பெண் குணமான புதுமையும் இடம் பெறுகிறது.

இப்புதுமையில், தான் வீட்டை விட்டு வெளியேறிய போது இறக்கும் தறுவாயிலிருந்த மகள் தற்போது இறந்திருப்பாளோ? உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாளோ? என்ற நிச்சயமற்ற நிலையிலேயே, செபக்கூடத் தலைவர் யாயீர் கடவுளை வணங்கி கௌரவிக்கிறார். துன்ப அலைகள் இறைவனின் காதில் வந்து விழுந்ததால், அது வீணாகப் போவதில்லை என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கும் இறைவன், யாயீர் தன்னிடம் கேட்டவுடன் எழும்பிப் பின்னால் செல்கிறார். இயேசு பேசிக் கொண்டிருக்கும் போது குழந்தை இறந்து விட்டதாக செய்தி வருகின்றது. இங்கு தந்தையின் நம்பிக்கை ஒளியும் மங்கத் தொடங்கலாம் என்பதை எண்ணும் இயேசு, “அஞ்சாதே, நம்பிக்கையோடு மட்டும் இரும் என உடனடியாக கூறுவதிலிருந்து, தந்தையின் நம்பிக்கையின்மை, குழந்தையின் உயிர்ப்புக்கு தடையாக இருக்கக்கூடாது என்ற இயேசுவின் நல்லெண்ணம் வெளிப்படுத்தப்படுகின்றது.

சிறுமியின் கையைப் பிடித்து, ஷதலித்தாகூம் என்றவுடன் சிறுமி எழுந்தாள். இயேசுவின் மனிதாபிமானம் இங்கு வெளிப்படுகிறது.

உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் 12 வயது சிறுமிக்கு குணமளிக்கப் போவதை பார்க்கும் ஆவலுடன் பின் தொடரும் கூட்டத்தில் 12 வருடமாகத்

தீராத நோயால் துன்புறும் பெண் ஒருத்தியும் இருக்கிறாள்.

தன் உடையைத் தொட்டு விட்டதால் மட்டும் தனக்குத் தெரியாமலேயே இந்தப் புதுமை நடந்து விடவில்லை, தனக்குத் தெரிந்தே நடந்தது என்பதை எடுத்தியம்பும் இயேசு, அவர்பெற்ற, நம்பிக்கையின் பரிசை மீண்டும் உறுதிசெய்கிறார். தன் உடையில் அந்த சக்தி இல்லை. இது அவரின் நம்பிக்கையால் விளைந்த அற்புதம் என்பதை உரைக்க முயல்கிறார்.

நம் பாவத்தை எண்ணி அவர்முன் செல்லும் போதும் இதே வார்த்தைகளைத் தான் இயேசு நம்மை நோக்கிக் கூறுகிறார். உடல் நோய்களை மட்டுமல்ல. நம் உள்ள நோய்களையும் குணமாக்கும் இறைவன் சுகத்தை மட்டுமல்ல, இறை அமைதியையும், ஆன்மீக நலனையும் நமக்குத் தருகிறார்.

**மன்றாட்டு:**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

1.இரக்கத்தின் ஊற்றாகிய இயேசுவே, திருஅவையை வழி நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையில்லாதவர்க்கு நம்பிக்கையாகவும், சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழி தவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் நாயகனே இறைவா எம்நாட்டுத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மக்களின் நல்வாழ்வை கருத்தில் கொண்டு நீதியுடன் பாரபட்சமின்றி பணிபுரியத்

தேவையான அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எம்மைத் தேடி வந்த இயேசுவே! ஏழைகள், பெண்கள், முதியோர், விதைவைகள், மாற்றுத் திறனாளிகள், விவசாயிகள், நோயாளிகள் அனைவரையும் உம் கரத்தில் ஒப்புக் கொடுக்கின்றோம். இவர்களுக்குரிய உரிமைகள், உதவிகள் தடையின்றி கிடைத்து நலமாக வாழ உம்மை மன்றாடுகிறோம்.

4. அஞ்சாதே நம்பிக்கையோடு இரு, உம் மகள் பிழைப்பாள் என்று சொல்லி யாயீரின் நம்பிக்கையைத் தூண்டி விட்ட இயேசுவே எங்களுக்கும் ஆழமான நம்பிக்கையைத்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பாடல்:** என் கூடவே இரும் ஓ இயேசுவே.

## 7. நம்பிக்கையின் கடவுளை ஆராதிப்போம்

**தூய ஆவியானவர் பாடல்: ஆவியானவரே அன்பின் ஆவியானவரே**

**முன்னுரை**:

நம்பிக்கை என்பது இயேசு கிறிஸ்து ஏற்படுத்திய கத்தோலிக்க திருஅவை நமக்கு கொடுக்கும் ஓர் உன்னத கொடை. இறைவன் வெளிப்படுத்தும் அனைத்தையும் உறுதியான மனதோடு ஐயமின்றி ஏற்றுக் கொள்வது தான் நம்பிக்கை. செபத்தில் எம் நம்பிக்கையைப் பலப்படுத்தும் என்று பலமுறை மன்றாடிக் கேட்க வேண்டும். நம்பிக்கை முயற்சியை நாள்தோறும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். கருணை உருவமும் அன்பின் செல்வந்தரும் படைப்பின் ஆண்டவருமான இறைவா நீர்

எமக்குத் தந்துள்ள அனைத்து ஆசிர்வாதங்களையும் நன்மைகளையும் நினைத்து நான் உமக்கு நன்றி கூறுகிறோம். படைப்பு அனைத்தோடும் சேர்ந்து உம்மை துதித்து ஆராதிக்கின்றோம். என் இயேசுவே இன்று நாங்கள் காண்பதையும் கேட்பதையும், சிந்திப்பதையும், செயல்படுவதையும், நேரிடுவதையும் அதற்கு ஏதுவான அனைத்தையும் உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். நீர் எமக்கு தந்தவைகளும் தந்து கொண்டிருப்பவர்களுக்கும் தர இருப்பவைகளும் ஆன அனைத்து ஆசிர்வாதங்களையும் நினைத்து உம்மைப் புகழ்கின்றோம், போற்றுகின்றோம்.

**போற்றுதல்**

**பதில்: உம்மைப் போற்றுகிறோம்**

- வார்த்தையான இயேசுவே..
- சமாதானத்தின் அரசரே...
- இரக்கம் உள்ளவரே....
- நானே மெசியா என்றவரே...
- நோயுற்றவரை குணப்படுத்தும் இயேசுவே...
- வாழ்வு தரும் உணவினை தந்த இயேசுவே...
- எனக்காய் யாவையும் செய்து முடிப்பவரே...
- நான் பெற்ற நன்மைகளுக்காக....
- நூற்றுவர் தலைவனின் ஊழியனை குணப்படுத்தியவரே...
- பிறவி குருடனுக்கு பார்வை அளித்தவரே...

- காணாமல் போன ஆட்டை தேடிச் செல்லும் நல்லாயனே..
- உம் திரு உடலை உணவாக எமக்கு அளித்த இயேசுவே...
- உலகை மீட்கவே வந்தேன் என்ற இயேசுவே...
- மீட்பளிக்கும் பாறையானவரே...

**நன்றி**

**பதில்: நன்றி-2 இறைவா, நன்றி-2 தலைவா.**

- படைப்பின் ஆண்டவரே இந்த நாளை கொடுத்ததற்காக...
- பாவியாக இருந்த எங்களை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததற்காக...
- எங்களுடைய வாழ்க்கைப் பாதையில் தவறு செய்தவர்களை மன்னிக்கும் மனம் தந்ததற்காக...
- எவ்வளவு பெரிய பிரச்சனைகள் வந்தாலும் உன்னிடமிருந்து பிரிந்து போக விடாமல் காத்ததற்காக...
- எங்கள் அனுதின தேவைகளை நிறைவேற்றி தந்ததற்காக...
- நாங்கள் இருக்கும் நிலையில் எங்களை ஏற்றுக் கொண்டதற்காக....
- உம்முடைய அருள்கொடைகளால் உம் சொந்த பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டதற்காக....
- இறை வார்த்தைகளினால் எங்களை நிரப்புவதற்காக...

**மன்னிப்பு**

நாம் இறைவனுக்கும், நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கும், திருஅவைக்கும், நமது நம்பிக்கைக்கும் எதிராக செய்த பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு திருப்பாடல் 5 சங்கீதத்தை மௌனமாக மன்னிப்புக் கேட்போம்.

பதில்: **நான் பாவி இயேசுவே, என் வாழ்வை மாற்றுமே...**

- மற்றவர்களை தரகுறைவாக பேசியதற்காக...
- என் கடமைகளை ஏனோ தானா என்று செய்ததற்காக...
- ஒருவர் குறையை மற்றவர்களிடம் சொல்லி பெயரை கெடுத்ததற்காக...
- நம்பிக்கைக்கு எதிராகவும் முரணாகவும் பேசியதற்காக...

**இறைவார்த்தை** : லூக்.1:35-38

**சிந்தனை:**

**பழைய ஏற்பாட்டில்** விசுவாசத்திற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக திகழ்பவர் ஆபிரகாம். புதிய ஏற்பாட்டில் விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டு அன்னை மரியா. கடவுளை விசுவாசித்து விசுவாசத்தின் தந்தை உரோ 4:17, சாராவுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று மூன்று மனிதர்கள் வடிவத்தில் வந்த இறைவன் கூறியதை கேட்ட சாராள் சிரித்தாள். தொ.நூ 18:10-ல் ஆபிரகாமுக்கு 100 வயது, சாராளுக்கு மாதவிடாய் நின்ற போயிருந்தது. இந்நிலையில் அவர்களுக்கு குழந்தை பிறப்பது என்பது

நகைப்புக்குரியது. ஆபிரகாம் விசுவாசித்தார். சாரா ஈசாக்கை பெற்றெடுத்தார்.

சூசையின் துணை இன்றியே தூய ஆவியினால் மரியா கன்னிமையில் இயேசுவை ஈன்றெடுக்க முடியும். கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்ற வானதூதரின் வார்த்தையை விசுவாசித்து ஆகட்டும் என்று கூறி மரியா மீட்பின் தாயானார். ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவாசித்தவர் பெயர் பெற்றவரே, மரியா விசுவாசத்தின் வீரமங்கை தம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் விசுவாச ஒளியில் நடந்து விசுவாசத்திற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக திகழ்கின்றார் லூக் 1:37 எங்கெல்லாம் மக்களிடத்தில் விசுவாசம் இருந்ததோ அங்கெல்லாம் இயேசு புதுமை செய்தார். பிற இனத்தைச் சார்ந்த கனானியப் பெண்ணின் விசுவாசத்தை புகழ்ந்து அம்மா உன் விசுவாசம் பெரிது என்றார். அவள் அந்நேரமே நலம் பெற்றாள்.

விசுவாசம் என்பது நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி கண்ணுக்குப் புலப்படாதவை பற்றி மனம் தளராத நிலை. எந்த நிலையிலும் விசுவாசமாகிய கேடயத்தை பிடித்துக் கொள்ளுங்கள், இதைக் கொண்டு நீங்கள் தீயகுணங்களை அழிக்க முடியும்.

விசுவாசம் இன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராய் இருக்க முடியாது, கண்டு விசுவாசிப்பவர்களை விட காணாமலே விசுவாசிப்பவர்கள் பேறு பெற்றவர்கள். விசுவாசத்தை தொடங்கி வைப்பவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மேல்

கண்களை பதிய வைத்து நமது தேவைகளை இறைவன் பதம் சமர்பிப்போம்

**மன்றாட்டு:**

1. திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவிகள் ஆகியோரை நிறைவான ஆசிரால் நிரப்பியருளும். மக்கள் ஆன்மீகத்திலும் முழுமையான வளர்ச்சியிலும் வழிநடத்த தேவையான அருளைத் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. தமிழ்நாட்டை ஆளும் அதிகாரிகள் ஆட்சியாளர்கள் ஆகியோரை ஆசீர்வதித்து, சுயநலம் மறந்து மக்களுக்கு தேவையான நல்ல திட்டங்களைத் தீட்ட நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்த வேண்டும் என்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

3. நாட்டின் வளங்கள் நீர் வளம் நிலவளம் கனிம வளங்கள் பாதுகாக்கப்பட்ட அதனால் மக்கள் வாழ்வு வளம் பெறவும், குடும்பங்களில் பெற்றோர்கள் பொறுப்புடன் குழந்தைகளை வளர்க்கவும் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை அன்பாய் பரிவோடு பராமரித்து பாதுகாக்க வேண்டும் என்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

4. இளைஞர்கள், இளம் பெண்கள், சிறார்கள் தங்கள் வயதுக்கு ஏற்ப கல்வி அறிவு ஞானம் பக்தி ஒழுக்கத்தில் வளரவும், விவசாயிகளுக்காகவும், அடிப்படைத்

தேவைகள் இன்றி வாடுவோர், புலம்பெயர்ந்தோர், சிறையில் வாடுவோர் இவர்களை இறைவன் வழிநடத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்றாடுவோமாக:**

நீங்கள் உலகெங்கும் சென்று எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள் என்று மொழிந்த அன்பு இறைவா விசுவாசம் என்னும் கேடயத்தை நாங்கள் விடாமல் பிடித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் விசுவாசத்தை பற்றி எடுத்துரைக்க அருள் தாரும் நானும் இதோ உலகம் முடியும் வரை உங்களுடன் இருப்பேன் என்று அருள் செய்த உயிருள்ள இறைவனின் மகனாகிய இயேசுவின் வல்லமை உள்ள நாமத்தினால் பகைமை, வெறுப்பு, சோம்பல், பொறாமை, கோபம், அகங்காரம், பொருளாசை ஆகியவற்றிலிருந்து எங்களை காப்பாற்றும் படியாக எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம் ஆமென்.



# 8. சீடத்துவ வழிகாட்டியை ஆராதிப்போம்

**பாடல்:** அன்புள்ள சீடனுக்கு....

**முன்னுரை:** இயேசு வாழ்ந்த காலத்தில் திருத்தூதர்கள் எனவும் சீடர்கள் எனவும் பலர் இயேசுவை பின்பற்றினர். இவர்களில் திருத்தூதர்களை இயேசு தாமே விரும்பி அழைத்தார். இவர்களை எதற்காக அழைத்தார் என்றால் மாற்கு நற்செய்தி 3:14-ல் தம்மோடு இருக்கவும், நற்செய்தி அறிவிக்கவும்.... எனத் தொடர்கிறது. ஆம், அன்பு சகோதரிகளே அவரோடு இருக்கவும் அவரது செய்தியை அறிவிக்கவும் அழைக்கப்பட்ட நமது சீடத்தவ வாழ்க்கையைப் பற்றி நற்கருணை ஆண்டவருடன் அமர்ந்து ஆய்வு செய்வோம்.

**புகழ்ச்சி பலி:**

அவரே நம் கடவுள், நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள், நாம் அவர் பேணிக்காக்கும் ஆடுகள், என ஆர்ப்பரிக்கும் திருப்பாடல்
ஆசிரியருடன் இணைந்து மூவொரு இறைவனை போற்றுவோம்.

1.ஆயிரமாயிரம் மலர்கள் அழகினை அள்ளித்தெளித்துக்
கொண்டிருக்க, இறைப்பேரன்பே எம்மை அழைத்த வியப்பினை எண்ணி எண்ணி உம்மை போற்றிப் போற்றி மகிழ்கிறோம்.

**பதில் : போற்றி போற்றி ......**

2. விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்து அவைகளை தக்க ஒழுங்குடன் செயல்படச் செய்து கொண்டிருக்கும் வல்லமை நிறைந்த என் தலைவா உமது முன் பணிந்து

நின்று உம் கை வண்ணத்தைப் போற்றிப் போற்றி பாடுகிறோம்…

3. அவரது வாய் இணையற்ற இனிமை! அவர் முழுமையும் பேருவகையே! எனப் புகழும் இனிமை மிகு பாடல் ஆசிரியருடன் சேர்ந்து நாமும் இன்றுவரை நாம் பெற்ற இனிய வாய்ப்புகள், அழகான அனுபவங்கள் பலவற்றை எண்ணி உம்மைப் போற்றி போற்றிப் பாடுகிறோம்…

4. கற்பாறையும் கோட்டையுமாகிய இறைவா! உள்ளங்கைகளில் என் பெயரெழுதி கண்ணின் மணியெனக் காத்து வரும் உமது அன்பான பாதுகாப்பிற்காக எமது இதயம் நிறை மகிழச்சியை காணிக்கையாக்கி உம்மைப் போற்றிப் போற்றிப் பாடுகிறோம்.

**மன்னிப்பு வேண்டல் :**

முரண்பாடுகள் நிறைந்த நம் வாழ்க்கையில் முழுமையும் முதல்வனுமான இறைவனை அன்பு செய்யாமல் அவருடன் முரண்பட்ட நேரங்களுக்காக மன்னிப்பு கேட்போம்!

1. தாயினும் சிறந்த தயவு காட்டும் இறைவா! காலங்கள் உம்முடையதாக இருந்தும் உம்மை புகழ்ந்து போற்றுவதற்கான காலத்தை எமது இன்பத்துக்காக, மன நிறைவிற்காக செலவிட்டு வீணாக்கிய எமது நினைவுகளை மன்னிக்க உம்மைப் பணிந்து நிற்கின்றோம் ! மன்னியும் இறைவா! **(சில நொடிகள் அமைதி)**

2. ஒளிப்பிழம்புகளைப் படைத்த இறைவா! உண்மைக்குப் புறம்பாக இதய

நேர்மைக்கு மாறாக நீதிக்கு எதிராக பேசிய வார்த்தைகள் செயல்கள் அனைத்தையும் எம் மனக்கண் முன் கொண்டு வருகின்றோம். இவைகளை தவறு என்று உணர்ந்த எம்மை உம் இரக்கத்தால் மன்னியும் இறைவா! **(சில நொடிகள் அமைதி)**

3. அழைத்தவரே என் இறைவா! அழைப்பின் உயர்வை உணராமல் ஆவியின் வரங்களை கனிகளை வீணாக்கி நுகர்வுக் கலாச்சாரம் மொபைல் கலாச்சாரம் போன்றவற்றை முதன்மைப்படுத்தி வாழ்ந்த நேரங்களுக்காக வருந்தி முழந்தால் படியிட்டு மன்னிப்பு கேட்கிறோம். மன்னியும் இறைவா! **(சில நொடிகள் அமைதி)**

4. நல்ல ஆயனாம் இறைவா! நாங்கள் கடந்து வந்த பாதைகளில் மேடு பள்ளங்களைச் சந்தித்த வேளைகளில் அவைகளை உமது திட்டம் என்று ஏற்றுக் கொள்ளாமல் தன்முனைப்புடன் வாழ்ந்த தருணங்களுக்காக, எம்மைப்பற்றி பெருமையாக எண்ணிய எண்ணங்களுக்காக தாழ்ச்சியுடன் உம் முன் பணிந்து நிற்கிறோம், மன்னித்திடு இறைவா! **(இறைவனின் இரக்கம் அல்லது அன்பை உணர்த்தும் பாடல் பாடவும்)**

**நன்மையின் இறைவனை நன்றியால் வாழ்த்துவோம்:**

ஊடகங்களுக்குள் முடங்கிப்போன இன்றைய அறிவியல் வாழ்வில் அறிவியலைத் தாண்டி ஆன்மீக வாழ்விலும்

அன்றாடத் தேவைகளிலும் நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.

1. வளங்களின் ஊற்றே இறைவா! நாங்கள் வாழ்வதும் இயங்குவதும் உமது அன்பால் உமது இரக்கத்தால் என்று மனதார ஏற்று இந்த நிமிடம் வரை நாங்கள் சுவாசித்துக் கொண்டிருப்பதற்காக எமது மூச்சுக்காற்றால் உமக்கு நன்றி கூறுகிறோம்.

**பதில்:** என் சுவாசக் காற்றே....

2. மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உருவாக்குவோம் என்று கூறி மனிதனைப் படைத்த இறைவா எமது மகிழ்ச்சிக்காக, வளர்ச்சிக்காக நீர் தந்த வானம், பூமி, சூரியன், சந்திரன், நீர், காற்று என அனைத்திற்காகவும் இதயம் மகிழ்ந்து நன்றி கூறுகிறோம்.

**பதில்:** ஆகாயம் உம்மை புகழ்கின்றதே.....

3. என்னை பின் செல் என்று என்னை அழைத்த இறைவா இறையழைப்பினால் உம்மை முழுமையாக அன்பு செய்ய நற்செய்தியின் சான்றாக வாழ எம்மைத் தெரிந்து கொண்ட உமது பேரன்பிற்காக வான் உயர குரல் எழுப்பி நன்றிப் பாடல் பாடுகிறோம் இறைவா!

**பதில்:** இந்த நல்ல தெய்வத்துக்கு நான் நன்றி....

4.அம்மையே அப்பா ஒப்பிலா மணியே! என்னை அடையாளப்படுத்த எனக்கென்று ஒரு குடும்பத்தையும் நான் பணியாற்ற ஒரு நல்ல பணித்தளத்தையும் தெரிவு செய்து கொடுத்த

உமது பராமரிப்பினை எண்ணி எண்ணி மகிழ்ந்து நிற்கிறோம் இறைவா!

**பதில்:** ஓராயிரம் நன்றி நான் பாடுவேன் ......

5. ஞானத்தின் முழுமையே இறைவா! ஆன்மீக வளம் நிறைந்த எமது இந்திய நாட்டிற்காகவும் எத்திசையும் புகழ் மணக்கும் தமிழ் நாட்டிற்காகவும். எம் தாய் திருஅவைக்காகவும் நன்றிசொல்லி இவை யாவும் உமது எல்லையற்ற இரக்கத்தால் அருளப்பட்டவை என ஏற்று அந்த அமைப்புகளால் தரப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் எம்மைச் செம்மைப்படுத்தவே என்ற புரிதலைத் தந்த உமது ஞானத்திற்காக நன்றி மலர்களைத் தூவி மகிழ்கிறோம் தந்தையே! நன்றி அப்பா!

**பதில்:** ஆயிரம் நாவு வேண்டும் ஆண்டவா உம்மைப் புகழ.....

**இறைவார்த்தை: மாற்கு: 3: 13 -19.**

இன்றைய வாசகம் இயேசு சீடர்களை அழைத்தது சீடர்கள் தம்மோடு இருக்க வேண்டும், தம்மோடு பயணிக்க வேண்டும், தமது அழைத்தல் வாழ்வின் அருளால் தீய ஆவி போன்ற தீமைகளை வெல்ல வேண்டும் தன்னிடமிருந்து கற்றுக் கொண்ட நற்செய்திகளை உலகெங்கும் பரப்ப வேண்டும் இதனால் தனது சீடர்களாக சீடத்தவ வாழ்வு வாழ வேண்டும் என்று விளக்குகிறது.

மேலும் சீடத்துவ வாழ்க்கை என்பது மத்: 10:9-10 பொன் வெள்ளி செப்புக்காசு எதனையும் உங்கள் கச்சைகளில் வைத்தக்கொள்ளாத நிலை பயணத்திற்கு இரண்டு அங்கி இல்லாத நிலை மத்: 19: 21 உடைமைகளை விற்று ஏழ்மையாகும் நிலை மத்: 19: 29 வீடு சகோதர

சகோதரிகளை தாய் தந்தையை விட்டுவிட வேண்டிய நிலை என்று வரையறை செய்கிறது. இத்தைகைய அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளைக் கொண்டு உடன் இருக்கும் தன்மையை விளக்கலாம்.

கருவினைத் தாங்கிக் கொண்டிருக்கும் தாயோ அல்லது பால்குடிக்கும் குழந்தையைக் கொண்டிருக்கும் தாயோ, எவ்வாறு எந்த நேரமும் தனது குழந்தையின் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாளோ அதுபோல சீடத்துவ வாழ்வினை மேற்கொண்டிருக்கும் சீடன் எங்கும் எப்பொழுதும் எல்லா வகையான இன்ப துன்ப நேரத்திலும் இறைச்சிந்தனை கொண்டவராக வாழ்வின் அனைத்து நிகழ்வுகளும் இறைத்திட்டமே என்று ஏற்றுக் கொள்ளும் ஆன்மீக முதிர்ச்சி பெற்றவராக வாழும் வாழ்க்கை முறையாகவும் பொருள்கொள்ளலாம்.

**சீடத்துவ வாழ்க்கையின் சில பரிமாணங்களைப் பற்றி தியானிப்போம்.**

குரு சீடன் என்ற நிலையில் இருத்தல் என்றால் குருவின் பாதத்தில் அமர்ந்து அவரது போதனைகளைக் கேட்டு அவைகளை உள்வாங்கி அவற்றை வாழ்வாக்கிட முயற்சி செய்யும் ஆவலாகவும் மனத்துடிப்பாகவும் கொள்ளலாம். குருவின் போதனைகள் வாழ்வாக்கப் படும்போது தனக்குள் ஏற்படும் பேரானந்தத்தை உடன் இருத்தலின் பயனாகக் கொள்ளலாம்.

மீண்டும் அதே குருவின் பாதத்தில் அமர்ந்து தியானித்து செல்லவேண்டிய பாதை எது என்பதனைக் கண்டுணர்வது என்றும்

கூறலாம். இத்தகைய அனுபவத்தைப் பெற்ற இயேசுவின் சிறந்த சீடத்தியாகிய புனித மகதலா மரியாவின் வாழ்க்கைப் பக்கங்களை சற்றே புரட்டிப் பார்ப்போம். “சிறந்த பங்கினை தேர்ந்தெடுத்தாள்” என்று இயேசுவே பாராட்டியுள்ளதை படித்திருக்கிறோம் இப்புனிதை என்றைக்கு இயேசுவைப் பின் தொடர முற்பட்டாரோ அந்த நிமிடம் தொடங்கி இறுதிவரை அவருடைய அன்பிலே நிலைத்திருந்தார். இயேசு மட்டுமே தனது குரு என்பதில் முனைப்பாக வாழ்ந்தார். அவருடன் இருத்தலை வாழ்வாக்கிக் கொண்டார். தனது தலைவனாம் இயேசுவின் கொடுமையான வேதனையான கல்வாரிப்பயணத்தின் போது தனது உடனிருப்பால் ஆறுதல் தந்தாள். இயேசு சிலுவையில் தொங்கியபோது சிலுவையினடியில் நிற்கும் மனத்துணிவு பெற்றாள். யூதப் பெண்கள் வெளியில் வரக்கூடாது என்ற சட்டத்தை உடைத்து தனது சிறந்த வகையில் சீடத்துவத்தை நிலைநாட்டினாள். இயேசு இறந்த உடலை சிறந்த வகையில் அடக்கம் செய்ய இயலாமையை நினைத்து நினைத்து வேதனைப்பட்ட காரணத்தால் அவளால் உறங்கமுடியவில்லை. ஓய்வு நாள் முடிந்தும் முடியாமலேயே கல்லறையை நோக்கி வாசனைப் பொருட்களுடன் ஓடோடி வருகிறாள். இறந்த உடலைக் காண வந்தவளுக்கு சீடத்துவத்தின் பரிசாக தனது குருவினை தனது தகைசால் தலைவனை தனது இதய அன்பரை உயிரோடு காணும் பேறு பெற்றாள். உயிர்த்த இயேசுவை முதல் முதலாகக் காணும் பேறு பெற்றாள்.

**சீடத்துவ வாழ்வின் கடமைகள் பற்றி சிறிது காண்போம்.**

மத்தேயு நற்செய்தி 16:24 இல் “என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். மாறாக என் பொருட்டு தம்மையே அழித்துக்கொள்கிற எவரும் வாழ்வடைவர்”. இந்தப் பகுதியில் நம் குருவாகிய இயேசு சீடத்துவ வாழ்வில் தன்னலம் துறக்க வேண்டும் தினம்தினம் சிலுவைகளைச் சுமக்க வேண்டும். அவ்வாறு சுமந்தால் நமக்கு வாழ்வு நிச்சயம் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறார். சீடத்துவ வாழ்வில் சிலுவைகளைச் சுமக்க எங்கும் எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும் என்பதை வெளிப்படையாகவே கூறுகிறார். புனிதர்கள் அனைவரும் சிலுவையின் படிக்கட்டுகள் வழியாகவே விண்ணகம் அடைந்தனர் என்பது நாம் அறிந்த உண்மை. இந்த உண்மை நம் வாழ்விலும் அரங்கேறும் என்பதனை மனதில் இருத்துவோம். துன்ப நேரங்களில் ஆழ்ந்த விசுவாசத்துடன் போராட இறையருளைக் தேடுவோம்.

**சிறிது நேரம் அமைதி காப்போம்.**

**இறைவேண்டல் செய்ய மனதை ஒருமுகப்படுத்துவோம்.**

1. வானகத்தந்தையே! உமது இறையரசுப்பணிக்காக தன்னை அர்ப்பணமாக்கிய திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர் அனைவரையும் உம்பாதம் வைத்து அவர்களது உடல் உள்ள தேவைகளுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் தங்கள்

அர்ப்பணத்தை எல்லாச் சூழல்களிலும் வாழ்வாக்கிடத் தேவையான மனத் துணிவைத் தந்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. அரசர்களுக்கெல்லாம் அரசரே எம் இறைவா! எமது நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரையும் உம்பாதம் வைக்கின்றோம். இவர்கள் தியாக மனநிலை கொண்டவர்களாக நேர்மையான முறையில் தங்களது பதவியை தங்களது செல்வாக்கினைப் பயன் படுத்தும் நல்ல தலைவர்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நல்ல ஆயனாம் இறைவா! திருமுழுக்கினால் உம்மக்களாகத் தெரிந்த கொண்ட உமது மந்தைகள் திருஅவையின் போதனைகளுக்கு செவிமடுத்து திருமுழுக்கினால் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப வாழ்ந்து உமது அரசினைப் பரப்பிடும் கருவிகளாக வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் ஒளியே இறைவா! உம் திருஅவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் இறையாட்சியை பரப்பும் சீடர்களாக வாழ்ந்து இறுதி மூச்சு வரை சீடத்துவத்தின் ஆழத்தை புரிந்துகொண்டு வாழ்ந்திட தேவையான வரங்களைத் தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**இறுதி வேண்டல்.**

நிரந்தரமாகிய இறைவா நினைவிலும் நெஞ்சத்திலும் உம்மைத் தாங்கியவர்களாக உமது வார்த்தைகளின் வழியில் வாழ்ந்து மகிழும் சிறந்தசீடத்திகளாக என்றும் வாழ்ந்திட உமது எல்லையற்ற அன்பையும்

அளவற்ற இரக்கத்தையும் நிறைவாகப் பொழியுமாறு வேண்டி மீண்டும் உமக்கு எங்களை அர்ப்பணமாக்குகிறோம். உமது நிபந்தனையற்ற அன்பால் தொடர்ந்து வழிநடத்தும் ஆமென்.



## 9. உருவாக்கும் இறைவனை ஆராதிப்போம்

**பாடல்:** நற்கருணை நாதரே என்னில் துணையாக வாருமே...

நற்கருணையில் பிரசன்னமாகி, எம்மோடு உறைய மனம் கொண்டு எம் மத்தியில் வாசம் செய்யும் எம் இனிய யேசுவே உம்மை ஆராதிக்கிறோம். போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுகிறோம். படைக்கும் தெய்வமே, ஒன்றுமில்லாமையிலிருந்து இவ்வுலகை உருவாக்கியவரே, உம் படைப்பின் ஆற்றலைக் கண்டு வியக்கிறோம். யாரும் நெருங்க முடியாத, வெப்ப ஆற்றலையும் மற்ற ஆற்றல்களையும் தன்னிடம் கொண்டுள்ள சூரியனையும், கோள்களையும், வான மண்டலத்தையும் வான் மண்டல படைகளையும்

உருவாக்கிய தேவனே உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம். எம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றலை கொண்டவரே உம்மை துதிக்கிறோம். துதிகளின் மத்தியில் வசிக்கும் உம்மை துதிக்க ஆசிக்கிறோம்.

**பதில்:** துதிப்பேன் துதிப்பேன் தேவனை
துதிகள் மத்தியில் வசிப்போனே

- ஒரு சொல்லாம் உலகை உருவாக்கியவரே...
- ஒன்றுமில்லாமையிலிருந்து உலகை உருவாக்கியவரே...
- ஆற்றல் அனைத்தும் கொண்டவரே...
- ஒளி தோன்றுக என்று ஒளியையும், பகலையும் படைத்தவரே...
- இருளையும் இரவையும் படைத்தவரே...
- வானத்தை உருவாக்கி வானத்திற்கும் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தவரே....
- நிலத்திற்கும், கடலுக்கும் பெயரிட்டவரே புற்பூண்டுகளையும், விதை தரும் செடிகளையும், கனி தரும் பழங்களையும் அந்த அந்த இனத்தின்படி நிலம் விளைவிக்கச் செய்தவரே....
- பகலை, ஆள சூரியனையும், இரவை ஆள நிலவையும் படைத்தவரே...

- திரளான உயிரினங்களை நீரிலும், நிலத்திலும், வானிலும் படைத்தவரே...
- படைத்த அனைத்திற்கும் ஆசி வழங்கி பழுகிப் பெருகச் செய்தவரே....

அனைத்தையும் படைத்த பிறகு கடவுள் மானிடரை தம் உருவிலும், சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், கால்நடைகளையும், விண்ணுலகு முழுவதையும் ஆளட்டும் என்றார். அவர் மனிதனை தம் உருவில் ஆணும் பெண்ணுமாக படைத்ததை தொடக்க நூலிருந்து வாசிக்கக் கேட்போம். (தொ.நூல் 2:7, 15, 20 – 23) தன் சாயலிலும் உருவிலும் படைத்த இறைவனை மகிமைப்படுத்துவோம்.

**பாடல்:** என்னை வெறுமை ஆக்கினேன்
உம்மை மகிமைப்படுத்தவே...

ஆதாமா என்ற எபிரேய சொல்லுக்கு மண் என்பது பொருள் ஆதாம் என்ற சொல்லுக்கு மண்ணால் ஆனவன் என்பது பொருள். கடவுள் மண்ணைப் பார்த்து நம்மை அவரது சாயலாக படைக்க விரும்பினார். மருத்துவர்கள், அறிவியலார் செய்ய முடியாததை கடவுள் செய்து முடித்தார். ஆயிரம் பேர் பார்த்தாலும் பயனில்லை. பார்க்க வேண்டியவர் பார்த்து கையில் எடுத்து வனைவதற்கு முன் என் நிலை அறிந்தவர். மற்றவர்கள் வனைந்த பிறகு தான் என்னைப் பற்றி அறிவார்கள். இறைவா உம் கையில் என்னை களிமண்ணாக ஒப்புக்கொடுக்கின்றேன் உம் விருப்பம் போல் வனைந்திட உம் சித்தம் என்னில் நிறைவேற ஆசிக்கிறேன்.

**பாடல்:** என் ஆத்மாவும் சரீரமும்
என் ஆண்டவர்க்கே சொந்தம்
இனி வாழ்வதும் நானல்ல...என்னை
எந்நாளும் நடத்திடும்.

**இறைவார்த்தை**

எரே.18:1 - 6

இறைவனின் கரத்தில் நம்மை களிமண்ணாக ஒப்படைக்காதவரை நமக்கு வடிவமில்லை, உருவமில்லை, மதிப்பில்லை. நீ என் கண்ணுக்கு விலையேறப்பெற்றவள் என்று கடவுள் நம்மை நோக்கி கூறும் போது நமது மதிப்பு அதிகரிக்கும், குயவன் ஒருவன் பானைகளை வனைந்து கொண்டிருந்தான். அரசர் அவனைக் காண வந்தார். அவன் செய்யும் பானையைத் தொட்டுப் பார்க்க ஆசைப்பட்டார். ஈரமாக இருந்து சட்டியை அரசன் தொட்டதும் அவரது விரல்கள் சட்டியில் பதிந்தது. உலர்ந்த பின்னும் விரல்களின் அடையாளம் அதில் இருந்தது. மற்ற பானைகளின் விலையை விட அரசன் தொட்ட பானையின் விலை கூடியது. தொட வேண்டியவர் தொட்டால் நமது மதிப்பும் கூடும். நம் வாழ்விலும் இறைவன் எத்தனையோ முறை குயவன் தன் விருப்பபடி, கலம் அமையாத போதெல்லாம் அதை வெறொரு கலமாக வடித்துக் கொண்டிருப்பதைப் போன்று, நம்மையும் உடைத்து உருவாக்க சந்தர்பங்களை வாய்ப்புக்களை கொடுத்திருக்கிறார்.இதை உணர்ந்திருக்கிறோமா? சிந்திப்போம். களிமண் கலமாகிய நம்மை இறைவன் தொட நாம் அனுமதிக்க வேண்டும். அவர் கரங்களில் நம்மைத் தாங்குவதால் நமது மதிப்பு கூடும்.

**பாடல்:** திருக்கரத்தால் தாங்கி என்னை
திருசித்தம் போல் நடத்திடுமே

உருவாக்கும் இறைவன் பலவிதங்களில் உருவாக்குகிறார். தன் சாயலில் படைக்க, உயிர்கொடுக்க ஒரு குடும்பத்தை நமக்களித்தார். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழ்ந்து வருகிறோம். Man is yet to be இறக்கும் வரை நாம் மாறிக்கொண்டு, வளர்ந்து கொண்டு உருப்பெற்றுக் கொண்டே தான் இருப்போம். அவர் வடிவமைத்ததை அழகு படுத்த மெருகூட்ட ஒரு குடும்பத்தை, நிறுவனத்தை, சூழல்களை அமைத்துக் கொடுக்கிறார்.

'ஒரு மனிதர் பிற மனிதரோடு கூடி வாழ்வதாலேயே மனிதராகிறார். கூடி வாழும் குடும்ப வாழ்வில்தான் ஒரு மனிதர் முழுமையாகிறார் என்று தென் ஆப்பிரிக்க இறையியலாளர் கூறுகிறார். "அதனால் நாம் எல்லோரும் இறைமகன் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்'

எபே 4:13-ல் கூறப்பட்டுள்ள படி கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவை பெறுமளவுக்கு முதிர்ச்சியடைய முயலுவோம், நாமும் உடைந்த பாத்திரமாய் இருக்கலாம், விலை போகாத பாத்திரமாய் குறைவுள்ளவர்களாய் இருக்கலாம். நமது குறைகளுக்காய் மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம்.

மன்னிப்பு:

பதில்: என்னை மன்னியும் என்னை மன்னியும் யேசுவே

என்னை மன்னியும் (பாடல்)

- உம் விருப்பத்திற்கு எதிராக நான் வாழ நினைத்த தருணங்களுக்காய்….
- உம் பிரசன்னத்தை விட்டகன்று என் விருப்பம் போல் நடந்ததற்காக….
- என்னை திருத்த, பிறர் என் குறைகளை சுட்டுக்காட்டிய போது கோபப்பட்டதற்காக….
- என் துன்ப வேளையில் நீர் என்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறீர் என்பதை ஏற்க மறுத்ததற்காக…..
- உம் சாயலாக உருவாக்கப்பட்ட நான் மனித மாண்பை மதிக்காத தருணங்களுக்காக….
- நீர் உருவாக்கிய உலகை பாழ்படுத்தி வருவதற்காகவும் உமது சக்திகளான நீர், மின்சாரம், மரம் போன்றவற்றை வீணாக்கியதற்காக......
- இயற்கையின் சூழலை மாசுபடுத்தியதற்காகவும்….

**பாடல்:** குயவனே, குயவனே படைப்பின் காரணனனே

**மன்றாட்டு:** (அமைதியில் செபிப்போம்)

**இறுதி செபம்:**

படைப்பின் பரம்பொருளே, உருவாக்கும் இறைவனே ஆதியிலிருந்தே உம் எண்ணத்தில் என்னை நினைத்து, உருகொடுத்து, உயிர் அளித்த தேவனே உமக்கு நன்றி. ஒவ்வொரு நாளும் என்னை கையில் எடுத்து, உடைந்து போன நேரங்களில் மெருகூட்டி உருவாக்கி வருகிறீர். வலி தந்த நேரத்தில் மருத்துவராய் இருந்து என்னை சுகப்படுத்தும் தெய்வமானீர். கைவிடப்பட்ட நேரத்தில் உம் வார்த்தையால் தேற்றினீர். என்னை அரவணைக்கும் தெய்வமானீர். என்னை பண்படுத்தும், பயன்படுத்தும், உருமாற்றும் அனைத்திற்கும் நன்றி கூறி, உம் சித்தம் எம்மில் நிறைவேற எம்மை உம் கையில் ஒப்படைக்கிறோம். இவை அனைத்தையும் உம் திருமகன் இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்



## 10. புகழ்ச்சியின் ஆண்டவரை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்:**

**முன்னுரை செபம்:**

அன்பின் மூவொரு இறைவா! விண்ணையும் மண்ணையும் படைத்தவரே, எம் ஆற்றலாகிய ஆண்டவரே, உம்மிடம் நாங்கள் அன்பு கூர்கின்றோம். ஆண்டவரே நீரே எம் மீட்பர், எம் இறைவன், உம் அன்பு பிரசன்னத்தில் எங்களை முழுவதும் அர்ப்பணிக்கின்றோம். உமது பிரசன்னம் எங்கள் இதயத்தை மகிழ்விக்கின்றன, எம் கண்களுக்கு ஒளியூட்டுகின்றன.

உம்மையே எப்போதும் எம் கண்முன் வைத்துள்ளோம். சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே. எல்லோரும் என்னிடம் வாருங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று வாக்குறுதி தந்தவரே. ஏனெனில் நீர் ஒருவரே எல்லா புகழுக்கும் உரியவர் எனவே உம்மைப் போற்றுகின்றோம்.

**பாடல்**: உம்மை போற்றுகின்றோம்...

**புகழ்ச்சி மன்றாட்டு:**

**பாடல் :** உம்மைப் போற்றுகின்றோம்...

1. படைகளின் ஆண்டவரே! உமது உறைவிடம் எத்துணை அருமையானது! என் உள்ளமும் உடலும் என்றுமுள்ள இறைவனை மகிழ்ச்சியுடன் பாடுகின்றது.....
2. வாருங்கள், ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள் நமது மீட்பின் பாறையைக் போற்றி ஆர்பரியுங்கள் ஏனெனில் எல்லா புகழுக்கும் உரியவர் ஆண்டவர் எனவே எக்காலமும் போற்றி புகழ்ந்து பாடுவோம்....

3. ஆண்டவர் மாண்புமிகு இறைவன் தெய்வங்கள் அனைத்திற்கும் மேலான பேரரசர் மாட்சியும் புகழ்ச்சியும் அவர் திருமுன் உள்ளன ஆற்றலும் வல்லமையும் அவரது திருத்தலத்தில் உள்ளன எனவே அவரைப் புகழ்ந்து பாடுவோம்......

**பாடல்:** உம்மை போற்றுகிறோம்.

4. நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள் அவரது அரியணைமுன் தாள் பணிந்து வணங்குங்கள் "அவரே தூயவர்" கடவுளாகிய ஆண்டவரே நீர் எத்துணை மேன்மைமிக்கவர்! நீர் மாண்பையும், மாட்சியையும், பேரொளியையும் ஆடையாக அணிந்தவரே உம்மைப் போற்றுகின்றோம்....

5. ஆண்டவரின் தூதர்களே, அவரைப் போற்றுங்கள் ஆண்டவரின் படைகளே, அவரது திருவுளப்படி நடக்கும் அவர் தம் பணியாளரே, ஆண்டவரின் அனைத்துப் படைப்புகளே என் உயிரே ஆண்டவரைப் புகழ்ந்து போற்றிடு....

6. ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக!

ஆண்டவரையும், அவரது ஆற்றலையும், அவரது திருமுகத்தை இடையறாது நாடுவோரும் அவர் தம் வியத்தகு செயல்களையும், அருள்செல்களையும் நினைத்துப் போற்றி பாடுவோம்.....

**நன்றி மன்றாட்டு:**

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர் என்றும் உள்ளது அவரது பேரன்பு" ஆண்டவர் நமக்குச் செய்த எல்லா

நன்மைகளையும் நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம். (மௌனமாக)

திருப்பாடல் - 136,

நாம் என்றும் நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். நம்முடைய அன்றாடத் தேவைகளில், நம்முடன் இருக்கும் ஆண்டவர் எவ்வளவு மாட்சிக்கும், புகழ்ச்சிக்கும் உரியவர் என்பதை நினைத்தும், அன்றாடம் அவர் நமக்கு தரும் ஆசீர்வாதங்களுக்காகவும், அனுதினமும் "நம்மை அன்பு செய்வதற்காகவும்" அவருக்கு நன்றி செலுத்துவோம்.

1-தெசலோனியர் 5:16-17,

"இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே".

**நன்றிப்பாடல்:** "நானும், என் வீடும், என் வீட்டார் அனைவரும் ஓயாமல் நன்றி...

**மன்னிப்பு மன்றாட்டு**

எல்லா புகழுக்கும் உரியவரே, நீர் மாட்சிமிக்க அஞ்சுதற்குரிய இறைவன் உம்மிடத்தில் இரக்கமும் மன்னிப்பும் உண்டு. எனவே என் பாவங்களை உம்முன் அறிக்கையிட்டு மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறேன்.

**பாவ மன்னிப்புக்கா மன்றாடல்:** திருப்பாடல் 51

நீர் அருள் நிறைந்தவர், இரக்கமிக்கவர், நீடிய பொறுமையுள்ளவர், பேரன்புமிக்கவர், நீர் என்றும் மாறாதவர், செய்ய கருதிய தீமையைக் குறித்து மனம் மாறுகிறவர் என்ற நம்பிக்கையில் எங்கள் பாவங்களால் உடைந்த உள்ளங்களை குணமாக்கவும் சோர்ந்த மனங்களை தேற்றிடவும், காயப்பட்ட இதயங்களை

நலமாக்கவும், இருகரம் விரித்தவராய், இதயத்தைத் திறந்தவராய் எப்போதும், எமக்காய் வீற்றிருப்பவரே, உமது திரு இரத்ததால் எங்களை நனைத்து தூய்மைப்படுத்தும்.

**பாடல்: நான் நானாகவே வந்திருக்கிறேன்.**

**நற்செய்தி வாசகம் :** லூக்கா 15:11-32

கருணையே இறைவா! யோவேல் 2:.13 நீங்கள் உங்கள் உடைகளை அல்ல உள்ளத்தை கிழித்துக் கொண்டு என்னிடம் திரும்பி வாருங்கள் என்றவரே, உமது அழைப்பை ஏற்று உம் பாதம் வந்திருக்கின்றோம்.

எங்கள் சொல், செயல், சிந்தனை அனைத்தையும் உமக்கே காணிக்கையாக்குகிறோம்.

“திரு.34:3-6”

ஆண்டவரை நம்பு, நலமானதைச் செய் நாட்டிலேயே குடியிரு. நம்பத்தக்கவராய் வாழ். உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார்.

உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு அவரையே நம்பியிரு அவரே உன் சார்பில் செயலாற்றுவார். உன் நேர்மையைக் கதிரொளி போலும் உன் நாணயத்தை நண்பகல் போலும் அவர் விளங்கச் செய்வார். ஆண்டவர் முன் அமைதியுடன் காத்திரு” என்ற திருபாடல் வசனங்களுக்குகேற்ப மாவேந்தராம் உம் முன் எங்களைத் தாழ்ந்தி, பணிந்து ஒப்புக்கொடுக்கிறோம்.

**பரிந்துரை மன்றாடு:**

“என் கடவுளாகிய ஆண்டவரே! உம் அடியாள் செய்கிற வேண்டுதல்களையும்,

விண்ணப்பத்தையும் கேட்டருளும். உம் அடிமை நான் இன்று உம் முன்னிலையில் எழுப்பும் கூக்குரலுக்கும், செய்யும் வேண்டுதல்களுக்கும் செவிசாய்ப்பீராக.

என்று சாலமோன் உம் மக்களுக்காக மன்றாடியது போல,

படைகளின் ஆண்டவரே! எல்லா புகழுக்கும் உரியவரே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

அன்றாட தேவைகளுக்காகவும்,
ஆன்ம தேவைகளுக்காகவும்,
உடல் நலனுக்காகவும்,
குடும்ப வாழ்வுக்காகவும்,
திருஅவைக்காகவும்
பணி வாழ்வுக்காகவும்
சமுதாயத்தின் பல்வேறு
தேவைகளுக்காக
எம், நாட்டின், அகில உலகத்தின்
தேவைகளை உம் பாத பிரசன்னத்தில்
நம்பிகையோடு கேட்கின்றோம்…

1. "ஆகாரின் துயரத்தில் தொடக்க நூல் 21.˙.17 ஆண்டவரின் தூதர் வானத்தினின்று ஆகாரரைக் கூப்பிட்டு அஞ்சாதே, பையனின் அழுகுரலைக் கடவுள் கேட்டருளினார்"

- எம் மன்றாட்டைக் கேட்டருளும்

2. ஆண்டவர் கூறியது "எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்" இருக்கின்றவர் நானே நான் உன்னோடு இருப்பேன் என்றவரே.

   - எம் மன்றாட்டைக் கேட்டருளும்

3. வாருங்கள் தாள்பணிந்து அவரைத்தொழுவோம் நம்மை உருவாக்கிய ஆண்டவர் முன் முழந்தாளிடுவோம் அவரே நம் கடவுள், நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள் நாம் அவர் பேணிக்காக்கும் ஆடுகள் என்றவரே.
- எம் மன்றாட்டைக் கேட்டருளும்

4. “நீர் என் பார்வையில் தயைபெற்றுள்ளாய்” எனது பிரசன்னம் உன்னோடு செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன் என்று மோசேக்கு வாக்களித்த மாட்சியின் இறைவா! (வி.ப.33:14) - எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

5.“உன் வாழ்நாள் முழுவதும் எந்த மனிதனும் உன்னை எதிர்த்து நிற்கமாட்டான். மோசேயுடன் நான் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன். உன்னை கைநெகிழ மாட்டேன் கைவிடவும் மாட்டேன். வீறுகொள். துணிந்து நில், நீ செல்லும் இடம் எல்லாம் நான் உன்னோடு இருப்பேன்” யோசுவா1.ஃ.8-9 என்று யோசுவாவிடம் மொழிந்தவரே! - எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

6. “உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்வாய் மிதியானியர் கையிலிருந்து இஸ்ரயேலை நீ விடுவிப்பாய் உன்னை அனுப்புவது நான் அல்லவா? ” நீதி 6.ஃ.14 என்று நீதி தலைவர் கிதியோனோடு இருந்தவரே - எம் மன்றாட்டைக் கேட்டருளம்.

7.“மனநிறைவோடு செல். இஸ்ரேயேலின் கடவுள் நீ விண்ணப்பித்த உனது வேண்டுகோளைக் கேட்டருள்வார்” என்று அன்னாவின் விண்ணப்பத்தைக் கேட்டவரே… (1சாமு1.ஃ.1:) - எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

8."சாமுவேல் ஆண்டவரிம் மன்றாட ஆண்டவர் அன்று இடியையும் மழையையும் அனுப்பினார்" (1சாமு1...:.18) சாமுவேலின் செபத்தைக் கேட்டவரே -எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

9.ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன் மகிழ்ச்சி நிறை உள்ளத்தோடு உமக்குப் புகழ்பாடுவேன் என்று மொழிந்த இறைவா, எம் மன்றாட்டைக் கேட்டருளும்.

**முடிவுரை:**

எண்ணிக்கை 6.:.24

"ஆண்டவர் உனக்கு ஆசிவழங்கி உன்னைக் காப்பாராக." ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன் மீது அருள் பொழிவாராக. இஸ்ரயேல் மக்களுக்கு ஆசி அளித்தது போல ஆண்டவரே எங்களை நினைவு கூறும் எங்கள் துன்ப வேளையில் உம்மையே எங்களுக்கு வெளிப்படுத்தியருளும். உலகாளும் இறைவா! எங்களின் நம்பிக்கை எல்லாவிதமான நெருக்கடியிலிருந்து எங்களை விடுவித்து உமது சிறகுகளின் நிழலில் வைத்து காத்துக் கொள்ளும்.

ஆமென்.



# 11. இன்ப நாமத்தின் இயேசுவை ஆராதிப்போம்

**ஆராதனை பாடல்:**

**ஆராதித்தல்:**

இயேசுவே, எளிய அப்பத்தில் எமக்காய் வீற்றிருப்பவரே, உம்மைப் போற்றுகிறோம். இயேசு என்ற உமது நாமத்தை உச்சரிக்கின்றோம். உம்மை மகிமைப்படுத்துகின்றோம். எம் உள்ளம் என்ற சிறு இல்லத்தில் வரவேற்கின்றோம். வாரும் இறைவா, வந்து தங்கும் இறைவா.. இந்த உடல், பொருள், ஆன்மா அனைத்தும் உம்முடையதே... உமக்கே என் இதயம் சொந்தமையா.. உம்மையன்றி இந்த இதயம் வேறு யாருக்கும் சொந்தமில்லை. உம்முடைய இனிய நாமத்தை உச்சரிக்கும்போதே எனது நாவில் இனிமை பொங்குகிறதய்யா. உம்முடைய பெயருக்கு வல்லமை உண்டு. உம்முடைய பெயரால் மீட்பு உண்டு. உம்முடைய பெயருக்கு கீழுலகோர், மேலுலகோர் அனைவரும் மண்டியிடுவர். உம்மை முழுமனதோடு போற்றுகிறோம். உம்மை முழு உள்ளத்தோடு ஆராதிக்கின்றோம். இறைவா இந்த ஆராதனையில் உமது நாமத்தை தியானித்து, உமது நாமத்தினால் நாங்கள் பல வெற்றியான காரியங்களை செய்யவும், சாட்சிய வாழ்வு வாழ எங்களை உருவாக்கும் இறைவா, எங்களை உருமாற்றும்.

**இறைவார்த்தையின் வழி இயேசுவை ஆராதிப்போம்**:

- இராயப்பர் நோயாளியைப் பார்த்து என்னிடம் பொன்னோ, வெள்ளியோ என்னிடம் இல்லை

மாறாக இயேசுவின் வார்த்தையால் குணம் பெறுக. எழுந்திடு என்று கூற. நோயாளி சுகம் பெறுகின்றார்.

- இயேசுவின் நாமத்தில் பேய்கள் ஓடின.
- இயேசுவின் நாமத்தில் நோய்கள் நீங்கின.
- இயேசுவின் நாமத்தில் இறந்தவர் உயிர்பெற்றனர்.
- இயேசுவின் நாமத்தில் பாவிகள் மனம் திரும்பினர்.
- இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் நிகழ்ந்தன.
- இயேசுவின் நாமத்தில் அதிசயங்கள் நிகழ்ந்தன.
- இயேசுவின் நாமத்தில் எல்லாம் நிகழ்ந்தன. என்ற இயேசுவின் நாமத்தின் மகிமையை இறைவார்த்தையின் வ ஆராதிக்போம்.

**பதில்:** இயேசுவின் நாமம், இனிதான நாமம், இணையில்லா நாமம் இன்ப நாமம்.

- **கொலோ: 3:17** எதை சொன்னாலும் எதை செய்தாலும் ஆண்டவர் **இயேசுவின் பெயரால்** செய்ய வேண்டும் அதன் வழியாக தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று கூறிய இயேசுவே....
- **மத்தேயு 19:29 என் பெயரின் பொருட்டு** உன் வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாயையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ விட்டுவிடுகிறவர் இம்மையில் நூறு

மடங்கும், மறுமையில் நிலைவாழ்வும் கிடைக்கும் என்று கூறிய இயேசுவே....

- **மத்தேயு 18:20 என் பெயரின் பொருட்டு** இரண்டு அல்லது மூன்று பேர் எங்கு ஒன்று சேர்ந்து கூடியிருக்கிறார்களோ அங்கு அவர்கள் மத்தியில் நான் இருக்கின்றேன் என்று கூறிய இயேசுவே....
- **எபேசியர் 5:20** எல்லாவற்றிற்காகவும், எப்போதும் தந்தையாம் இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள் என்று கூறிய இயேசுவே....
- **எபிரேயர் 13:15** கிறிஸ்து வழியாக இப்பொழுது கடவுளுக்கு புகழ்ச்சி பலி செலுத்துவோமாக என்று கூறிய இயேசுவே....
- **திபா 47:1** ஆர்ப்பரித்து கடவுளை புகழ்ந்து பாடுங்கள். பேரொளி எழுப்பி கூப்பிடு. எக்காளம் முழங்க அவரை கூப்பிடு என்று கூறிய இயேசுவே....

**மன்னியும் இறைவா:**

இயேசு என்ற நாமத்தால் பொய் சொன்ன நேரத்திற்காக, இயேசுவின் நாமத்தை வீணாக உச்சரித்ததற்காக, இயேசுவின் நாமத்தில் விசுவாசமில்லாமல் செயல்பட்ட நேரத்திற்காக, இயேசுவின் நாமத்தை மனவல்லிய ஜெபமாக உச்சரிக்க தவறிய நேரத்திற்காக, பிறரை குணப்படுத்தாத நேரத்திற்காக, இயேசுவின் நாமத்தின் பொருட்டு நமக்கு ஏற்பட்ட துன்ப அவமானங்களை

சகிக்காத நேரத்திற்காக சில நிமிடம் நற்கருணை நாதர் இயேசு கிறிஸ்துவிடம் மனதிற்குள்ளாக மன்னிப்பு வேண்டுவோம்.

**சுய ஆய்வு:**

- இயேசுவின் நாமத்தால் நாம் நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் பெற்ற நன்மைகளை நினைத்துப் பார்த்து கடவுளுக்கு நன்றி சொல்வதன் மூலம் நாம் பிறரை விசுவாச வாழ்விற்கு அழைத்து செல்ல இயலும். சில நிமிடம் அவரது ஆறுதலான வார்த்தைகளை அசைப்போடுவோம். பகிர்வோம்...
- அப்பம் பிடும்போது சீடர்கள் இயேசுவைக் கண்டு கொண்டார்கள். நம்முடைய பகிர்விலும் பலர் இயேசுவை தேடவும், கண்டடையவும் உதவினோமா?
- இயேசுவின் நாமத்தை சொல்ல சொல்ல அதிசயம் நிகழும், அற்புதம் நிகழும் என்று நம்புகிறோமா?

**அன்பான இறை உள்ளங்களே.**

உடலினால் சோதனைகளா? உள்ளத்தில் வேதனையா? துன்ப நேரத்தில் இயேசுவின் பெயரை இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தொடர்ந்து உச்சரிக்க இயேசுவின் நாமம் சோதனையை வெல்ல வைக்கும். துன்பங்களை தாங்க வைக்கும். வெற்றியோடு நாம் பலவற்றை கடக்க உதவும். பாவ வாழ்வை விட்டு புது வாழ்விற்கு நம்மை அழைத்துச் செல்லும். எனவே புது வாழ்வு பெற இயேசுவின் நாமத்தை உச்சரிப்போம்.

**நன்றிப்பாடல் :**

**செபிப்போமாக:**

இயேசுவே உமது நாமத்திற்கு கீழுலகோர், மேலுலகோர் அனைவரும் மண்டியிடுவர்...உமது வார்த்தையாலே வாழ்வு உண்டு... உமது பெயராலே மீட்பு உண்டு என்று விசுவசிக்கிற நாங்கள் உமது நாமத்தை நாங்கள் எங்களது மனவல்லிய ஜெபமாக ஜெபித்து ஜெப வீரர்களாக இம்மண்ணில் மலர்ந்து மணம் வீசிட அருள் தர வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



# 12. நட்பின் அன்பரை ஆராதிப்போம்

**முன்னுரை:**

ஆயிரம் சொந்தம் நம்மைத் தேடி வரும், ஆனால் தேடினாலும் கிடைக்காத ஒரே சொந்தம் நல்ல நண்பர்கள். நண்பன் என்பவன் எப்பொழுதும் நம்முடன் இருப்பவன் அல்ல மாறாக எப்பொழுதும் நமக்காக இருப்பவன். ஆம் அன்பு சகோதர சகோதரிகளே என்றும் நமக்காக நம்முடன் இருக்கிற என்றும் மாறாத நம் நண்பர் இயேசுவை உற்று நோக்கியவர்களாய் சிரம் தாழ்த்தி அவரை வணங்குவோம்.

உலக வரலாற்றில் மிகப்பெரிய மனிதர் யார் எனக் கேட்டால் இயேசு என்று தான் சொல்வோம் ஏனென்றால் இயேசுவுக்கு பணியாளர்கள் யாருமே இல்லை ஆனால்

அவரை எஜமானர் என்று அழைக்கின்றனர். இயேசுவிடம் கல்வி கற்றதற்கான பட்டம் ஏதுமில்லை, ஆனால் அவரை ஆசிரியர் என்று அழைக்கின்றனர் இயேசு மருத்துவராகவோ அல்லது மருந்துகளோ அவரிடம் இல்லை ஆனால் அவரை மருத்தவருக்கெல்லாம் மருத்துவர் என்று அழைக்கின்றனர். இயேசுவிடம் படைபலம் ஏதுமில்லை ஆயினும் அவரை இவ்வுலக அரசர், இவ்வுலகை வென்றவர் என்று அழைக்கின்றனர். இத்தகைய வல்லமையுள்ள இறைவன் தகுதியற்ற நம்மை நண்பர்கள் என அழைக்கின்றார் அவர் அழைப்பை ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளோமா? அல்லது இன்று பூத்து நாளை மடியும் மலரைப் போல உள்ள நண்பர்களைத் தேடி செல்கிறோமா? சிந்திப்போம்.

நேற்றும் இன்றும் என்றும் மாறாத சிறந்த நண்பன் இயேசு என்பதை உணர்ந்து ஏற்று வாழ இந்த ஆராதனையில் நம்மையே தாழ்த்தி ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

**புகழ்ச்சி:**

நீ போகும் போதும், வரும் போதும், இப்போதும் எப்போதும் நான் உன்னை காப்பேன் என்று எல்லா சூழ்நிலைகளிலும் நம்மை காத்து பராமரித்து வரும் நம் நண்பர் இயேசு நம் வாழ்வில் செய்த அனைத்து நன்மைகளையும் எண்ணி பார்த்து அவரைப் போற்றிப் புகழ்வோம்.

பதில்: உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம்.

1. தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவான் 15 :13)

என்று கூறிய அன்பின் இறைவா எங்களின் பாவத்திற்காக உன் ரத்தம் சிந்தி மீட்டதற்காக…..

2. எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு **(பிலிப்பியர் 4:13)** என்ற இறை வார்த்தைக் கேட்ப நாங்கள் வலுவிழந்து போகும் பொழுது ஆற்றல் தந்து வழிநடத்துவதற்காக….

3. என் ஆண்டவராம் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய அறிவே நான் பெரும் ஒப்பற்ற செல்வம் என்ற புனித பவுலின் வார்த்தைக்கு ஏற்ப நீர் ஒருவரே உண்மையான செல்வம் என்று எங்கள் வாழ்வில் உணரச் செய்ததற்காக….

4. அவர் தம் பிணிகளை தாங்கிக் கொண்டார் தம் துன்பங்களை சுமந்து கொண்டார். என்ற இறை வார்த்தை கேட்ப நாங்கள் நோயற்றிருக்கும் போது மருத்துவராய் குணம் தருவதற்காக…

5. சாவின் இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். ஆம் அன்பு இறைவா எம் வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் எங்களுடன் இருந்து காத்து வருவதற்காக….

**மன்னிப்பு:**

பிறர் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்காதீர்கள், அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களை கண்டனம் செய்யாதீர்கள் அப்போதுதான்

நீங்களும் கண்டனத்திற்கு ஆளாக மாட்டீர்கள் மன்னியுங்கள் மன்னிப்பு பெறுவீர்கள். இறைவனின் அன்பைப் புரிந்து கொள்ளாமல் பாவம் என்ற சேற்றிலே மீண்டும் மீண்டும் விழுந்து பிறரையும் விழச்செய்த தருணங்களை எண்ணிப் பார்த்து மனம் உருகி இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம்.

பதில்: மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கின்றோம். மன்னியும் இறைவா மன்னியும்.

1. தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல் நாங்கள் இரக்கம் உள்ளவர்களாய் இல்லாத நேரத்திற்காக....
2. பிறர் குற்றவாளிகள் என தீர்ப்பிட்டு நாங்களும் தீர்ப்புக்கு உள்ளானவர்கள் என்று நினைத்து பார்க்காத நேரங்களுக்காக...
3. எங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை பார்க்காமல் எங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை கூர்ந்து கவனித்த நேரத்திற்காக...
4. எங்களுடைய சொற்களால் பிறருடைய மனதைப் புண்படுத்திய நாவை காக்காமல் பாவத்திலே அகப்பட்டுக் கொண்ட நேரத்திற்காக....

**நற்செய்தி வாசகம் :** யோவான் 15: 13-15

நம் அன்பு இறைவன் நம்மை எந்த தகுதியும் பாராமல் அப்படியே நண்பராக நம்மை ஏற்றுக்கொள்கிறார். நல்ல நண்பராக இருந்து நம்மிடம் நேரத்தை செலவிட விரும்புகிறார். நாம், கடவுளின் நண்பராக இருப்பது என்பது, நாம் கடவுள் மீது வைத்துள்ள நம்பிக்கையையும், கடவுளுடனான

நெருக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. அது இன்று உங்களுக்கும், எனக்கும் இயேசு கிறிஸ்துவுடனான தனிப்பட்ட உறவின் மூலம் கிடைத்திருக்கின்றது. இயேசுவின் நண்பராக மாறுவது என்பது, கிறிஸ்து இயேசுவின் மூலம், கடவுள் மீதுள்ள அன்புடன் தொடங்குகிறது. அன்பினால் மட்டுமே பதிலுக்கு பதில் அன்பைக் காட்ட முடியும்.

நாம் உண்மையாக இயேசுவை நண்பராக ஏற்றுக் கொள்ள விரும்பினால், முதலில் இயேசு நம்மை நண்பராக ஏற்று கொள்ள அனுமதிக்க வேண்டும். அவர் நம் பாவங்களை மன்னிக்க, சிலுவையில் நமக்காக இரத்தம் சிந்தி மரித்திருக்கின்றார். அது மட்டுமல்ல அவர் மரித்தாலும் திரும்ப உயிர்தெழுந்து நம்மை தமது நண்பராக்கி கொள்ள விரும்புகின்றார்.

அவரை நாம் நண்பராக்கி கொள்வோமேயானால், அவர் நமக்கு அறிவுரை வழங்கவும், வழிகாட்டவும், ஆறுதல் சொல்லவும், இக்கட்டில் உதவி செய்யவும் அவரால் முடியும். நம்மை யார் கைவிட்டாலும் அவர் கைவிடமாட்டார். உலகத்தின் முடிவு வரை நான் உங்களுடன் இருப்பேன் என வாக்கு கொடுத்திருக்கின்றார். இப்படிப்பட்ட சிறந்த நண்பரான இயேசுவை நம் நண்பராக ஏற்றுக்கொண்டிருக்கிறோமா ? சிந்திப்போம்!

**பாடல்:** அன்பே அன்பே..

நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் இயேசு எவ்வாறு சிறந்த நண்பராக இருக்க முடியும் என்பதை சிறிது நேரம் மௌனமாக சிந்திப்போம்.

**மன்றாட்டு:**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

1. ஆண்டவரைச் சிக்கன பிடித்துக்கொள் அவரை விட்டு விலகிச் செல்லாதே உன் வாழ்க்கையின் முடிவில் வளமை அடைவாய். அன்பின் இறைவா எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும் இவர்கள் அனைவரும் தங்கள் வாழ்விலே வருகின்ற போராட்டங்களில் உம்மை சிக்கென பிடித்துக் கொண்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையாம் திரு அவையை வழிநடத்த தேவையான அருளையும் ஆற்றலையும் பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நீங்கள் என்னிடம் வந்து மன்றாடுவீர்கள் அப்பொழுது நான் உங்களுக்கு செவி சாய்ப்பேன் என்று மொழிந்த அன்பின் இறைவா எம் நாட்டை ஆளும் நாட்டுத் தலைவர்களை உம்முடைய கரங்களிலே ஒப்புக்கொடுக்கின்றோம். இவர்கள் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் தேவைகளைக் கண்டு தாராளமாய் உதவி செய்ய நல் மனம் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடி கொள்ளுங்கள் என்று கூறிய அன்பின் இறைவா எங்களுடைய

வாழ்க்கையில் நீர் ஒருவரே சிறந்த நண்பர் என்பதை உணர்ந்து, உம்மை மட்டுமே இருகப் பற்றிக் கொண்டு வாழ வரம் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தன் நண்பருக்காக உயிரை கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை என்று கூறிய அன்பின் இறைவா உம்முடைய தியாக அன்பைப் புரிந்து கொண்டு நாங்கள் உமக்கு சான்று பகிர்ந்திட வரம் அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மன்றாடுவோமாக:**

எங்களை எந்நாளும் காத்து பராமரித்து வரும் அன்பின் நற்கருணை நாதரே, அஞ்சாதே ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன் என்று கூறி எந்நாளும் எங்களை காத்து, பராமரித்து வழி நடத்தி வருவதற்காக இறைவா உமக்கு நன்றி கூறுகின்றோம். தன் உயிரையே கொடுக்கும் அளவுக்கு நீர் எங்கள் மேல் அன்பு கொண்டுள்ளீர் என்பதை நாங்கள் உணர்ந்து நீர் ஒருவரே எங்கள் வாழ்வில் நிலையானவர் நிரந்தரமானவர் என்பதை ஏற்று வாழ வரமருள எங்கள் ஆண்டராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்



## 13. ஒளியாம் இறைவனை ஆராதிப்போம்

**பாடல்: ஒளியாம் இறையே வாராய்**

**முன்னுரை:**

ஒளி ஏற்றப்படும் பொழுது எப்படி இருள் மறைகிறதோ அது போல, நம் வாழ்வில் பாவ இருள் மறைந்து தெய்வீக இறை ஒளி ஏற்றப்படும் பொழுது, நாம் பிரகாசிக்கிறோம். மூவொரு இறைவனாகிய தந்தை, மகன், தூய ஆவியின் ஒளி நம்மில் பிரகாசிக்கும் பொழுது, அக இருள் மறையும். நம் ஆன்மாவில் புத்தொளி பிறக்கிறது. நம்மில் இறை ஒளி ஏற்றப்பட்டுவிட்டால் நாம் மற்றவர்களுக்கு பிரகாசமாக, சூரியனாக, முழுமதி சந்திரனாக, நட்சத்திரங்களாக ஜொலிப்போம், மத்தேயு 5:14 நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள் மத் 5:16 -ல் உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றிப் புகழ்வார்கள்

என்ற இறைவார்த்தையின்படி இறையன்பைப் பெற்று பிறரன்பில் பிரகாசிக்க வேண்டும், வைரம் போல் ஜொலிக்க வேண்டும். ஆன்மாவானது பரிசுத்த நிலையில் சுடர்விட்டு பிரகாசிக்கும் போது, ஒரு நாள் நித்திய வாழ்வை அடையும் பொழுது ஜோதியோடு ஜோதியாக கலக்கிறோம். நாம் வாழும் இந்த வாழ்க்கையில், மனதால் கூட பிறருக்கு தீங்கு நினைக்காது, நல்லதை நினைத்து நல்லதை சொல்லி நல்லதை செய்து இறைவனுக்கு ஏற்ற மக்களாக வாழும் பொழுது, “வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்“ (கலா 2:20)-ன் படி இயேசு கிறிஸ்து நம்மில்

பிரகாசிக்கிறார் இறையன்பைப் பெற்று பிறரன்பில் பிரகாசிக்க, பிறர்வாழ்வில் ஒளியேற்ற, நம்மையே அர்ப்பணிப்போம்.

**போற்றுதல்:**

**பதில்:** ஒளியே உம்மை போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கி ஆராதிக்கிறோம்.

- அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளியே உம்மைப் போற்றி வாழ்த்தி வணங்கி ஆராதிக்கிறோம். (யோவா 1:9)
- உலகின் ஒளி நானே என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்விற்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் என்றவரே. உம்மைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கி ஆராதிக்கிறோம். (யோவா 8:12)
- என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே! என்றவரே உம்மைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கி ஆராதிக்கிறோம். (தி.பா 119:105)
- உம் சொற்களைப் பற்றிய விளக்கத்திற்கு ஒளி தருகின்ற இறைவா போற்றிப் போற்றி. (தி.பா 119:130)
- நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள் என்றவரே போற்றிப் போற்றி (மத் 5:14)
- ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள் என்றவரே போற்றிப் போற்றி (எபே 5:8)
- கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார் என்றவரே போற்றிப் போற்றி (எபே 8:14)

- அவள் தன் வீட்டில் ஏற்றி வைத்த விளக்கு ஒரு போதும் அணையாது என்றவரே போற்றிப் போற்றி. (நீ.மொழி 31:18)

**ஒளியின் பாடல்** :

**நன்றி**

**பதில்:** நன்றி இறைவா! நன்றி!

- அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின என்ற இறை வார்த்தைக்காக நன்றி கூறுகிறோம் (மத் 17:2)
- வைகறைபோல் தோற்றம், திங்களைப்போல் அழகு, ஞாயிறு போல் ஒளி என்ற இறை வார்த்தைக்காக இறைவா உமக்கு நன்றி. (இ. பா 7:10)
- ஆண்டவர் பகலில் ஒளிவீசக் கதிரவனைக் ஏற்படுத்தியுள்ளார் இரவில் ஒளி கொடுக்க நிலாவையும் விண்மீன்களையும் நியமித்துள்ளார் என்ற இறை வார்த்தைக்காக நன்றி நன்றி (எரே 31:35)
- கதிரவன் வழங்கும் கனிகளால் எங்களுக்கு பயன் தருபவரே உமக்கு நன்றி நன்றி. (இ.ச 33:14)
- கதிரவனே நிலவே ஒளி வீசும் விண்மீன்களே அவரைப் போற்றுங்கள் என்ற இறைவார்த்தைக்காக நன்றி இறைவா நன்றி: (தி.பா 148:3)
- விண்மீன்களின் இலக்கத்தை எண்ணி அவை ஒவ்வொன்றையும் பெயர்

சொல்லி அழைத்தவரே நன்றி நன்றி. (தி.பா 147:4)

- விடி வெள்ளியையும் அவர்களுக்கு கொடுப்பேன் என்றவரே நன்றி நன்றி (தி.வெ 3:28)
- அவர் தம் வலக்கையில் ஏழு விண்மீன்களைக் கொண்டிருந்து, அவரது முகமோ நண்பகல், கதிரவன் போல் ஒளிர்ந்தது என்ற வார்த்தைக்காக நன்றி இறைவா நன்றி (தி.வெ. 1:16)

**மன்னிப்பு:**

மன்னிப்பு வழங்கும் இறைவா நாங்கள் அறிந்தும் அறியாமல் புரிந்தும் புரியாமல் வாழ்நாளில் நாங்கள் பிறந்தது முதல் இந்த நாள்வரை நாங்கள் செய்த பாவங்களை தயவாய் மன்னியும். உம்முடைய தூயஆவியின் அக்னி நெருப்பினால் எங்கள் சிந்தனை, சொல், செயலால் செய்த பாவங்களை சுட்டெரித்துவிட்டு எங்களை தூயவாழ்வுக்கு கரம்பிடித்து வழிநடத்திச் செல்லும்

- பிறர்வாழ்வில் நான் ஒளி ஏற்றாத குற்றத்திற்காக மனவருந்தி மன்னிப்புக் கேட்கிறோம்.
- நோயுற்றவர்களைச் சந்தித்து கிறிஸ்து என்கிற ஒளி உங்களை சுகமாக்கும் என்ற நல் வார்த்தைகளை எடுத்துரைக்காதத் தருணங்களுக்காக எங்களை மன்னியும்.
- பாதை மாறிச் செல்லும் இளம் உள்ளங்களுக்கு வழிகாட்டி இருளகற்றி வாழ்வில் ஒளி ஏற்றாத குற்றத்திற்காக எங்களை மன்னியும் இயேசுவே.
- துன்புறும் உள்ளங்களை சந்தித்து அவர்களின் துன்பத்தைப் போக்கி

ஒளியேற்றாத குற்றத்திற்காக எங்களை மன்னியும் இயேசுவே.

- ஏழை எளியவர்களைக் கண்டு கொள்ளாத குற்றத்திற்காக எங்களை மன்னியும் இயேசுவே.
- தூய ஆவியின் மதிப்பீட்டில் வாழாத குற்றத்திற்காக எங்களை மன்னியும் இயேசுவே.

**விளக்கைக் குறித்து ஏழு காரியங்களை தியானித்தல், வாசித்தல்**

1. தாவீது: ஆண்டவரே நீரே என் விளக்காயிருக்கிறீர். (2சாமு: 22:29) (தி.பா 18:28)
2. சாலமோன்: கட்டளையே விளக்கு (நீ.த 6:23) (2பேது 1:19)
3. குணசாலியான பெண் இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும் (நீதி 31:18) (யோபு 18:5 21:17 28:3)
4. ஆரோன்: நீ விளக்குகளை ஏற்றும்போது ஏழு விளக்குகளும் விளக்குத் தண்டிற்கு நேரே எரியவேண்டும் (எண் 8:2), (மாற் 4:21), (லூக் 8:16)
5. சாமுவேல் தேவனுடைய விளக்கு அணைந்து போகுமுன்னே சாமுவேல் படுத்துக் கொண்டிருந்தான் (சாமு 3:3) (தி.வெளி 1:12,13)
6. யோவான்: அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் (யோவா 5:35, 1:6-8)
7. ஆட்டுக் குட்டியானவர்: நகருக்குள் கோவில் காணப்படவில்லை. ஏனெனில் எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரும் ஆட்டுக்குட்டியுமே அதன்

கோவில், அந்நகருக்கு ஒளி கொடுக்க கதிரவனோ, நிலாவோ தேவைப்படவில்லை கடவுளின் மாட்சியே அதன் ஒளி. ஆட்டுக்குட்டியே அதன் விளக்கு. மக்களினத்தார் அதன் ஒளியில் நடப்பர். மண்ணுலக அரசர்கள் தங்களுக்குப் பெருமை சேர்ப்பவற்றையெல்லாம் அங்கு கொண்டு செல்வார்கள் (தி.வெளி 21:22-24)

**இறைவார்த்தை: 1பேதுரு 2:9. மத் 6:22-23, மத் 5:14-16**

**வாசித்து தியானித்தல் உரையாடல்.**

**மன்றாட்டு:**

1. ஒளியாம் இறைவா திருஅவையை வழிநடத்தும் திருத்தத்தை, ஆயர்கள் குருக்கள், கன்னியர் இருபால் துறவியர்களை நிறைவாக ஆசீர்வதித்து உடல், உள்ள ஆன்மீக சுகம் கொடுத்து நற்செய்தியின் ஒளியில் தூதுவர்களாக நடமாட அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இருளகற்றி ஒறியேற்றும் இறைவா நாட்டுத்தலைவர்கள், சமூகத்தலைவர்களை உம்பாதம் அரப்பணிக்கிறோம். ஏழை மக்கள் வாழ்விற்கு முன் வந்து உதவி செய்து அவர்கள் வாழ்வில் வறுமை என்ற இருளகற்றி செல்வம், உண்ண உணவு, உடை, இருப்பிடம் கொடுத்து வாழ்வாதாரம் என்ற ஒளியேற்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பெற்றோர்கள் பிள்ளைகள் அனைவரையும் உம் கரங்களில் ஒப்படைக்கிறோம். குடும்பங்களில் ஒற்றுமை, அன்பு, சமாதானம், மனமகிழ்ச்சி, உடல்பலம், மனபலம், பணபலம் ஆன்மீகபலம் என்ற ஒளி ஏற்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இளைஞர்களை உம் இதயத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். இளைஞர்கள் தங்கள் வாழ்வில் நன்மை தீமை என்ற பாகுபாடறிந்து அகஇருள் அகற்றி நன்மையானது, உண்மையானது, நீதியானது, நேர்மையானது எது என்பதைக் கண்டறிந்து தங்கள் வாழ்வை மேன்மைபடுத்தி வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. நானே உலகிற்கு ஒளி என்ற இறைவா பிரபஞ்ச முழுவதையும், நீர் படைத்த படைப்புகளையும் அனைத்துலக மக்களையும் ஆசீர்வதித்து அமைதி, சமாதானம் அன்பு, மகிழ்ச்சி என்ற ஒளி ஏற்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**இறுதி மன்றாட்டு:**

ஒளியாம் இறைவா போற்றி ஆதியே போற்றி, அந்தமே போற்றி, ஜோதியே போற்றி, மூவொரு இறைவா போற்றி, எங்கள் நல்ல செயல்களின் மூலம் அக இருள் அகற்றி ஒளியேற்றி பிரகாசிக்க வைக்கிறவரே உமக்கு என் மனமார்ந்த நன்றியை தாழ்ந்து பணிந்து வணங்கி ஆராதித்து சமர்பிக்கிறோம்.

என் பாவங்களை மன்னித்து, சாம்சனுக்குரிய பலத்தையும், சாலமானுக்குரிய ஞானத்தையும் தானியேலுக்குரிய ஞானவெளிச்சத்தையும் தந்து

ஆசீர்வதித்து எங்கள் வாழ்வில் நீர் என்றும் என்றென்றும் சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும். பிறர் வாழ்வில் நல்ல செயல்களின் மூலம் நாங்கள் ஒளியேற்ற வேண்டும். இயேசுவே தூயஆவி என்ற ஒளியே என் உடல், உயிர் ஆன்மாவில் நீர் சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும். அதனால் பிறரில் இறையன்பு, பிறரன்பு என்ற ஒளி ஏற்றி பிரகாசிக்க அருள்தர வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## 14. புனித காணிக்கை அன்னையின் அருள் வேண்டுவோம்

**துவக்க பாடல்**

**புகழ்ச்சி**

**பதில்:** உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம்

- உயிர்வாழ்வோர்க்கெல்லாம் தாயான ஏவாளின் வித்துக்கும் பெண்வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம் என்று சொல்லி இறைத்திட்டத்தில் அன்னை மரியாளை தொடக்க நூலிலே தேர்ந்த இறைவனே..

- ஆதியில் வாக்கான இறைமகனுக்கு மனுவுடல் கொடுக்க கன்னியான அன்னையை தேர்ந்த தெய்வமே...
- இறைவனின் தாய் பரிசுத்தராய் என்றும் விளங்க அமல உற்பவியாய் அவரை பிறக்க திருவுளம் கொண்ட தெய்வமே....
- மூன்று வயதில் அவரை உமக்குக் காணிக்கையாக்க திருவுளம் கொண்டு மீட்புத்திட்டத்திற்குத் தயார்படுத்தியவரே...

**முன்னுரை:**

"என் சந்நிதியில் நடந்து உத்தமமாயிரு" என்று சொல்லி பெரிய குரு மரியாவை திருத்தலத்தில் தங்கி வாழ காணிக்கையாக ஏற்றுக் கொண்டார். மரியாவும் தான் காணிக்கையாக்கிய நாளிலிருந்து ஞானத்தின் வாசலில் காத்திருந்து, ஞானத்தால் தான் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஆசித்து, அன்பினால் பரிசுத்தமாயிருக்கவும், உத்தம அன்பை அடையவும், ஆசிரியராக ஞானத்தைக் கொண்டிருக்கவும் தகுதி பெறவும் விரும்பினார்கள்.

**இயேசு கூறுகிறார்...**

சின்ன மேரி உன் ஆசிரியர் உனக்குத் தனியாக யாதொன்று சொல்வதற்கில்லையா? "என் சந்நிதியில் நடந்து உத்தமமாயிரு" இந்த திருவசனத்தை சற்று மாற்றி, அதை உனக்குக் கட்டளையாக நான் தருகிறேன்

அன்பில் உத்தமமாயிரு ...
தாராளகுணத்தில் உத்தமமாயிரு...
துன்பப்படுவதில் உத்தமமாயிரு

**மன்னிப்பு:**

**பதில்:** என்னை மன்னியும் தெய்வமே

- அன்னை மரியின் பண்புகளில் சிறந்த, தாழ்ச்சி என்ற புண்ணியத்தில் தவறிய நேரத்திற்காக…
- அன்னை மரியின் புண்ணியத்தில் சிறந்து, தேவையில் இருப்போருக்கு உதவாமல் இருந்ததற்காக…
- அன்னை மரியாவைப் போன்று எந்நேரமும் இறைவிருப்பத்தை எண்ணி செயல்படாமல் இருந்ததற்காக…
- அன்னை மரியாளைப் போன்று முன்மாதிரியாக வாழாத நேரங்களுக்காக…
- அன்னை மரியாளைப் போன்று அர்ப்பணத்தில் இறுதிவரை நிலைபிரளாமல் இருந்த நேரங்களுக்காக…

**வாசகம்** - இயேசு மனித காவியம் மரியா - வால்டேர்ட்டா. பாகம்-ஐ, அத்தியாயம் 8, பக்கம் 73-84

**சிந்தனைக்கு:**

ஆலயத்தில் பெரிய குரு 3 வயது சிறுமி அன்னை மரியாவைப் பார்த்து புன்னகை செய்கிறார். எகிப்திய கோவில்களுக்குரியவை போல் காணப்படும் படிக்கட்டின் அடியில் நிற்கும் மரியா மிகச் சிறிய உருவமாக காட்சியளிக்கிறார்கள். குரு தன் கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி செபிக்கிறார். நித்திய மகத்துவத்துடன் உரையாடும்

குருத்துவ மகத்துவத்தின் முன்பாக, அவர்கள் அனைவரும் முழுதாழ்ச்சியுடன் தலை வணங்குகிறார்கள்.

பின், பெரிய குரு சின்ன மரியாவை அழைக்கிறார். கவர்ந்து இழுக்கப்பட்டது போல் மரியா தன் தாயையும் தந்தையையும் விட்டு படிக்கட்டில் ஏறுகிறார்கள். புன்னகை அரும்புகிறது. ஆலய நிழலில், மதிப்பிற்குரிய திரை தொங்கும் இடத்தில் நின்று புன்னகை புரிகிறார்கள். இப்பொழுது அவர்கள் உச்சிப்படியில் பெரிய பாதத்தடியில் வந்துவிட்டார்கள். அவர் மரியாவின் தலைமேல் கரங்களை வைக்கிறார். பலிப்பொருள் அங்கீகரிக்கப்பட்டு விட்டது.

பின்னர் பெரிய குரு திரும்பி சிறுமியின் தோளில் கரம் வைத்து, பீடத்திற்கு மாசற்ற செம்மறியை நடத்துவதுபோல் ஆலய வாசலுக்கு நடத்திச் செல்கிறார். அவர்களை உள்ளே போகவிடுமுன் கேட்கிறார்: "தாவீதின் மரியா, உன் வார்த்தைப்பாட்டை நீ உணர்ந்திருக்கிறாயா?" என்று. அதற்கு மரியா, "ஆம்" கணீரென்ற குரலில் பதிலளிக்கிறார்கள். "அப்படியானால் உள்ளே செல். என் சந்நிதியில் நடந்து உத்தமமாயிரு" என்கிறார் குரு.

மரியா உள்ளே செல்கிறார்கள் அங்குள்ள இருள் அவர்களை மறைத்துவிடுகிறது. கன்னியர்கள், ஆசிரியைகள், பின் லேவியர்கள் ஆகியோரின் வரிசைகள் மரியாவை மேலும் மறைத்து பிரிக்கின்றன... இப்பொழுது அவர்களைக் காணமுடியவில்லை.

தேவாலயத்தின் கதவும், தன் இனிய நாதமெழுப்பும் கீல்களும் மூடுகிறது. கதவின் இடைவெளி மேலும் மேலும்

சிறிதாகிறது. அதனுடன் பரிசுத்த ஸ்தலம் நோக்கி பவனி செல்வதைக் காணமுடிகிறது. இப்பொழுது அந்த இடைவெளி ஒரு நூல் போலாகிறது... அதுவும் இல்லாமலாகிறது... கதவு மூடிவிட்டது.

கதவின் கீல்களுடைய இசையான ஓசைக்கு இரு வயதான பெற்றோர்களின் அழுகையும் பதிலளிக்கின்றன. அவர்கள் இருவரும் சேர்ந்து புலம்புகிறார்கள். அவர்களை மரியா! மகளே! என்று. பின் துயரமாய்க் கூப்பிடும் குரல்: "அன்னா சுவக்கீன்! என்று கேட்கின்றன. அதன்பின் அவர்கள் மெல்லிய குரலில் இப்படி கூறிமுடிக்கிறார்கள். "அவரைத் தம் இல்லத்தில் ஏற்று, தம் பாதையிலே அவளை வழிநடத்தும் ஆண்டவரை நாம் மகிமைப்படுத்துவோம்.

நமது அர்ப்பணத்தையும் நமது பெற்றோர் இந்த காணிக்கை அன்னை சபையிலே நம்மை அர்ப்பணமாக்கிய நிகழ்வையும் இங்கே மௌனத்தில் ஒப்பிட்டுப் பார்ப்போம்

**மன்றாட்டு:**

**பதில்:** இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

1.அன்னை மரியாளின் ஆன்மிகத்தில் நாங்கள் சிறந்து விளங்கவும் பண்புகளை எமதாக்கவும் வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2.** கானாவூர் நிகழ்விலும் எலிசபெத்தம்மாளை சந்தித்த நிகழ்விலும் பிறருக்கு உதவியது போன்று நாங்களும் பிறரன்பு சேவையில் அன்னை மரியாளைப் போல விரைந்து செயல்பட தேவையான ஞானத்தைத் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3.** இறைவிருப்பம் எது என தேர்ந்து தெளிந்து அன்னை மரியாளைப் போன்று செயல்படுத்த தேவையான அருள் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4.** எமக்கு முன்மாதிரியான அன்னை மரியாளைப் போன்று எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**5.** அன்னை மரியாளைப் போன்று இறுதிவரை அர்ப்பணத்தில் நிலைத்திருக்க இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**நன்றிப்பாடல்...**

**செபிப்போமாக!**

இறைவா! புனித வாழ்க்கை வாழவும், அதில் நிலைத்திருக்கவும், காணிக்கையாக தன்னை அர்ப்பணித்தவர் அன்னை மரியாள், தனது 3 வயதில் புண்ணிய வாழ்வுக்கு அர்ப்பணித்து இறுதிவரை நிலைத்திருந்ததைப் போன்று சோதனைக் காலங்களில் நிலை தடுமாறாமல் உம்மோடு கொண்ட உறவில் ஆழம் கண்டு இறை அனுபவத்தில் முன்மாதிரிகையான வாழ்வு வாழ வரம் தர இறைவா உம்மை வேண்டுகிறோம் - ஆமென்.



## 15. கை நெகிழா இறைவனை ஆராதிப்போம்

**பாடல் :-** ஆராதிக்கின்றோம் நாங்கள் ஆராதிக்கின்றோம்….

**துவக்க செயம் :-**

மங்காத ஒளியாய்! மாறாத தெய்வமாய்! மானிட குலத்திற்காய் மனுவரு எடுத்து, பலியான செம்மறியே! உம் உயிர் கொடுத்து, எம்முயிர் மீட்டவரே, உம்மை இந்நேரத்தில் வாழ்த்தி, வணங்கி ஆராதனை செய்கின்றோம். இந்த ஒரு மணி நேரமும் நாங்கள் உம்மோடு பேச, உரையாட ஆவயாய் வந்துள்ளோம். இந்நேரத்தில் நீர் எம் உள்ளத்தில் பேச போகின்றவற்றிக்கு நாங்கள் கவனமுடன் செவிமடுக்க எங்கள் உள்ளத்தையும், மனத்தையும் தூய்மைப்படுத்தி, "கலைமான் நீரோடையை ஆவலாய் நாடிச் செல்வதுபோல" நிறைவாக உம்மை நாடிவந்துள்ள எங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**புகழ்ச்சி**

"ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன்.
அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்"

என்ற திருப்பாடல் வரிகளுக்கேற்ப, ஆதி முதல் அந்தமாய், அனைத்தையும் அதனதன் கோணத்தில் நேர்த்தியாய் படைத்து, படைப்பிற்கெல்லாம் சிறந்த படைப்பாய் எம்மை படைத்து பயனுள்ள விதத்தில் பயன்படுத்தி வரும் அன்பான இயேசுவே!

“யார் என்னை கைவிட்டாலும், இயேசு என்னை கைவிடமாட்டார்” என்ற வாக்குதத்திற்கு ஏற்ப, ஒருபோதும் என்னை கைவிடாத கடவுளாய், காக்கும் நல் தேவனாய், கரம் பிடித்து வழிநடத்தும் நல் தந்தையாய், பலவீனமான நேரங்களில் எங்களுக்கு பலம்கொடுத்து வருகின்ற அன்பான இயேசுவே! நீர் எம் வாழ்வில் செய்த அனைத்து நன்மைகளையும் நினைத்துப் பார்த்து உமக்கு நன்றி செலுத்தி போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம். ஒவ்வொரு புகழ்ச்சிக்கு பிறகும் நாம் கூற வேண்டிய பதில்

**பல்லவி:-** கைவிடாமல் காப்பவரே! உமக்கே நன்றியும், புகழ்ச்சியும்

- தாயின் கருவில் உருவான நாள்முதல் இந்நொடிப் பொழுது வரை காத்த கிருபைக்காக...
- எங்களின் துன்ப வேளையில் கரம்பிடித்து வழி நடத்தியமைக்காக...
- கண் கலங்கி யாருமே இல்லையே! யாரை நம்புவது என்று தெரியாமல் கலங்கிய நேரத்தில் தோள் கொடுத்தமைக்காக...
- வழிதவறி பறிதவித்த நேரங்களில் கரம் கொண்டு, காத்தமைக்காக...
- நோயின் பிடியிலிருந்தும், சாத்தானின் அனைந்து நெருக்கடியினின்றும் எங்கள் மீட்ட கிருபைக்காக...
- அன்றாடம் எங்களுக்கு வேண்டிய அனைத்து ஆசீர்வாதங்களையும் அள்ளித் தருவதற்காக!

**பாடல்:-** ஆயன் இயேசு கூட இருக்க...

மன்னிப்பு: திருப்பாடல் 32:1-11

ஒரு நிமிடம் நம் கண்ளை மூடி, நம் பாவத்திற்காக மனம் வருந்துவோம் நம் இறைவன் நம் குற்றங்களைக் கொண்டு நம்மை தீர்ப்பிடுபவர் அல்ல. நம் பாவங்களைக் கொண்டு அவர் நம்மை நடத்துவதில்லை. மாறாக செய்த குற்றத்திற்காக மனம் வருந்தி, அவரிடம் மன்னிப்பு கேட்டு, மனம் மாறியவர்களாய் திரும்பி அவரிடம் வரவே அவர் விரும்புகிறார். பாவிகளை அவர் ஒருபோதும் வெறுத்ததுமில்லை. புறம்பே தள்ளியதுமில்லை.

இதோ! இறைவா எங்களை உமது கரத்தில் அர்ப்பணிக்கின்றோம். நீர் எங்களை முழுமையாக அன்பு செய்கின்றீர் என்பதை உணர்கின்றோம். உம் கரத்தினால் எம்மை தாங்கி! அரவணைத்துக் கொள்ளும். எங்கள் உள்ளத்தை ஆராய்ந்து, சீர்தூக்கி, மனம் வருந்தியவாறு வந்துள்ள எங்களை உமது திரு இரத்தினால் கழுவி தூய்மைபடுத்தியருளும்.

பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் பார்த்து கேட்பீரே! ஒரு மணி நேரம் கூட விழித்திருக்க முடியாத என்று இதோ! எங்கள் தேவைகள், கவலை, கண்ணீர், வெற்றி, தோல்விகள், எங்கள் சோதனைகள், அவமானங்கள், மேலும் உம்மை விட்டு விலகிச் சென்ற தருணத்திலும், நீர் எங்களோடு இருந்து வழிநடத்தினீர் என்பதை நாங்கள் உணராத நேரங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கின்றோம். ஏற்று ஆசீர்வதியும்.

**பாடல் :-** ஆசீர்வதியும் என்னை ஆசீர்வதியும்...

(சிறிது நேரம் மௌனம் காக்கவும்).

**நற்செய்தி வாசக முன்னுரை :-**

"தாய் உன்னை மறுத்தாலும் நான் உன்னை மறக்க மாட்டேன்" என்ற இறைவார்த்தைக்கேற்ப பெற்ற தாய்கூட நம்மை மறந்தலும் ஒருபோதும் நம்மை மறவாத இறைவன், இதோ! இன்றுவரை நம் பாவங்களால், செயல்களால், சொற்களால் நாம் அவரை காயப்படுத்திய போதும் கூட, நம்மை ஒருபோதும் விட்டு விலகாமல் காக்கும் தெய்வமாய் இருக்கும் இறைவன் கூறும் இந்நற்செய்தி வாசத்திற்கு, பக்தியுடன், இறைவன் கூறும் உள்ளொளியாக மனசாட்சிக்கு செவிமடுப்போம்.

**நற்செய்தி வாசகம் :-** மத்தேயு 18:10-14 வாசிக்கப்பட்ட இறைவார்த்தையின் மூலம் நமது உள்ளத்தில் பேசும் இறைவனின் குரலுக்கு அமைதியுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டு**

1.உம்மை நோக்கி மன்றாடுகின்றேன். என்னை காத்தருளும். உம் ஒழுங்குமுறைகளை நான் கடைப்பிடிப்பேன். வைகறையில் நான் உம்மிடம் வந்து உதவிக்காக மன்றாடுகின்றேன். (திரு: 119:146)
என்ற இறைவார்த்தைகேற்ப இந்த ஒரு மணி நேரமும் நாங்கள் மன்றாடிய அனைத்தையும் நீர் அறிந்தராய் தக்க நேரத்தில் எங்களுக்கு உதவி செய்ய விரைந்து வருவீராக! இதனால் நாங்கள் உம்மீது கொண்டுள்ள அன்பில் எந்நாளும் நிலைத்திருந்து உம் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து வாழ, அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நல் ஆயனாய் இருந்து, சிதறிய உம் மந்தைகளை கூட்டிச் சேர்க்கும் நம் தாய்

திருஅவைக்காகவும் வழிநடத்துவோருக்காகவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3.நாட்டு தலைவர்கள் அனைவரும், நீதியோடும், உண்மையோடும், பொறுப்போடும் நாட்டையும் மக்களையும் ஆள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4.நம் குடும்பங்கள் அனைத்தும் ஒற்றுமையிலும், சமாதானத்திலும், விட்டுக்கொடுத்தலிலும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதிலும், பொருளாதார வசதியிலும் சிறந்த விளங்க மன்றாடுகின்றோம்.

5.உடல் நலக்குறைவினால் நம் குடும்பங்களில், பங்கில், சபையில், பணி செய்கின்ற இடத்தில், அவதி படுகின்ற அனைவரும் நல்ல உடல் சுகம் பெற வேண்டி மன்றாடுகின்றோம்.

**இறுதி செபம் :-**

காக்கும் நல் தந்தையே! எம் இறைவா இந்நேரம் மட்டுமாய் நாங்கள் உம்மோடு, நீர் எங்களோடு பேச, கொடுத்த அற்புதமான அருமையான நேரத்திற்காகவும், பல நல்ல சிந்தனைகளை எம்முள் விதைத்தமைக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

தொடர்ந்து, இறைவா நீர்தாமே, எங்களை கைவிடாமல் காக்கவும், ஓர் ஆட்டை தேடிச்சென்று கண்டுபிடித்த ஆயனைப் போல, நாங்கள் உம்மைவிட்டு விலகிச் சென்றாலும், நீர் எம்மை தேடிவந்து அணைக்கவும், காக்கவும், வழிநடத்தவும், வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை பார்த்து மன்றாடுகின்றோம்

எங்கள் செபம் கேளும் ஜீவனுள்ள நல்ல பிதாவே - ஆமென்.

**நன்றி பாடல்:**

உம் சிறகுகள் நிழலில் எந்நாளும்...



## 16. தியாகத்தின் அன்பனை ஆராதிப்போம்

**ஆராதனைப் பாடல்.....**

**ஆரம்ப ஜெபம்:** எங்களைப் படைத்துப் பராமரித்து வரும் நற்கருணை நாதரே உமது திருமுன் எங்களையே தாழ்த்தி உம்மை ஆராதிக்கிறேன்.

இயேசுவே நீர் மெய்யாகவே எம்முன் பிரசன்னமாயிருக்கிறீர் என்பதை உணர்ந்து அடியோர்கள் உம்மை மிகுந்த பக்தி வணக்கத்துடனே ஆராதிக்கிறோம். புனித கன்னி மரியாள், சகல வான தூதர்கள், சகல புனிதர்களுடன் சேர்ந்து எங்கள் எளிய ஆராதனையை உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம். ஆ என் பிரிய இயேசுவே! என் ஜீவியமே என்

மதுரமே எல்லாவற்றிக்கும் மேலாக உம்மை நேசிக்கிறோம்.

**போற்றுதல்:**

**பதில்:** உம்மை ஆராதிக்கின்றோம் இயேசுவே

- காற்றையும், கடலையும் கீழ்ப்படியச் செய்த இயேசுவே...
- கடலின் மேல் நடந்த இயேசுவே...
- தந்தையை அப்பா என்று அழைத்த இயேசுவே...
- சாவை வென்ற இயேசுவே...
- உலகின் ஒளி நானே என்ற இயேசுவே...
- உங்கள் பகைவருக்கு அன்பு கூறுங்கள் என்ற இயேசுவே... உம்மை ஆராதிக்கின்றோம் இயேசுவே
- வாழ்வு தரும் உணவு நானே என்ற இயேசுவே...
- அஞ்சாதீர்கள், திகையாதீர்கள் என்ற இயேசுவே...
- நான் உங்களைத் திக்கற்றவர்களாய் விடமாட்டேன் என்ற இயேசுவே...
- என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளி விடமாட்டேள் என்ற இயேசுவே...
- நானே நல்ல ஆயன் என்ற இயேசுவே...
- நானே உங்களை தேர்ந்து கொண்டேன் என்ற இயேசுவே...
- உலக முடிவு வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று மொழிந்த இயேசுவே...

பாடல்: **“ஒரு தாய் தேற்றுவது போல்”**

**நன்றி**

**பதில்: உமக்கு நன்றி இயேசுவே**

- எனக்காய் மனிதனாய்ப் பிறந்தவரே
- எனக்கு ஆசி வழங்குவதற்காக
- எம்மைக் காப்பதற்காக
- தந்தையாக இருப்பதற்காக
- உமது நீடித்த பொறுமைக்காக
- எம்மீது அன்பினை பொழிவதற்காக
- உமது நிலை பெயரா அன்பிற்காக
- என்றும் எம்முடன் நடப்பதற்காக
- நோயில் சுகம் தருவதற்காக

- நாங்கள் சாயும் போது தாங்குவதற்காக
- எங்களுக்கு உறுதி தரும் ஆவியை தந்ததிற்காய
- எண்ணில்லா நன்மைகளை எம்மீது பொழிந்ததற்காய்

**பாடல்: "ஒரு கோடி பாடல்கள் நான் பாடுவேன்"**

**மன்னிப்பு :**

**பதில்: என்னை மன்னியும் இயேசுவே**

- உம் வார்த்தைகளுக்கு செவி கொடாதிருந்ததற்காக...
- உம்மை விட்டு விலகிச் சென்ற தருணங்களுக்காக...
- உமது இறைவார்த்தையின் படி நடவாத நேரங்களுக்காக...
- எங்கள் வாழ்க்கையில் சுயநலமாய் வாழ்ந்ததற்காக....
- உமது அன்பை உணராத நேரங்களுக்காக...
- நேர்மையற்ற எங்கள் நடத்தைக்காக...

உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்கா விட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் மன்னிக்க மாட்டார். (மத்.18:35)

எம் இறைவா! இயேசுவே உம் மரண வேளையிலும், பிறரை மன்னிக்கும் படி உம் தந்தையிடம் வேண்டினீர். உம் மனநிலையோடு நாங்களும் பிறரை மன்னிக்கவும், நாங்கள் பிறருக்குச் செய்த குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களிடம், மன்னிப்புக் கேட்கவும் வரம் தாரும் ஆமென்.

**நற்செய்தி வாசகம் (யோவான் 6:48 - 51) வாசித்து தியானித்தல் உரையாடல்.**

**பாடல்: "எதை நான் தருவேன் இறைவா!"**

**மன்றாட்டுகள்:**

1. தலைவர்களுக்கெல்லாம் மேலான தலைவரே!
   எம் திரு அவையை வழி நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், இருபால் துறவியர் அனைவரும் உம் தியாகம் நிறை அன்பை வெளிப்படுத்தும் கருவிகளாக வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்
2. தன்னலமற்ற தலைவராம் அன்பு யேசுவே! எங்கள் நாட்டை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்கள் உம்மைப் போல் தங்களை மறந்து பொது நலம் காக்க தேவையான பரந்த உள்ளம் கொண்டு நாட்டு மக்களை வழி நடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் என்று மொழிந்தவரே இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். அவர்கள் தங்கள் திறமைகளை படைப்பாற்றலை நேர்மறையாக பயன்படுத்தி பொறுப்புள்ளவர்களாய் உருமாறி உருகொடுக்க உம்மை மன்றாடுகிறோம்.
4. இறைவா, அடிப்படை தேவை இன்றி வாழும் புலம்பெயர்ந்தோர், விதவைகள், அநாதைகள், கைவிடப்பட்டோர், வேலை வாய்ப்பின்றி அவதியுறுவோர், முதியோர் இல்லத்தில் வாழும் முதியோர்கள், உடல் நோயால் வருந்துவோர் ஆகிய அனைவரையும் அரவணைக்கும் கரமாக இருந்தருள இறைவா! உம்மை மன்றாடுகிறோம். (பதில்)

**இறுதி ஜெபம்**

உயிருள்ள விசுவாசத்தோடும், அசையாத நம்பிக்கையோடும், உம்முன் கரம் விரித்து நிற்கும் நாங்கள் வெறுங்கையராய் போகாதவாறு அருள் ஆசீரால் நிரப்பி வழி நடத்த எங்கள் ஆண்டவராகிய இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் நல்ல பிதாவே. ஆமென்.



# 17. சுகம் தரும் நல்லவரை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்: யோசனையில் பெரியவரே ஆராதனை...**

**முன்னுரை**:

சகலத்தையும் படைத்த உன்னதமான இறைவன் ஷநம் திருமுன் இந்த எளிய அப்ப வடிவில் பிரசன்னாகி நம் அன்பிற்காக அயராது காத்துக்கொண்டிருக்கும் அருமையான வேளையில் அவரின் அன்பை உணர்ந்தவர்களாய் அவர் திருபாதம் சிரம் தாழ்த்தி வணங்கி நம்மை அவரது கரங்களில் அர்ப்பணிப்போம். “நோயற்றவர்கல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை என்ற தன் பொன்னான மொழிகளை நமக்கு தந்து உடல் நோயாலும், உள்ள நோயாலும், பாவம் என்னும் கொடிய நோயிலும் அவதிபட்டு, அவரை விட்டு விலகி சென்றுக் கொண்டிருக்கும் நம் ஒவ்வொருவரையும் மருத்துவராக இருந்து, தனது காயங்களாலும் அவர் சிந்திய இரத்தத்தாலும் நம்மை முழுமையாக குணபடுத்த இந்நேரத்தில் நம் கண்முன் பிரசன்னமாயிருக்கும் இறைவனை நம் அகக் கண்களால் உற்று நோக்குவோம். பச்சிலையோ களிம்போ அவர்களுக்கு நலம் அளிக்கவில்லை ஆனால் ஆண்டவரே உமது சொல்லே எல்லா மனிதர்க்கும் நலம் அளிக்கிறது என்ற உயிருள்ள வார்த்தைகளை தியானித்து இறைவன் மீது முழு நம்பிக்கை கொண்டு உம்மால் கூடும்... எல்லாம் கூடும் என்ற வார்த்தைகளை தியானித்து தொடரும் இவ்வாரதனையில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

இறைவனை நோக்கி நம் இதயங்களை திருப்பியவர்களாய் நாம் மன்றாடுவோம்.

அன்பின் இறைவா! மருத்துவர்களுக்கெல்லாம் மேலான மருத்துவர் என்பதை தாங்கள் நன்கு அறிந்துள்ளோம். இதோ இந்நேரத்தில் எங்கள் பலவிதமான நோய்களில் இருந்து விடுதலை பெற நம்பிக்கையோடு வந்துள்ள எங்களைக் கண்ணோக்கிப் பாரும். உம் திரு காயங்களால் தொட்டு குணப்படுத்தி உம் பணியை உமது மகிமைக்காக நாங்கள் தொடர்ந்து ஆற்றிட எங்களுடன் இருந்து எங்களை வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்

**போற்றி:**

**பதில்:** உம்மைப் போற்றுகின்றோம், உம்மைப் புகழுகின்றோம் நன்றி கூறுகின்றோம்.

1. எங்களுக்கு நல்லதொரு குடும்பத்தையும், பெற்றோர்களையும், உடன்பிறந்தோரையும், நல்ல உறவுகளையும் கொடுத்து எங்களை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக…

2.நான் உனக்கு அறிவு புகட்டுவேன் என்ற உம் உயிருள்ள இறைவார்த்தைக்கேற்ப எங்களுக்கு நல்லதொரு கல்வியை கொடுத்து தாங்கள் ஞானத்தில் வளர உறுதுணையாக இருந்ததற்காக….

3.நான் உன்னுடன் இருக்கிறேன் என்ற இறைவா நாங்கள் செய்யும் பணிகளில் நீர் உம் உடனிருப்பை தந்து ஆசீர்வதித்து தொடர்ந்து உமது ஆசீர்வாதத்தை எங்களுக்கு அளித்ததற்காக…

4.நான் உன்னை பாதுகாப்பேன் என்று மொழிந்த எம் இறைவா! தாயின் வயிற்றில் உருவான

நாள் முதல் எங்களை யாதொரு குறையுமின்றி உம் சாயலில் படைத்த மாபெரும் கிருபைக்காக...

5.உன்னை நான் ஆசீர்வதிப்பவர் என்று மொழிந்த இறைவா பிறந்த நாள் முதல் இந்நேரம் வரை எங்களை அனைத்துவிதமான நோய்களிலிருந்தும், தீமைகளிலிருந்து பாதுகாத்து கண்ணின் இமை போல காத்து கொண்டிருக்கும் கிருபைக்காக....

6.நானே வழியும், உண்மையும், வாழ்வும் என்ற அன்பின் இறைவா நாங்கள் போகும் போதும், வரும் போதும் எந்நேரமும் வழிகாட்டியாய் இருந்து வழிநடத்தி வரும் அருள்வரத்திற்காக...

7.அஞ்சாதே, ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள் என்று மொழிந்த எம் இறைவா! நாங்கள் சோதனைகளால் துவண்டு விடும் போதும், யாருமில்லாமல் தனிமையில் வாடும் போதும், எங்களுக்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும் இருந்து ஆசீர்வதிக்கும் உம் கிருபைக்காக....

**மன்னிப்பு:**

**பதில்: எங்களை மன்னியும் இறைவா!**

- இரக்கம் நிறைந்த இறைவா! நாங்கள் பல நேரங்களில் வியாதியால் வேதனைபடும் மக்களைப் பார்த்தும் கண்டுக்கொள்ளாமல் இருந்திருக்கின்றோம். அத்தகைய தருணங்களை நினைத்து பார்த்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம்.

- நேற்றும் இன்றும் என்றும் மாறாத அன்பின் இறைவா! பல நேரங்களில் நோயாளிகளிடத்தில் கனிவுடன் நடந்து கொள்ளாமல் எங்களுடைய கோபத்தை அவர்கள் மேல் காட்டிய நிமிடங்களுக்காக உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.
- மகிமைக்கு பாத்திரமான இறைவா! நீர் உம்மையே தாழ்த்தி இந்த உலகத்தில் வந்து எல்லோருக்கும் தொண்டாற்றி மகிழ்ந்தர். நாங்கள் சில நேரங்களில் தீராத வியாதிகாரர்களைப் பார்க்கும் போது சலிப்பும், மன கசப்பும் அடைகிறோம். அத்தகைய தருணங்களை நினைத்துப் பார்த்து மன்னிப்பு வேண்டுகிறோம்.
- தாயும் தந்தையுமான இறைவா! குடும்பத்தில் வியாதியாய் இருப்பவர்களை நன்கு கவனிக்காமல் சுமையாய் கருதி, பெற்ற தாய் தந்தையர்களையே ஒதுக்கி விடும் அனைவருக்காகவும் உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம்.
- கிருபையின் வடிவமே இறைவா! எங்களிடம் ஆறுதல் தேடி வருபவர்களை கண்டு கொள்ளாமல் அவர்களை அலட்சியபடுத்திய நேரத்திற்காகவும், வேலைக்கு முக்கியத்துவம் அளித்து பொது சேவைக்கு முக்கியத்துவம் அளிக்காத நேரத்திற்காக உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.
- இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா! எம் பாவம் என்னும் நோயினால் உம்மை மனம் நோகச் செய்ததற்காகவும் உமது

அன்பை மறந்து உலக ஆசைகளில் மனதை செலுத்தியதற்காகவும் உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம்.

**இறைவார்த்தை:** லூக்கா 4: 38 - 44.

இறைவனின் வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது இருபுறமும் வெட்டகூடிய கூரிய வாளினும் மேலானது என்ற இறைவார்த்தைக்கேற்ப உயிருள்ள வார்த்தைக்கு செவிமடுக்க நாம் அனைவரும் எழுந்து நிற்போம்.

**சிந்தனைக்கு:**

நற்செய்தியில் வாசிக்க கேட்டதற்கேற்ப இயேசு உடல்நோய் மற்றும் ஆன்ம நோயினால் பாதிக்கப்பட்ட அனைவர் மீதும் கைகளை வைத்து குணமாக்குகிறார். அவரை தேடி வந்த அனைவரும் ஏழைகள், பாவிகள் கைவிடப்பட்டவர்கள், நோயுற்றவர்கள், தீய ஆவி பிடித்தவர்கள். இவர்கள் கடவுளையே முழுமையாக நம்பியவர்கள். இயேசு ஒரு தெய்வீக மருத்துவராக அவர்களுக்கு இருக்கின்றார். இயேசுவே உண்மையான மீட்பர் என்பதை இந்நற்செய்தி பகுதி எடுத்துக் காட்டுகிறது. இயேசு தன்னைத் தேடி வந்த யாவரையும் தொட்டு குணமாக்குகீறார். இயேசுவின் ஒவ்வொரு தொடுதலும் வாழ்வை மாற்றக் கூடியதாகவே இருந்தது. அவருடைய தொடுதல் நமது வாழ்விலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

நாம் தான் பல நேரங்களில் அதை உணர்வதில்லை. இறைவனால் எதையும் செய்ய முடியும் என்று நாம் முழுமையாக இதயத்திலிருந்து நம்புவதில்லை,

எனவே தான் ஒரு சிறு நோய் அல்லது ஒரு சிறு துன்பம் வந்தவுடனே மனம் உடைந்து விடுகிறோம். மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவராக விளங்கும் இயேசு, அவர்தம் காயங்களால் நம்மை குணமாக்குகின்றார். தேடி வந்து உதவி கேட்கும் மக்களை அவர் தம் இரத்தத்தினால் கழுவி, உடல் நோய் மட்டுமல்லாமல் உள்ள நோயினாலும் அவதியுறுவோரையும் குணமாக்குகிறார். நமது அனைத்து விதமான வலிகளையும். வேதனைகளையும் இறைவனின் திருப்பாதம் அர்ப்பணித்து இந்த ஆராதனையின் மூலம் நம் பாவ நோய்களிலிருந்தும், உடல் உள்ள நோய்களிலிருந்தும் விடுதலை பெற நமக்காக செபிப்போம்.



## 18. நற்கருணை வாழ் நல்லவரை ஆராதிப்போம்

**பாடல் : நற்கருணை நாதரே என்...**

எங்களை நேசிக்கும் ஆண்டவரே! தேடுகிறேன்
எனக்குள் என்னையே நான்... விடை
தெரியாமல், மொழி இல்லாமல்,
கண் இமைக்காமல், கரங்களை குவித்தபடி
ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்து
அமைதியான போது... என்னுள்ளே பேசியது
ஒரு மொழி என் செவியில் கேட்டது ஒரு
சப்தம் உற்று நோக்கிய போது... தெய்வீக
தரிசனம் உணர்ந்தேன் சிரம்
தாழ்த்தினேன் இயேசுவே என்னோடு பேசும் என்
சிந்தனை சிறகுகளை விரித்தேன் ஆண்டவரே நீ
வேண்டும் எனக்கு உம் துணை வேண்டும்
என்னை அறிந்து கொள்வதற்கு உம் தெய்வீக

பிரசன்னத்தின் சக்தி என்னை வழி நடத்தவேண்டும் உம் முன் அமைதியாக அசைவற்று அமர ஆசைப்படுகிறேன் (அமைதி….. 3 நிமிடம்)

**பாடல்** : தரிசனம் தர வேண்டும் ஏசய்யா...

**நன்றி:**

எத்தனை எத்தனை நன்மைகள் எத்தனை எத்தனை அருட்கொடைகள் எத்தனை எத்தனை இயற்கை வளங்கள் எத்தனை எத்தனை ஆசிர்வாதங்கள் ஒவ்வொன்றாக நமக்குள்ளே பயணம் செய்து நன்றி சொல்வோம்.

**பதில்** : மறவாமல் நினைத்தீரைய்யா மனதார நன்றி சொல்வேன்.

- ❖ நற்கருணை நாதரே...
- ❖ அதிசயம் செய்தவரே...
- ❖ ஆலோசனை தந்தவரே...
- ❖ குணமாக்கும் மருத்துவரே...
- ❖ துயரங்களில் துணையாக நின்றவரே...
- ❖ குடும்பத்தில் மகிழ்வை தந்தவரே...
- ❖ தயங்கி நின்றபோது துணிவை தந்தவரே...
- ❖ இறைவார்த்தைகளால் தேற்றியவரே...
- ❖ என் கால்களுக்கு பெலன் தந்தவரே...
- ❖ இருகரம் விரித்து ஆசிர் தந்தவரே...
- ❖ அப்பத்தின் தோற்றத்தில் அதிசயம் செய்பவரே...
- ❖ மகளே! ஏன் பயப்படுகிறாய் என்றவரே...
- ❖ உனக்காகத்தானே எல்லாம் செய்தேன் என்றவரே...

- உன் கவலைகளை என்னிடம் ஒப்படைத்துவிடு என்றவரே...
- சற்றே இளைப்பாறு என்று ஆறுதல் தந்தவரே...
- பணிவோடு பணிசெய் என்று என்னை பார்த்து சொன்னவரே...
- இதயங்களை நேசிக்க கற்றுக்கொடுத்தவரே...
- ஆயுள் உள்ளவரை உன்னை நினைப்பேன் என்றவரே...

**அமைதியில் சில நிமிடங்கள்......**

**பாடல் :** எனக்காகத்தானே நீ எல்லாம் செய்தாய்...

**மன்னிப்பு:**

**பதில்:** இயேசுவே என் மேல் இரங்கும்.

- வானகதந்தை இரக்கமுள்ளவராக இருப் பதைப் போல நாங்கள் செயல்படாமல் இருந்ததற்காக...
- மற்றவரின் சுமைகளை தாங்கிக்கொள்ளாமல் இருந்ததற்காக...
- மனத்தாழ்ச்சியையும், சாந்தத்தையும் கற்றுகொள்ளாததற்காக....
- தீங்கு செய்வோரை மன்னிக்காததற்காக....
- நண்பா முத்தமிட்டா காட்டிக் கொடுத்தாய் என்பதை என் வாழ்வில் பலமுறை செய்ததற்காக...
- உம்மோடு விழித்திருந்து செபிக்க தவறியதற்காக....
- வெளிவேடக்காரரைப் போல வார்த்தைகளால் பிதற்றியதற்காக.....

- ❖ என்னிடம் இருப்பதை பிறரோடு பகிர மறந்ததற்காக…..
- ❖ பெற்ற திறமைகளை உம் மகிமைக்காக பயன்படுத்த தவறியதற்காக….
- ❖ எல்லா சூழலிலும் பொறுமை இழந்ததற்காக….
- ❖ சினம் கொள்வதில் தாமதம் காட்டாமல் இருந்ததற்காக….
- ❖ இறைவார்த்தையின்படி நடவாத நேரங்களுக்காக….

**பாடல்** : விண்ணப்பத்தை கேட்பவரே…

நீங்கள் ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள் நேர்மையாளருடைய வல்லமை மிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும் எலியா மழை பெய்யக்கூடாது என்று உருக்கமாக இறைவனிடம் வேண்டினார் மூன்று ஆண்டு ஆறு மாதம் மழை இல்லாது போயிற்று மீண்டும் வேண்டினார் வானம் பொழிந்தது. நிலம் விளைந்தது. நீங்கள் தந்தையே என அழைத்து மன்றாடுவர் ஆளைப் பார்த்து அல்ல அவரவர் செயல்களின்படி தீர்ப்பு வழங்குகிறார். இவ்வுலகில் அந்நியராய் வாழும் காலம் எல்லாம் ஆண்டவர்க்கு அஞ்சி வாழுங்கள்.

ஏனெனில்

- 1 பேதுரு 3∴9 – கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கி கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்
- 1 பேதுரு 5∴7 – உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்.

- ஒருவர் மற்றவர்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள் அப்பொழுது குணம் அடைவீர்கள்.
- ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்
- தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள்.
- உன் நம்பிக்கை வீண்போகாது இறைவார்த்தைகளின்படி வாழும்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடு இருப்பார்.
- இறைஅமைதி உங்கள் உள்ளத்தையும் ஆன்மாவையும் காக்கும்.
- உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வார்.
- உங்களை அழைக்கும் ஆண்டவர் நம்பிக்கைக்குரியவர்.

**அவரவர் தனிப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் நற்கருணை நாதரிடம் மௌனமாக சொல்லுவோம்.**

**பாடல்** : நான் நானாகவே...

**இறுதி மன்றாட்டு:**

மகதலாமரியாளிடம் யாரை தேடுகிறாய்? ஏன் அழுகிறாய்? என்று கூறிய உயிர்த்த ஆண்டவர் நமக்குள்ளே அருளும் நம்பிக்கை, நம் பயணத்திற்கு பதில் தருவார். உம் பிள்ளைகள் நாங்கள் செபிக்கிறோம் ஆண்டவரே.

- ❖ ஆகார் தன் பிள்ளைகளுக்காக அழுதபோது ஆண்டவர் பதில் தந்தார்.
- ❖ குழந்தை இல்லை என அழுத அன்னாவுக்கு பதில் கொடுத்தார்.
- ❖ நோயுற்றிருந்த எசேக்கியல் கண்ணீரைவிட்டபோது சுவர் பக்கம்

திரும்பி அழுதபோது ஆண்டவர் பதில் தந்தார்.

- ❖ கானாவூர் திருமண வீட்டில் குறை தீர்த்து பதில் தந்தார்.
- ❖ ஆபிரகாமுக்கு 3 சந்ததி கொடுத்து பதில் தந்தார்.

இறை பிரசன்னத்தில் விழித்திருந்து செபித்த நம் அனைவருக்கும் பதில் கொடுப்பார். இறை நம்பிக்கையோடும் பிறர் அன்போடும், நம் உள்நோக்கிய பயணத்தை தொடருவோம். இறை ஆசிர்வாதம் வழி நடத்தும், என்ற நம்பிக்கையோடு எழுந்து நின்று விண்ணகதந்தையே என்ற செபத்தை கரம் விரித்து சொல்வோம்.

இறை பராமரிப்பில் இளைப்பாறுவோம். ஆமென்.



## 19. வாழ்வளிக்கும் வள்ளலை ஆராதிப்போம்

**பாடல்:** அன்பின் தேவ நற்கருணையிலே

**முன்னுரை:**

கிறிஸ்துவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமான நற்கருணையின் மீது நம் கண்கள் எப்போதும் பதிந்திருக்க வேண்டும். எனவே நற்கருணை ஆண்டவரை உற்றுநோக்கி சிரம் தாழ்த்தி ஆராதிப்போம். நற்கருணை ஆண்டவர் உணர்த்தும் தியாகம், ஒன்றிப்பு, பேரன்பு ஆகியவற்றை நமதாக்கி இறையருளை நிறைவாகப் பெற வாழ்வளிக்கும் கடவுளோடு இந்த ஆராதனையில் பயணிப்போம்.

புகழ்ச்சி:

**பதில்:** உம்மை ஆராதிக்கின்றோம்

1. வாழ்வளிக்கும் விதிமுறைகளை எனக்குக் கற்பிக்கும் உமது வார்த்தைக்காக...

2. அற்புத அடையாளங்கள் செய்கிறவரே..

3. திக்கற்றவர்களுக்கு அடைக்கலமும் ஆறுதலுமாக இருப்பவரே..

4. எங்களைக் கை நெகிழ விடாமல் கரம் பிடித்து நடத்துபவரே...

5. வாழ்வளிக்கும் திரு இரத்தமே, திருவுடலே...

6. நல்ல கனி தரும்படி எங்களைக் கண்டித்து
அரவணைப்பவரே...

7. ஏழைகளைக் காத்துப் பராமரிக்கும் தேவனே...

8. எளியோர்களின் விண்ணப்பத்தைக் கேட்பவரே...

10. நீடிய சாந்தமும், பொறுமையும் உள்ளவரே...

11. எல்லார் மேலும் இரக்கம் உள்ள பேரன்பே...

12 இறைப் பணியாளர்களைக் குணப்படுத்துகிறவரே...

13. ஆறுதல் அளிக்கும் எங்கள் உண்மையான சகோதரரே..

14. ஆபத்துக் காலத்தில் எங்களுக்குத் துணை நிற்கும் வல்லவரே...

15. பாவிகளை மன்னித்து ஏற்றுக்கொள்கிறவரே...

**பாடல்:** அன்பு கூறுவேன்...

**மன்னிப்பு வழிவாடு:**

**பதில்:** எங்களை மன்னியும் இயேசுவே

1. பிறரை அன்பு செய்யாததற்காக…
2. எங்கள் வாழ்வில் உம்மை உணராத நேரத்திற்காக…
3. பிறரை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளாததற்காக…
4. திருப்பலியில் உம்மை உணராததற்காக…
5. உமது வார்த்தைகளை கடைப்பிடிக்காதற்காக
7. பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என்று எச்சரித்தவரே…
8. தூய ஆவியில் ஜெபிக்காத நேரத்துக்காக…
9. கடவுளுக்கு எதிராக பேசியதுக்காக….

**பாடல்:** வாழ்வை அளிக்கும் வல்லவா...

**நன்றி:**

**பதில்:** நன்றி நன்றி இறைவா...

1. அஞ்சாதே நான் உன்னைவிட்டு விலகமாட்டேன் என்று கூறிய இறைவா..
2. நான் உனக்கு முன்சென்று குன்றுகளைச் சமப்படுத்துவேன் என்ற இறைவா…
3. நீ மேற்கொள்ளும் அனைத்துச் செயல்களிலும் நிறைவு பெறுவாய் என்ற இறைவா…
4. மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உம் மீது

நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது
என்ற இறவைா….

5. நீ தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்பட மாட்டாய் என்ற இறைவா..

6. நீர் நிலைகள் வழியாக நீ செல்லும் போது நான் உன்னோடு இருப்பேன் என்ற இறைவா…

7. நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன் என்ற இறைவா….

8. கழுகு தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளில் வைத்துச் சுமப்பது போல் நான் உன்னை சுமப்பேன் என்ற
இறைவா…

9. உன்னை என் அரச முத்திரை மோதிரமாக வைப்பேன் என்ற இறைவா….

10. ஆண்டவரின் கையில் நீ அழகிய மணி முடியாய்த் திகழ்வாய்
என்ற இறைவா…..

**பாடல்:** அப்பா பிதாவே அன்பான

**இறைவார்த்தை:** யோவான் 15: 1 - 7

**சிந்தனை:**

திராட்சை செடி படைப்பின் காலமுதல் பேசப்பட்ட செடி ஆகும். அதன் பழமும் ரசமும் மனிதரால் உண்ணப்பட்டது. திராட்சை செடியின் தனி தன்மை அது விதை நட்டு முளைக்காது. செடியின் கிளையை பூமியில் நட்டாலே அது முளைத்து செடி, கொடியாக வளர்ந்து கனி தந்துவிடும். இதனை செடி என்றும் சொல்லலாம், கொடி என்றும் சொல்லலாம். ஒரு கிளையானது செடியுடன் இணைக்கப்பட்டிராமல் உயிர் வாழ முடியாது, அது போலவே

கிறிஸ்துவுடன் நெருங்கி வாழாமல் எந்த ஒரு மனதனும் உயிர் பிழைத்திருக்க இயலாது. எனவே இயேசு வாழ்வளிக்கும் கடவுளாக இருக்கின்றார். நமது இதயமாகவும் இருக்கின்றார். கிறிஸ்துவுடன் நெருங்கி நிலைத்திருங்கள்! தொடர்பற்றுப் போய்விடாதீர்கள். கிறிஸ்துவை விட்டுப் பிரிந்திருத்தல் என்பது பேரழிவாக உள்ளது. ஒரு கொடியானது தனது செடியுடன் கொண்டுள்ள நெருக்கத்தை போன்று இயேசுவுடன் நாம் கொண்டிருக்கும் உடனிருப்பை இவ்வேளையில் சிந்திப்போம்.

**பாடல்:** என் கூடவே இரும் ஓ இயேசுவே

**மன்றாட்டுகள்:**

1. **வாழ்வளிக்கும் எம் இறைவா!**

இந்த உலகத்தில் இருக்கும் அனைத்து உயிர்களையும், ஆசீர்வதித்து நிறைவான அருளைக் கொடுத்து உம்மோடு என்றும் இணைந்து உம் மகிமையை உணர தேவையான அருளைத் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. **நலம் அருளும் நல்ல ஆயனே இறைவா!**

உடல் நலக் குறைவினால் மருத்துவமனையிலும்,
தங்கள் இல்லங்களிலும் இருந்து சிகிச்சை பெறும் ஒவ்வொரு நல்ல உள்ளங்களுக்காவும் உம்மிடம் மன்றாடுகிறோம். உமது அன்புக்கரங்களால் அவர்கள் ஒவ்வொருவரையும் தொட்டு குணப்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்ோம்.

3. **வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா!**

எமது திருஅவையை நிறைவாக ஆசீர்வதியும். திருஅவையில் உள்ள நாங்கள் ஒவ்வொருவரும் உம்மோடு இணைந்து நல்ல கனிதரக் கூடியவர்களாக மாற தேவையான அருளைத் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. உலகை ஆளும் உன்னத இறைவா!**

எமது சமுதாயத்தை உமது கையில் ஒப்படைக்கிறோம். நீர் சமூதாயத்தை ஆசீர்வதித்து சமூதாய மக்கள் சுயநலம் கருதாது பொதுநலம் கருதி வாழ வேண்டிய அருளை வழங்க வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**5. ஏழ்மையில் இனிமைக் காணும் நாயகனே எம் இறைவா!**

எங்களைப் பல்வேறு இயற்கைச் சீற்றங்களும், கடும் வெயில் வறட்சி, விளைச்சல் பற்றாக்குறை, மழையின்மை, புயல் பெரும்மழை போன்ற இவை அனைத்திலிருந்து எங்களைக் காத்துப் பராமரித்து வருகிறீர். எனவே நாங்கள் உம்பணியைத் தொடர்ந்து ஆற்றிட தேவையான அருளைத் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**இறுதி மன்றாட்டு:**

வாழ்வளிக்கும் கடவுளே இந்நேரம் வரை எங்களோடு இருந்து எங்கள் ஆராதனைகளையும் வேண்டுதல்களையும் செவி சாய்த்து எங்களை உம் இறை பிரசன்னத்தில் வைத்து வந்ததற்காக உமக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம். எந்நாளும் எங்களுக்கு வாழ்வளிக்கும் கடவுளாக இருக்க எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து

வழியாக இறைவா உம்மை வேண்டுகின்றோம். ஆமென்.



# 20. வழிநடத்தும் இறைவனை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்**

**துவக்கசெபம்:**

மகிழ்ந்து வாழ எங்களை அழைக்கிற தெய்வமே இறைவா, உம்முடைய பாசத்திலே, அன்பிலே எங்களைக் கட்டி எழுப்புகிறவரே உம்மைப் போற்றிப் புகழ்ந்து நன்றி செலுத்துகிறோம். உமது அன்பின் இறைபிரசன்னம், இரக்கத்தின் ஆளுகை எங்கள் வாழ்வை ஆசீர்வதிப்பதற்காக, பாதுகாப்பதற்காக, பராமரிப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களோடு, எங்கள் வாழ்வோடு, நீர் தங்கி இருப்பவராய், இருக்கிறவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

வாழ்வளிக்கும் இறைவனாய், ஆசீர்வாதத்தை அள்ளி கொடுக்கிறவரே இந்த நாள் முழுவதும், நாங்கள் ஒவ்வொருவரும் நல்ல கனிதருகிற நல்ல மரங்களாகவே, வாழ எங்கள் வாழ்வை ஆசீர்வதியும், எங்களின் இன்றைய நாள் பணிகளை செவ்வனே செய்து முடிக்க, எங்களுக்கு ஆற்றலையும், ஞானத்தையும் தந்தமைக்காக நன்றி செலுத்துகிறோம்.

எங்கள் உறவை வளர்க்கும் கருவிகளாக, உறவோடு உமது ஞான வார்த்தைகளை பகிர்ந்து, கடமையை செய்ய, உறவில் நாங்கள் மகிழ்ச்சிகான செய்ததற்காக நன்றி செலுத்துகிறோம். வாழ்வளிக்கும் இறைவன் நமது எல்லா சூழ்நிலைகளிலும் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்தி வருவதற்காக நமது ஆராதனைகளை செலுத்துவோம்.

1. வெண்ணிற அப்பத்தின் வடிவில் எங்கள் முன் பிரசன்னமாயிருக்கும், நற்கருணை ஆண்டவரே, எல்லாம் வல்லவரே, இந்த நாளுக்காக, உமது இறைபிரசன்னத்தில் எங்களை ஒன்று கூட்டிய உமது கிருபைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இதோ உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று எங்களோடு உடன்படிக்கை செய்து, நற்கருணையின் வழியாக எங்களோடு வாழ்ந்து வருபவரே உம்மை ஆராதித்து உமக்கு நன்றி கூறுகின்றோம்.

**பாடல்:** வல்லவரே உம்மை ஆராதிப்பேன்

நல்லவரே உம்மை ஆராதிப்பேன்

2. இறைவா, நீர் படைத்த இந்த உலக மக்களைக் காத்து வழிநடத்தும் உமது மாபெரும் இரக்கத்தையும், அன்பையும் நினைத்து உம்மை ஆராதித்து உமக்கு நன்றி கூறுகின்றோம். உமது வார்த்தையாலும், நற்கருணையாலும் எங்களுக்கு தினமும் சக்தியை தருவதற்காக நற்கருணை ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்தி உம்மை தாழ்ந்து பணிந்து ஆராதிக்கிறோம்.

**பாடல்**: பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்

பணிந்து குனிந்து ஆராதிப்பேன்

3. தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல, உமது பாதத்திற்கு வரும்போதெல்லாம், இனம்புரியாத ஆறுதலைத்தந்து, நாங்கள் சோர்ந்துபோன நேரங்களில், எங்களை தேற்றி அரவணைத்து, ஆசீர்வதித்த உமது மாபெரும் கிருபையை நினைத்து, உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம், நன்றி செலுத்துகின்றோம்.

**பாடல்:** ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்

ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

4. கலைமான் நீரோடைக்காக ஏங்கி தவிப்பதுபோல், இறைவா, என் நெஞ்சம் ஏங்கி தவிக்கின்றது என்று திருப்பாடல் ஆசிரியர் உம்மை நோக்கி நெஞ்சுருகி பாடியது போல, இறைவா, உம் திருப்பாதத்தில் நாங்கள் அமர்ந்து நீர் எங்களை வியத்தகு முறையில் ஒவ்வொரு நாளும் எங்களைக் காத்து வருகின்ற, உமது கருணையை நினைத்து உம்மைப் போற்றிப்

புகழ்ந்து ஆராதித்து நன்றி செலுத்துகின்றோம்.

**பாடல்:** காண்பவரை நான் ஆராதிப்பேன்

காப்பவரை நான் ஆராதிப்பேன்

இறைவனை ஆராதித்து நன்றி செலுத்திய நாம் அவரது மன்னிப்பை வேண்டுவோம்.

**மன்னிப்பு மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, உம்மைப் பிரிந்து, நொறுங்கிய உள்ளத்தோடு, குற்றம் புரிந்தவர்களாய் உம்முன் நிற்கின்றோம், உலக போக்கின்படி வாழ்நடந்ததற்காக மனம் வருந்தி உம்மிடம் மன்னிப்புக் கேட்கின்றோம் எங்களை ஏற்றிடுவாய் இறைவா.
2. இரக்கமுள்ள இறைவா, பொதுநலத்தோடு வாழாமல், சுயநலத்தோடு சமூக அக்கறை இல்லாமல் வாழ்ந்திருக்கிறோம். உதவி தேவைப்படுவோருக்கு உதவி செய்யாமல் இருந்திருக்கிறோம் எங்களை மன்னியும் இறைவா.
3. கனிவுள்ள தந்தையே இறைவா, பிறரைப் பற்றி புறணிப்பேசி, பொய்சொல்லி நடந்த நேரத்திற்காக உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம். இறைவா எங்களை மன்னியும்.
4. அரவணைக்கும் தந்தையே, இந்த உலகில் எப்படியும் வாழலாம், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனநிலையில் எம்மையே பாழக்கிக் கொண்டோம். நாங்கள் செய்த தவறுகளை கண்டுணராமலும், பிறர் செய்த தவறுகளை சுட்டிக்காட்டாமலும்,

வாழ்ந்திருக்கிறோம், எங்களை மன்னித்து அரவணைத்துக் கொள்ளும் இறைவா.

இறைவனின் இரக்கத்தை வேண்டிய நாம் இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இறைவார்த்தை: யோவான் 4: 1 - 9**

இயேசு அளிக்கும் வாழ்வளிக்கும் தண்ணீரைப் பெற ஒருவர் இரண்டு செயல்களைச் செய்ய வேண்டும்.

1. இயேசுவை யாரென அறிந்து கொள்ள வேண்டும்.

2. அறிந்தபின்பு அவர்மீது நம்பிக்கைக்கொள்ள வேண்டும். நற்செய்தியில் வருகின்ற சமாரியப்பெண் இயேசுவை முதலில் ஒரு யூதராகத்தான் அறிந்திருந்தார், பின்னர் அவளுடைய அறிதல், இறைவாக்கினர் மெசியா, மீட்பர் என்று உ ணர்கிறாள், இறுதியில் அவள் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்கிறாள். மற்றவர்களும் அவர் மீது, நம்பிக்கைக் கொள்ள காரணமாக இருக்கின்றாள். இவ்வாறு பாவியாக இருந்த அப்பெண்மணி இயேசுவின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமாக வாழ்வளிக்கும் தண்ணீரை பெற்றுக்கொள்பவளாக இருக்கின்றாள். இயேசுவி ன் வழியில் நடக்கின்ற நாம், இயேசுவை யாரென அறிந்து அவர்மீது ஆழமான நம்பிக்கைக் கொண்டு, அவர்தரும் வாழ்வளிக்கும் தண்ணீராம் நிலைவாழ்வை பெற்றுக்கொள்வோம்.

அவரிடம் நம்பிக்கைகொள்ளும் அனைவரும், நிலைவாழ்வை பெறுவர், என்பார் யோவான் நற்செய்தியாளர், ஆகையால் நாம் வாழ்வுதரும் தண்ணீராம் நிலைவாழ்வை அளிக்கும் இயேசுவிடம் ஆழமான நம்பிக்கைக்கொண்டு, வாழ்வோம்,

அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

**பாடல்....**

**மன்றாட்டு:**

1. அன்பின் இறைவா எங்கள் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவறத்தார் அனைவரும் இறைமக்களை இறைநம்பிக்கை யில் வளர்த்து, தங்கள் வாழ்வாலும், சொல்லாலும், செயலாலும் உம்மைப் பிறருக்கு அளித்திட அருள்வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மண்ணகத்தை ஆளும் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும் மக்கள் பணியில் வருகின்ற எல்லாவித தடைகளையும், எதிர்மறையான ஆதிக்க சக்திகளையும் முறியடித்து, மக்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்களை முழுமையாக கொடுத்திடவும், ஏழை எளிய மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு அவர்களுக்கு உழைக்கும் நல்ல மனதினைத் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, மருத்துவமனையிலும், வீடுகளிலும் நோய்வாய்ப்பட்டு இருக்கின்ற அனைத்து நோயாளிகளையும் ஆசீர்வதியும். நீரே அவர்களது இயலாமையிலும் நோய்வாய்ப்பட்ட சூழ்நிலையிலும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களை தொட்டு சுகப்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணையின் இறைவா, உலகெங்கும் உள்ள விதவைகள், அனாதைகள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், கடன்தொல்லையால் பாதிக்கப்பட்டோர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். நீரே ஆறுதலின் தேவனாக இருந்து தேவைகளை நிறைவேற்றித்தந்து. உமது அருளாலும், ஆசீர்வாதத்தாலும் நிரப்பி காத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. வாழ்வளிக்கும் இறைவா, இறைமக்கள் அனைவரையும், ஒப்புகொடுத்து செபிக்கின்றோம். உமது இறைவார்த்தையை படித்து, அதனை வாழ்வாக்கவும், உலக கவலைகளால், ஆசைகளால் நொறுக்கப்பட்டாலும், உமது இறைவார்த்தையின் மேல், நம்பிக்கைக்கொண்டு வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**செபிப்போமாக:**

அன்பின் இறைவா, நற்கருணை நாதரே அன்று இஸ்ரயேல் மக்களுக்கு பகலில் மேகத்தூணாகவும், இரவில் நெருப்புத்தூணாகவும் இருந்து, உமது உடனிருப்பை வெளிபடுத்தினீர். அவர்கள் உமது வியத்தகு உடனிருப்பை வெளி அடையாளமாக பார்த்தது, மட்டுமல்லாமல், உம்மை ஆராதிக்கவும் செய்தனர். இயேசுவே இன்று நாங்களும், உம் உடனிருப்பை உணர்ந்து உம்மை ஆராதிக்கின்றோம். உம்முடைய உடனிருப்பிலிருந்தும், ஆராதனையிலிருந்தும், ஆன்மீக சக்தியினைப்பெற்று, அச்சக்தியினால், ஊட்டமும், உணர்வும் கொண்டு, புது

உற்சாகத்தோடு, செயல்பட்டு, உமக்கு மகிமை சேர்க்க எங்களை ஆசீர்வதியும் பயன்படுத்தும் - ஆமென்.



## 21. கருணையின் கர்த்தரை ஆராதிப்போம்

**ஆராதனைப் பாடல்**

**புகழ்ச்சி:**

**பதில்:** எம்மோடு தங்கும் ஆண்டவரே!

* மகிழ்ச்சியில் நாங்கள் மிதந்திடும் போது...
* சோகத்தில் நாங்கள் சோர்ந்திடும் போது....
* சோர்வுகள் எம்மை சாய்த்திடும் போது..
* வசதிகள் எங்களில் வசப்படும் போது...
* வறுமையில் நாங்கள் வருந்திடும் போது..
* தோல்வியில் நாங்கள் துவண்டிடும் போது...

* குறைவின்றி வாழ்வு நகர்ந்திடும் போது...
* நம்பிக்கை இழந்து நலிவுறும் போது....

**நற்செய்தி:**

**“நானும் தீர்ப்பளிக்கவில்லை” யோசுவா 8 : 11**

- “இறைவனின் இதயத்திற்கு நேரடியாகச் செல்ல விரும்பினால் இரக்கத்தின் பாதையைத் தெரிந்து கொள்ள வேண்டும்” -**திருத்தந்தை பிரான்சிஸ்**
- இறைவனின் இரக்கம் என்பது அவரது இதயத்தின் ஆழம்.

“கடவுளின் இரக்கத்தைத் தவிர மானிடரின் வாழ்விற்கு எந்தவொரு நம்பிக்கை ஒளிக்கீற்றும் இல்லை” என்பார் -திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால்

- இறைவனின் இரக்கம் மிக உயர்ந்தது நாம் நினைப்பதைவிட மிகப் பெரியது என்பதை மனதில் கொள்ளவேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித ஜான் மரிய வியான்னி அவர்களின் வாழ்வில் இடம் பெற்ற ஒரு நிகழ்வை மேற்கோள் காட்டி, இறைவனின் இரக்கத்தின் மேன்மையைச் சுட்டிக் காட்டினார்.
- பாலத்திலிருந்து குதித்து தற்கொலை புரிந்த தம் கணவர் தற்கொலையின் வழியாக மன்னிக்க முடியாத பெரிய பாதகத்திற்கு உள்ளாகிவிட்டார் என அழுது புலம்பிய கைம்பெண்ணை நோக்கி “அந்த பாலத்திற்கும் அவர் விழுந்த
ஆற்றிற்கும் இடையே இறைவனின் இரக்

கம் இருந்தது" என புனித ஜான் மரிய வியான்னி கூறியதை எடுத்துரைத்த திருத்தந்தை இறைவனிடம் திரும்பி வர நம்மால் முடியாது என எவரும் எண்ண முடியாது என்று கூறுகிறார்.

**யோவான் 8-ம்** அதிகாரத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் அவரைக் கல்லால் எறிந்து கொல்லக் கொண்டு வருகின்றார்கள். "உங்களில் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்" என்ற போது முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக சென்றுவிடுகிறார்கள். ஆன்ம குருவாக ஆண்டவர் அங்கு இருக்கிறார். "இரக்கத்தைக் காட்ட" இயேசு கல்லெறிய வலியுறுத்தும் சட்டத்திற்கு அப்பால் செல்கின்றார். "நானும் உன்னை தீர்ப்பிடேன்" என்று கூறி தன் அளவற்ற அன்பை, இரக்கத்தை, மன்னிப்பை வெளிப்படுத்துகிறார். இரக்கம் என்பது "மற்றவரின் துயரத்திற்கு தன் இதயத்தை திறந்துவிடுவது" என்று பொருள் இரக்கம் என்பது நம்மை ஆரத்தழுவுகிற ஒரு தெய்வீக குணம், நம்மை நாமே அப்படியே ஏற்றுக் கொள்ளவும், அயலாரை மன்னிக்கவும், நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளவும் இறைவன்தாமே அதனை நமக்குத் தருகின்றார்.

ஆண்டவரின் இரக்கம் நமக்கு ஒவ்வொரு நாளும் கிடைக்கிறது. நம் வலுவின்மையில் அவரது வல்லமை நம் பலவீனத்தில் அவரது பலம், நம் பாவங்களில் அவரது மன்னிப்பும், இரக்கமும் குறையாமல் கிடைக்கிறது. அவரது இரக்கத்தை அனுபவிக்கும் நாம், அதே குணத்தோடு வாழ வேண்டும். பிறருடைய குற்றங்களை மன்னிக்க

நம்மால் முடிகிறது. ஆனால் அதனை மறந்துவிட முடிகிறதா? ஆண்டவர் பேதுருவின் மறுதலித்தலை மன்னித்தார் - மறந்தும் போனார். அதை எந்தச் சூழ்நிலையிலும் சுட்டிக் காட்டவில்லை. விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் அவளின் பாவத்தை பட்டியலிடவில்லை. “நானும் தீர்ப்பிடேன்” என்று இரக்கத்தைக் காட்டினார்.

நமது இரக்கம் அயலாரின் மேல் மன்னிப்பதில் மட்டுமல்ல, மறந்துவிடுவதும், அந்தப் பாவச் செயலை மறந்தும்கூட சுட்டிக் காட்டாமல் இருப்பதும்தான். இரக்கத்தின் தேவன் எவ்வாறு நம் பாவங்களை இரக்கத்தோடு மன்னித்து, மறந்து விடுவதைப் போல, நாமும் இரக்கம் நிறைந்த உள்ளத்தோடு பிறரின் குறைகளை மன்னிப்போம். மறப்போம். உயிரோட்டமுள்ள புது நம்பிக்கையுறவில் வளர்வோம்.

**மன்றாட்டு:**

**பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

1. **இரக்கம் நிறைந்த தந்தையே!** எங்கள் திருஅவை மீது உமதிரக்கம் இருக்கட்டும். எங்கள், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரையும் உமது இரக்கம் நிறைந்த இதயத்திற்கு மிகநெருக்கமாக வைத்திருக்கவும், அவரது சொற்களில், செயல்களில், வாழ்க்கை முறையில், வழிபாடுகளில் உமது இரக்கம் மக்கள் மீது பொழியப்பட **ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்**.

2. **இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா!** ஏழை எளியோர், தேவையில் இருப்போர் அனைவருக்கும் நாங்கள் இரக்கம் நிறைந்த உள்ளத்தோடு எங்களால் முடிந்த இரக்கச் செயல்களை செய்யவும், அதன் வழியாக அவர்களும் மனித மாண்புடன் வாழ வரம் தர **இறைவா உம்மை மன்றாடுகின்றோம்**.

3. **இரக்கமே உருவானவரே!** இரக்கமும், மன்னிப்பும் பகிரப்படாமல் எத்தனையோ குடும்பங்களில், சண்டை, சச்சரவு, உறவுகள் பிரிந்து போய்விடும் நிலை, ஆண்டவரே இக்குடும்பங்களின் மீது இரக்கம் கொண்டு, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு, அன்பு செய்து வாழவும் அதன் மூலம் உறவுகள் உறுதியாய் இருக்கவும் வரம் தர **ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.**

4. **கனிவுடையவரே!** உடல் உள்ள வேதனையால் வாடும் உள்ளங்களை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம் குணமாக்கவே முடியாது. இந்த நோய்க்கு மருந்தே இல்லை என்று நினைத்து துயரப்படும் ஒவ்வொருவரையும் நீரே தேற்றி ஆறுதல்படுத்தி, தைரியத்தையும் நம்பிக்கையும் கொடுத்து "விரும்புகிறேன் குணமாகு" என்று ஆசீர்வதித்து சுகம் தர **ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.**



# 22. இதயம் வாழும் இறைவனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

உள்ளங்கள் இங்கே காத்து கிடக்கின்றன உம் வரவுக்காய். இதயங்கள் ஒன்று கூடி இங்கு இன்னிசை இசைக்கின்றன. தண்ணீர் தேடி திரியும் கலைமான்கள் போன்று இறைவா உன்னைத் தேடி வந்துள்ளோம். தாழ்பணிந்து வணங்குகிறோம். எம்மை ஆசீர்வதியும். வெண்ணிற அப்ப வடிவில் எம் உள்ளங்களில் குடி கொள்ள எழுந்து வந்தவரே உம்மை ஆராதிக்கின்றோம். மாபெரும் செயல்கள் புரிந்து வான்வெளியை மதி நுட்பத்தால் உண்டாக்கியவரே உம்மைப் போற்றுகிறோம்.

கடல் மீது மண்ணகத்தை விரித்து பெருஞ்சுடர்களை உண்டாக்கியவரே உம்மைப் போற்றுகிறோம். தாழ்வுற்ற எம்மை நினைவு கூர்ந்தவரே உம்மைப் போற்றுகிறோம் எதிரிகளிடமிருந்து எம்மை விடுவித்தவரே உம்மைப் போற்றுகிறோம். புகழ்கிறோம், வணங்குகிறோம்.

ஆண்டவரைத் தன் கடவுளாக கொண்ட இனம் பேறுபெற்றது. அவர் தமது உரிமை சொத்தாக தேர்ந்து கொண்ட இனம் நாம் தான். அவரது உரிமை சொத்தாக தேர்ந்து கொள்ளப்பட்டவர்களும் நாம் தான். உள்ளங்களை
உருவாக்கிய இறைவன் இன்று இந்த மனித இதயத்திற்காய் ஏங்கி தவிக்கின்றார்.

இறைமகன் இயேசு நம் இதயங்களில் வாழவே ஆசைப்படுகின்றார். என் இதய

கோவிலில் வந்து தங்கும் இயேசுவே என்று அவரை நாம் தாழ்பணிந்து வரவேற்போம்.

ஆம் உயிர்கள் அனைத்தும் இறைவனை இடையுறாது புகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே இந்நேரத்தில் நாமும் அவரது வல்ல செயல்களை நினைத்து போற்றிப் புகழ்வோம்.

தாயின் கருவில் உருவாக்கி உருக்கொடுத்த இறவைா.. உம்மைப் போற்றிப் புகழ்கிறோம்.

எமது வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் எம்முடன் இருந்து வழிநடத்தியவரே.. உம்மைப் போற்றி புகழ்கிறோம்.

அன்றாடம் எம் தேவைகள் அறிந்து எம் வேண்டுதலுக்கு செவிசாய்த்தவரே.. உம்மைப் போற்றுகிறோம்.

உள்ளங்கைகளில் எங்களைப் பொறித்து ஒவ்வொரு நாளும் புது ஆசீரால் எம்மை நிறைப்பவரே... உம்மைப் போற்றுகிறோம்.

எல்லா விதமான தீமைகளிலிருந்தும் ஆபத்துகளிலிருந்தும் உம் தூதர்களைக் கொண்டு எம்மைக் காப்பவரே... உம்மைப் போற்றுகிறோம்.

நல்ல உடல் உள்ள சுகம் தந்து வழிநடத்துபவரே... உம்மைப் போற்றுகிறோம்.

தூய ஆவியின் கொடைகளாலும் கனிகளாலும் எம்மை நிரப்பிக் காப்பவரே... உம்மைப் போற்றுகிறோம்.

**நற்செய்தி:**

நாம் எதை எதிர்பார்க்கின்றோமோ கண்டடைகின்றோம். எதை கண்டடைகின்றோமோ அதை முழு மனதுடன் ஏற்று கொள்கிறோம். சீமோன் இயேசுவை எதிர்பார்த்து காத்திருந்தார். அதனால் அவரைக் கண்டடைந்தார். ஆவரைக் கண்டடைந்த பின் மெசியா என தன் இதயத்தில் ஏற்றுக் கொண்டார்.

என் ஆண்டவரே என் இறைவனே என பறைசாற்றுகிறார். ஆனால் இறைமகன் இயேசு எதிர்பார்க்காமலேயே தினந்தோறும் திருப்பலியின் வழியாக நம்முடன் உறவாடுகிறார்.

திருவிருந்து நிகழ்வின் வழியாக நம் இதயத்தில் குடிகொள்ள வருகிறார். இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன் என்று நாள்தோறும நம் இதய கதவை தட்டிக் கொண்டிருக்கிறார். யாராவது கதவை திறந்து தனது இதயமென்னும் கோவிலில் தன்னை வரவேற்க மாட்டார்களா? என ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார். உண்மையில் நாம் தான் அவர் வருகைக்கென காத்து கொண்டிருக்க வேண்டும். இறைவனை நம்மில் வரவேற்க தனிப்பட்ட தடையாக உள்ள நமது பொறாமை, கோபம், ஆசைகள் போன்ற தேவையற்ற எண்ணங்களை அகற்றி இறைவனை நம் உள்ளத்தில் வரவேற்போம். இதய கோவிலை திறந்து வைப்போம்.

**செபிப்போமாக:**

எம் இதயத்தில் வந்து குடிகொண்டு எமக்காய் எந்நாளும் காத்திருக்கும் அன்பின் இறைவா, இந்த ஆராதனை முழுவதும் எம்முடன் இருந்து எம்மை ஆசீர்வதித்தமைக்காக நாங்கள் உம்மை போற்றி புகழ்ந்து நன்றி கூறுகின்றோம். எம் உள்ளத்தில் உம்மை ஏற்க முடியாமல் அதற்கு தடையாய் உள்ள பாவங்களை களைந்து தூய உள்ளத்துடன் வாழ வரம் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.



## 23. நம்மை அவரோடு இணைக்கும் இறைவனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

காண்கின்ற தெய்வமாய், வழி நடத்தும் ஆயனாய் நற்கருணையிலே தன்னையே முழுமையாய் வெளிப்படுத்துகின்ற ஆண்டவரை உற்றுநோக்குவோம், ஆராதனைக்குரிய ஆண்டவர் அனைத்து உலகத்தையும் படைத்து தன் பராமரிப்பிற்குள் ஒவ்வொரு நாளும் காத்து வருகின்ற தெய்வம் நமக்கு முன்பாக வெண்ணிற அப்பத்தின் வழியாக தன்னுடைய அன்பையும் இருத்தலையும் முழுமையாக நமக்கு வெளிப்படுத்துகின்றார். இந்த உன்னதமான நேரத்தில் அவரோடு இணைந்து வாழ நம்மையே நாம்

ஒப்புக்கொடுப்போம். இறைவனின் கரங்களைப் பற்றிக்கொள்கிற, இறைவனின் பராமரிப்பைப் பெற்றுக் கொள்கிற இந்த உன்னதமான நேரத்தில் அவரை ஆராதித்துப் புகழ்வோம்.

எரியும் புதரில் மோசேயையும், மெல்லிய காற்றில் எலியாவையும், இடியின் ஒலியில் பவுலையும், கடலில் வலை விரித்த சகோதரரான அந்திரேயாவையும் பேதுருவையும் அழைத்த இயேசு இன்று நம்மையும் நற்கருணை நாதரோடு இணைந்து வாழ அழைக்கிறார். இணைப்பு வலிமை சேர்க்கக்கூடியது. வலிமையின் உச்சமாம் இயேசுவோடு இணையும் போது அதிகப்படியான வலிமையையும் ஆசீர்வாதத்தையும் பெறுகிறோம். அவர் அன்பில் இணையும் போது புது பெலனை அடைகிறோம். நமக்கும் இறைவனுக்கும் உள்ள இணைப்பு சொல்லிலும், செயலிலும் வாழ்க்கையிலும் இருக்க வேண்டும். அப்போது தான் இயேசுவோடு இணைந்து வாழ முடியும். எனவே நற்கருணை நாதரிடம் நம்மை முழுவதும் அர்ப்பணிப்போம்.

நன்றியோடு அவர்தம் திருவாயில்களில் நுழையுங்கள் புகழ்பாடலோடு அவர்தம் முற்றத்திற்கு வாருங்கள் அவருக்கு நன்றி பலி செலுத்தி அவரதுப் பெயரை போற்றுங்கள் என்ற திருப்பாடல் வரிகளுக்கு ஏற்ப நம் ஆண்டவர் நமக்கு கொடுத்த அழகிய வாழ்வுக்காகவும், நம்மைக் காத்து வந்ததற்காகவும் நன்றி கூறுவோம். இறைவன் எல்லாம் வல்லவர், மேன்மையானவர் ஆசீர்வாதங்கள் பல நம்மீது பொழிந்தவர் அத்தகைய இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

**பதில்: இறைவா உமக்கு நன்றி**

- அன்பினாலும் இரக்கத்தினாலும் எம்மை மீட்டவரே....
- நொடிப்பொழுதே எம்மை கைவிட்டாலும் உம் பேரிரக்கத்தால் எம்மை ஏற்றுக்கொள்பவரே...
- பகைவரிடம் அன்பு கூறச் சொன்னவரே...
- என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவள் மதிப்புமிக்கவள் என்றவரே...
- உம் அருள் நலமும் பேரன்பும் எம்மைப் புடை சூழந்து வர செய்பவரே....
- அறிவுத் தெளிவோடு எங்கள் மனம் செயலாற்ற செய்பவரே...
- என்னை அனுப்பினவர் என்னோடு இருக்கிறார் அவர் என்னை தனியாக விட்டு விடுவதில்லை என்றவரே...
- உம் மேல் அன்பு கூறுகிறேன் என்றவரே...
- நீடிய பொறுமையும் இரக்கமும் பேரன்பும் உள்ளவரே...

**மன்னிப்பு:**

மன்னிப்பு ஓர் அனுபவம் கடவுள் நம்மீது கொள்ளும் அளவுக்கடந்த அன்பை, கனிவை, இரக்கத்தை அவரது மன்னிப்பில்தான் அதிகமாக நாம் அனுபவிக்கிறோம். ஒவ்வொரு முறையும் மனம்மாறி அவரிடம் திரும்பி வந்து மன்னிப்பு வேண்டும் போது, அவர் நம் பாவங்களை மன்னிக்கிறார். பிறருடைய குற்றங்களை மன்னிக்க முன்வரும் போது நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இறைவனும் நம்

பாவங்களை மன்னிக்க முன் வருகிறார். இதைத் தான் மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார் என்று மத்தேயு 6:14 கூறியுள்ளார். குறிப்பாக கிறிஸ்துவின் பிள்ளைகளாயிகிய நாம் இறைவன் நமக்கு செய்த நன்மைகளை, அருஞ்செயல்களை உணராமல் இருந்த நேரங்களை நினைத்து நற்கருணை ஆண்டவரிடம் அமைதியில் மன்னிப்பு வேண்டுவோம்.

**இறைவார்த்தை:**

இறைவனின் வார்த்தை, நம் வாழ்வை இனிமையாக்குகிறது கடவுளின் இனிமையை சுவைக்க செய்கிறது ஆன்மாவை வளர்த்து இறைவனோடு ஒன்றிணைக்க வைக்கிறது. இறைவார்த்தை என்பது ஒரு புத்தகத்தில் அடங்கிய எழுத்துகள் அல்ல. மாறாக அது மனுவுருவெடுத்த கிறிஸ்து என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறுகிறார். இத்தகைய வல்லமைமிக்க இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்.

**நற்செய்தி:** யோவான் 15:1 - 8

மரத்தில் இருந்த இலைக்கு ஓர் ஆசை. எத்தனை நாள் தான் இந்த மரத்திலே தொங்கிக் கொண்டிருப்பது என சலித்துக் கொண்டது. இடையில் ஏக்கம் எரிச்சலாக மாறியது. இந்த மரத்திலிருந்து எப்போது தான் விடுதலை கிடைக்குமோ என்று புலம்பியது. இலை ஏங்கி காத்திருந்த அந்த நாள் வந்தது. இலையுதிர் காலத்தின் வடிவில். மரத்திலிருந்து இலை விடுதலைப் பெற்றது. பறவையைப் போல் தானும் பறக்க முடிகிறதே

என்று நிலைகொள்ளா மகிழ்ச்சி அந்த மகிழ்ச்சி ஒரு சில நொடிகளே நீடித்தன.

மரத்தை விட்டு உதிர்ந்த இலை இறுதியில் தரையில் விழுந்து வீசிய காற்று அதன்மேல் புழுதியைக் கொட்டியது. மனிதர்களின் நடமாட்டம் அதனை மேலும் கீழே அமிழ்த்தியது. கண்களில் நீர் பொங்க அண்ணாந்து பார்த்தது இலை. மற்ற இலைகள் மரத்தில் தென்றலில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. நான் மரத்தில் இருந்திருந்தால் மற்ற இலைகள் போல் நானும் மகிழ்ந்து கொண்டிருப்பேன் என ஏங்கியது.

மரத்தோடு இணைந்து இருக்கும் போதுதான் இலைக்கு இன்பமான வாழ்வு. பிரிந்தால் தாழ்வு. ஆம் எதனோடு இணைந்திருந்தால் வாழ்வு சிறக்குமோ அதனோடு இணைந்து செல்வதே சிறப்பு. செடியோடு கொடி இணைந்திருந்தால்தான் அந்த கொடியால் சிறப்பான கனிகளைக் கொடுக்க முடியும். கொடிகள் எவ்வளவு நீண்டு சென்றாலும், பல கிளைகள் பரப்பி விரிந்து சென்றாலும் இணைந்திராவிடில் பலன் ஒன்றுமில்லை. இறைவனோடு இணைந்து நற்கனிகளைக் கொடுக்க வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான். நமக்கும் இறைவனுக்கும் உள்ள இணைப்பை புதுப்பித்துக்கொண்டே இருப்பது தான். தனி ஒருவராக இருந்து நம்மால் எதையும் செய்ய முடியாது. இறைவனோடு இணைந்து வாழ நற்கருணை நாதரிடம் மன்றாடுவோம்.

**மன்றாடுவோமாக:**

உண்மையான திராட்சைக் கொடியாகிய தந்தையே, உம்மோடு இணைந்து வாழ எங்களுக்கு சிறப்பான, அமைதியான நேரத்தைக் கொடுத்து வழிகாட்டிய எம் நற்கருணை ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறோம். இறைவனின் பண்புகள் நம்மில் மிளிர்ந்து, அதை மற்றவர்களுக்கு கொடுத்து வாழ்வதே இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கும் கனி. இக்கனியை உலகிற்கு கொடுக்க நாம் இறைவனோடு இணைய வேண்டும். அதன் வழியாக மிகுந்த கனி தந்து இயேசுவின் சீடராய் இருந்து தந்தையாம் கடவுளின் மாட்சிமையில் மகிழ்வோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.



## 24. மனித மனம் புரிந்துக்கொள்ளும் இறைவனை ஆராதிப்போம்

**“இதோ! உலகம் முடியம் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்” மத் 28:2** என்று கூறியதை செயலாக்கி எங்களுக்காக இரவும், பகலும் ஒரு சிறு அப்ப வடிவில் காத்திருக்கும் அன்பு இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்குகிறோம். காற்றையும், கடலையும் “இரையாதே. அமைதியாயிரு” என்ற ஒரே வார்த்தையால் அடக்கினீர் இன்று ஒரு காற்றடித்தால் கூட பறந்து போககூடிய, ஒரு சொட்டுத் தண்ணீர் பட்டாலும் கரைந்து போகக்கூடிய வெண்ணிற அப்பத்தில் காத்திருப்பதற்காக, எங்களின் ஆன்ம உணவாக தினமும் எங்களிடம் எழுந்து வந்து எங்களுள் குடி கொள்வதற்காக நன்றி

கூறி இந்தப் பாடல் வழியாக உம்மை ஆராதிக்கிறோம்.

**பாடல்:** இதை என் நினைவாகச் செய்ய மாட்டாயா?

நற்கருணை ஆண்டவரே விலங்குகள், பறவைகளின் இறைச்சியை உண்ணும் நாங்கள் அவை எம் உடலில் கலந்து பல வேளைகளில் அவற்றின் குணம் கூட எங்களில் வெளிப்படுகிறது. ஆனால், தினந்தோறும் உம்மை உட்கொள்ளும் நாங்கள் இயேசுவாக மாறுகிறோமா? என்று சிந்திப்போம்.

இன்றைய நாட்களில் பெற்றோர்கள் கவலை தங்களுடைய பிள்ளைகளைப் பற்றியாகத்தான் இருக்கிறது. கல்வி, அறிவு, அறிவியல், செயற்கை அறிவு வளர்ந்திருக்கும் இக்காலத்தில் நமது பிள்ளைகள், சமுதாயத்தில் இளையோர் எப்படி இருப்பார்களோ. அவர்களின் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று பெற்றோரும், சமூக, சமுதாயத் தலைவர்களும் கேள்விக் குறியுடன் இருப்பதைக் காண்கிறோம்.

சில பெற்றோர்கள் தாங்கள் பட்ட க்'டம் தங்கள் பிள்ளைகளுக்கு வரக் கூடாது என்று தகுதிக்கு மேலாக பிள்ளைகளை சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். அடுத்த வீட்டுப் பிள்ளைகள், நம் உறவினர்களின் பிள்ளைகளைப் போல, நம் பிள்ளைகளும் படிக்க, வாழ அவர்களுக்குத் தங்கள் உண்மை நிலையைக் காட்ட மறுக்கிறார்கள். தாங்கள் வளர்ந்த விதம், இன்று இந்நிலைக்கு வர அவர்களின் உழைப்பு. க்'டங்களைச் சொல்ல தவறுவதால் அந்தக் குழந்தைகள் ஏதோ கனவு உலகில்

வாழ்வது போல உல்லாசமாக பிறரை, நண்பர்களை சுழடந அழனநட ஆகக் கொண்டு வாழ்கின்றார்கள். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு க்'டம், ந்'டம், நோய், தோல்வி வரக்கூடாது என நினைக்கிறார்கள். ஆண்டவர் நம் பிள்ளைகளை துன்பத்தின் பாதையில் நடத்தும் போது அவர்கள் ஏதோ பெரிய காரியங்களை செய்யப் போகிறார்கள் என்று உணர வேண்டும். ஆபிரகாம் எப்படி தனது ஒரே மகன் ஈசாக்கை வளர்த்தினார் என்பதை வாசிப்போம் (தொ.நூ 22:1-8) ஆபிரகாம் பலி செலுத்தப் போகும் போது தன் மகனின் தலை மேலேயே விறகுக் கட்டைகளை வைத்து, அவர் எளிய கத்தியையும், நெருப்பையும் எடுத்துச் செல்கிறார். இளமையிலிருந்தே ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கை கடின வாழ்விற்கு பழக்கியதால் பஞ்ச காலத்திலும் பயிர் செய்து நூறு மடங்கு அறுவடை செய்தார் என்று தொடக்க நூல் 26:12 ல் வாசிக்கின்றோம். அவர் பெருஞ்செல்வராய் ஆட்டு மந்தையையும், மாட்டு மந்தையையும், வேலைக்காரர் பலரும் கொண்டு வாழ்ந்தார். பெற்றோர் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து செபித்தல், உழைத்தல், உறவுகளைப் பேணுதல், ஆலயங்களுக்குச் செல்லுதல் அனைத்திலும் சிறு பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ஆண்டவரை முக்கியப்படுத்தி வளர்க்க வேண்டும். பிள்ளைகளிடம் இதை செய், செபி, கோவிலுக்குப் போ என்று நச்சரிக்காமலும் நாம் செய்து காட்ட வேண்டும்.

**பாடல்:** அம்மாவும் நீங்கதான் அப்பாவும் நீங்கதான்...

இயேசு தம் சீடர்களைப் பார்த்து "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம்.."

(மாற்கு 16:15-18.) நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று சொல்லி அனுப்பும் முன் அவர்களுக்கு பசி, தாகம், நடை, ஏளனம், மறுப்பு, ஏன் தான் பட்ட பாடுகளையும் காட்டி பயிற்சி அளித்தார். அதுபோல் நாமும் நமது பிள்ளைகளுக்கு வறுமையிலும் வாழத் தெரியும் என்று பயிற்சியளிக்க வேண்டும். நீதிமொழிகள் நூலில் சொல்வது போல சோம்பேறியே நீ எறும்பிடம் போய் சுறுசுறுப்பாய் இருக்கக் கற்றுக் கொள். நம் முன்னோர்களின் கடின உழைப்பு, எளிய விசுவாசம், செப வாழ்வு, இறையாட்சிப் பணியில் காட்டிய ஆர்வம், அவர்களது தூண்டுதலால், செபத்தால் துறவற சபைகளுக்கும். குருத்துவ நிலைகளுக்கும் அழைக்கப்பட்டவர்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை கற்றுக் கொடுக்கிறோமா? அக்காலத்தில் ability-ஐ விட availability அதிகமாக இருந்ததால்தான் இன்று திருஅவை வளர்ந்துள்ளது என்பதை உணர்ந்து, ஊற்றுக்குத் திரும்பி ஆண்டவர் செய்த அரும்பெரும் செயல்களைப் பார்ப்போம்.

போர்க்காலத்தில் கிதியோன் விவசாயம் செய்து உழைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து மிதியானியரை முறியடிக்க கிதியோனை பராக்கிரமசாலி என்று அழைத்து தேர்ந்தெடுத்தார். நாமும் நமது வசதிகள், வாய்ப்புகள், கல்வி, அறிவு, செயற்கை அறிவுக்குக் காரணமான ஆண்டவரையும், நமது வளர்ச்சிக்குக் காரணமான நமது பெற்றோர், ஆசிரியர்கள், ஞானக் கல்வியை கற்பித்தோர், ஆகியோருக்காக நன்றியோடு செபிப்போம். இறையாசீர் பெற்று வாழ்வோம். இன்று உலகில் நடைபெறும் போர்கள், இர்'யா-உக்ரைன் போர், காசா-

இஸ்ரயேல் போர், நிலச்சரிவுகள், இயற்கை சீற்றங்கள், மழை, வெள்ளம், வறட்சி, விபத்துக்கள், ஆபத்துக்கள், பாலியல் பலாத்காரம், தற்கொலை, வன்முறை இவற்றால் பாதிக்கப்பட்ட உறவுகள், உடைமைகளை இழந்த மக்களுக்காக செபிப்போம். இறைத்துணை வேண்டுவோம். ஆமென்.



## 25. காத்திருக்கும் கர்த்தரை ஆராதிப்போம்

மூவுலகாளும் உன்னத இறைவன், நமக்காக தம் உள்ளத்திலும் உடலிலும் பல்வேறு சுமைகளை சுகமென தாங்கியவர், நம்வாழ்வின் முன்மாதிரி, வழிகாட்டி, கண்ணின் இமைபோல காக்கும் கேடயமானவர் இவ்வினிய வேளையிலே நம்முன் வீற்றிருக்கும் நம் அன்பு நற்கருணை நாதரை சிரம் தாழ்த்தி ஆராதிப்போம்.

சுமைகள் நமக்கு வாழ்வின் பாடத்தை கற்றுக் கொடுக்கின்றன, வாழ்வின் நோக்கத்தை தெளிவாக்குகின்றன. இயேசுவுக்காக துன்பங்களைச் சுமைகளாக ஏற்ற திருத்தூதர்கள், புனிதர்கள் அவற்றை சுகமாக கருதினர், விண்ணகப் பேறு அடைந்தனர்.

அவ்வாறு செய்த இறைவன் இன்று நமக்காக காத்திருக்கிறார் அவரிடம் நாமும் செல்வோம்.

இறைவனை ஆராதனை செலுத்தும் விதமாக திருப்பாடல் - 33 அனைவரும் சேர்ந்து வாசிப்போம்.

**புகழ்ச்சி:**

**பதில்: உம்மை ஆராதிக்கின்றோம்**

- வழியும், உண்மையும் வாழ்வும் நானே என்று கூறி உமது வார்த்தையினால் எமக்குத் திடன் அளிக்கும் இயேசுவே…..
- உங்கள் நடுவே நான் உலாவுவேன் என்று வாக்களித்தவரே….
- உமது நியமங்களால் நான் நுண்ணறிவு பெறுவதற்காக….
- உமது கூடாடத்தினுள் என்னை வைத்துக் காப்பவரே…
- தொடக்கமும் முடிவும் நானே என்றுரைத்தவரே…
- உம் திருமுன் என்னை அகமகிழச் செய்பவரே…
- பாதுகாக்கும் கேடயத்தை எமக்கு வழங்குபவரே…
- எனது பாத்திரம் நிரம்பி வழியப் பண்ணுகின்றவரே…
- என் அழுகையை மகிழ்ச்சியாய் மாற்றுபவரே..
- என் பெயரைச் சொல்லி என்னை அழைத்தவரே…

- திரளான மக்களிடையே ஆர்ப்பரித்து புகழ்ந்து பாடத்தக்கவரே….

**நற்செய்தி: லூக்:15:11**

இப்பொழுது வாசிக்கப்பட்ட வாசகம் நாம் பல்வேறு கோணங்களில் தியானித்துள்ளோம். இன்று இவ்வாசகம் தந்தையின் காத்திருப்பு பற்றியும் அதனால் அவர் அடைந்த பலன்கள் பற்றியும் தியானிப்போம்.

தன் அன்பு மகன் அன்பை மறந்து, உலக செல்வங்களில் மயங்கி தவறான பாதையில் செல்கின்றான் சென்ற மகன் ஒருநாள் மீண்டும் வருவான் என்று காத்திருக்கும் தந்தை. இங்கு நாம் பார்க்க வேண்டியது என்னவென்றால் உலகத்தில் வாழும் சாதாரண தந்தை தன் மகன் தவறுசெய்து இருந்தாலும் பாவ வாழ்கையை தேர்ந்தெடுத்து சென்றாலும் ஒரு நாள் அவன் என்னிடம் வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

நாம் ஒவ்வொரு முறை தவறுகள் செய்யும் போது அவரின் அன்பை மறந்து உலக உறவுகளின் மீது ஆவல் கொண்டு தவறான பாதையை நோக்கிச் செல்லும் போதுயெல்லாம் என் மகள் என்னிடம் வருவாள் என்று இருகரம் விரித்தவராய் காத்துக் கொண்டு இருக்கிறார்.

ஐவெநசநெவஇ குயஉநடிழழமஇ ளுஅயசவ ிாழநெ என்று பலவற்றில் ஆர்வம் கொள்கின்றோம் ஆனால் இயேசுவோடு பேச, அவருடன் உறவுக்கொள்ள நேரம் போதவில்லை என்று சொல்கின்றோம் மகிழ்ச்சியான நேரங்களில் இறைதுணையை

மறந்துவிடுகின்றோம் இறுக்கமான நேரங்களில் அவரை கூப்பிட மறந்து விடுகிறோம். ஆனால் இறைவன் இவற்றை பாராமல் நம்முடைய உள்ளத்தைப் பார்க்கின்றார்.

நமக்காக இருகரம் விரித்தவரால் காத்து கொண்டு இருக்கின்றார் எப்பொழுது அவரிடம் செல்வோம் மனிதர்கள் பல நேரங்களில் நம்மை கைவிட்டு விடலாம், தோழர்கள் எளிதில் நம்மை மறந்து விடலாம் ஆனால் என்றும் மாறாத, மறவாத இறைவன் இயேசு நமக்காகக் காத்துக் கொண்டே இருப்பர் அவரிடம் செல்வோம் அன்பை பெற்று பிறருக்கு பகிர்வோம்.

**செபிப்போமாக:**

எனக்காக காத்திருக்கும் அன்பு இறைவா ஊதாரி மகனை போன்று நாங்கள் பாவத்திலிருந்து விலகி அவன் எவ்வாறு தந்தைக்கும் உமக்கும் எதிராக பாவம் செய்தேன் என்று மனம் வருந்தி திருந்தினானோ அதை போன்று நாங்களும் மனம் வருந்தி உம்மை பின்பற்ற வேண்டுமென்று எம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம்.

கருணைகண் கொண்டு எம்மை காக்கும் இறைவா, எம்மை ஒவ்வொரு நாளும் பாதுகாத்து வழிநடத்துவதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம், உதாரி மகனைப் போன்று வாழ்வில் பல்வேறு நிலையில் நாங்கள் தவறி சென்றாலும் வாழ்வு தரும் ஆயனாக நம்மைப் பாதுகாக்கும் உமது அன்பையும் நேசத்தையும் உணர்ந்து உமக்கு ஏற்ற வாழ்வு வாழ அருள் பொழிய வேண்டும் என்று எம்,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.



## 26. நல்லாயனை ஆராதிப்போம்

**ஆராதனை பாடல்:**

உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் என்று கூறிய அன்பின் பரலோகத் தகப்பனே இன்றைய நாளின் காலை வேளையிலிருந்து இந்நேரம் வரை எம்கரம் பிடித்து உம்முடைய கண்ணின் கருவிழியை போல் எம்மை ஆசீர்வதித்து பாதுகாத்து வழிநடத்தி வந்த உம் எல்லையில்லாத மாபெரும் கருணையை நினைத்து யேசுவே நற்கருணை நாதரே உம்மை நாங்கள் போற்றிப் புகழ்ந்து ஆராதித்து நன்றியோடு உம்மை துதிக்கின்றோம்.

நானே நல்ல ஆயன் என்று கூறிய அன்பின் இறைவா! இதோ உம்முடைய பிரசன்னத்திலே அமர்ந்து உம்மை முழுமையாக

சுவைக்க உம் அன்பை உணர உம்மை மட்டுமே இந்த நேரத்தில் நினைக்க எம்மை ஆசீர்வதித்த உம் இரக்கத்தை நினைத்து உம்மை நாங்கள் போற்றிப் புகழ்ந்து ஆராதித்து துதித்து உமக்கு நன்றி கூறுகின்றோம்.

அன்பு சகோதரமே பசும்புல் மேய்ச்சலில் இளைப்பாறச் செய்கின்ற இறைவனின் பிரசன்னத்தில் அமர்ந்து அவர் செய்த நன்மைகளை நினைத்து முழு உள்ளத்தோடு நன்றி கூறுவோம்.

ஒவ்வொரு நன்றியறிதல் செபத்திற்கு பிறகு இந்த இரண்டு வரிகளை மட்டும் பாடுவோம்.

**பதில்:** நன்றி நன்றி இறைவா, நன்றி நன்றி தலைவா! - 2

- உன் தாயின் கருப்பையில் உருவாக்கும் முன்பே உன்னைத் தேர்ந்தெடுத்தேன். நீ என் நம்பிக்கைக்குரியவள் உன் பெயரை சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்குரியவள் என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவள் மதிப்பு மிக்கவள் இவ்வாறு இறைவன் நம்மை சிறப்பு மிக்கவர்களாக, நம்பிக்கைக்குரியவர்களாக விலையேறப்பெற்றவர்களாக, உரிமைப் பொருளாக தேர்ந்தெடுத்திருக்கிறார். பலவீன நேரங்களில் இவற்றை உணராமல் வழி தடுமாறி சென்ற காலத்தையும் நினைத்துப் பார்க்கின்றோம். இத்தருணங்களில் எல்லாம் நீர் எங்களை விட்டு விடாமல் என் அருள் உனக்கு போதும் என்று

ஆசீர்வதித்து பெருமைப்பட செய்து, வாழ்வில் வரும் ஏற்றத்தாழ்வுகளில் எல்லாம் நீரே நல்லாயனாக இருந்து எங்களை உம் அன்பில் இணையச் செய்த உம் மாபெரும் இரக்கத்தையும் கருணையையும் நினைத்து உமக்கு கோடான கோடி நன்றி செலுத்துகிறோம்.

- நல்ல மேய்ப்பனாகிய எம் இறைவா! உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்குரியவள் என்று எசாயா 43:1 - ல் கூறப்பட்டுள்ள இறைவார்த்தைக்கு ஏற்ப எம்மை உம் பிள்ளைகளாக அழைத்தீர். இந்த அழைப்பு வாழ்வும் ஓர் உன்னதமான கொடை. இத்தகைய அழைத்தலில் நல் மேய்ப்பனாக இருந்து தவறும் போது எங்களை மீட்டு உம் பாதையில் பயணிக்க அருள் கூர்ந்த எம் இயேசுவே உமக்கே என் கோடான கோடி நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.
- எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறோம். ஏனெனில் நாம் நம்பிக்கைக்குரியவர்கள் என்று கருதி அவர் நம்மைத் தம் பிள்ளைகளாகத் தேர்ந்தெடுத்து உம் பரிசுத்தமான வாழ்வை எங்களுக்கு கொடுத்து எங்களை உமது கருவியாக பயன்படுத்தி உம் பணியை தியாக உள்ளத்தோடு செயலாற்ற உதவிய இயேசுவே உமக்கே ஆராதனையும் மகிமையும் நன்றியையும் உரித்தாக்குகிறோம்.
- நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைக் கொடிய ஓநாய்களிடமிருந்தும்

விலங்குகளிடமிருந்தும் பாதுகாக்கிறான். அது போல எங்கள் வாழ்க்கையில் வரக்கூடிய எல்லாத் தீமைகளிலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும், விபத்துக்களில் இருந்தும், நோயிலிருந்தும், சாத்தானின் தந்திர பிடியிலிருந்தும், கொடியப் பூச்சியிடமிருந்தும், இயற்கை சீற்றங்களில் இருந்தும் பாதுகாக்கும் நல் மேய்ப்பனாக இருந்து வழி நடத்துகின்ற என் அன்பின் பரம்பொருளே இறைவா உமக்கு எங்களது ஆராதனையும் நன்றியினையும் சமர்ப்பிக்கின்றோம்.

- நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார். ஆம் என் அன்பின் இனிய யேசுவே எங்களை முழுமையாக அறிந்த தேவன் நீர் ஒருவரே நாங்கள் அமர்வதும் எழுவதும் நீர் அறிந்திருக்கின்றீர். எங்கள் சிந்தனை, அறிவு, எண்ணம், சொல், செயல் எல்லாவற்றையும் முற்றிலுமாக அறிந்த தேவன் நீர் ஒருவரே. நாங்கள் போகும் போதும், வரும் போதும், எங்களிலும் எங்களுக்குள்ளும் நீரே செயலாற்றுகின்றீர். நீரே எங்களை உண்மையாக அறிந்த தேவனே உம்மை நாங்கள் போற்றிப் புகழ்ந்து ஆராதித்து நன்றியோடு உம்மை துதிக்கின்றோம்.
- வாழ்க்கையில் பல்வேறுக் காலக்கட்டத்தில் பல்வேறு பரிணாம வளர்ச்சியில், இன்பத்தில் துன்பத்தில், மேடு பள்ளங்களில், வெற்றியில், தோல்வியில், கவலையில், கண்ணீரில், வேதனையில் நெருக்கடியில்,

அழுகையில், ஆறுதலில் உம் மாபெரும் கருணையை நினைத்து பார்க்கிறோம். நீரே சிறந்த ஆயனாக எங்கள் வாழ்க்கையை பண்படுத்துகின்ற பதப்படுத்துகின்ற உம் அன்பின் மாபெரும் சக்தியை நினைத்து உமக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

- ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள் அவரே நம்மை படைத்தவர். நாம் அவர் மக்கள் அவர் மேய்க்கும் ஆடுகள் நாம் நன்றியோடு அவர் தம் திருவாயில்களில் நுழையுங்கள் நன்றி செலுத்தி அவரைப் போற்றுங்கள் என்று திருப்பாடல் 100-ல் சொல்லப்பட்டிருப்பதை நினைத்து நன்றி நிறை உள்ளத்தோடு உம் பிரசன்னத்தில் அமர்ந்து உமக்கு நன்றி பண் இசைக்க உம் புகழ்பாட எங்களை அழைத்த இயேசுவே உமக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

- “சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம் உங்கள் தந்தை உங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார்” என்று லூக்கா நற்செய்தி 12:32 -ல் சொல்லப்பட்டிருப்பது போல நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை எவ்வளவு பெரிய துன்பம் என்றாலும் அவர் திட்டமின்றி ஒரு அணுவும் அசையாது. எனவே யேசுவே உமது திருவுளமே எமது பாக்கியம் என்ற நம்பிக்கையில் வாழ எம் உள்ளத்தை உம்பால் ஈர்த்த எம் அன்பு யேசுவே

உமக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

- எங்கள் கடவுளே நீர் பரிவும் உண்மையும் பொறுமையும் உள்ளவர் அனைத்தையும் இரக்கத்துடன் ஆண்டு வருகின்றீர். ஆம் நாம் உண்பது நமக்காக, நாம் உடுத்துவது பிறருக்காக, நமது செயல் சமதாயத்துக்காக, நமது வாழ்வு மறுமைக்காக இத்தகைய வாழ்வில் நாம் இதுவரை அடைந்தது அன்பு, அறிவு, படிப்பு, நட்பு, மகிழ்ச்சி, திறமைகள், தொடர்புகள், அனுபவம், பலம், பண்புகள் இவைகளனைத்தையும் வாழ்வில் அனுபவிக்க நம்மோடு இருந்து நமக்கு முன்னும் பின்னும் நமக்குள்ளும் இருந்து நம்மை பயன்படுத்தி நமக்கு நல்வாய்ப்புகள் கொடுத்து நல்வழியில் நடத்தி செல்கின்ற இறைவா உம் மாபெரும் கிருபைக்கு எம் நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

**மன்னிப்பு:**

மன்னிப்பு மனித வாழ்வில் சவாலான வார்த்தை. மன்னிக்க தெரிந்த மனம் மாணிக்க கோவிலாகும். சிலுவையில் ஆண்டவர் யேசு தொங்கிய பொழுது அவர் சொன்ன இறுதி வார்த்தை தந்தையே இவர்களை மன்னியும். இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், என்ற வார்த்தையே மிகப் பெரிய செபம்.

ஒவ்வொரு மன்னிப்பு செபத்துக்கு பிறகு இப்பாடல் வரிகளைப் பாடுவோம்.

**பாடல்:** ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

- நல்லாயனாகிய அன்பு யேசுவே, எங்களது அறியாமையினால், பாவங்களினால், தவறுகளினால் உமக்கு எதிராகவும் பிறருக்கு எதிராகவும் செய்த ஒவ்வொரு சிறுசிறு செயல்களையும் நினைத்து உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம். எங்கள் மீது இரக்கமாயிரும் இறைவா...
- இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனாக இருக்கின்றார். நாம் மனிதனாக மாறிட மனமாற்றம் தேவை. தனிமை, வெறுமை, பகைமை என்ற வழியில் எண்ணத்தை செலுத்தி, சுயநலத்தோடு வாழ்ந்து வந்தோம். உம்மை மறந்து, உம் அன்பை வாழாமல் இருந்ததற்காக இறைவா எம்மை மன்னியும். இயேசுவே எங்கள் மீது இரக்கமாயிரும்....
- உலகை மாற்ற எண்ண வேண்டாம் நம்மை மாற்றுவோம். மேகத்தின் தூணிலே வழிகாட்டி சென்று செங்கடலை கடக்க வைத்தீர் பாறையை பிளந்து சுவை தரும் நீரால் தாகம் தணிக்க வைத்தீர். இந்த உம் வழி நடத்துதலை, பாதுகாப்பை, மறந்து வாழ்ந்த நேரங்களுக்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம். ஆவியான இறைவா எங்கள் மீது இரக்கமாயிரும்....
- என் ஆயன் ஆண்டவர் எனக்கென்ன குறைவு என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை வைக்காது பணம், பதவி, மோகம் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்து, தவறிச் சென்ற ஆடாகிய எம்மை, தவறி சென்றாலும் எம்மீது முழு

அக்கறை கொண்டு, தேடிக் கண்டுபிடித்து அதுவே மகிழ்ச்சி என்ற உம் அன்பான உள்ள கருத்துகளை எல்லாம் மனதில் பதிக்காது ஏனோதானோ என்று வாழ்ந்த நேரங்களை நினைத்து இப்போது உம்மிடம் மனம் வருந்தி மன்னிப்பு கேட்கின்றோம். மூவொரு இறைவா எங்கள் மீது இரக்கமாயிரும்.

**நற்செய்தி:** யோவா: 10:1-11

**சிந்தனைக்கு:**

இந்த இறைவசனங்கள் இயேசு நம்மைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறார் என்ற நான்கு கருத்துக்களை கூறுகின்றன.

1. நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறான்.

2. நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்கு முன்பாக சென்று ஆடுகளை வழிநடத்துகிறான்.

3. நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைக் கொடிய ஓநாய்களிடமிருந்தும் விலங்குளிடம் இருந்தும் பாதுகாக்கிறான்.

4. நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக உயிரையே கொடுக்கிறான். யார், வாசல் வழியாக வருகிறார்களோ அவர்களே நல்ல மேய்ப்பன் குறுக்கு வழியாக வருபவன் நல்ல மேய்பன் அல்ல.

நாமும் சிந்திப்போம், நல்லாயனாகிய இயேசுவின் குரலை நம்மால் கண்டு கொள்ள முடிகிறதா? என்றாவது அவரது குரலுக்கு செவிமடுத்திருக்கிறோமா? நம்மை எல்லா தீமைகளிலிருந்தும் விடுவிக்கின்ற ஆயனின் பாதுகாப்பை

உணர்ந்து இருக்கிறோமா? இவற்றிற்கெல்லாம் நாம் செவிமடுத்திருந்தால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அன்னை மரியாளைப் போல நன்றி கீதம் அமைதியுடன் இசைப்போம்.

**மன்றாட்டு:**

நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுகளை அமைதியில் ஏறெடுப்போம்.

நம் திரு அவைக்காக செபிப்போம்
நாட்டிற்காக செபிப்போம்
நற்செய்தியை அறிவிக்கின்ற ஒவ்வொருவருக்காகவும் செபிப்போம்
ஏழைகள், அனாதைகள், விதவைகள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், முதியோர், இளைஞர்கள், மருத்துவமனைகளிலும் வீடுகளிலும் நோயினால் வருந்துபவர்களுக்காக செபிப்போம்.

**இறுதி செபம்:**

நான் ஒரு போதும் உன்னைக் கைவிடமாட்டேன் உன்னை விட்டு விலகமாட்டேன் என்று கூறிய நல்லாயனாகிய யேசுவே அன்பு அளவில்லாமல் பெருகி விட்டால் சண்டை சச்சரவுகள் இவ்வுலகில் இல்லை. இறைவார்த்தையின் படி வாழ்ந்து விட்டால் பாவிகள் இவ்வுலகில் இல்லை. பாச உணர்வுகள் மேலோங்கி விட்டால் பழி சுமத்தல் இவ்வுலகில் இல்லை. ஆயனின் குரலை நாம் கேட்டு விட்டால் அவர் பாதையில் பயணிப்போம் நமக்கு எக்குறையும் இருக்காது. எங்கும் எல்லாம் வெற்றியே என்று நன்றி பொங்க இந்த ஒரு மணி நேரமும்

எங்களோடு இருந்து எங்களோடு பயணித்த உம் அன்பிற்கு நன்றி கூறி இனிவரும் நாட்களில் உம்மையே நல்லாயனாக பற்றிக் கொண்டு உம் குரல் கேட்டு வாழ அருள் தர வேண்டுமாய் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.



## 27. பகிர்வின் பரமனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

விண்ணுலகம், மண்ணுலகம் உருவற்று வெறுமையாக இருந்தது. ஆண்டவராகிய கடவுள் ஒளி தோன்றுக, வானம் தோன்றுக, உலர்ந்த தரை தோன்றுக, ஒளிப்பிழம்புகள் தோன்றுக என்று உரைத்த உடனே இவ்வுலகும், அதிலிருக்கும் யாவும் தோன்றின. அன்பால் உலகத்தைப் படைத்தார். இவற்றை ஆள, ஆட்சி செய்ய பகிர தம் சாயலிலே, உருவிலே மனிதனைப் படைத்தார் (தொ. நூல் 1:27) மனிதன் மீது அளவு கடந்த அன்பு, பரிவு, பாசம், இரக்கம் காட்டி முழுமையாக அறிந்து நேசிக்கும் இறைவனுக்கு இப்பாடல் வழியாக ஆராதனையை சமர்ப்பிப்போம்.

**பாடல்:** என் தேவனே என் வேந்தனே ஆராதணை (2)
என் இறைவனே என் தலைவனே ஆராதணை (2)

உலகில் உள்ள படைப்புக்கள் அனைத்துமே பகிர்தலில் தான் முழுமை அடைகின்றன. பலவீனப்பட்ட ஒரு மனிதனுக்கு, தகுதியில்லாத ஒரு மனிதனுக்கு, தானாக ஒருவர் முன் வந்து உதவிக்கரம் நீட்டி உதவுவது பகிர்வு. இன்றைய நுகர்வுப் கலாச்சாரத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு அதிக வரியும், அதிக விலையும் நிர்ணயிக்கின்றனர். ஆனால் ஆடம்பரப் பொருள்கள் மலிவு விலையில் கிடைக்கின்றன. இதிலும் முழுமையாகச் சுரண்டப்படுவது அன்றாடம் உழைத்து உண்ணும் கூலிகளும், ஏழை எளியவர்களுமேதான். இதற்கு காரணம் இம்மண்ணில் பற்றாக் குறையில்லை, மாறாகப் பகிராக் குறையே அதிகமாக உள்ளது. எனவே, இந்த ஆராதணை முழுவதும் அனைத்து ஏழை, எளியவர்களை அர்ப்பணித்து ஜெபிப்போம்.

**பாடல்:** என் தெய்வம் வாழும் பூமியிது….

**போற்றுதலும் நன்றியும்:**

சிங்கக் குட்டிகள் உணவின்றிப் பட்டினி இருக்க நேரிட்டாலும் ஆண்டவரை நாடுவோர்க்கு நன்மை ஏதும் குறையாது. வல்ல இறைவன் நம்மை ஒவ்வொரு நாளும் கண்ணின் மணி போல பாதுகாத்து தனது அன்பை, வெளிப்படுத்துகின்றார். தீமை, நெருக்கடி, இன்னல், இடையூறுகள் அனைத்திலிருந்தும் விடுவித்து மகிழ்ச்சியையும், பேரன்பையும் பகிர்ந்து அளிக்கும் இறைவனுக்கு

நம் உள்ளாழத்திருந்து நன்றிப் பூக்களை சமர்ப்பிப்போம்.

**பதில்:** உம்மைப் போற்றுகிறோம், உம்மைப் புகழ்கின்றோம், உமக்கு நன்றி கூறுகின்றோம் (2)

- அன்பின் இறைவா! இந்த நாள் முழுவதும் எங்களை உமது அமைதியால், மகிழ்ச்சியால் நிறைத்தமைக்காக…
- ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்து பாருங்கள் என்று திருப்பாடல் ஆசிரியர் வழியாக உணர்த்தியதற்காக…
- உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார். இவ்வுலகில் கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அருகிலிருந்து தேற்றுவதற்காக….
- புத்தம் புதுப்பாடல் ஒன்றை அவருக்குப் பாடுங்கள் திறம்பட இசைத்து மகிழ்ச்சிக் குரல் எழுப்புங்கள். என்பதற்கேற்ப ஒவ்வொரு நாளும் சரியான பாதையில் ஆவியின் வழியில் வழிநடத்தி வரும் உமது மேலான கிருபைக்காக…..

**பாடல்:** நன்றி நன்றி நல்ல தேவனே….

**மன்னிப்பு:**

“என் தீவினை முற்றிலும் நீங்கும் படி என்னைக் கழுவியருளும் என் பாவம் அற்றுப் போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும்.” என்ற திருப்பாடல் வரிகளுக்கேற்ப நாம்

மனமுவந்து பிறருக்கு பகிராமல் இருந்த தருணங்களை நினைத்து நினைவால், சொற்களால், செயல்களால், எண்ணத்தால் செய்த பாவங்களுக்கு மனம் வருந்திவர்களாய் நொறுங்குண்ட இதயத்தோடு இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம்.

**பாடல்:** என் தலைமீது உம் திரு இரத்தம் சொரிந்து
என் பாவங்களைக் கழுவும்
என் இயேசுவே (2)

- அயலானை மறந்து உன் அன்பிற்கு எதிராக செய்த குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.
- இறைவா உன்னை மறந்து உன் இதயத்திற்கெதிராக செய்த குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.
- சுய நலத்தோடு வாழ்ந்து என்னிடமுள்ளதை பிறரோடு பகிராத குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.
- பிறரை ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்து மன்னிக்காத குற்றத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

**நற்செய்தி:**

யோவான்: 6:1-15

**சிந்தனை:**

இருப்பதை எல்லாம் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி பகிர்வது மிக மிக நன்று என்பதை வாழ்வாக்கிய சிறுவன் ஒருவன் தான் பகிர்வதற்கு முதலில் வருகின்றான் என்பது இங்கு உணர்த்தப்படுகின்றது. இயேசு அப்பங்களை எடுத்தார். கடவுளுக்கு நன்றி செலுத்தினார். மக்களுக்குக் கொடுத்தார்

என இந்நிகழ்ச்சியை யோவான் விவரிப்பது அன்றைய கிறிஸ்தவச் சமூகத்தில் நிகழ்ந்த நற்கருணைக் கொண்டாட்டத்தின் முறையை எடுத்துக் கூறுகிறது. இயேசு மக்களுக்கு உணவளித்தது அவர் தம்மையே நமக்கு உணவாக அளித்ததற்கு அடையாளம் ஆயிற்று. இன்று நாம் கொண்டாடுகின்ற நற்கருணை விருந்து, இவ்வுலகில் பசியால் வாடுகின்ற மக்களுக்கு உணவளிக்க வேண்டிய கடமையை நமக்கு உணர்த்துகிறது. இயேசு அப்பங்களைப் பலுக செய்து, மக்களுக்கு உணவளிக்க முடியும் என்பது பற்றி யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால், அவர் அவற்றை சிறுவன் வழியாக பகிர வைத்து மக்களுக்கு உணவளித்தார். பாஸ்கா விழாவிற்குச் சென்ற மக்கள் இயேசுவின் போதனையில் கவர்ந்திழுக்கப்பட்டு. தங்களிடம் இருந்ததைப் பிறரோடு பகிர்ந்து கொண்டனர். இச்செயல் நமக்கு ஓர் எடுத்துகாட்டு எனவே அனைத்தையும் பிறருடன் பகிர்ந்து வாழும் வரத்தைக் கேட்டு நம் நற்கருணை நாதரிடம் தொடர்ந்து மன்றாடுவோம்.

**மன்றாட்டு**

**பாடல்:** ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளம்

1. ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆன்மாவை இழந்தால் பயனென்ன? வழிநடத்தும் வள்ளலே எம் இறைவா. எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், பொது நிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும். இவர்கள்

கிறிஸ்துவுக்கு சான்று பகரும் நற்செய்தியின் தூதுவர்களாய் விளங்க அருள் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. "உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" வாழ்வை வழங்கும் நாயகனே! நாட்டை வழி நடத்தும் நாட்டுத் தலைவர்கள் அனைவரையும் ஆசிர்வதியும். அவர்கள் மக்களின் நலனில் அக்கறை கொள்ள நற்பல திட்டங்கள் வழி நன்மை செய்ய அருள் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. "என் வாய் ஞானமிகு சொற்களை உரைக்கும் என் மனம் விவேகமானவற்றை ஆழ்ந்து சிந்திக்கும் கருணையின் இறைவா! உலகிலுள்ள அனைத்து இளைஞர், இளம் பெண்கள், சிறுவர், சிறுமிகளை நிறைவாக ஆசீர்வதியும். இவர்கள் ஞானத்திலும், அறிவிலும் சிறந்து விளங்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. "எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர்" துன்பத்தில் வாடுவோர், நோயுற்று படுக்கையில் இருப்போர் ஏழை, எளியோர் அனைவரையும்

ஆசீர்வதியும். இவர்கள் உடல் உள்ள ஆன்ம நலன் பெற்று வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**செபிப்போமாக:**

ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை. ஆண்டவரை தேடுவோர்க்கு கிடைப்பது, தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பிரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் இவை நமக்கு பொக்கி'மாக கிடைக்கும். இந்த மேலான கிருபைக்காக நன்றி கூறுவோம். இறைவா! நாங்கள் எங்கள் வாழ்வில் பகிர்வை வாழ்வாக்கி வாழ தேவையான அருளைத் தர வேண்டி எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வழியாக உம்மிடம் சரணடைகின்றோம் நல்ல பிதாவே. ஆமென்.

# 28. சமாதானத்தின் ஆண்டவரை ஆராதிப்போம்

**முன்னுரை:**

ஆராதனை என்பது அன்பான இறைவனோடு ஆனந்தமாய் உறவாடும் நேரம். தேவைகளையே சுற்றி வருவது செபம். இறைவனையே சுற்றி வருவது ஆராதனை. செபம் நமக்குப் பதிலைக் கொண்டு வரும். ஆராதனையோ இயேசு நம் மத்தியில் இறங்கி வந்து இறைவனோடும் மனிதரோடும் ஒப்புரவு ஆகுதல்.

**“கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்துள்ளது போல், நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்.” (எபே 4:32)**

ஆராதனை துவங்குவதற்கு முன் நம் பாவங்களுக்காக உண்மையாக மனம் வருந்தி,

ஆண்டவரிடம் மன்னிப்பு வேண்டும் போது, பிறரையும் மனதார மன்னிக்கும் போது, ஆண்டவரோடு ஒப்புரவு ஆகிறோம். இந்த சமாதானமே ஆராதனையின் உச்சக்கட்டம். தான் செய்த தவறுக்காக மனஸ்தாபப்பட்டு, மனம் வருந்தி, மனம் திரும்பி தன் தந்தையோடு சமாதானம் செய்துகொண்டு என்றும் ஆனந்தத்தில் மூழ்கிய இளைய மகனை காணாமற்போன மகன் உவமையில் காண்கிறோம். சொத்தையெல்லாம் அழித்து விட்டு வந்து மன்னிப்புக் கேட்ட மகனை தந்தை மனதார மன்னிக்கிறார். (லூக் 15:11-32) இந்த நிகழ்வு தான் ஆத்ம தாகத்தோடு இதயத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்ட வாழ்வின் உண்மை ஆராதனை.

**துதி புகழ்ச்சி:**

**“என் வாழ்நாளெல்லாம் என் கடவுளைப் புகழ்ந்து பாடிடுவேன்.” (திபா 146:2)**

எந்த தவறும் செய்யாத, பொய்க்குற்றம் சாட்டப்பட்ட பவுலும் சீலாவும் ஆடைகள் கிழிக்கப்பட்டு, அநேக அடிகள் பட்டு, சிறைச்சாலையின் உட்காவல் அறையில், தாங்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டவர்களாய் இருந்த நிலையில், நடு இரவில் செபம் செய்து இயேசுவை துதித்துப் பாடினார்கள். சிறைச்சாலையிலிருந்து துதியின் சத்தம் புறப்பட்டது விந்தையல்லவா? புலம்ப வேண்டியவர்கள் பாடித் துதித்தார்கள். இன்னும் அதிகமாய் தங்கள் உயிரை காத்தவரைப் போற்றி புகழ்ந்தனர். இறை பிரசன்னம் அவர்களை சூழ்ந்தது. இறை மகிமை இறங்கியது. இந்த

பாடலின் சத்தத்தை உடன் கைதிகள் அனைவரும் கேட்டனர். காவலாளிகள் கேட்டனர். எங்கும் அமைதி. இறை பிரசன்னம் அந்த இடம் முழுவதையும் நிரப்பியது தானே அந்த அமைதிக்கு காரணம். அலற வேண்டியவர்கள் சிறைச்சாலையை தங்கள் புகழ்ச்சி பாடலால் அதிரவைத்தனர். சிறைச்சாலை கதவுகள் தானாக திறந்ததாம். பவுல்சீலாவின் கட்டுகள் கழன்று போயின.

அவர்கள் கட்டுகள் மட்டும் அல்ல சிறைச்சாலையிலுள்ள எல்லா கைதிகளின் கட்டுகளும் கழன்று போயின. சிறைக் காவலர் எல்லாவற்றையும் பார்த்து நடுங்கி, அவர்களிடம் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்? அதற்கு பவுலும் சீலாவும் ஆண்டவராகிய இயேசு மீது நம்பிக்கை கொள்ளும். அப்போது நீரும் உன் வீட்டாரும் மீட்படைவீர்கள் என்றார். உடனே சிறைக் காவலர் பவுல்சீலாவோடு சமாதானம் ஆகி ஆண்டவராகிய இயேசுவோடு ஐக்கியமானார்கள் என்பதற்கு இவ்வுண்மை நிகழ்வு ஒரு எடுத்துக்காட்டு என்பதை நாம் உணருகிறோம்.

**“நம்முடைய கடவுளைப் புகழ்ந்து பாடுவது நல்லது.” (திபா 147:1)**

**நன்றி :**

**அவர் திருமுன் நன்றியுடன் செல்வோம் :**

**புகழ்ப்பாக்களால் அவரைப்போற்றி அகமகிழ்வோம்” (95:2)**

**(லூக் 17 : 11 -19)** பாவத்தின் தண்டனையாகக் கருதப்பட்டு, ஊருக்கு புறம்பே ஒதுக்கி வைக்கப்பட்டு, நடைபிணமாக உழன்று கொண்டிருந்த பத்து தொழுநோயாளர்களை

அன்போடு அனுகி, குணப்படுத்தி தாம் கொண்டிருக்கும் பாகுபாடற்ற அன்பை இங்கு இயேசு எண்பிக்கிறார். குணமடைந்த பத்து பேரில் சமாரியன் ஒருவன் மட்டும் வந்து நன்றிக் கூறி இயேசுவின் பாராட்டை பெறுகிறான். அந்த நன்றியுள்ள சமாரியனைப்பார்த்து, இயேசு, “உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது” என்று மகிழ்வுடன் கூறுகிறார். நாம் பங்கு கொள்ளும் நற்கருணை ஆராதனை நன்றியின் வெளிப்பாடு. இறைவன் இயேசுவை நன்றியோடு நினைவு கூறுவது தான் உன்னதமான ஆராதனை.

**நற்செய்தி வாசகம்: மாற்கு 10:46 - 52**

**சிந்தனைக்கு:**

இயேசுவும் அவருடைய சீடரும், மக்கள் கூட்டமும் எரிகோவை விட்டு வெளியே சென்றபோது, திமேயுவின் மகன் பர்த்திமேயு வழியோரம் அமர்ந்திருந்தார். பார்வையற்ற அவர் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். நாசரேத்து இயேசு தாம் அவர் என்று கேள்விப்பட்டு “இயேசுவே தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று கத்தத் தொடங்கினார். பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர். ஆனால் அவர் “தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று இன்னும் உரக்கக்கத்தினார். இயேசு நின்று “அவரை கூப்பிடுங்கள் என்று கூறினார். அவர்கள் பார்வையற்ற அவரைக் கூப்பிட்டு,” துணிவுடன் எழுந்து வாரும் இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்” என்றார்கள். இயேசுவினால் கேட்கப்பட வேண்டுமென்று பார்வையற்ற

பர்த்திமேயு உரக்கக்கத்தினார். எனவே தான் அங்குள்ளவர்கள் தடுக்க முயன்ற எல்லா முயற்சிகளும் நின்று விட்டன.

யார் வேண்டுமானாலும் சத்தமிடலாம். ஆனால் உண்மையான தாகத்தோடு இயேசுவை காண விரும்பும் ஒருவரைப்போல் உரக்கக்கத்தினார் பர்த்திமேயு என்று விவிலியம் நமக்கு அழகாக படம் பிடித்துக் காட்டுகிறது. பர்த்திமேயுவின் கூக்குரல் வெறும் கூக்குரல் அல்ல. அது நம்பிக்கையின் குரல் நம்பிக்கையினால் உண்டான உண்மையான வாஞ்சை. இயேசுவை நோக்கிய இந்த நம்பிக்கையான மன்றாட்டு, உன்னத, உயர்ந்த தெய்வீக ஆராதனை அல்லவா? இயேசுவோடு ஐக்கியமான பர்த்திமேயுவின் நம்பிக்கையின் குரல் சமாதாணமான தன்னை அதட்டியவர்களோடு சமாதமான தெய்வீக உச்சக்கட்டம் அல்லவா? "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்று நாம் அன்றாடம் எழுப்பும் நம் நம்பிக்கையின் மன்றாட்டு இயேசுவின் இதயத்தோடு ஐக்கியமாகும் தெய்வீக ஆராதணை அல்லவா?" "எல்லாச்சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்குக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே". **(தெச 5:18)**

**மன்றாட்டு :**

"என் நெருக்கடி வேளையில் ஆண்டவரிடம் நான் மன்றாடினேன்
என் கடவுளை நோக்கி நான் கதறினேன் அவர் செவிகளுக்கு
என் கதறல் எட்டியது". (திபா 18 : 6)

அமைதியில் நமது இறைவேண்டல்களை எடுத்துரைப்போம்.

**இறுதி செபம்:**

நற்கருணை ஆராதனை நமக்கு பணி, பகிர்வு, பலி, சமாதானம், சமத்துவம், அன்பு, மன்னிப்பு, ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒன்றிப்பு ஆகிய தெய்வீகப் பணபுகளை உணர்த்துகிறது. இதன் மூலம் வாழும் நற்கருணையாக நாம் இருக்கவும், இயங்கவும் நமக்கு ஆற்றலும் அருளும் தந்து, இயேசுவின் இன்றைய பிரசன்னமாக நம்மை உருவாக்குகிறது. ஆமேன்



## 29. ஆலயம் உறையும் ஆண்டவரை ஆராதிப்போம்

உதிரத்தில் சுமக்கும் தாய் ஓர் ஆலயம்

உடனிருந்து பேணிக்காக்கும் தந்தை ஓர் ஆலயம்

நம்மை தாங்கிப்பிடிக்கும் நம் குடும்பத்தார் வாழும் நமது இல்லம் ஓர் ஆலயம்

அதை ஆலயமாய் மாற்றும் கடமையும் நம்முடையதே. நமது மனக்குடிலில் வாழ விரும்பும் இறைவனை மனதார உணர்ந்து நமது மத்தியில் வர அழைப்போமா...?

**பாடல்:** உங்க பிரசன்னத்தில்...

ஆண்டவரின் பிரசன்னம் இருக்குமிடமே ஆலயம். சோதனை நேரத்தில் சகோதர பாசத்தோடு கடந்து செல்ல முயற்சிக்கும்

உன்னத நிலை, நம்மில் வளர நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் புனிதத்தை நோக்கியப் பயணமாகும். பாசத்தை நோக்கிய நமது பயணமே புனித பயணமாகும். இவ்வாறு புனித சிந்தனை நிறைந்த இடமே ஆலயம். ஏனென்றால் அங்குதான் இறை பிரசன்னம் நிறைகிறது. இறை இரக்கமே நாம் புனிதமாய் வாழ பேருதவியாய் இருக்கிறது. எனக்கா இத்தனை கிருபை என்று நம்மை வியக்க வைக்கிறது!

**பாடல்:** எனக்கா இத்தனை கிருபை...

உடனிருக்கும் இறைபிரசன்னம் உன்னதமாய் நம்மில் செயல்பட நாம் எடுக்கும் முயற்சி என்ன? நம் கைகளின் பரிசுத்தம், கண்களின் பரிசுத்தம், பேச்சில் பரிசுத்தம் நிரம்ப நாம் என்ன செய்ய வேண்டும்? துரளவ கநநடலைபெ புழன“ள ிசநளநஉெந. நாம் செய்யும் பணியில் ஆண்டவரை நினைக்கிறோமா? நம் செபத்தில் தேவையிலிருப்போர்க்கென செபிக்கிறோமா? புனித குழந்தை தெரசா போல் சிறு சிறு ஒறுத்தல் ஆண்டவரை மகிழ்ச்சிப்படுத்த நம்மால் செய்ய முடிகிறதா? இடையூறுகளில் இறை பாதுகாப்பை நம்புகிறோமா? நம் உடல் இறைவனின் ஆலயம், அவர் நம்மில் தங்கி வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்கிறோமா?

**பாடல்:** உறவு மலரும் புனித இடம் ஆலயம்...

அனைவரும் எம் சகோதர சகோதரிகள் என்ற நிலைப்பாடு நம்மிடம் மலர நாம் என்ன செய்ய வேண்டும்? இயேசுவின் பொன் விதிகள்

1. ஆண்டவரை அன்பு செய்தல்

2. உன்னைப்போல் உன் அடுத்திருப்பவரை அன்பு செய்.

நம்மை வெறுப்பவரிடம், இழிவாகப் பேசுபவர்கள் முன்பு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறதா? அவர்களிடம் திரும்ப அணுகிச் செல்ல முடிகிறதா? அப்படியென்றால் லுநளஇ ழெற றந டிநஉழஅந வாந வநஅிடந ழக புழன. நாமே இயேசுவின் ஆலயமாகிவிட்டோம். இயேசுவே நம் தேவை என உணர்ந்தால் நம் வாழ்வு அர்த்தம் பெறுகிறது.

**பாடல்:** என் தேவையை சொல்லி சொல்லி...

நம்மை புரிந்துகொள்ளாதவர்களுக்காக செபிப்பது நமது கடமையென்பதை உணர்கிறோமா? எல்லாம் இறைமகிமைக்காக என்ற மனநிலையில் வாழ முயற்சிக்கின்றோமா? நமது பணித்தளத்தில் தாழ்ச்சியோடு நடந்து கொள்கிறோமா?

**பாடல்:** உம்மைவிட்டா யாருமில்ல இயேசய்யா...

இரு கரங்களின் செயல்பாடுகள் அதிகம் என்றால் நாம் அனைவரும் இணைந்த நிலையில் ஆண்டவரின் சீடர்களாய் வாழும்போது நாமே இறைவனின் ஆலயமாகிறோம். நாம் செல்லுமிடமெல்லாம் இறைபிரசன்னம் மலர்கிறது. நமது குடும்பங்களில் இறைபிரசன்னத்தை தாங்கி நிற்கும் ஆலயமாய் வாழ்வோம். இயேசுவின் இறையாட்சியின் தீபங்களாய் ஒளிர்ந்து ஒளிதருவோம்.

**பாடல்:** உங்க பிரசன்னத்தில்...



## 30. காக்கும் தேவனை ஆராதிப்போம்

ஆராதனைப் பாடல்:

**முன்னுரை:**

நற்கருணை நாதரிடம் செலவிடும் நேரமே, நாம் செலவிடும் மிகச்சிறந்த நேரமாகும். நற்கருணை நமக்கெல்லாம் உயிரளிக்கும் உடனிருப்பாக இருக்கிறது. அள்ள அள்ளக் குறையாத தெள்ளமுதும், எடுக்க எடுக்க வளரும் அமுத சுரபி, நம்மை எல்லா சூழ்நிலையிலும் பேணிகாக்கும் இறைவனாய், உடனிருந்து வழிநடத்துகிறார். நம் வாழ்வில், நாம் சந்திக்கும் அனுபவங்களிலும், நோயிலும், உடல்நலத்திலும் இறைவனின் உடனிருப்பு மெய்யாகவே நம்மோடிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் இறைவனின் அருள் பிரசன்னம், நம்முடன் இருந்து, வழிநடத்துவதை நினைத்து நமது நன்றிகளையும், ஆராதனைகளையும் செலுத்துவோம்.

புகழ்ச்சி:

ஒவ்வொரு புகழ்ச்சிக்கு பிறகும் நாம் பாட வேண்டியது.

**பதில்: ஆராதனை ஆராதனை அப்பா உமக்கு ஆராதனை.**

**கல்வாரி நேசனே அனல்மூட்டும் ஆவியே ஆராதனை ஆராதனை அப்பா உமக்கு ஆராதனை.**

1. தூய நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் இயேசுவே, எங்களை ஒவ்வொரு நாளும் பாதுகாப்பவரே உமது எல்லையற்ற

அன்பினை நினைத்து தாழ்ந்து பணிந்து, ஆராதித்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

2. உயிர்மூச்சை தந்து உமது ஆவியின் வல்லமையால் எங்களை இயக்குபவரே, மாறாத நிபந்தனையில்லா அன்பினால் எங்களுக்கு அமுதூட்டி, உமது அன்பின் கரத்தால் எம்மை அரவணைத்து காப்பவரே உமது தெய்வீக வல்லமையால் எம்மை நிரப்பி, எமது இதயங்களை உமது எல்லையில்லா அன்பினால் பற்றி எரிய செய்பவரே, உமது அளவிட முடியாத அன்பினை நினைத்து, உம்மை ஆராதித்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

3. எங்களைப் பேணி வளர்க்கும் ஆயனாக அரவணைக்கும் தந்தையாக எங்கள்முன் தெய்வீக தன்மையோடு எழுந்தருளியிருப்பவரே, கடவுள் தன்மையை துறந்து மனிதனின் கோலம் கொண்டு, எங்களுக்காக எங்களைப்போல் ஒருவராக பாவம் தவிர மற்ற எல்லா சோதனைகளுக்கும் உட்பட்டு, மரித்து, உயிர்த்து நற்கருணையில் உயிருடன் எழுந்தருளியிருக்கிற உமது வல்லமையுள்ள இறை பிரசன்னத்தை நினைத்து, உம்மை ஆராதித்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

4. வானின்று இறங்கி வந்த தெய்வீக உணவே நிலைவாழ்வை தருகின்ற, ஆயனே எங்கள் முன் மிகுந்த வல்லமையோடு பிரசன்னமாயிருக்கும்,

உமது வல்லமையை நினைத்து, உம்மை ஆராதித்து, உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

5. என்னைச்சுற்றி நெருப்பு சுவராக இருக்கும், கருணைக்கடலே, மலைகள் நிலைசாயினும், குன்றுகள் இடம் பெயரினும், உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலைசாயாது. இதோ என் உள்ளங்கைகளில் நான் பொறித்து வைத்துள்ளேன் என்று உமது உள்ளங்கைகளில் எம்மை பொறித்து வைத்து, ஒவ்வொரு நாளும் கண்ணின் மணியைப்போல பாதுகாப்பவரே உம்மை ஆராதித்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**இறைவார்த்தை: யோவான் 10:11-8**

இயேசுகிறிஸ்து மனித உருக்கொண்டு இந்த மண்ணிலே மக்களோடு தோழமை கொண்டதன் நோக்கமே மக்களுக்குத் தொண்டு செய்ய, நிறைவாழ்வை கொடுக்க, தன்னை ஒரு இறைமகனாக வெளிப்படுத்திக் கொள்வதில் அவருக்கு நாட்டமில்லை. மாறாக தனது வாழ்வின் இலக்கு ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைப் பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், தனது பணிவாழ்வைத் துவங்கினார், அதற்காகத் தன் உயிரையும் ஈந்தார்.

அனைவரையும் பேணி வளர்க்கும் இறைவனாக, பாவிகளோடும் வரி வசூலிப்பவரோடும் நட்புடன் பழகினார். சாதாரண

மக்களோடு அன்போடு உறவாடி அவர்களோடு அடிக்கடி உணவருந்தினார்.

எல்லாவிதமான நோய்களிலிருந்தும், மக்களை குணமாக்கினார், குணமாக்கும் செயல்வழியாக, நோயுற்றோரின் வேதனையையும், இயலாமையையும் போக்கி, அவர்களுக்கு சுயமதிப்புக் கொடுத்தார்.

பாவங்களை மன்னித்து, அவர்களை இறைவனோடும், சமூகத்தோடும் ஒப்புரவாக்கினார். தனது பணி யாருக்கு என்ற தெளிவும் கொண்டிருந்தார். மேலும் தான் இறைவனின் ஊழியராக இருந்து, செய்த பணிகளைத் தனது சீடர்களும் செயல்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

“ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளை கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளை கழுவ கடமைப்பட்டிருக்கிறீர்கள்.” **(யோவான் 13:14)** என்று கூறி தன் சீடர்களின் பாதங்களைக் கழுவியதன் வழியாக பணியாளர் என்பவர் யார் என்ற முன்மாதிரியைக் காண்பித்தார். பணி செய்வது, அது எப்படிப்பட்ட பணியாக இருப்பினும், தாழ்வான ஒரு செயலல்ல. அது அன்புச்செயல், பிறர்பால் கொண்ட அக்கறையின் அடிப்படையில் எழும் செயல், குறிப்பாக பணி செய்வோர்தான் எனது உண்மையான சீடர்கள் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

பணியாளராக இருக்கவே அழைப்பு, இயேசுகிறிஸ்து தமது உயிர்ப்பிற்கு பிறகு, பேதுருவிடம் மூன்றுமுறை என்னை அன்பு செய்கிறாயா என்று கேள்விகேட்டு அதற்கு அவர் கொடுக்கும் பதில்கள்.

1. என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர் (யோ 21:15)

2. என் ஆடுகளை மேய் (யோ 21:16)

3. என் ஆடுகளைப் பேணி வளர் (யோ 21:17)

இந்நிகழ்வு வழியாக ஒவ்வொருத் திருப்பணியாளரையும், இயேசுகிறிஸ்து ஒரு பணியாளராக, மேய்ப்பராகப் பணியாற்ற அழைப்பு விடுக்கின்றார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும், மக்களுக்கு பணியாளர் என்ற நிலையிலிருந்து பணியாற்றும் பொழுது இதயத்தில், கனிவு, நேர்மை, உறுதியான மனம், நீதியின்மேல் அக்கறை மற்றும் மனிதநேயம் போன்றவை இக்குறிக்கோளை அடைவதற்கு பெரிதும் உதவிபுரியும் என்பதை உணர்த்துகிறார்.

இயேசுவின் போதனைகள் அனைத்தும், இறைமக்களை பேணி வளர்க்கும் ஆயன் எவ்வாறு இருக்க வேண்டும், என்பதனை எடுத்துக்காட்டுகிறது. நாமும் ஏழை, பணக்காரன், சாதி, மொழி, பண்பாடு வைத்து, மக்களை பிரிப்பவர்களாக இல்லாமல், ஒரே சமூகத்தை உருவாக்க வேண்டும். அதற்காக நாமும் முயற்சி செய்வோம், அதற்கான நல்ல எண்ணத்தையும், மனநிலையையும் வேண்டி ஆண்டவரிடம் செபிப்போம்.

**மன்றாட்டு:**

**பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

1. நல்லாயனே எம் இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார்

அனைவரும், இறைமக்களின் ஆன்மீக வாழ்க்கையில் அக்கறை கொண்டவர்களாக, நல்லாயனுக்குரிய நற்பண்புகளோடு, மந்தையைப் பேணி வளர்த்து நல்வழிபடுத்த, தேவையான ஞானத்தை தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் தேவனே எம் இறைவா, மக்களை வழிநடத்தும் நாட்டுத் தலைவர்களை ஆசீர்வதியும். மனித உணர்வுகளை மதிக்கும் உயரியப் பண்புகளை தங்கள் கருத்தில் கொண்டு, பொது நலத்தோடு ஆட்சி செய்திட வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

3. பேணி பாதுகாக்கும் இறைவா, நீர் எப்படி ஏழை, பணக்காரன் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி அனைவரிலும் அன்பு என்ற விதையைத்தூவி சமாதானத்தின் கருவியாக திகழ்ந்தீரோ, அதே போன்று நாங்கள் ஒவ்வொருவரும் நல்லாயனாக, நல்லத் தலைவர்களாக எங்கள் குடும்பத்திலும், சமுதாயத்திலும், திருஅவையிலும் விளங்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றிப்பாடல்:**

**செபிப்போமாக:**

எங்களை எந்நாளும் நேசித்து, அன்பு செய்து பராமரிக்கும் இறைவா, சமுதாயத்தில் மனிதர்களின் உரிமைக்கும், விடுதலை முழக்கத்திற்கும், இருகரம் நீட்டி மக்களோடு மக்களாக, ஒன்று சேர்ந்து உண்மை, நேர்மை,

அன்பு, மகிழ்ச்சி சமாதானம் போன்ற பண்புகளை சமுதாயத்தில் விதைத்திடும் கருவிகளாக நாங்கள் மாற உம்பதம் தாழ்ந்து பணிந்து உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



# 31. மகிழ்வின் தேவனை ஆராதிப்போம்

**முன்னுரை:-**

நிறைவான இன்பத்தையும், வாழ்வையும், உடனிருப்பையும் நமக்கு அளிப்பதற்காக நற்கருணை வடிவில் குடிகொண்டுள்ள இறைவனைப் போற்றுவோம். நாம் நிறை மகிழ்ச்சியோடு வாழ, நம்மைத் தடுப்பவை அனைத்தையும் தகர்த்தெரிய கடவுள் வல்லமையோடு செயலாற்றுகிறார். அவரின் பாசத்தை உணர்ந்தவர்களாய், அவர் மீது முழு நம்பிக்கை கொண்டு அவர் விரும்புவதையே, நாம் எப்போழும் நிறைவேற்றக் கூடியவர்களாய் வாழ, நம்மை அவரிடம் அர்ப்பணிப்போம். பேதுருவைப் போன்று இயேசுவோடு இருப்பது நலம் என்பதை உணர்வோம். உன் நம்பிக்கை உன்னை நலமாக்கியது என்ற இயேவின் வார்த்தைப்படி உடல், உள்ளம் முழு நலம் பெற்று இறையில் என்றும் மகிந்திருக் தொடரும் நற்ககனை ஆராதனையில் மன்றாடுவோம்.

**புகழ்ச்சி:**

**பதில்:** போற்றிப் போற்றி தந்தையே போற்றி
போற்றிப் போற்றி மீட்பரே போற்றி
போற்றிப் போற்றி ஆவியே போற்றி

- பாலை நிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன்ளூ பாழ் வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன் என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள் வழியாகக் கடவுள் நமது வாழ்வின் பாலைவன அனுபவங்களுக்கு மத்தியில் அதிய பாதைகளைத் திறக்கச் செய்தமைக்காக இறைவனைப் புகழ்ந்து போற்றுவோம்.
- ஆண்டவர் நம்மை இரக்கத்தின் கடவுளாக வெளிப்படுத்தி, ஒரு போதும் நம்மைக் கைவிடமாட்டேன் என்று உறுதியளித்து, துயரங்களின் போது அடைக்கலமாகவும், வலிமையாகவும் இருந்து நம்மை அவரில் இணைத்து உறுதிப்படுத்தியமைக்காக இறைவனைப் புகழ்ந்து போற்றுவாம்.
- எங்கள் அனைவருக்காகவும், நாள் தோறும் காத்திருக்கும் நற்கருணை நாதரே! படைத்து எம்மைக் காத்து வரும் உமது எல்லையில்லா அன்பையும், விந்தை மிகு ஞானத்தையும் போற்றி, மகிழ்ச்சியை நிறைவாய் எமக்கு அளித்தமைக்காக இறைவா உம்மைப் புகழ்ந்து போற்றுகிறோம்.

## மன்னிப்பு வழிபாடு

சோதனைகள், வேதனைகள் நிறைந்தப் பாதையில் பரமனே நீர் எம்முன் செல்கிறீர் என்பதை மறந்து பாவத்தில் தவறி விழுந்து விடுகிறோம். அப்படிப்பட்ட தருணங்களுக்காய் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கிறோம்.

**பதில்** :- மன்னிப்பாயா மன்னிப்பாயா
மன்னவனே என்னை மன்னிப்பாயா

- தன்னுடைய அன்பைக் கொடுப்பதிலே தந்தையாம் கடவுள் தாராளமாய் அள்ளித்தருகிறார். நமக்கு எல்லாவித சுதந்திரங்களையம் கொடுத்திருக்கிறார். ஆனால் அந்த சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி வந்த நேரங்களுக்காய் மன்னிப்பு கேட்கிறோம்…
- நாம் செய்த பாவங்களுக்கு மனம் வருந்தி, அவரிடம் திரும்பி வருகிற பொழுது, நம்மை முழுமையாக இறைவன் மன்னித்து அரவணைக்கிறார். அவரது எல்லையில்லா அன்பை உணராத தருணங்களுக்காய் மன்னிப்புக் கேட்கிறோம்...
- நமது சிறு, சிறு தவறுகளையும் பெரிதுபடுத்தாமல், நம்மை நல்வழிப் படுத்தி வரும் அவரின் இரக்கத்தை உணராமல் வாழ்ந்த நேரங்களை எண்ணி மன்னிப்புக் கேட்கிறோம்…

**நற்செய்தி வாசகம்** - யோவான் 16:23-27

**சிந்தனை:**

இயேசுவைக் காணாமலே விசுவசித்து, அவரை ஏற்று, அன்பு செய்து, அவரோடு இணைந்து இருப்பது தான் உண்மையான மகிழ்ச்சி. அன்பு தான் கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதது. நிலையில்லா உலகில் நிலையானவர் ஒருவரே.

எனவே கடவுளுக்காக வாழ முற்படுவோம். வாசிக்கப்பட்ட நற்செய்தியும் நமக்கு எடுத்துக் கூறுவது இதுவே. படைப்புகள் அனைத்தும் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு மனிதன் வரை மகிழ்ச்சியைத் தான் தேடுகின்றனர். மற்ற உயிர்கள் எல்லாமே வாழ்வில் மகிழ்ச்சியைக் கண்டு கொள்கின்றன. மனிதன் மட்டும் வாழ்வில் மகிழ்ச்சியைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறான். கடைசி வரை தேடலிலேயே அவன் வாழ்வு முடிந்து விடுகிறது. நாம் ஆசையோடு நட்டு வளர்க்கக் கூடிய செடி, மரமாகி கனி தந்து நமக்கு மகிழ்ச்சித் தருகிறது. ஆனால் நாம் மகிழ்ச்சி நம் சொல்லில், செயலில், வாழ்வில் இருக்கிறது என்று எண்ணாமல், வெளியில் தேடுகிறோம். ஒரு மனிதரின் உள்ளிருந்து தான் மகிழ்ச்சி பிறக்கிறது. உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடம் இருந்து எடுத்து விட முடியாது என்று இயேசு சுட்டிக்காட்டுகிறார். புனித பேதுரு, புனித பவுல் இவர்களின் வாழ்வில் பலவித நெருக்கடிகளுக்கு மத்தியில் இயேசுவின் மீது பற்றுறுதியால் இறுதி வரை மகிழ்ச்சியோடு இருந்தனர். யோபுவின் வாழ்வில் பல வித துன்பங்கள், வேதனைகள், வியாதிகள் மத்தியில் கடவுளில் மகிழ்ந்திருந்தார். இம்மகிழ்ச்சி நிலைத்திருக்க திருத்தூதர்களிடம் குடிகொண்டிருந்த ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார். நிலையான மகிழ்ச்சி நம்மில் நிலைத்திருக்க நாமும் இறைவனிடம் கையளிப்போம்.

**மன்றாட்டு:-**

- ஆதியாய் இருந்து திருஅவையைத் தொடர்ந்து வழிநடத்தும் இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், திருத்தொண்டர்கள் அனைவரும் உம் ஆற்றலால் உந்தப்பட்டு இறைமக்களை ஆன்மீக நெறியில் என்றும் துடிப்புடன் பயணிக்கச் செய்ய அருள் புரிந்தருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- ஞானத்தின் ஊற்றே எம் இறைவா! எம் தாய்த்திருநாட்டை ஆளும் தலைவர்கள், உயர் அதிகாரிகள் அனைவரும் உரிமைக்காக போராடும் மக்களின் குரலாய் செயல்படவும், மக்களின் நலனுக்காய் தளராது செயல்பட நல் மனதைத் தந்தருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- அமைதியை அருளும் இறவைா! உலகெங்கிலும் வன்முறை, போர், இனக்கலவரம் போன்றவற்றால் அமைதியின்றி பிளவுபட்டு இருக்கும் உலகை சகோதரத்துவம், அன்பு, சமாதானம் போன்றவற்றால் நிரப்பி உலகில் சமாதானம் தழைத்தோங்க வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மன்றாடுவோமாக** :-

இரக்கம் மிகுந்த இறைவா! எங்கள் மீது அளவில்லாத கனிவையும் இரக்கத்தையும், அருளையும் தந்தீரே உமக்கு நன்றி! நாங்கள் முழு மனதோடு உம்மை அன்பு செய்து,

போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம் விண்ணவர்களோடு பேரின்பப் பாக்கியத்தில் உம்மைப் புகழ எம்மைத் தகுதிபடுத்தும். உம் திரு இருதயத்திற்குள் எம்மை மறைத்து, உம் அரவணைப்பில் மகிழ்ந்திருக்க அருள் புரிந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.



## 32. செபத்தில் அருள்பொழிபரை ஆராதிப்போம்

**பாடல் எண்** - ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்…..

**முன்னுரை**

எம் அன்பின் ஆண்டவரே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கல்வாரியில் சிலுவையில் விதைக்கப்பட்ட இயேசு என்னும் விதை முளைத்தெழும்பி இன்றும் உலக மாந்தரின் மனங்களில் ஆல்போல் தழைத்து வேரூன்றி பூத்து குலுங்கி புதுமணம் வீசிக் கொண்டிருக்கிறது. கல்வாரி இயேசுவின் அனுபவத்தை ஆழமாக உணர்ந்து செபம் என்ற புண்ணியத்தில் ஓங்கி வளர நம்மை இந்த மணித்துளிகள் அழைக்கின்றது. இந்த நேரம்

நமக்கு வெறும் வாய் செபங்களாக மட்டுமே இருந்து விடாமல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவர் பேசும் குரலினை கேட்கும் ஆற்றல் பெற்றதாகவும் அமைய நம்மையே தாழ்த்தி ஒப்புக்கொடுப்போம்.

**போற்றுதல்:**

**பதில்** (பாடல்): உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழுகிறோம் நன்றி கூறுகிறோம்.

- அன்பின் தந்தையே! நீரே எல்லாம் வல்லவர். மிகுந்த புகழ்ச்சிக்குரியவர். அருளும் இரக்கமும் மிகுந்தவர். வாழும் கடவுள் நீரே என்பதை நினைத்து….
- தலைவர்களுக்கெல்லாம் தலைவரே! என்றும் மாறாத தன்மையுடையவரே! நீதியோடும் நேர்மையோடும் செயலாற்றுகிறவரே! உமது கருணையை நினைத்து...
- எமக்கு அடைக்கலம் தரும் கற்பாறையாகிய எம் தந்தையே! உம்மை நாடி வரும் அனைவரையும் கரம் பிடித்து வழி நடத்தும் உமது பரிவினை நினைத்து.....
- நான் அமர்வதையும் எழுவதையும் அறிந்திருக்கும் இறைவா! ஞானிகளுக்கு ஞானத்தை வழங்கி விண்ணும் மண்ணும் அழிந்தாலும் நீர் என்றும் நிலைத்து இருப்பவர் என்பதை நினைத்து...

**பாடல் எண் என் உயிரான இயேசு என் உயிரோடு**

**மன்னிப்பு:**

பதில் (பாடல்)... நான் பாவி இயேசுவே என் வாழ்வை மாற்றுமே

- நீர் அன்று எரேமியா வழியாக மக்களை நோக்கி உங்கள் வழிகளெல்லாம் என் கண்முன்னே உள்ளன. உங்கள் குற்றங்கள் என் பார்வைக்குத் தப்புவதில்லை (எரே.16:17) என்று கூறிய இறைவா எம் பாவங்களையும், குற்றங்களையும் மன்னித்தருள வேண்டும் என்று உம்மை இறைஞ்சுகிறோம்...
- பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என்று எச்சரிக்கை விடுத்தவரே! நாங்கள் நன்றி மறந்தவர்களாய் உம்மை விட்டு விலகி எம் மனம் போன போக்கில் வாழ்ந்த நேரங்களுகக்காக மன்னித்தருள வேண்டும் என்று உம்மை இறைஞ்சுகிறோம்...
- தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் கொலையாளிகள். ஆத்தகையோர் நிலைவாழ்வை அடைய முடியாது (1யோவான் 3:15) என்று கூறினீரே. எம் பொறாமை குணத்தால் உடன் வாழும் சகோதரிகளையும் உடன் பணியாளர்களையும் வெறுத்து வாழ்ந்த சமயங்களை நினைத்து மன்னித்தருள வேண்டும் என்று உம்மை இறைஞ்சுகிறோம்...
- பழி வாங்குவதும், கைமாறு அளிப்பதும் எனக்குரியது. நீங்கள் யாரையும் பழி வாங்காதீர்கள். (உரோமை 12:19) என்று உரைத்தவரே எம் பழி வாங்கும் குணத்தால் அநேகருடைய மனத்தை

காயப்படுத்தியதை நினைத்து மன்னித்தருள வேண்டும் என்று உம்மை இறைஞ்சுகிறோம்...

- சினமுற்றாலும் பாவம் செய்யாதீர்கள் அலகைக்கு இடம்கொடாதீர்கள். (எபேசி 4: 26-27) என்று எமக்கு அறிவுரை வழங்கியவரே! எம் சினத்தால் எத்தனையோ பேருடைய உள்ளங்களை காயப்படுத்தி மனதை வேதனைப்பட வைத்தமைக்காக எம்மை மன்னித்தருள வேண்டும் என்று உம்மை இறைஞ்சுகிறோம்...

**நன்றி:**

**பதில்** (பாடல்): நன்றி நன்றி இறைவா! நன்றி நன்றி தலைவா!

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு (1 குறிப்பேடு 16:34) என்னும் உம் வார்த்தைக்கு ஏற்ப உம் திருப் பெயருக்கு நன்றி செலத்தவும் உம்மை புகழ்வதில் பெருமை அடையவும் இதோ உம் முன்னிலையில் பணிந்து முழந்தாளீடுகின்றோம்.

1. நன்றிப் பலியை ஆண்டவருக்கு செலுத்தினால் அது உங்கள் சார்பாக ஏற்கத் தருந்ததாக இருக்கட்டும் (லேவியர் 22:29) எம் இறைவா எம் நன்றியை தாழ்மையுடன் உமக்கு அர்ப்பணிக்க நாங்கள் தகுதியுள்ளவர்களாக எம்மை மாற்றும். நீ செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி செலுத்துகிறோம்...

2. ஆண்டவர் தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள் அவர் தம்செயல்களை

மக்களினங்கள் அறியச் செய்யுங்கள் (1குறிப்பேடு 16:8) என்று எமக்கு அழைப்பு விடுத்த எம் இறைவா நாங்கள் அனைவரும் இணைந்து உமது பெயரைப் போற்றிப் புகழ்ந்து நன்றி செலுத்துகிறோம்....

3. நான் இன்னிசைப் பாடி அவருக்கு நன்றி கூறுவேன். (தி.பா-28:7) என்று தாவீது உமக்கு நன்றி செலுத்தியது போன்று நாங்களும் உம்மை எங்கள் வலிமையும், கேடயமுமாக ஏற்று எம் உள்ளம் கனிந்த நன்றி செலுத்துகின்றோம்....

**பாடல்: ஓயாத கருணையின் இறைவனே**

**நற்செய்தி வாசகம்**: லூக்: 18:9-14

**சிந்தனை:**

**செபவாழ்வு**

இயேசு நமக்கு கூறிய இந்த உவமையில் நாம் பரிசேயரைப் போன்ற மனநிலையை விட்டுவிட்டு வரிதண்டுபவரைப் போன்று செபிக்கும் மனநிலையில் அவரை நாடி வர நமக்கு அழைப்பு விடுக்கிறார். தாழ்ச்சி மனங் கொண்டு இறைவனை அணுகுவது தான் இறைவன் விரும்பும் வழி என்பதை உணரவேண்டும். பரிசேயரின் மனநிலையில் இருந்து கொண்டு நாம் இறைவனிடம் எதைக் கேட்டாலும் நம் வேண்டுதல் கேட்கப்பட மாட்டாது என்பதை நாம் உணரவே இயேசு நமக்கு இந்த உவமை வழியாக அறிவுறுத்துகிறார்.

**மன்றாட்டு:**

**பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

1. நற்கருணை நாதரே அப்பா எம் நம்பிக்கையை உறுதிப்படுத்தும். எந்த சூழ்நிலையிலும் மனநிறைவோடு வாழ்வதற்கு கற்றுத் தாரும். எம் செப வாழ்வை இன்னும் ஆழப்படுத்தி உம்மையே பற்றிக் கொண்டு வாழ உம்மை மன்றாடுகிறாம்.

2. அன்பின் இறைவா நற்செய்தியின் வழியாக நீர் வெளிப்படுத்தும் மறைப்பொருளை நாங்கள் ஏற்று உம் மக்களாக செபவாழ்வில் உயர்ந்து வாழ எம்மை நெறிப்படுத்த உம்மை மன்றாடுகிறாம்.

3. திராட்சைக் கொடிகள் கனி தரா விடினும் ஒலிவ மரங்கள் பயன் அற்றுப் போயினும் என் மீட்பராம் கடவுளில் நான் களிகூர்வேன் என்ற ஆழமான இறையனுபவத்தை வழங்கும் இறைவா எல்லா சூழ்நிலையிலும் உம்மோடு இணைந்திருக்கும் வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நற்கருணை வீற்றிருக்கும் அன்பு இயேசுவே நீர் மட்டுமே எம் வாழ்வின் மையம் என்பதை உணர்ந்து உம்மிலே இணைந்து, பிறரிலே மகிழ்ந்திருக்க நல்ல மனநிலையை கொடுத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இறைவா நாங்கள் அனைவரும் நற்செய்தியை அறிவிப்பவர்களாகவும், நற்செய்தியின் மதிப்பீடுகளை எம் வாழ்வில் செயல்படுத்துபவர்களாக வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இறுதி செபம்:**

என்றென்றும் வாழ்பவரும், பாதுகாப்பவரும், பராமரிப்பவருமான எம் இறைவா! நாங்கள் எம் இறுதி மூச்சுவரை உமக்கு பிரமாணிக்கமாக பணிசெய்யவும், செப வாழ்வில் வேரூன்றி உம்மை மட்டுமே எம் வாழ்வின் அடைக்கலம் என்று பற்றிக்கொள்ளவும், எமக்குத் தேவையான ஆசிரையும் அருளையும் ஏராளமாகப் பொழிந்தருளும், எம் இறைவா நாங்கள் பலவீனர்கள். எங்கள்மீது இரக்கமாயிரும். எம்மை உம் கரத்தில் தாங்கிக்கொள்ளும். என்றும் உம்மை விட்டு பிரிந்திடாமல் வாழ்ந்து மிகுந்த கனி தருபவர்களாக வாழ உமது அருளும் ஆசீரும் மட்டுமே எமக்குத் தேவை என்பதை உணர்ந்து வாழ வரம் அருள உம்மை மன்றாடுகின்றோம். எம் ஜெபம் கேளும் ஜீவனுள்ள தந்தையே ஆமென்.



## 33. இரக்கத்தின் இறைவனை ஆராதிப்போம்

**பாடல்: ஆராதனை நாயகன் நீரே, ஆராதனை வேந்தனும் நீரே**

**ஆயுள் முடியும் வரை உம்மைத் தொழுதிடுவேன்**

**ஆயிரம் பேர்களில் சிறந்தோர்**
**ஆண்டவர் இயேசு நீரே**
**விடிவெள்ளியே எந்தன் வீரியம் நீரே**
**என்றென்றும் தொழுதிடுவேன்**

**முன்னுரை:**

எங்கள் முன் உயிர் உள்ள பிரசன்னமாயிருக்கும் எங்கள் ஆராதனைக்குரிய இனிய இயேசுவே உம்மை ஆராதிக்கின்றோம். உமக்கு நன்றி கூறுகின்றோம். உமது ஆவியால் எங்களை நிரப்பும். இந்த இடத்தை நிரப்பும். கடவுள் அன்பாயிருக்கின்றார். இரக்கம் என்பது இறைவனின் பேரன்பின் கனிந்த வடிவம். நமது வானகத் தந்தை இரக்கம் நிறைந்தவராயிருக்கிறார். இஸ்ராயேல் மக்களுக்கு மோசே வழியாக முதன்முதலாக தம்மை ஆண்டவர். இரக்கமும், கனிவும், பரிவும் உள்ள இறைவன் என வெளிப்படுத்தினார். இறைவாக்கினர்கள் அனைவரும் கடவுளின் இரக்கத்தை மீண்டும், மீண்டும் நினைவூட்டினர். தாயின் அன்புக்கு ஈடான இறைவனின் இரக்கத்தை மீண்டும் காட்சியாகத் தருகின்றார் எசாயா. என்னைக் காண்பது என் தந்தையை காண்பதாகும். இயேசுவே இறைதந்தையின் இர க்கத்தின் முகம். இயேசுவின் இரக்கத்தை புனித பவுல் புகழ்கின்றார். தூய ஆவியின் ஆற்றலால்

தான் இயேசு இரக்கச் செயல்களில் ஈடுபட்டார். இயேசு செய்த ஒவ்வொரு பணிவாழ்வும் இரக்கத்தின் செயல் பாடுகளே. இவ்வளவு இரக்கம் நிறைந்த இறைவனை நாம் இப்பொழுது போற்றிப் புகழ்வோம்.

**போற்றுதல்**

- ஐந்து அப்பத்தை 5000 பேருக்கு பகிர்ந்து கொடுத்தவரே, விதவையின் கண்ணீரைத் துடைத்து சுகம் கொடுத்தவரே,

**பதில்:- உம்மை போற்றுகிறோம் இயேசுவே**

- 38 வருடங்களாக குளத்தருகே படுத்துக் கிடந்தவனுக்கு சுகம் கொடுத்தவரே,
- தொலைவில் வந்த மகனைக் கண்டு ஓடிபோய் முத்தம் கொடுத்து அரவணைத்தவரே.
- புயல் காற்றில் போராடிய சீடர்களை கண்டு, பயப்படாதீர்கள் என்று தேற்றியவரே
- நானே திராட்சைக் கொடி என்றவரே.
- இறந்த இலாசரை உயிர்ப்பித்தவரே.
- நானே நல்ல மேய்ப்பன் என்றவரே.
- உலகம் தரமுடியாத அமைதியை நான் உங்களுக்குத் தருவேன் என்று சொன்னவரே.
- நன்மைகளை நான் உங்களுக்கு இருமடங்காக தருவேன் என்று சொன்ன இயேசுவே.
- நானே நல்ல ஆயன் என்று சொன்னவரே.

- என்னை பின்பற்றி வா என்று அழைத்தவரே
- சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் என்று அழைத்தவரே.
- எங்கள் சபையை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் இயேசுவே.
- எங்கள் சபையிலிருக்கும் அனைத்து சகோதரிகளையும் கண்ணின் மணிபோல் காத்து வரும் இயேசுவே.
- நாங்கள் செல்லும் இடமெல்லாம் எங்களுடன் பயணிக்கும் இயேசுவே.
- எல்லா வரங்களாலும் ஆசீராலும் நிரப்பிக்கொண்டிருக்கும் இயேசுவே.

**பதில்:-** உம்மை போற்றுகிறோம் இயேசுவே

**பாட்டு:-** உம் அழகான கண்கள் என்னை கண்டதாலே...

## நன்றி

எங்கள் அன்பான இயேசுவே இவ்வளவு நேரம் அளவாக உம்மைப் போற்றிப் புகழ்ந்தோம். எங்கள் புகழ்ச்சியை ஏற்று எங்களை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கின்றீர். இதற்கு நன்றி கூறுகின்றோம். மனித வாழ்வில் மிகவும் முக்கியமான நிகழ்வு நன்றி கூறுதல். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து புனித மார்க்கரீத் மரியாளிடம் “நீ கூட எனக்கு நன்றி சொல்லமாட்டாயா” என்று கேட்கின்றார், நாங்கள் வாழ்வதும் இயங்குவதும் உமது கிருபையால் தான், எனவே இயேசுவே உமக்கு நன்றி கூறுகின்றோம்.

- இந்நாள் வரை எம் சபையைக் காத்து வந்த கிருபைக்காக இயேசுவே உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- எங்கள் சபையானது நாளுக்கு நாள் வளர்ந்து குன்றின் மேலிட்ட தீபமாக இருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- எங்கள் சபையில் செய்யும் எல்லா பணிகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- எங்கள் மீது உமது இரக்கமும், பரிவும் நிறைவாக இருந்து வழிநடத்தும் கிருபைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- தாழ்வுற்றிருந்த எங்களை நினைவு கூர்ந்து எங்களை வழிநடத்தி வரும் கிருபைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- உமது உயிரையே எங்களுக்கு கொடுத்து காத்து வரும் கிருபைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- ஒவ்வொரு நாளும் உமது உடலை உணவாகவும் திரு இரத்தத்தை பாணமாகவும் தந்துகொண்டிருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- எங்களை எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் காத்து வருவதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- நாங்கள் தவறு செய்யும் போது எங்களுக்கு வழிகாட்டி காத்துவரும் கிருபைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.

**நன்றிபாடல்**

நன்றியோடு நான் ஸ்துதி பாடுவேன் எந்தன் இயேசு ராஜனே எனக்காக நீர் செய்திட்ட நன்மைக்காய் என்றும் நன்றி கூறுவேன் நான்...

**மன்னிப்பு**

இறைவனின் பரிவும், இரக்கமும், பேரன்பும் அவரது மன்னிப்பில் தான் மிகச்சிறந்த முறையில் வெளிப்படுகின்றது. இறைவன் நம் பாவங்களை மன்னிப்பதோடு பாவக்கறைகளையும் நீக்கி நம்மைத் தூய்மைப்படுத்துகின்றார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பார்த்து நானும் தீர்ப்பு அளிக்கவில்லை நீர் போகலாம் இனி பாவம் செய்யாதே என்றார். ஆண்டவரே நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார்தான் நிலைத்து நிற்க முடியும்? என்பது பாவம் செய்கின்ற நம் அனைவரின் மனதிலும் எழுகின்ற அச்சம். இருப்பினும், இறைவன் நம் பாவங்களை மன்னிக்கின்றார். நம் பாவங்களை எல்லாம் அவரது முதுகுக்குப் பின் எறிந்து விடுகிறார். புதிய ஏற்பாட்டில் தம்மை மறுதலித்த பேதுருவை இயேசு மன்னித்து என் ஆடுகளை மேய் என்று மேலான பதவியை அளிக்கின்றார். இவ்விதமாக இயேசு நம் பாவங்களிலிருந்து மீட்க தன் உயிரை ஈந்தார். எனவே அன்பான பிள்ளைகளே! நாம் நம் பாவங்களை அறிக்கையிடுவோம், நம் இறைவன், மன்னிக்கும் இறைவன் எனவே அவரிடம் மன்னிப்புக் கேட்போம்.

- நம் அருகில் இருக்கும் சகோதர சகோதரிகளுக்கு எதிராக நாங்கள் செய்த குற்றத்திற்காக எங்களை மன்னியும்.

**பதில்: பாடலாக-இரக்கத்தின் ஆண்டவரே என்மீது இரக்கம் வையும்**

- பிறரைப் பற்றி அவதூறு பேசிய குற்றத்திற்காக இயேசுவே எங்களை மன்னியும்.
- செய்ய வேண்டிய நல்ல செயல்களை, செய்யாமல் சோம்பலாக இருந்த குற்றத்திற்காக இயேசுவே எங்களை மன்னியும்.
- செப நேரத்தில் அசட்டையாக இருந்த குற்றத்திற்காக இயேசுவே எங்களை மன்னியும்.
- நாங்கள் உம் அன்பிற்கு விரோதமாக செய்த குற்றத்திற்காக இயேசுவே எங்களை மன்னியும்.

அன்பான இயேசுவே உமது பேரிரக்கத்தால் எங்கள் பாவங்கள் மறைக்கப்பட்டு நாங்கள் பெரிய அவமானங்களிலிருந்தும் எங்களை காத்து வந்தீர். எங்கள் குற்றங்களை மன்னியும்.

**இறைவார்த்தை**

மாற்கு 10: 46 - 52

**சிந்தனை:**

இயேசுவும், சீடர்களும் எரிக்கோவை விட்டு வெளியே சென்றபோது, வழி ஓரத்தில் பர்த்திமேயு என்ற பார்வை தெரியாதவன் அமர்ந்திருந்தான். அவன் எப்போதும் கோவிலுக்கு, வருவதும், போவதும் உண்டு. பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவர், பார்வையற்றவராயிருந்தாலும் இயேசு என்ற ஒருவரை பார்க்க அவரது மனம் துடிதுடித்துக்

கொண்டிருந்தது. ஏனெனில் இயேசுவைப் பற்றி கேள்விபட்டிருகின்றார். அவரது உள்ளம் இயேசுவை காண துடிக்கின்றது. எனவேதான் இயேசு வந்திருக்கின்றார் என்று கேள்விபட்டவுடன் இயேசுவே, தாவீதின் மகனே என்று கத்தி உறக்க கூவினார். அருகிலிருந்தவர்கள் அவரை அதட்டினர். ஆனால் பார்வையற்றவர் தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என்று மீண்டும் கூவினார். அவரது சப்தம் இயேசுவின் காதில் ஒலிக்கின்றது. இயேசுவால் அடுத்த அடி எடுத்து வைக்க முடியவில்லை. அவரை இங்கே கூட்டி வாருங்கள் என்கிறார். சீடர்கள் அவரிடம் துணிவுடன் இரும் எழுந்து வாரும் இயேசு உம்மை அழைக்கின்றார் என்றார்கள். பார்வையற்றவர் தன் மேலாடையை எரிந்து விட்டு, அதாவது அவரது பழைய வாழ்வை எரிந்து விட்டு ஓடுகின்றார். கண்பார்வை தெரியாதவர் எப்படி ஓடமுடியும்? ஆனால் அவர் ஓடுகிறார் காரணம் இயேசு உம்மை கூப்பிடுகிறார் என்று சொன்னபோதே அவர் இரக்கத்தை பெற்றுவிட்டார். இயேசு அவரைப்பார்த்து உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகின்றீர் என்றார். இங்குதான் மனிதனின் நம்பிக்கையும் இயேசுவின் இரக்கமும் செயல்படுகின்றது, ராபூனி நான் மீண்டும் பார்வை பெற வேண்டும் என்று மனதுருகி சொல்கின்றார். இயேசுவும் அவருக்கு பரிசாக பார்வை கொடுக்கின்றார். உன் நம்பிக்கை உம்மை நலமாக்கியது என்றார். பார்வையற்றவராக இருந்தாலும் இறை நம்பிக்கையிலும், இறை பிரசன்னத்திலும் வாழ்ந்ததால் வெற்றி பெற்றார்.

நாமும் இறை இரக்கத்தில் நம்பிக்கை கொள்வோம். இறை பிரசன்னத்தில் வாழ்வோம்.

**பாடல் - தாய் போல தேற்றி ....**

**மன்றாட்டு**

**பாடவேண்டியது**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

1. அன்பின் இறைவா திருஅவையை வழிநடத்தும் நம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்கள் அருள்சகோதரிகள் அனைவரையும் ஆசீர்வதியும், இவர்கள் தங்கள் அழைப்புக்கேற்ற வாழ்வு வாழ்ந்து இறைவனுக்கு சாட்சியாய் வாழ்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நான் உன்னை ஆசீர்வாதத்தால் நிரப்புவேன் என்று சொன்னவரே எங்கள் குடும்பங்களையும், குடும்பத்தில் உள்ள உறுப்பினா்கள் அனைவரையும், அவர்கள் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளையும் ஆசிர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறவைா! மருத்துவமனையிலும் இல்லங்களிலும் நோயினால் வாடும் உள்ளங்களுக்கு ஆறுதலும் தேறுதலும் நலமும் கொடுத்து வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் இறைவா! வெளிநாடுகளில் பணிபுரியும் அனைத்து சகோதர சகோதரிகளையும் கருணைக் கண் கொண்டு, அவர்களுக்குத் தேவையான அனைத்து வாய்ப்புகளையும் உருவாக்கித் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. நாட்டின் தலைவர்களுக்காக செபிக்கின்றோம். மக்களின் நலன் கருதி தியாக உள்ளத்தோடு பணி செய்ய நல்ல மனம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பாடல் இரக்கம் மிகுந்த கரத்திலே**

**இறுதிசெபம்:**

அன்பான இயேசுவே இந்த நேரம் வரை நீர் எங்களோடு இருந்து, உமது பிரசன்னத்தில் உமது இரக்கத்தை பெற்றுக்கொண்டமைக்கு நாங்கள் உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள் பங்கையும் எம் பங்கு மக்களையும் ஆசீர்வதியும். நாங்கள் எப்போதும் உமக்கு ஏற்புடையவர்களாக வாழ உதவி செய்யும். அன்னை மரியாவைப் போல் தாழ்ச்சி நிறைந்தவர்களாக வாழ்ந்து, என்றும் உமக்கு பிரமாணிக்கமாய் இருக்க அருள்தாரும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## 34.அமைதியின் இறைவனை ஆராதிப்போம்

**துவக்கப் பாடல்...**

**புகழ்ச்சி**

**பதில்:** ஆண்டவரே உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம்

- கிறிஸ்துவின் வாழ்வை அப்படியே பிரதிபலித்து மறுகிறிஸ்துவாக வாழ்ந்து எமக்கு முன்மாதிரியான புனித பிரான்சிஸ் வழியாக...
- ஏழ்மையின் வழியாக இறைவா உம்மை நெருங்கும் கலையை எமக்கு கற்றுத்தந்த புனித பிரான்சிஸ் அசிசி வழியாக...
- படைப்புகளின் வழியாக படைத்தவரை புகழும் புனித பிரான்சிஸ் வழியாக...
- துன்பங்கள் வழியாக மகிமை பெறும் வழியை எமக்கு கற்றுத் தந்து, இறைமகன் இயேசுவின் பாடுகளில் பங்கேற்க எம்மைத் தூண்டிய புனித பிரான்சிஸ் வழியாக...
- இறைவார்த்தையை தன் வாழ்நாள் முழுவதும் பற்றி வாழ்ந்த புனித பிரான்சிஸ் வழியாக....

**முன்னுரை**

புனித பிரான்சிஸ் அசிசியாரை நமது சபையின் இரண்டாம் பாதுகாவலராகக் கொண்ட நாம், அவரது மூன்றாம் சபையின் உறுப்பினர்களாகிய நாம், அவரது பண்புகளை

நமதாக்கி கொள்தல் நலமாகும். அவரது ஆன்மீகம் நமது ஆன்மீகமாக இருக்க வேண்டும். வானகத் தந்தையைப் பற்றிக் கொண்டு அவரது மகன் இயேசுவை சகோதரராகப் பாவித்து அவர் பொருட்டு அனைவரையும் சகோதர சகோதரிகளாக, ஏன் படைப்புகளனைத்தையும் சகோதர அன்பில் இணைந்த அவரை பின்பற்றுவோம்.

இயேசுவைப் போலவே ஏழ்மையை விரும்பி எளிய போதனையைக் கைக் கொண்டு சிலுவையில் பாடுகளை ஏற்ற அவரைப் பின்பற்றுவோம். இறைவார்த்தையில் அதிக நாட்டம் கொண்டு அதனையே தனது சபையின் வாழ்வு நெறியாக ஏற்று வாழ்ந்த அவரைப்போல இறைவார்த்தையைப் பற்றி வாழ்வோம்.

**மன்னிப்பு:**

**பதில்:** எங்களை மன்னியும் தெய்வமே

- இயேசுவின் சீடர்களாகிய நாங்கள் அவரை பின்பற்றி அவரைப்போல் செயல்படாத நேரங்களுக்காக…
- ஏழ்மையை விரும்பி ஏற்று அதன் வழியாக இறைவனை எளிதில் நெருங்கிச் செல்லும் வழியை அறிந்திருந்தும் அதில் நடக்காத நேரங்களுக்காக…
- படைப்பு பொருட்களான இயற்கையை பேணிக் காக்காமல் அதன் அழிவுக்கு மறைமுக காரணிகளாக இருந்ததற்காக…

- பாடுகள் வழியாக புண்ணியத்தை ஏற்க மனமின்றி பாடுகளைத் துன்பங்களைக் கண்டு பயந்து வாழ்ந்த நேரங்களுக்காக...
- இறைவார்த்தையில் நாட்டமின்றி அதனை வாசித்து செயல்படுத்தாத நேரத்திற்காக...

**வாசகம்:**

ஊற்று பக். 101, இறுதிமுறி

**மறையுரை**

இறுதிமுறி (வுசயளெவைரள) என்பது தன் வாழ்நாளின் இறுதியில் தனது வாழ்வின் அனைத்து அனுபவங்களையும் உள்ளடக்கி தான் இவ்வுலகத்திற்கு விட்டுச் செல்ல நினைக்கும் இறுதி வார்த்தைகளாகும். அதுவே அவர்களது வாழ்வின் சாராம்சம் என்றும் சொல்லலாம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் மிக மிக முக்கியமானதாகும். அவரைப் பின்பற்ற விரும்புபவர்கள் கடைபிடிக்க வேண்டியதும் ஆகும்.

தொழுநோயாளர்களை சந்திப்பது என்பது புனித பிரான்சிஸ்குவிற்கு துவக்கத்தில் கசப்பு மிகுந்ததாக இருந்தது. ஆனால் இறை அனுபவத்தைப் பெற்றபிறகு அவர்களுக்கு சேவை செய்வது இனிமை மிகுந்ததாக மாறியது. இறைமகனின் பிறரன்பே இத்தகைய அற்புதம் அதிசயம் நிகழ அடிப்படையாக அமைந்தது.

ஆலயங்களை சந்திப்பதும் அவற்றைப் பழுதுபார்ப்பதும் அங்கேயே தங்கி இருப்பதும் சிலுவை ஆண்டவரிடம் பேசுவதும், அவர் பேசுவதைக் கேட்பதும், புனித பிரான்சிஸ் தனது வீட்டை, பெற்றோரை, நண்பர்களை,

பழைய வாழ்க்கையை முற்றிலும் துறந்து புதிய வாழ்வை ஏற்கச் செய்தது

அருள்பணியாளர்கள் மேல் கொண்ட அன்பும் மரியாதையும் திருப்பலியில் அவர்கள் வழியாகவே இறைமகன் நம் கண்முன் பிரசன்னமாகிறார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைந்தது.

நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்வாக்கும் கலையை நன்கு அறிந்திருந்த அவர் அதனையே வாழ்வின் உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டு தன் சபையினரும் நற்செய்திவழி வாழ விரும்பினார். ஏழ்மைவழி இறைவனை நெருங்கும் கலையை அறிந்த அவர் பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து பரமனை பற்றினார். கட்டளை செபத்தில் அதிக ஆர்வம் கொண்டு செபித்து வந்தார். ஆண்டவர் வழங்கிய சமாதானத்தை அனைவருக்கும் பகிர்ந்து வாழ்ந்து அமைதியின் தூதனாகவே செயல்பட்டார்.

புனித அசிசியாரின் தனிச்சிறப்புமிக்க இப்பண்புகளை நமது வாழ்க்கையோடு சிறிது நேரம் அமைதியில் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**மன்றாட்டு:**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

**1.** இறைவா! கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் பலராக இருந்தாலும் மறுகிறிஸ்துவாக மாறுபவர்கள் சிலராக உள்ளனர். கிறிஸ்தவ மதிப்பீடுகளை எம்மில் பிரதிபலித்து வாழ வரம் தர உம்மை மன்றாடுகின்றோம்.

**2.** ஏழ்மையே புண்ணிய வாழ்வுக்கு எளிய வழி என்று படிப்படியாக அனுபவத்தில் உணர்ந்து

அந்த குறுகலான வாயில் வழியாக பயணிக்க வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**3.** படைப்புகளுக்கும் எங்களுக்கும் இடையே உள்ள உறவை உணர்ந்து அதனை அழிவிலிருந்து காக்கும் பாதுகாவலர்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**4.** பாடுகள் துன்பங்களைக் கண்டு பயந்து விலகாமல் அதன் வழியாக நிறை மகிழ்ச்சியை கண்டடைய வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5.** இறைவார்த்தையை வாழ்வாக்கி, அது காட்டும் பாதையில் நாளும் நடக்க வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**நன்றிபாடல்**

**செபிப்போமாக!**

இறைவா! புனித பிரான்சிஸ் அசிசியின் வாழ்க்கை, காலத்தினால் அழியாத காவியமாக இன்றும் நிலைத்துள்ளது. இன்றும் பலரை அவரது பெயரைத் தாங்கி, அவரது பாதையில் வாழ அழைக்கிறது. அவரது பெயரைத் தாங்குவதாலோ அவரது சபையில் இருப்பதாலோ அல்ல இறுதிமுறியை, இறுதி ஆசைகளை நிறைவேற்றி இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதனாலே அவரை மகிமை படுத்த முடியம். இறைவனுக்காகவே எல்லாவற்றையும் செய்து வாழ்வோம் ஆமென்.



# 35. அன்பில் நிலைத்திட தூயவரை ஆராதிப்போம்

**முன்னுரை:**

தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். தூய திரு மறைப்பொருளாய், மங்காத பேரொளியாய், வற்றாத அருள் ஊற்றாய், எண்ணிலடங்கா நன்மைத்தனத்தால், தம் பேரன்பால் நம்மை காத்துவரும் நற்கருணை நாதரை சுயநலமில்லா தூய அன்பால் இவ்வுலகை படைத்து பாவத்தில் வீழ்ந்த மனித குலத்தை மீட்க தாமே மனித உருவெடுத்து இரத்தம் சிந்தி நமது நிறை, குறை கண்ணீர், சிரிப்பு, துன்பம் ஆகிய அனைத்தையும் மிக நுணுக்கமாய் அறிந்த இறைவனிடம் நமது அன்பை பகிர்வோம். அப்பா என்ற உணர்வுடன் அவரோடு உரையாடுவோம். அவரது தூய அன்பில் நிலைத்திருப்போம்.

**ஆராதனை புகழ்ச்சி மற்றும் மன்னிப்பு:**

அன்பின் இறைவன் நம் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் நம்மில் இருந்து நம்மை எந்நாளும் வழிநடத்தி வருகின்றார். எண்ணிலடங்கா நன்மைகளின் ஊற்றாய் இருக்கிறார். நம்மை பராமரித்து வருகிறார். நம்மில் ஒன்றாக கலந்து நம்மை எந்நாளும் வழிநடத்தி வருகிறார். அவர் நமக்கு செய்த எல்லா நன்மைகளையும் இவ்வேளையில் நினைத்து பார்த்து இறைவனை புகழும் வண்ணம் திபா 65. ன் வழியாக போற்றி, புகழ்ந்து நன்றி கூறுவோம்.

எங்கள் ஆன்மாவை தூய்மைபடுத்தி கறைபடா உள்ளத்துடன் வாழ நீர் ஆசிக்கின்றீர். தாவீதை நீர் அதிகமாக நேசித்து அளவுக்கடந்த அன்பை பொழிந்து அவரை இரட்டிப்பான ஆசீர்வாதங்களால் நிறைத்துள்ளீர். இறைவனின் இரக்கம் அளவுக்கடந்தது. அதை உணர்ந்து அனுபவித்து வாழ வேண்டும். இவ்வேளையில் நாம் செய்த பாவங்களை நினைத்து மௌனமாக மன்னிப்பு வேண்டி அவரின் அளவற்ற இரக்கத்தைப் பெறுவோம்.

**நற்செய்தி திப.4:32 - 37**

இப்போது வாசிக்க கேட்ட வாசகத்தில் இயேசு கிறிஸ்துவை உறுதியாக ஏற்றுக்கொண்ட மக்கள் அனைவரும் ஒரே குடும்பமாக, பகரிந்து, பிறரை ஏற்றுக் கொள்ளும் நற்பண்புடன் வாழ்கின்றனர். இது தான் இறை நம்பிக்கை எனவும் இவர்களே தொடக்க திருஅவை மக்கள். ஆனால், இக்காலக்கட்டதில் அத்தகைய நற்பண்புகளை கைவிட்டு கடவுளையும், பிறரையும் மறந்து வாழ்கிறோம். இப்படி வாழ்வதால் குழுமமாக வாழ்வது அரிதாகிவிட்டது. ஒருவரை ஒருவர் தாங்கி பிடித்து இயேசுவை பிரதிபலிக்கும் சமூகமாக மாற அருள் வேண்டுவோம்.

**செபிப்போமாக!**

ஆண்டவரே நீர் எங்கு சென்றாலும் உம்மை பின் தொடர்வேன் என்று கூறி உமது தூய அன்பில் வாழ்ந்து அதனை உலகெங்கும் சென்று பறைசாற்றின சீடர்களைப்போல் நாங்களும் உம்மை பின் தொடர்ந்துள்ளோம். அன்பான இயேசுவே உமது அன்பின் நிலையை நாங்கள் சந்திக்கும் மனிதர்களிடத்தில் அதனை

பகரிந்தளிக்கவும் சாட்சி பகரும் வாழ்வு வாழ உமது பிரசன்னம் எந்நாளும் வழிநடத்தி சென்றிட எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.



## 36. இறைப்பாறுதல் தரும் இறைவனை ஆராதிப்போம்

மாறிவரும் இன்றைய நவீன காலகட்டத்தில் வாழ்விலே அமைதியினைத் தொலைத்து வாழ்ந்து வரும் சகோதரமே, வெண்ணிற அப்பவடிவில் நம் முன் ஆறுதல் தரும் இறைவன் நமக்காக இறைப்பாறுதல் தரக் காத்துக்கொண்டிருக்கின்றார். நாமும் அவரின் ஆழம் காண இயலாத அன்பினை உணர்ந்தவர்களாக இவ்வாராதனையிலே அவரின் மடியிலே இளைப்பாறுவோமா?

**புகழ்ச்சி:**

**பதில்: அமைதியின் மன்னனை ஆராதிக்கின்றோம்...**

**அன்பின் தேவனை ஆராதிக்கின்றோம்...**

1. **“அமைதியை அருளும் கடவுள் உங்களோடிருப்பார்”** (பிலிப்பியர் 4:9)

என்று கூறி எங்களின் வாழ்வில் சிறு பொழுதும் பிரியாமல் எம்முடன் உறைவதற்காக…

2. **“அமைதியை அருளும் ஆண்டவர் தாமே எப்பொழுதும் எல்லா வகையிலும் உங்களுக்கு அமைதியளிப்பாராக”** (2 தெசலோனிக்கியர் 3:16) என்று கூறி எங்கள் குடும்பங்களிலும், பணித்தளங்களிலும் எல்லா வகையிலும் எம்முடனிருந்து வழி நடத்துவதற்காக…

3. அன்பான பெற்றோர்கள் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளைக் கொடுத்து உமது அன்பினை பிறரில் பிரதிபலிக்கச் செய்வதற்காக…

4. **“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லோரும் என்னிடம் வாருங்கள்”** என்று கூறி இரு கரம் விரித்தவராய் எமக்கு ஆறுதல் தர காத்திருக்கும் உமது அளவில்லாத கருணைக்காக…

5. **“நான் உங்களுக்காக இருக்கிறேன், உங்களை கண்ணோக்குவேன்”** என்று கூறி உமது கண்ணின் கருவிழியாய் எமைக் காத்து, தேற்றி ஆறுதல் தருவதற்காய்…

**மன்னிப்பு:**

பல்வேறு தருணங்களில் இறைவன் தருகின்ற ஆசிர்வாதத்தினைப் பெறத் தடையாக இருப்பது நமது நன்றி இல்லா தன்மை மற்றும் மன்னிக்கின்ற மனமின்மையே. அத்தகைய நேரங்களை நினைத்துப் பார்த்து இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம்.

**பதில்:**

**மன்னிப்பு – 3 தேவா... மன்னிப்புத் தாரும் இறைவா...**

1. எனக்குத் தீங்கு செய்தோர், எனது பெயரைக் கெடுத்தோரை மன்னிக்க மறந்த தருணங்களுக்காய்....
2. பிறரை அவர் இருப்பது போல் அவரின் நிறை, குறைகளோடு ஏற்றுக்கொள்ளாத நிமிடங்களுக்காய்...
3. பிறரை அவரின் தோற்றம் மற்றும் செயலை வைத்து தீர்ப்பிட்ட நிமிடங்களுக்காய்..
4. கடமையை செய்யத் தவறிய மற்றும் சோம்பேறித்தனமாய் செயல்பட்ட நேரங்களுக்காய்...
5. நீர் எம்மேல் அளவிட இயலா அன்பு கொண்டவர் என்பதை உணராமல், உலக மாயைகளில் சிக்குண்டு, மனித ஆறுதலுக்காய் ஏங்கித் தவித்த தருணங்களுக்காய்..
6. பிறருக்கு எனது உதவி தேவைப்பட்ட சமயத்தில் உமது திருமுகம் துடைத்து ஆறுதல் தந்த வெரோணிக்காவைப் போல உதவாத நிமிடங்களுக்காய்..
7. பிறருக்காக மற்றும் எனது செப உதவி தேவைப்படுவோருக்காக செபிக்க மறந்த மற்றும் உதாசீனப்படுத்திய நேரங்களுக்காய்...
8. சமூக வலைத்தளங்களில் எனது நேரத்தினை விரயமாக்கியதற்காய்...

9. பிறர் நலனை எண்ணாது சுயநலப்போக்கில் வாழ்ந்து வருவதற்காய்…

10. உமது அன்பினை மறந்து ஊதாரி மைந்தனாய் உம்மை உதறிச் சென்றதற்காய்…

**இறைவார்த்தை: மத்: 11:28-30**

**இறைவார்த்தை வழியில்…**

இன்றைய நாளிலே நற்கருணை நாதராம் நம் இயேசு வருந்தி பாரம் சுமக்கும் நம் ஒவ்வொருவரையும் தன்னிடம் வர இருகரம் விரித்தவராய் "ஓடி வா என் மகளே, மகனே" என்று அன்புடன் அழைக்கிறார். ஆம்… நாம் எவ்வாறு, எத்தகைய நிலையில் இருக்கின்றோம் என சிந்திப்போம். "எல்லாரும்" என்று இறைமகன் கூறுவதால், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பணிபுரிய அழைப்பு விடுத்துள்ளார். அந்த அழைப்பிலே வருகின்ற வேதனைகள், நெருக்கடிகள், தனிமை மற்றும் வெறுமை உணர்வுகளுடன் தன்னிடம் வர அழைக்கிறார்.

**"நம்மையே நமக்கே பிடிக்காத தருணத்தில் கூட நம்மை அன்புடன் நேசிப்பவர் நம் இறைவன்"**

அவர் நமது தகுதியின்மையைப் பார்ப்பவரல்ல… நமது நொறுங்குண்ட நெஞ்சத்திலே வாசம் செய்து இறைப்பாறுதல் தருபவர். தனது எளிதான நுகத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லி, நாம் சந்திக்கும் பிரச்சனையையும், சூழலையும் எதிர்கொள்ள கற்றுத் தருகிறார். அப்பொழுது நமது அனைத்து வேதனைகளும் ஒன்றுமில்லாமல்

உருக்குலைந்து போகின்றது. சுமைகளும் நமக்கு எளிதாக மாறிப்போகின்றது. ஆகவே நம் வாழ்வின் ஆசிரியராம் ஆண்டவரிடம் கற்றுக்கொள்வோம். இறைவனின் இனிதான நுகத்தினை சுமக்கத் தயாராவோம். நம் வாழ்வில் எதிர்கொள்ளும் எதையும் இறை திட்டப்படி சந்திக்கத் தயாராவோமா?...

**மன்றாட்டுக்கள்:**

1. **குணம் அளிக்கும் ஆண்டவரே!**

   இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதனையும் வாட்டும் நோய் என்ற சுமையை ஒப்புக்கொடுக்கின்றோம். தீராத வலி வேதனையோடு போராடும் அனைவரையும் உமது ஆணி பதிந்த கரங்களால் தொட்டு சுகம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. **மன்னிக்கும் இறைவா!**

   நான் உம் பாவங்களை மன்னிககின்றேன் எனச் சொல்லி பாவிகளின் பாவங்களை இரக்கத்தோடு மன்னித்தவரே! எங்களின் பாவச்சுமையை ஒப்புக்கொடுக்கின்றோம். உமது
   கல்வாரி இரக்கத்தினால் மூடியருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. **உடன் வரும் இறைவா!**

   கடன் பிரச்சனை, பொருளாதார நெருக்கடி என்று வாழ்க்கைப் போராட்டத்தில் வாழ்வோர் அனைவரையும் நீர் பொறுப்பெடுத்துக் கொண்டு, அவர்களின் வாழ்வை

ஆசீர்வதிக்க, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. **அரவணைக்கும் தெய்வமே!**

முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லங்களில் வாழ்வோர் அனைவருக்காகவும் செபிக்கின்றோம். பாசம், அன்பு, ஆறுதல், ஆதரவு இல்லாமல் தனிமரமாய் மனச் சுமையோடு இருக்கும் அவர்களைத் தேற்றி ஆறுதல்படுத்தி துணையாய் இருக்க இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**முடிவுரை:**

ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றே எம் இறைவா, நான் கூனிக்குறுகிப்போகும் இடத்திலேயே மீண்டுமாக என்னை உயரச் செய்பவரே, நீர் எங்களுக்காக எமது சுமையை எப்போதும் உமது தோள்களில் தாங்கிக்கொள்ள ஆசையுடன் காத்துக் கொண்டிருக்கிறீர் என்பதை உணர்ந்து, துன்பங்களையும் வேதனைகளையும் சந்திக்கும் வேளைகளில் நீர் எமக்காகவே இருக்கிறீர் என்ற உமது பிரசன்னத்தை உணர்ந்து உம்மிலே இணைந்து வாழும் வரம் தந்தருள வேண்டுமாய் செபிக்கும் என் செபம் கேட்கும் எம் இறைவா... ஆமென்.



# 37. வழிநடத்தும் அன்பனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று வாக்குத்தத்தம் அளிக்கும் இறைவன் நல்லோர், பாவிகள், பலவீனர்கள் என்று பாகுபாடு இல்லாது அனைவரையும் கனிவிரக்கத்தோடு அன்பு செய்யும் இடம் திவ்ய நற்கருணைப் பிரசன்னம். என்னை நோக்கிக் கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் என்று ஆற்றலாலும், வியத்தகு சக்தியாலும் நம்மை வழிநடத்தி வருகிறார். இஸ்ரயேல் மக்களைப் பகலில் மேகத்தூணாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் வழிநடத்திய இறைவன், நற்கருணை வடிவில், நம்முடன் வழிகாட்டியாக இருந்து வருகிறார். நம்மோடு நடந்து, நமக்காகப் பாதை காட்டி தம் கண்களில் நம்மை பதித்து, கரம் கோர்த்து வழிகாட்டியாய் நின்று உறவாய், உணர்வாய், நாம் அவரோடு இணைந்திருக்க நம்முன்னே செல்கிறார். வழிகாட்டி நம்மோடு இருக்கும் வரை வழியும் அதன் வலியும் நமக்குத் தெரிவதில்லை. வழிகாட்டியான இயேசு என்றும் நாம் தடுமாறாமல், பாதை மாறாமல் பாதுகாப்போடு நம்முடன் இருந்து என்றும் பயணிப்பார் என்ற உறுதியான மனநிலையில் அதற்கான அருளை நற்கருணை வடிவில் எளிமையான உருவில் பிரசன்னமாய் இருக்கும் இறைவனிடம் வேண்டுவோம்.

**போற்றுதல்**:

**பதில்**: போற்றிப் புகழ்ந்திடுவோம்
வழிகாட்டிடும் இறைவனையே
வாழ்த்தி மகிழ்ந்திடுவோம்
வழிகாட்டும் நல் தேவனையே

- வழிகாட்டும் விடிவெள்ளியே இறைவா! என் உள்ளமெனும் குடிலில் ஒளியைத் தந்து, என்றும் ஒளியை நோக்கி அழைத்துச் செல்வதற்காய் உம்மைப் போற்றுகின்றோம்....
- கருவாகி, இறையாகி, உருவாகிய இறைவா எமக்குப் புது வாழ்வை காட்டி வழிநடத்தி வருவதற்காய் இறைவா உம்மைப் போற்றுகின்றோம்...
- தூய ஆவியாரை எமக்கு உடன் துணையாளராய்த் தந்து எம் பலவீன நேரங்களில் பலப்படுத்தி ஆவியால் என்றும் எம்மை நிரப்பி வருவதற்காய் இறைவா உம்மைப் போற்றுகின்றோம்...
- இஸ்ரேயேல் மக்களைக் கானான் நாட்டிற்கு 40 ஆண்டுகள் பலவித இடையூறுகளின் மத்தியில் நல்வழிப்படுத்த வழிகாட்டியாய் இருந்த இறைவா, எம்மையும் நாளும் பொழுதும் வழி நடத்தி வருவதற்காய் உம்மைப் போற்றுகின்றோம்...
- நானே உலகின் ஒளி, என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும்

ஒளியாய் இருந்து எம்மை விழிப்போடும், நட்புறவோடும் அன்பு செய்யும் இறைவா உம்மைப் போற்றுகின்றோம்....

- சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள், அவர்களைத் தடுக்க வேண்டாம் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது என்று விண்ணரசிற்கு செல்வதற்கான பாதையை எமக்கு காட்டி உம்மோடு என்றும் குடிகொள்ள எம் வாழ்வில் ஒளியாய் இருந்து வரும் இறைவா உம்மைப் போற்றுகின்றோம்.

**மன்னிப்பு**:-

கடல் நீர் கரையைத் தேடுகிறது
மழை நீர் பூமியைத் தேடுகிறது
குழந்தை தாயைத் தேடுகிறது
பாவி புண்ணியத்தைத் தேடுகிறான்.

தேடல் என்பது வாழ்வின் முக்கியமான ஒன்று. எல்லா பாவங்களையும் மனித மனம் உணரும் தருணங்களில் நம் இதயக் கதவருகில் நின்று ஒவ்வொரு நாளும் தட்டி விழித்தெழச் செய்யும் பரமன் இயேசு பாவிகளைத் தேடி வருகிறார். நம் வாழ்க்கை விடிந்துவிட்டது என்ற விழிப்போடு இயேசுவே, நமக்கு ஒளி. அவரே நமது வாழ்வு, நமது வழி என்று வழிகாட்டியாம் இயேசுவில் நம்மை அர்ப்பணிப்போம். அவரது இரக்கப் பார்வையில், கனிவில் நம்மை இணைப்போம். வழிகாட்டியான இறைவனின் ஒளியில் பாதைத் தவறிச் சென்ற நேரங்களை நினைவு கூர்ந்து மன்னிப்பு வேண்டுவோம்.

**பாடல்**:- தந்தையின் வீட்டிற்குத் திருப்பிடுவேன் நான்...

**இறைவார்த்தை முன்னுரை**:

இறைவார்த்தை நம்மைக் குணப்படுத்துவது, ஒளிகாட்டுவது, வழியாய் மாறுவது, பலவீன நேரங்களில் நம்மை பலப்படுத்துவது, இத்தகைய இறைவார்த்தை எனும் ஒளியில் பயணிக்க இறைவார்த்தைக்குச் செவிமடுப்போம்.

**நற்செய்தி லூக்:11:5-13**

**நற்செய்தி விளக்கம்:-**

இயேசு நமக்குத் தாயாக, தந்தையாக, வழிகாட்டியாக, எல்லாமுமாய் இருந்து அனைத்தையும் கற்றுத்தருகிறார். இவ்வாறு இயேசு கற்றுத்தருதலின் முதல்நிலை இறைவேண்டல் எந்த ஒரு செயலைத் தொடங்கும் போதும் தனிமையில் இருந்து தந்தையோடு உறவாடி, அனைத்திலும் வெற்றி அடைகிறார். நம் செயல் வெற்றியடைய, இயேசு காட்டிய இறைவேண்டல் எனும் பாதையில் சென்றால், வழிகாட்டியான இயேசுவை நாமும் பின்பற்றுவோம். விண்ணகத் தந்தையிடம் எவ்வாறு இறை வேண்டல் செய்ய வேண்டும்? நம் வேண்டல் எப்படிப்பட்டது? தந்தை நமக்குத் தர விரும்புவது என்ன? எனும் மறைபொருளை எளிமையான போதனையின் மூலம் நமக்கு எடுத்துக்காட்டினார். உலகில் நடைமுறை வாழ்வில் பிள்ளைகள் தனக்கு வேண்டியதைப் பெற்றோரிடம் கேட்டுப் பெறுகின்றனர். நம்மையும் உலகையும் ஆண்டு நடத்தும் கடவுளாகிய தந்தை தம்மை அணுகி வரும் யாவருக்கும் தூய ஆவி என்னும் அற்புதக் கொடையை வழங்குவார்.

தூய ஆவியார் நம்மில் வல்லமையோடு செயலாற்றுபவர், உண்மை வழியில் நடத்திச் செல்பவர், நன்மை தீமையை உணர சக்தி தருபவர். வழிகாட்டும் இயேசு தம் சாவின் இறுதி நிலையிலும் தூய ஆவியின் வல்லமையால் மன உறுதியோடு தம் உயிரைக் கையளித்தார். ஆவியின் தூண்டுதலால் நாமும் இத்தகைய துணிவுடனும், ஆற்றலுடனும் விண்ணரசு நோக்கியப் பாதையைக் கடந்து செல்வோம் அதற்கான அருளைத் தொடர்ந்து வேண்டுவோம்.

**மன்றாட்டு:-**

- திருஅவையின் வழிகாட்டிகளாய் இருந்து வழிநடத்தும் எம் திருத்தந்தை ஆயர்கள், அருள்பணியாளர்கள் அனைவரும் இறை மக்களை விண்ணரசுக்கான பாதையைக் காட்டும் கலங்கரை விளக்காய் இவர்கள் வாழ்வு அமைந்திட, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
- உண்மையின் உருவே இறைவா! எம் நாட்டை ஆளும் வழிகாட்டிகளாம் தலைவர்கள் அனைவரும் இரக்கம் கனிவு நேர்மை போன்ற பண்புகளில் நிலைத்திருந்து மக்களின் மனங்களில் ஒளியேற்றும் தீபங்களாய் திகழ்ந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
- வழிகாட்டும் எம் இறைவா! நோயினால் துன்புறும் ஒவ்வொருவருக்காய் உம்மிடம் வேண்டுகின்றோம். அவர்கள் தங்களுடைய நோயின் வருத்தங்களை அமைதியுடன் ஏற்றுக் கொள்ளவும்,

நோயை தாங்க தேவையான மன பலத்தையும், உடல் பலத்தையும் தந்து காத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

- அன்பே உருவான இறைவா! இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மக்களுக்காகவும் உம்மிடத்தில் வேண்டுகின்றோம். அவர்களின் வாழ்வு ஒளிமயமாக இருக்கவும், அவர்கள் இழந்து போனதை மீண்டும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழவும், அருள் உதவியும் பொருள் உதவியும் நீரே தந்து அவர்களின் வாழ்வில் இரட்டிப்பான மகிழ்ச்சியைக் கண்டிட அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**செபிப்போமாக:-**

காணாமல் போன ஆட்டைத் தேடிக் கண்டடைவதில் பெருமகிழ்ச்சி கொள்ளும் இறவா! எம்மை உம் மக்களாக்கி எமக்கு உரிமைப் பேற்றினை அளித்து எம்மை என்றும் பாதுகாத்து, பராமரித்து வரும் உம் கிருபைக்காய் நன்றி! உம் பிரசன்னத்தில் பெற்ற ஒளியைப் பிறருக்குப் பகிர்ந்தளித்து, யாவரையும் அரசின் மாட்சிக்குள் ஒன்று சேர்க்கும், வழிகாட்டிகளாய் உம் பாதம் தொடர, அருள் புரிந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.



## 38. கிளாராம்மாள்

## பின்பற்றிய இறைவனை ஆராதிப்போம்.

**துவக்கப் பாடல்**

**புகழ்ச்சி**

**பதில்:** ஆண்டவரே உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம்

- அழைப்பதும் நானே உடனிருந்து வழிநடத்துவதும் நானே என்று அழைப்புக்குள் புது அழைப்பாக இல்லத்தலைமை பணி தந்து வழிநடத்தும் தெய்வமே....
- தன் பெயருக்கு ஏற்றார்போல் தெளிவான தூய்மையான வாழ்வு வாழ்ந்த, புனித கிளாரம்மாளை முன்மாதிரியாக எமக்கு தந்த தெய்வமே....
- தகுதியானதால் அழைக்கவில்லை இருப்பினும் தலைமைப் பண்பிற்கு ஏற்ப தகுதியாக்கிக் கொள்ள தங்களை அர்ப்பணித்த எம் சகோதரிகளுக்காக....
- நல்லாயன் இயேசுவைப் போல் தங்கள் மந்தையை இளைப்பாற்றவும், பசியாற்றவும், வழிநடத்தவும் தலைவர்களைத் தந்ததற்காக....

**முன்னுரை**

புனித கிளாரா தலைமைப் பண்பில் சிறந்து விளங்கினார். சகோதரிகளைப் பேணுவதிலும் அவர்களை பகைவர்களிடமிருந்து பாதுகாப்பதிலும் ஆன்மீகப் பாதையில்

வழிநடத்துவதிலும் அவர் காட்டிய அக்கறை மிகப் பெரியது. இதனால் அவரது வாழ்க்கை முறை அனைவரையும் கவர்ந்திழுக்கக் கூடியதாக அமைந்தது. இதனால் அவரது சொந்த அன்னையும், தங்கையும் அவரைப் பின் தொடர்ந்து அவரது சபையில் வந்து சேர்ந்தனர் என்றால் அது மிகையன்று.

மறு கிறிஸ்துவான புனித பிரான்சிஸின் ஏழ்மை வாழ்வினால் கவர்ந்திழுக்கப்பட்ட, புனித கிளாரா கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதலில் சிறந்து விளங்கினார். சபையின் ஒழுங்குகளை தானே எழுதினார். அதனை காலத்திற்கேற்ப திருத்தி எழுதும் பொறுப்பை இல்லத் தலைமை சகோதரிகளிக்கே அளித்தார். இதனால் அனைத்து இல்லத் தலைமை சகோதரிகளுக்கும் முன்மாதிரியாக திகழ்கின்றார்.

**மன்னிப்பு:**

**பதில்:** எங்களை மன்னியும் தெய்வமே

- வாய்ப்பு கிடைக்கும் பொழுது தலைமைப் பொறுப்பேற்க தயங்கி உம் அழைத்தலைப் புறக்கணித்த தருணங்களுக்காக...
- புனித கிளாரம்மாளைப் போன்று எல்லா சகோதரிகளுக்கும் முன்மாதிரியாக இருக்க தவறிய நேரங்களுக்காக....
- ஆன்மிகத்தின் ஆழம் கண்டு எந்த துன்பத்தையும் நற்கருணை நாதரிடம் கொண்டு வந்து சரிசெய்ய பழகாத நேரங்களுக்காக....
- இல்லத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை சரிவர

செய்யாமல் இருந்து குழும வாழ்வுக்கு இழுக்கு வர காரணமாயிருந்த நேரங்களுக்காக…

**வாசகம்**

ஊற்று பக்கம் 240, தூய கிளாராவின் இறுதிமுறி

**மறையுரை**

தூய ஏழ்மையில் நிலைத்திருக்க புதிய வாழ்க்கை முறையை அமைத்துத் தந்த புனித பிரான்சிஸின் வாழ்வைப் பின்பற்றி துறவு வாழ்வை மேற்கொண்டவர் புனித கிளாரா. ஏழ்மையே புனிதத்திற்கான எளிய வழி என்பதை நன்கு அறிந்து, தான் பிரபு குடும்பத்தில் பிறந்திருந்தாலும் ஏழ்மையை விரும்பி ஏற்று புனிதமடைந்தார். மேலும் கிறிஸ்துவின் அன்பைக் கைக்கொண்டு ஒருவர் ஒருவரை அன்புசெய்து தனது முன்மாதிரிகையினால் சகோதரிகள் எப்போதும் இறையன்பிலும் பிறரன்பிலும் வளர உதவினார்.

துறவிகள் புண்ணியங்களாலும், தூய வாழ்வினாலும் மேலோங்கி நிற்க வேண்டும். ஒடுக்கமான பாதையில் நீடித்து நடந்து இறுதிவரை அதில் நிலைத்திருக்க வேண்டும். எப்போதும் நற்பெயர் எனும் நறுமணம் வீசி அருகிலிருப்பவர்கள் மத்தியிலும் தொலைவில் இருப்பவர்கள் மத்தியிலும் வாழ வேண்டும் என்று கூறியதோடு அல்லாமல் தனது வாழ்வில் செயல்படுத்தியும் காட்டியவர் புனித கிளாரா.

பொறுப்பிலிருப்பவர்கள் சகோதரிகளிடத்தில் மிகுந்த அக்கறையும் முன்னோக்கும் கொண்டு செயல்படுவார்களாக என்று வாழ பணித்த

புனித கிளாரம்மாள் இல்லத் தலைவியர் தம்மை ஆண்டவர் அழைத்திருப்பதால் பிறருக்கு எடுத்துக்காட்டாகவும் கண்ணாடியாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். இப்படி வாழ்வதால் கூட்டுவாழ்வும் தலைமைப் பொறுப்பும் சிறந்து விளங்கும்.

**மன்றாட்டு:**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

1. தலைமைப் பொறுப்பிலிருக்கும் சகோதரிகள் எச்சூழ்நிலையிலும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் தைரியமும் மனப்பக்குவமும் கொண்டிருக்கத் தேவையான அருளை நிரம்பத் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

2. குழுமவாழ்வில் நிறைமகிழ்வு கண்டிட தேவையான காரியங்களை செய்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

3. கூடி வாழ்வதால் விளையும் நன்மைகளை எதிர்நோக்கி ஒற்றுமையாய் வாழ்ந்திட வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

4. கூட்டு வாழ்வில் எதிர்கொள்ளும் சிறு பிரச்சனைகளை பெரிதுபடுத்தாமல் நேர்மறை எண்ணத்தோடு வாழ்ந்து சிறந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி பாடல்**

**செபிப்போமாக!**

இறைவா! கூட்டு வாழ்விற்கு முன்மாதிரியாக, தூய தமத்திருத்துவமாக, நீர் விளங்குவதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். கூட்டுவாழ்விலே உமது பிரசன்னத்தை நாங்கள் பெறவும், கூடி

உழைப்பதால் உமது இறையாட்சி பணிகளை இன்னும் சிறப்பாக செய்திடவும், உடனிருப்போருடன் உறுதுணையாயிருந்து, இன்ப துன்பத்தில் தோள் கொடுக்கும் தோழமை உணர்வில் சிறந்து விளங்கிடவும் தேவையான வரம் தர இறைவா உம்மை வேண்டுகிறோம் -ஆமென்.



## 39. ஒற்றுமையின் இறைவனை ஆராதிப்போம்

**“தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி, நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” (யோவான் - 17:11)**

- நற்கருணை- கிறிஸ்தவ வாழ்வின் ஆணி வேரும் அடித்தளமுமாய் இருக்கின்றது.
- நற்கருணை- வாழ்வின் ஆதாரமாய் இருக்கின்றது.
- நற்கருணை- வழியாகவே என்றும் வாழும் இறைவனைக் காண்கிறோம்.

அவரை உள்ளத்தில் எற்றுக்கொள்கின்றோம். நமது நம்பிக்கையும், விசுவாசமும், வாழ்வின் நோக்கமும், அர்த்தமுமாய் இருக்கின்ற நற்கருணை வழியாக வெண்ணிற அப்பத்தில்

வீற்றிருக்கின்ற உயிருள்ள தேவனை தாழ்ந்துப் பணிந்து ஆராதிப்போம்.

**புகழ்ச்சி:**

**“நேரம் பொன்னானது”**

- உழைப்பதற்கு ஒரு நேரம்...
- ஓய்வு எடுப்பதற்கு ஒரு நேரம்...
- பகிர்வதற்கு, பாசத்திற்கு என அனைத்திற்கும் ஒரு நேரம்.

  இது ஒரு பொன்னான நேரம், ஆம்! படைத்தாளும் பரமனின் எல்லையில்லா அன்பையும், விந்தைமிகு ஞானத்தையும் போற்றிப் புகழ வேண்டிய நேரம்.

**புனித ஜஸ்டின்** தன் எழுத்துக்களில் இவ்வாறு கூறுகிறார் “ஒவ்வொரு விசுவாசியும் எந்த உணவும் உண்பதற்கு முன் நற்கருணைப் பெற முயற்சிக்க வேண்டும்”. “விசுவாசத்தோடு அவர்கள் நற்கருணை உண்டால் நஞ்சு கூட அவர்களுக்கு தீங்கிழைக்காது” என்று திருத்தூதர்பணி கூறுகிறது.

**புனித அகுஸ்தினார்** “கிறிஸ்துவின் திருவுடலை வணங்காமல் அதனை உண்ணக் கூடாது” என்று ஆணை பிறப்பிக்கிறார். நற்கருணை இயேசு ஆண்டவரின் திருப்பிரசன்னத்தை வெளிப்படுத்தும் உன்னதமான அருளடையாளமாக திகழ்கின்றது.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நற்கருணையை **‘இது என் உடல்’** **‘இது** என் இரத்தம்’ என்று குறிப்பிடுகிறார். ஆகையால் இயேசு கிறிஸ்துவே ஏற்படுத்திய நற்கருணை அழியாச் சின்னமாக, அவருடைய திருப்பிரசன்னத்தை எண்பிக்கும் அருட்சாதனமாக எந்நாளும் விளங்குகிறது.

**“உலகம் முடியும் வரை உங்களுடன் இருக்கிறேன்”** (மத்தேயு – 28:20) என்று சொன்ன ஆண்டவர் நற்கருணை வாயிலாக இன்று நம்மிடையே பிரசன்னமாகி இருக்கிறார்.

நம்மை முழுமையாய் அறிந்து காக்கும் கடவுளின் வல்லமையைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்க இத்திருப்பாடலை அனைவரும் இணைந்து வாசித்து இறைவனைப் புகழ்வோம். (**திருப்பாடல் 139**)

நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசு கிறிஸ்து ஆண்டவரை போற்றிப்புகழ கூடியிருக்கும் ஒவ்வொருவரும் அவரைப்பற்றி முழுமையான அறிவை பெற்றிருப்பதே நாம் அவருக்கு செய்யும் உண்மையான உள்ளார்ந்த வழிபாடு ஆகும்.

**விடுதலை பயணம் - 33:15, 16-ல்** உமது பிரசன்னம் கூட வரவில்லையெனில் எங்களை இங்கிருந்த போகச் செய்யாதீர் நானும் உம் மக்களும், உம் பார்வையில் தயை பெற்றுள்ளோம் என்பதை எப்படி அறிவோம்? நீர் எங்களோடு வருவதாலும் நானும் உம் மக்களும் மண்ணுலகில் உள்ள அனைத்து மக்களினின்றும் வேறுபட்டு நிற்பதாலோ அன்றோ என்று மக்கள் முறையிட்டபோது, **“உங்களோடு என்றும் இருப்பேன்”** (யோசுவா 3:7) என்று இறைவன் உறுதி தந்தார்.

அதே வாக்குறுதியை இறைவன் இன்றும் நமக்குத் தருகிறார். “இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது.” அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். அவரே

அவர்களின் கடவுளாய் இருப்பார். (தி.வெ 21:3,4) என்ற இறைவாக்கு நற்கருணையில் உண்மையாகிறது. நம்மிடையே தமது உறைவிடத்தை அமைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் இறைவனைக் காண, கண்டுகொள்ள நம் கண்கள் ஒளியூட்டப்பெற இப்பாடலின் வழியாக இறையருளை வேண்டுவோம்.

**பாடல்:** என் பார்வை ஒளிபெற வேண்டும்)

**நற்செய்தி : யோவான் 17:11-19**

நற்செய்தி வழியாக இயேசுகிறிஸ்து இரண்டு செய்திகளை தருகிறார்.

1. மகிழ்ச்சி 2. எச்சரிக்கை.

நம் ஆண்டவர் இயேசு கூறியதின்படி நமது வாழ்வை அமைத்துக்கொண்டால் அது நமக்கு சவாலான, கடினமான வாழ்வு என்றாலும் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து வாழ்கிறபோது அது நமக்கு நிறைவான மகிழ்ச்சியைத் தரும். இந்த உலகத்தில் நாம் வாழ்ந்தாலும், இந்த உலக மதீப்பீடுகளுக்கு எதிராக நாம் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதால் இந்த உலகம் நம்மை எதிர்க்கும் என்ற எச்சரிக்கை உணர்வை இயேசு நமக்குத் தருகிறார். ஆனால் எத்தகையப் போராட்ட வாழ்விலும் கடவுளின் அருள் நம்மோடு இருப்பதால் அது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும்.

இவ்வுலகத்திடமிருந்து நம்மை வேறுப்படுத்துவது என்ன? இயேசு ஆண்டவர் தம் சீடர்களுக்காக செபிக்கிறார். அவர்கள் வாழ்வில் வெற்றிப்பெற வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக சீடர்கள் ஒற்றுமையோடு இருக்கவேண்டும் என்பதற்காக,

ஒற்றுமை தான் இறையாட்சியின் பலம் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். ஒற்றுமையின் மூலமாகவே இவ்வுலகை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்பது இயேசுவுக்கு தெரியும். ஏனெனில் சீடர்கள் ஒவ்வொருவரும் தம் பண்புகளில் வேறுபட்டவர்களாய் இருந்தார்கள். இயேசுவிடம் அவர்களின் தேவை வெவ்வேறாக இருந்தது. அவர்களின் பார்வை உலகப்போக்கில் இருந்தது. எனவே தான் இயேசு அவர்களின் ஒற்றுமைக்காக செபிக்கிறார். இன்று கிறிஸ்துவிடமிருந்தும் அவருடைய போதனைகளிலிருந்தும் நம்மை வேறுபடுத்துவது எது?

அது பிரிவினையும், கட்சி மனப்பான்மையுமாக இருந்தால் நமது மனம் கடவுளின் பிள்ளைகள் என்ற குடையின் கீழ் ஒன்றுசேர வேண்டும்.

போர், வன்முறை, ஆட்சி, அதிகாரம் என பலவகையில் சிதறுண்டு கிடக்கும் மனித இனத்தை மீட்க இயேசுவின் கரங்களாக இருந்து செயல்பட வேண்டிய நம்மை, இறையரசை கட்டி எழுப்ப தடைக்கற்களாக மாற்றுவது எது? என்பதை சிந்திப்போம். இறைபிரசன்னத்தில் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்போம்.

மன்றாட்டு:

கிறிஸ்துவின் அரசு மண்ணில் மலர உகந்த போர்வீரர்களாக நாம் பயன்படுத்தப்பட அருள் வேண்டி நமது மன்றாட்டுக்களை ஏறெடுப்போம்.

1. திருச்சபை ஒற்றுமைக்காக.
2. உலக நாடுகளுக்கிடையே ஒற்றுமைக்காக.

3. நாட்டின் ஒற்றுமை வேண்டி.
4. கிறிஸ்தவர்களுக்கிடையே ஒற்றுமை நிலவ.
5. நமது குடும்பங்களில் ஒற்றுமை நிலவ.

**இறுதி மன்றாட்டு:**

**அன்பு தந்தாய்!**

நாம் ஒன்றாய் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி, நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும் (யோவான் 14:11) என்று எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உம்மை நோக்கி மன்றாடியது போல இன்று அவரோடு இணைந்து உம்மை நோக்கி மன்றாடுகின்றோம். இறையாட்சி மண்ணில் மலர உம்மால் அழைக்கப்பட்ட நாங்கள், எங்கள் பணித்தளங்களிலும், சந்திக்கும் மனிதர்களிடையேயும், எங்கள் குடும்பங்களிலும், ஒற்றுமையை ஏற்படுத்தும் உமது வலிமை வாய்ந்த கருவிகளாக விளங்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தால் உம்மை நோக்கி மன்றாடுகின்றோம். எங்கள் தூய தந்தையே! ஆமென்.



## 40. நற்கருணையில் வாழும் தூய இறைவனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

அதிமிக இரக்கமுள்ள இயேசுவே! உம்மிடமிருந்தே அனைத்து நன்மைகளும் புறப்படுகின்றன. ஆம் இயேசுவே, உம்மை ஆராதிக்கின்றோம். உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம். உம்மைப் போற்றித் துதிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் எங்களுக்கு அளிக்கப்படும் எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

கடவுள் விண்ணகத்தினின்று மானிடரை உற்று நோக்குகின்றார். மதிநுட்பமுள்ளவன், கடவுளை நாடுபவன் எவராவது உண்டோ? என்று பார்க்கின்றார். என்ற திருப்பாடல் வரிகளுக்கேற்ப அன்பு நற்கருணை நாதரே நாங்கள் அனைவரும் ஒரே குழுமமாக ஒன்று கூடி உம்மை நோக்கி உமது பிரசன்னதையும், ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காக ஆவலோடு காத்திருக்கின்றோம்.

உன் வாழ்நாள் முழுமையும் கடவுளை நேசி என்ற வசனத்திற்கேற்ப எங்கள் நல்ல இயேசுவே நாங்கள் உம்மை நேசித்து, நீதியின் பாதையில் நடந்திட எங்களுக்கு வழிகாட்டியருளும். நாளும் நற்செய்திகளை பறைசாற்ற எங்களுக்கு வாழ்வளித்தருளும் உம் படிப்பினைகளை எங்கள் வாழ்வில் பின்பற்றி உம் அன்பு சீடர்களாய் வாழ துணைபுரியும்.

உலக மாந்தர் அனைவருக்கும் நிலைவாழ்வு அளிக்க எங்களால் இயன்ற உதவிகளைப் புரிந்து வாழவும், வாழ்வளிக்கும் நற்கருணை நாதரே நாளும் என் அன்பு

உமக்காகவே, உம் திருவுளத்தை ஏற்று வாழ வரமருளும் தெய்வமே.

**புகழ்ச்சி:**

கடவுளைப் புகழுங்கள் அவர் உங்களுக்குச் செய்த நன்மைகளை, எல்லா உயிர்கள் முன்னும் அறிக்கையிடுங்கள். அவரது பெயரைப் புகழ்ந்து பாடுங்கள். மனிதர் அனைவர் முன்னும் கடவுளின் செயல்களைப் போற்றிப் புகழ்ந்து அறிக்கையிடத் தயங்காதீர்கள். கடவுளின் செயல்களை எடுத்துரைப்பதும், அறிக்கையிடுவதும் அதனினும் சிறந்தது. எனவே நமக்கு தெரிந்த இறைவார்த்தைகளின் வழியாக இறைவனை புகழ்வோம்.

**நன்றி:**

அன்பின் உருவாய் அருளின் வடிவாய் விளங்குபவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நற்கருணையில் இதோ இந்நேரத்திலே நம்முன் வெண்ணிற அப்பவடிவில் நம்மோடு உறவாட, நம்முடைய தேவைகளை நிறைவு செய்கின்ற இறைவனுக்கு நமது நன்றிகளை இறைவன் முன்பு எடுத்து கூறுவோம்.

**மன்னிப்பு:**

எங்கள் ஆண்டவரே கறைபடா உள்ளத்துடன் வாழ நீர் ஆசீக்கின்றீர். தாவீதை நீர் அதிகமாக நேசித்து அளவு கடந்த அருள் பொழிந்து அனைத்து செல்வங்களையும் இரட்டிபாக்கி கொடுத்தீர். ஆனால் தனது சிற்றின்ப ஆசையில் தவறு செய்து உமது அன்பை விட்டு விலகி சென்றார். செய்த தவறை உணர்ந்து மன்னிப்பு பெற்று உம் அருள் செல்வத்தை மீண்டும் பெற்றுக்

கொண்டார். இறைவனின் இரக்கம் அளவு கடந்தது என்பதை உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி மன்னிப்பை பெற்றுக்கொள்வோம்.

நற்செய்தி விளக்கம்: யோவா: 15:41-48

ஒவ்வொரு நாளும் வாழ்க்கையை பயனுற வாழ்வதற்கு இறைவார்த்தை வழிகாட்டுகிறது. நற்கருணை உயிரளிக்கிறது. நம் வாழ்வில், இறை தாகம் மிகவும் தேவை. அவைதான் நம் நிலையான தாகத்தை தீர்க்க முடியும் தாகம், பசி இவையெல்லாம் வந்தவுடன் அதற்கான ஆகாரத்தை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் நற்கருணை அப்படி அல்ல அதை உண்ண உண்ண தாகம் ஏற்படும். தினமும் நாம் அதை வாடிக்கையாக உட்கொள்வதால் அது நமக்கு வேடிக்கையாகி விடுகிறது. பல துன்பங்கள் பிரச்சனைகளில் மட்டுமே உயிருள்ள இறைவனைத் தேட விரும்புகிறோம். அதுதான் நமக்கு வாழ்வளிக்கிறது. இறைவன் வாழ்வளிக்கும் வள்ளல் அவரை நம் வாழ்வின் மையமாக கொண்டு வாழ அருள் வேண்டி நமது மன்றாட்டுக்களை இறைவன் பதம் அர்ப்பணிப்போம்.

**செபிப்போமாக:**

இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா இதோ இந்நேரம் மட்டும் எங்களோடு இருந்து எங்களை வழிநடத்தியதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். விண்ணிலிருந்து இறங்கி வந்து வாழ்வளிக்கும் இறைவா நாங்கள் உமது உடலையும், இரத்தத்தையும் பருகுவதன் மூலம் உமது அன்பை மக்களுக்கு எடுத்துரைத்து வாழ்ந்து உம்மை என்றும் பிரதிபலிக்கும் உம்

பிள்ளைகளாக வாழ அருள் வேண்டி இவ்ஆராதனை வேளையை நிறைவு செய்கிறோம் - ஆமென்.



## 41. மனிதம் போற்றும் இயேசுவை ஆராதிப்போம்

**ஆராதனை பாடல்:-** ஆராதனைக்கு தகுதியான தெய்வம் இயேசு நீர் மாத்திரமே...

**முன்னுரை:**

நம்முன் உடலோடும் ஆன்மாவோடும் வீற்றிருக்கும் நற்கருணை ஆண்டவர் மீது நாம் கண்களை பதிய வைப்போம். மனிதநேயத்தின் முக்கியத்துவத்தையும் அது எவ்வாறு நம்மை கடவுளின் நற்கருணைக்கு இணையாக செயல்படுகிறது என்பதை தேர்ந்து தெளிவோம்.

மனிதநேயம் என்பது அன்பின் ஒரு செயலாக்கம். இது ஒவ்வொருவரின் அடிப்படை உரிமைகளை மதிக்கும் உணர்வு. நம்முடைய கடவுள் நமக்கு கொடுத்த மாபெரும் கிருபை, மற்றவர்களோடு பகிர்வதன் மூலம் வெளிப்படும்.

பிறரின் மீது அன்பு காட்டி துன்பத்தை போக்குதல் மனிதநேய பண்பு.

கடவுள் மனிதனை நேசித்தார். அவர் படைப்பில் சிறந்த படைப்பு மனிதன். நம் பாவங்களுக்காக இயேசு கல்வாரி மலையில் பலியானார். இதை யோவான் நற்செய்தியில் 1:18 தந்தையின் நெஞ்சுக்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தி உள்ளார்.

**மனிதநேயத்தில் சிறந்து விளங்கியவர்கள் பற்றி சற்று நேரம் சிந்திப்போம்.**

- சீமோனை காவலாளிகள் இயேசுவுடன் சிலுவையை சுமக்க வற்புறுத்தினார்கள். அந்த நேரத்தில் எந்த தயக்கமும் இல்லாமல் இயேசுவுடன் இறுதி வரை சிலுவையை சுமக்கிறார். எந்த ஒரு எதிர்பார்பும் இல்லாமல் உதவி செய்ய முன் வருகிறார் இதுவே உண்மையான மனித நேயம்.
- வெரோனிக்கா எப்படி துணிச்சலுடன் அன்பால் இயேசுவின் முகத்தை துடைத்தாலோ அதை போல பிறரின் துன்ப நேரத்தில் துணிச்சலுடன் உதவி செய்ய நாம் முன்வர வேண்டும்.
- யோவான் இயேசுவின் அன்பு சீடர். ஆனால், யோவான் தன்னுடைய அன்பு சகோதரர் சிலுவையில் தொங்கிக்கொண்டு இருப்பதை பார்த்து மனதளவில் இயேசுவுடன் சிலுவை சுமக்கிறார். இதுவே உண்மையான மனித நேயம் அதன் பரிசு தான் மரியாவை நமக்கு தாயாக அளித்தார். அதுதான் இயேசு நமக்கு கொடுத்த மாபெரும் கொடை.

இந்த ஒரு மணி நேரம் நாம் கடவுளோடு ஒன்றிணைந்து அவர் தம் தூய ஆவியாரின் உதவியால் மனிதநேயத்தை நம்முள் உணர வழி செய்ய இந்த ஆராதனையில் இந்த உலகம் முழுவதையும் அர்ப்பணித்து ஜெபிப்போம்.

**போற்றி:-**

என் உயிரே ஆண்டவரை போற்றிடு! என் முழு உள்ளமே! அவரது திருபெயரை ஏத்திடு என்ற இறை வார்த்தைக்கு கேற்ப நாமும் இறைவனை போற்றி மகிமைப்படுத்துவோம். ஒவ்வொரு போற்றிக்கு பின்பும் நீங்கள் பாட வேண்டிய பதில்:-

**பதில்:** போற்றி புகழ்ந்திடுவேன்…

- மனிதநேயத்திற்கு முழுமுதற் காரணமாய் இருந்த இயேசுவே உம்மை போற்றுகிறோம்.
- அன்பு இயேசுவே எங்கள் உடன் இருக்கும் சகோதர சகோதரிகளை சாதி, மத, மொழி, இன வேறுபாடு இன்றி சமத்துவத்துடன், சகோதர அன்போடும் வாழ கற்று கொடுத்ததற்காக இயேசுவை உம்மைப் போற்றுகிறோம்.
- படைப்பின் சிகரமாகிய எங்களை உமது சாயலில் படைத்து உமது இயல்புகளால் எங்களை அணி செய்தீரே உமது மேலான ஆசீர்வாதத்திற்காய் இயேசுவே உம்மைப் போற்றுகிறோம்.
- முகவரி இழந்த உள்ளங்களுக்கு அங்கீகாரத்தை வழங்கிய எம்

அன்பு இயேசுவே! உம்மை போல் ஏழை, எளிய மக்களின் வாழ்வு வளம் பெற நீர் செய்து வரும் அனைத்து நன்மைகளுக்காகவும் இயேசுவே உம்மைப் போற்றுகிறோம்.

- இறைவனால் படைக்கப்பட்ட அனைவரும் மாண்புமிக்கவர்கள். அவர்களை மனித மாண்போடும், மனித நேயத்தோடும் வழிநடத்த வேண்டும் என்று எம்மவருக்கு முன்மாதிரியாக விளங்கிய இயேசுவே உம்மைப் போற்றுகிறோம்.
- உறவுகளின் உன்னதமே என் இறைவா! நாங்கள் உறவின் மேன்மையை உன்னதத்தை உணர்ந்து வாழ பல நல்ல உள்ளங்கள், உறவுகளை கொடுத்து, உறவுகளின் முக்கியத்துவத்தை உணர்த்திய இயேசுவே உம்மைப் போற்றிப் புகழ்ந்து போற்றுகிறோம்.
- பணிவிடை புரிந்த எம் இயேசுவே நீர் எங்களுக்கு என்று கொடுத்த உம் பணியை உம் அதிமிக மகிமைகாய் செய்ய உம் அருளால் நிறைத்து வழிநடத்தியதற்காய் இயேசுவே உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கிறோம்.
- செல்லும் இடமெல்லாம் நாங்கள் நற்செய்தியின் தூதுவர்களாய் நாளும் வாழ எம் அனைவருக்கும் உம் அன்பு கட்டளையைக் கொடுத்து, நாங்கள் உன் அன்பில் நிலைத்து மகிழ்ந்து வாழ வரம் அருளிய இயேசுவே உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கிறோம்.

**மன்னிப்பு:-**

நற்கருணையில் உயிருள்ள தேவனாய் வீற்றிருக்கும் இயேசுவே! உமது மனித நேயத்திற்கு எதிராக செய்த பாவத்திற்காக மன்னிப்புக் கேட்க இதோ இந்த நேரத்தில் உன் பாதம் வந்துள்ளோம் எங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்.

1. மன்னிப்பின் ஊற்றே என் இறைவா எங்கள் எண்ணம், சிந்தனை, சொல், செயலால் உன் அன்பில் இருந்து பிரிந்த தருணத்திற்காய் இயேசுவே எங்களை மன்னித்தருளும்.

2. அன்பு இயேசுவே உம்முடைய அன்பில் இருந்து பிரிந்து ஊடகங்களின் தாக்குதலில் சிக்கி தவித்துக் கொண்டிருப்பதற்காய் இயேசுவே எங்களை மன்னித்தருளும்.

3. உம்மை முழுமனதோடும் முழு உள்ளத்தோடும் உம்மை அன்பு செய்யாமல் உலகப் போக்கில் வாழ்ந்த தருணங்களுக்காய் இயேசுவே எங்களை மன்னித்து ஏற்றருளும்.

4. பிறருக்கு உதவி செய்ய வாய்ப்புகள் பல கொடுத்தும் அந்த வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தாத தருணங்களுக்காய் இயேசுவே! உம்மிடம் மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம்.

6. எம் உடன் பயனிக்கும் அனைத்து சகோதர சகோதரிகளை அவர்கள் இருக்கும் நிலையிலேயே நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்ள தவறிய

தருணங்களுக்காக இயேசுவே! உம்மிடம் மன்னிப்பு கோட்கிறோம்.

7. நீர் எங்களுக்கு கொடுத்த உறவுகளை மனிதநேயத்தோடு மனித மாண்போடு நடத்தாத தருணங்களுக்காய் இயேசுவே! உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம்.

8. நீ எங்களுக்கு கொடையாக கொடுத்த வரங்களை, திறமைகளை உமது மகிமைக்காய் பயன்படுத்தாமல்
எங்களின் சுய பெருமைக்காய் பயன்படுத்திய நேரங்களுக்காய் இயேசுவே
உம்மிடம் மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம்.

9. திருப்பலி, புனிதர்கள் வரலாறு, ஜெபமாலை, திருவிவிலியம் வாசிப்பது மற்றும் பல ஆன்மீக காரியங்களில் ஈடுபடும் நாங்கள் எங்கள் வாழ்வால் வாழ்ந்து காட்டாமல் செயலில்
வெளிப்படுத்தாமல் இருப்பதற்காய் இயேசுவே உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம்.

**பாடல்:-**

மன்னிப்பாயா மன்னிப்பாயா மன்னவனே....

**நன்றி:-**

இறைவனிடம் மன்னிப்பு கேட்ட நாம் இறைவன் நமக்கு செய்த அனைத்து நன்மைகளுக்கும் பிரதிபலனாக அவருக்கு நமது நன்றியை செலுத்துவோம் ஒவ்வொரு நன்றிக்கு பிறகு நீங்கள் பாட வேண்டிய பாடல்

புதில்: நன்றி நன்றி நல்ல தெய்வமே

1. எங்களின் ஒவ்வொருவரின் தேவையை நாளும் நிறைவேற்றி உமது ஆசீர்வாதத்தால்

ஒவ்வொரு நாளும் வழி நடத்தி வந்த உமது மேலான அருளுக்காய் இயேசுவே உமக்கு நன்றி.

2. உமது அருள் ஆசிரால் எம்மை நிரப்புவதற்காகவும் எங்கள் ஒவ்வொருவரையும் உமது சொந்த மக்களாக சீடத்திகளாக ஏற்றுக் கொண்டதற்காகவும் இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

3. எங்களை எல்லாவிதமான நோய்கள் ஆபத்துகள் இயற்கை சீற்றங்கள் அனைத்து விதமான ஆபத்துகளில் இருந்தும் எம்மை விடுவித்து உமக்கு நன்றி கூற,ஆரோக்கியமான உடல் உள்ள ஆன்ம சுகத்தை தந்தமைக்காக இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

4. எங்களின் பாவங்களை மன்னித்து உமது அருளால் தூய ஆவியின் வரங்கள், கொடைகளால் நிறைத்து வழிநடத்தி வருவதற்காக இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

5. உமது இறை வார்த்தைகளால் நாளும் எங்களை வழிநடத்தி உமது இறையாசியின் மதிப்பீடுகளை உம்மை அறியாத மக்களுக்கு எடுத்துரைக்க எங்களை கருவியாய் பயன்படுத்தி வருவதற்காய் இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

6. இரக்கமே உருவான இயேசுவே! நாங்கள் உம்மோடு இருக்க உம்மை அறிந்து கொள்ள, உன் இறைபணியை செய்ய வாய்ப்பை தந்ததற்காய் இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

7. ஆற்றலை வழங்கும் வல்ல இயேசுவே! உமது ஆற்றலால் எம்மை நிறைத்து நல்ல உடல், உள்ள சுகம் தந்து உம் இறைபுகழைப் பாட ஆசீர்வதிப்பதற்காய் இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

8. ஆறுதலின் ஊற்றே எம் இயேசுவே! ஆறுதலுக்காய் ஏங்கும் உள்ளங்களுக்கு உம்மைப்போல் நாங்களும் ஆறுதலை வழங்கிட தேவையான தூய ஆவியின் கனிகள் வரங்களைத் தந்து ஆசீர்வதிப்பதற்காக இயேசுவை உமக்கு நன்றி கூறுகிறோம்.

9. அன்பு இயேசுவே, உம் அன்பில் என்றும் நாங்கள் நிலைத்திருக்க உம் அருளால் காத்துக் கொள்ள ஒப்புரவு அருட்சாதனத்தை கொடுத்து எங்களை வழிநடத்தி வருவதற்காக இயேசுவே உமக்கு நன்றி கூறுகிறோம்.

**நற்செய்தி:-**

கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்கு குத்தி ஊடுருவிகிறது உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கி பார்க்கிறது. இப்பண்புகளை தன்னுள் கொண்ட இறைவார்த்தைக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**நற்செய்தி வாசகம்:** லூக்கா10: 25-36

**நற்செய்தி விளக்கம்:-**

நல்ல சமாரியன் தனது பயணத்தில் அசௌகரியத்தை விரும்பி ஏற்றுக் கொண்டான்.

தன்னிடம் இருந்த திராட்சை ரசம், மது, பணம் போன்றவற்றை இழக்க தயாரானான். தனது நேரத்தை இழக்க துணிந்தான். இந்த மூன்று நிலையான இழப்புகளை பிறருதவி பணிகளில் நாம் விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசு தனது விண்ணக மாண்பிலிருந்து இறங்கி, பாவத்தில் அடிபட்டு கிடந்த நம்மை மீட்டு, மீட்புக்குள் அழைத்து செல்லும் ஆன்மீக பாடம் இந்த சமாரியனின் செயல்களில் மிளிர்கிறது. அந்த நல்ல சமாரியின் பாதையில் பயணம் செய்ய தயாராக வேண்டும்.

உதவிக்கரம் நீட்ட வந்தபோது சமாரியன் வேறு எதையும் யோசிக்கவில்லை. அடிபட்டு கிடந்தவனுடைய மதம், இனம், குலம், கோத்திரம் எதுவுமே அவனுடைய மனதில் எழவில்லை. தன்னைப்போல அவனும் ஒரு மனிதன் என்னும் சிந்தனையே அவனிடம் இருந்தது. அதுவே மனிதநேயப் பணிகளின் முக்கியமான தேவை.

பெத்லகேம் முதல் கல்வாரி வரை என்பது நமது வாழ்க்கையின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பயணம் எனலாம். அதில் நாம் சந்திக்கும் நபர்கள் அதிகம். அவர்களுக்கு உதவும் மனம் நமக்கு வேண்டும். உதவி என்பது ஆறுதல், பொருளாதாரம், நேரம் என எதுவாகவும் இருக்கலாம். அதில் நாம் எப்படி செயல்படுகிறோம் என்பதை உணர்ந்து மனிதநேயத்தின் சாட்சிகளாக வாழ வேண்டி தொடர்ந்து ஜெபிப்போம்.

**பாடல்:-**

மனித மலர்ந்திட வேண்டும்...

**மன்றாட்டுகள்:-**

1. நீதியின் தெய்வமே எம் இறைவா எம் நாட்டை வழிநடத்தும் நாட்டுத் தலைவர்களை உம் பாதம் சமர்ப்பிக்கிறோம். இவர்கள் நாட்டு மக்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, மருத்துவநலன் ஆகியவற்றில் கவனம் செலுத்தி தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடன் உழைத்திட தேவையான உள்ளத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாக்கும் எம் தெய்வமே இறைவா! இன்றைய நவீன காலத்தில் உலகில் ஏற்படும் நவீன மாற்றத்திற்கு தங்களையே இழந்து கலாச்சார சீர்கேடுகள் சமூகத்திற்கு எதிரான தீய சிந்தனைகள் இளமையில் இறை பிரசன்னத்தை உணராமல் எதிர்கால வாழ்வை இழந்த எம் இளையோர், சிறியோர் ஆகிய அனைவரும் கிறிஸ்தவ வாழ்வின் நெறிகளைப் பின்பற்றி வாழ வரமருள வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கள் அடைக்கலமும், பாதுகாப்பும் ஆன எம் இறைவா! பேரிடர்கள் இயற்கை சீற்றத்தால் அவதிப்படும் மக்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு உதவி கரம் நீட்டும் தன்னார்வத் தொண்டர்கள் சிறப்பாகச் செயல்படவும் தேவையான ஞானத்தையும், மன உறுதியையும், உடல் வலிமையும், விவேகத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆறுதல் தெய்வமே எம் இறைவா! கைவிடப்பட்டோர், அனாதைகள், முதியோர் இல்லத்தில் உள்ள அனைவருக்காகவும் சிறப்பாக ஜெபிக்கிறோம் அவர்கள் தனிமையை உணரும்போது அவர்களுக்கு நீரே பக்கபலமாக இருந்து உமது உடனிருப்பை கொடுத்து ஒவ்வொரு நாளும் அவர்களை பாதுகாத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**முடிவு செபம்:-**

இந்த ஒரு மணி நேர ஆராதனையில் மனிதநேயம் நம் வாழ்வில் எப்படி செயல்பட வேண்டும் என்று தியானித்தோம். அவரது எடுத்துக்காட்டை பின்பற்றி, நாம் அன்பையும் இரக்கத்தையும் எந்த ஒரு வேறுபாடு இல்லாமல் அனைவருடனும் பகிர்ந்து உம் அன்பில் நாளும் நாங்கள் சிறந்து விளங்க எங்களை சிறந்த கருவியாய் பயன்படுத்த வேண்டும் என்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.ஆமென்.



## 42. உடன்பயணிக்கும் உன்னதரை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்: யோசனையில் பெரியவரே...**

ஒன்றுமில்லாமையிலிருந்து எங்களைப் படைத்து,
பாதுகாத்து, இந்நொடிப்பொழுதுவரையிலும் எம்மை வழிநடத்தி வரும் பரம்பொருளே எம் இறைவா! வெண்ணிற அப்பவடிவில் உம்தெய்வீக பிரசன்னத்தை பொழிந்து, உம் அருளை எம்மவர்க்கு அளிக்க எமக்காக வாஞ்சையோடு
காத்திருக்கும் மூவொரு இறைவா! உம் அருளுக்காக நன்றிகூறி, உமது அருளில் இணைந்து மகிழ உம் ஆசி வேண்டி எங்களை உம்பாதம் அர்ப்பணிக்கின்றோம். உம்மோடு ஒன்றித்திருக்க, எம்மை உடனிருந்து வழிநடத்தும் இறைவா!

**புகழ்ச்சி**

போற்றுதலுக்கும், புகழுக்குமுரிய நம் ஆண்டவர், மகிமையும் மகத்துவமும் நிறைந்தவர். படைத்தவரே தம் படைப்பிற்காக உயிரை கொடுத்த உன்னத தெய்வம் இதோ நம்முன் மேன்மைமிக்க அவரின் பிரசன்னத்தில் அமர்ந்திருக்கும் நாம், நமது புகழ்ச்சிகளையும், ஆராதனைகளையும் ஏறெடுப்போமா?

அகரமும் னகரமும், தொடக்கமும் முடிவுமான இறைவனை விண்ணகத்தில் தூதர்கள் தூயவர், தூயவர் என்று எந்நேரமும் புகழ்கின்றனர். அவர்களோடு சேர்ந்து நாமும் ஆண்டவரைப் புகழ்ந்துப் பாடுவோம்.

**நன்றி**

உடன்பயணிக்கும் உன்னத ஆண்டவரின் வல்லமையை உணர்ந்து வாழ்க்கை பாதையில் நம்மை வழிநடத்தி வந்த தருணங்களை நினைத்து நன்றி செலுத்துவோம். ஒவ்வொரு நன்றி மன்றாட்டுக்கு பின்பும் நமது பதில்,

**பதில்:** மூவொரு இறைவா நன்றி.

- உமது உயிர்மூச்சை கொடுத்து எம்மை படைத்தமைக்கு....
- எந்த உடல் குறைவுமின்றி இவ்வுலகை காணச்செய்தமைக்கு....
- நல்ல பெற்றோரை தந்தமைக்கு மூவொரு இறைவா நன்றி.

  அன்பான உடன்பிறப்புகளை கொடுத்தமைக்காக...
- நல்ல குடும்ப சூழலை அமைத்து தந்தமைக்காக....
- பாசமான சொந்தங்களால் எம்மை வளர்த்தமைக்கு...
- பல்வேறு அனுபங்களால் எம்மை செதுக்கியதற்கு...
- சிறந்த ஆசான்களால் கல்வி அறிவை புகட்டியமைக்காக...
- இன்றுவரை என்னுடன் உடன்பயணித்த நல்ல உள்ளங்களுக்காய்....
- பல திறமைகளை தந்தமைக்கு...
- அனைத்து சூழ்நிலைகளிலும் என்னோடு இருப்பதற்காய்...

**மன்னிப்பு:**

கடல்தொடும் ஆறுகள் கலங்குவதில்லை தரைதொடும் மழைத்துளி அழுவதில்லை புதைந்திடும் விதைகள் புலம்புவதில்லை இவையாவும் புதிதாய், மாற்றத்தை அளித்து, பிறர் மகிழ தன்னையே இழக்கின்றன. இவைதான் இயற்கை யின் நியதி! ஆம், நாமும் இயேசுவுக்காய், இயேசுவோடு, இயேசுவு க்குள் இருக்க, பயணிக்க அழைக்கப்பட்டவர்கள், நம்மோடு உடன் பயணிக்கும் வல்லமைமிக்க நம் இறைவனின் உடனிருப்பை உணர்ந்த தருணங்கள் உண்டா? சிந்திப்போம்.

இயேசுவுடன் மூன்று ஆண்டுகள் வாழ்ந்து, உண்டு, மகிழ்ந்து, உறவாடி, உரையாடிய சீடர்கள் இயேசு தங்களை விட்டுச் சென்றதும் அவரவர் குலத்தொழிலைச் செய்ய மீண்டும் பேதுருவின் தலைமையில் செல்கின்றனர். இயேசு வழிபோக்கனைப் போல் எம்மாவுஸ் சீடர்களுடன் மீண்டும் உடன்பயணிக்கிறார். அவரின் உடனிருப்பை உணராத சீடர்கள் அவரை யாரென்று கண்டுணர முடியவில்லை. நாமும் பல நேரங்களின் இறை அன்பை, உடனிருப்பை உணராமல் வாழ்ந்திருக்கின்றோம். அவரை அனுபவிக்க நம் இதயத்தை கடினமாக வைத்துக் கொண்ட தருணங்கள், ஆர்வமற்ற நேரங்கள், ஈடுபாடற்றநிலை இவைகளை நினைவுகூர்ந்து இறைபிரசன்னத்தில் நம்மையே தாழ்த்தி, மனம்வருந்துவோம். தடைகளை அகற்றி இறையருளால் நம்மனதை நிரப்புவோம்.

**நற்செய்தி வாசகம்** :

உன்னத தேவனின் உடனிருப்பை உணர்ந்து வாழ. எம்மாவுஸ் சீடர்களை போன்று நம் கண்கள். இதயம் திறக்கபட, மாற்றம் அடைய அழைப்புவிடுக்கும் நற்செய்தி வாசகத்திற்கு நம் செவிகளை திறப்போம்.

**லூக். 24: :13 - 16, 25 - 35**

**சிந்தனை:**

தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்படாத சீடர்கள் அறிவு சார்ந்த எதார்த்தமான எண்ணங்களால் அலைகழிக்கப்பட்டு பயணிக்கிறார்கள். தம்மோடு வாழ்ந்தவர் வியப்புக்குரிய அற்புதங்களை செய்தார். தீடீரென அவமானப்படுத்தப்பட்டு இறந்துபோனார். உயிர்ப்பதாக சொன்னார். உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்றார். எப்படி உயிர் பெற்று வர முடியும். கல்லறையில் நாம்தானே அடக்கம் செய்தோம். இவ்வாறாக குழப்ப மனநிலையில் சீடர்கள் தங்களது ஊர்களை நோக்கி பயணம் செய்ய துவங்கினார்கள். பேதுரு சில சீடர்களை கூட்டிக்கொண்டு மறுபடியும் மீன்பிடி தொழிலுக்குச் சென்றார்.

இரண்டு சீடர்கள் எருசலேமிலிருந்து 11 கல் தொலைவிலிருந்த எம்மாவுஸ் எனும் தங்கள் ஊர்நோக்கி பயணமாகிறார்கள். இத்தகைய தளர்ச்சியடைந்த மனநிலைகொண்ட எம்மாவுஸ் சீடர்களுக்கு இயேசு தன்னை வெளிப்படுத்தி, அவர்களின் மனக் கண்களை திறக்கவும், விசுவாச கண்களால் தன்னை காணவும், தனது உடனிருப்பை சீடர்கள் உணரவும், இயேசு தானே விரும்பி அவர்களோடு பயணமாகிறார்.

தம்மைப்பற்றி முன்குறித்த அனைத்தையும் சொல்கிறார். ஆனால் எதுவும் அவர்களைத் தூண்டவில்லை. அந்த அளவுக்கு அவர்களின் மனநிலைபாதிக்கப்பட்டு மனத்தளர்ச்சியுடன் இருக்கின்றனர். ஒரு வேளை உடைப்பட்ட அப்பங்களை தந்திருந்தால் இயேசுவை அனுபவிக்காமலேயே இருந்திருக்கலாம்.

வந்தவரின் நலனில் அக்கறை கொண்டு தாராள மனதுடன் தங்களிடம் உள்ள அப்பங்களை பகிர்ந்தளித்தனர். அந்த அப்பத்தை இயேசு பிட்டு அவர்களுக்கு தருகிறார். அப்பம் உடைத்ததும் அவர்களின் மனக்கண்கள் திறந்தன. புதிய ஆற்றலை தங்களுக்குள் உணர்ந்தனர். உடனிருக்கும் இயேசுவின் இருப்பை அனுபவித்தனர். தங்களின் இயேசு அனுபவத்தை அறிவிக்க, சாட்சிபகர, எருசலேம் மட்டுமல்ல உலகமெங்கும் சென்று அறிவிக்கும் அளவுக்கு வலிமையை பெற்றிருந்தனர்.

**நமது வாழ்வில்:**

ஒவ்வொரு நாளும் இறைவன், மனிதன் தன்னை அனுபவித்து, மகிழ்ச்சியை தன் சொந்தமாக்கி கொள்ள விரும்புகிறார். மேலும் திருப்பலி வழியாக அவரை அனுபவிக்க அவர்தரும் மகிழ்வையும், சமாதானத்தையும் நாம் பெற்றுக்கொள்ள நற்கருணை வழியாக நம்மைத் தேடி வந்து நம் வாழ்க்கையில் பயணமாகிறார். அதுமட்டுமல்ல, நம் அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள். பணிகள், சந்திக்கும் மனிதர்கள் வழியாகவும், தன் உடனிருப்பை உணர, அனுபவிக்க அழைப்பு விடுக்கிறார்.

இயேசுவை கண்டுகொள்ளும் இந்த அனுபவம் நம்மில் மாற்றங்களை ஏற்படுத்தும். அவரின் உடனிருப்பை, அனுபவத்தை, வழிநடத்துதலை நாம் உணர்ந்து கொள்ள முயற்சிப்போம். அதற்கான மனநிலையை கேட்டு மன்றாடுவோம்.

**மன்றாட்டுக்கள்:**

நம் அன்றாட வாழ்க்கைப் பாதையில் உடன் பயணிக்கும் இறைவனிடம் நம் மன்றாட்டுக்களை ஏறெடுப்போம்.

அமைதியான முறையில் ஜெபிப்போம்.

- திருஅவையின் தலைவர்களுக்காக செபிப்போம்..
- நாட்டுத் தலைவர்களுக்காக செபிப்போம்:.
- அன்றாட வாழ்க்கை பாதையில் இயேசுவின் உடனிருப்பை உணர்ந்து கொள்ள செபிப்போம்..
- குடும்பங்களின் மகிழ்ச்சி, சமாதானத்திற்காக செபிப்போம் நேர்மறை எண்ணங்களோடு வாழ செபிப்போம்...
- இளையோர், இளம்பெண்களின் எதரிகால நலனுக்காக செபிப்போம்...
- நோயாளிகளுக்காக செபிப்போம்...
- குழந்தை செல்வம் இல்லாதவர்களுக்காக செபிப்போம்..
- தீயபழக்கங்களுக்கு அடிமையாகி இருப்போருக்காக செபிப்போம்...

- முதியோர் இல்லங்களில் வாழ்வோரின் நலனுக்காக செபிப்போம்...
- ஆதரவற்றோருக்காக செபிப்போம்..
- ஏழை, எளிய மக்களின் நலனுக்காக செபிப்போம்....
- வேலைவாய்ப்பு இல்லாதோருக்காக செபிப்போம்...

**இறுதிசெபம்:**

உடனிருக்கும் தெய்வமே எம் இறைவா! உம்மோடு இருக்க இந்நேரத்தை தந்தமைக்காக நன்றி கூறுகிறோம். உம்மை மற்றவர்களுக்கு எங்கள் வாழ்வால் சான்றுபகர, முதலில் நாங்கள் உம்மை, உமது உடனிருப்பை, அனுபவத்தை உணர அருள்தாரும். உம்மிடமிருந்து பெற்றுகொள்ளும் வலிமையை, ஆற்றலை பிறருக்கு கொடுக்க எங்களைப் பயன்படுத்தும். எங்களது பலவீனத்தில் பலம்தாரும். எங்களின் உறுதியான நம்பிக்கை, அடைக்கலம் நீரே என்பதை ஒவ்வொரு தருணங்களிலும் உணர்ந்து உமக்கு சான்றுபகர்ந்து வாழ ஆற்றலையும் அருளையும் தந்து வழிநடத்திட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## 43. காக்கும் இறைவனை ஆராதிப்போம்

ஆராதனைப் பாடல்- இராஜா உம் பிரசன்னம் போதுமைய்யா

**துவக்க செபம்:**

அன்பான இயேசுவே! உமது ஆவியால் எம்மைத் தூய்மைப்படுத்தும். உமது ஞானத்தால் தொடும். உமது அன்பினை எமது பார்வைக்குத் தாரும் உமது நேர்மையை எமது கரங்களுக்குத் தாரும். உமது தெய்வீகப் பிரசன்னத்தால் எம்மை முழுவதும் நிரப்பும் உம் கண் பார்வைக்குள் என்னை வைத்துக் கொள்ளும்.

**ஆராதனை:**

தி.பா.30: 4-5 ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இறைவனைப் புகழ்ந்து பாடுங்கள். தூயவராம் அவரை நினைத்து நன்றி கூறுங்கள். அவரது சினம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே அவரது கருணையோ வாழ்நாள் முழுதும் நீடிக்கும். எனவே அவரை ஆராதித்துப் புகழ்ந்து நன்றி கூறுவோம்.

**பதில்:** உம்மை ஆராதிக்கின்றோம்.

- என்னைப் படைத்த தந்தையே..
- இஸ்ரவேலின் தந்தையே..
- எல்லா உயிர்களின் தந்தையே...
- இயேசுகிறிஸ்துவின் தந்தையே....
- முதலும் முடிவுமான தந்தையே.....
- விண்ணுக்கும் மண்ணுக்கும் தந்தையே.....
- என் மீது அக்கறை உள்ள தந்தையே.....

- என்றும் எங்களோடு இருக்கும் தந்தையே…..
- நம்பிக்கையால் உலகை நிரப்பும் தந்தையே….
- நொறுங்கிய உள்ளத்தினரை ஊக்குவிக்கும் தந்தையே…

**போற்றுதல்:**

**பதில் : உம்மை வாழ்த்திப் போற்றுகிறோம்.**

- நாசரேத்தூர் இயேசுவே….
- விண்ணிலிருந்து இறங்கி வந்த இயேசுவே…
- நோயுற்றோரை குணப்படுத்தும் இயேசுவே….
- வாழ்வு தரும் உணவான இயேசுவே…..
- எங்களுக்காக பரிந்து பேசும் இயேசுவே……
- கடலையும் காற்றையுமம் அடக்கிய இயேசுவே…..
- நானே ஒளி வழி வாயில் என்ற இயேசுவே…..
- என்னிடம் வருபவனை புறம்பே தள்ள மாட்டேன் என்ற இயேசுவே……
- உலகம் முடியும் வரை எந்நாளும் உன்னோடு இருப்பேன் என்று மொழிந்த இயேசுவே…..

**புகழ்தல்:**

**பதில் : உம்மைப் புகழ்கின்றோம்**

- நிறைவாழ்வு தரும் ஆவியே….
- அசைவாடும் ஆவியே…

- ஆலோசனையின் ஆவியே....
- உண்மையின் ஆவியே....
- அருளின் ஆவியே.....
- வாழ்வு தரும் ஆவியே...
- வல்லமையின் ஆவியே.....
- மீட்பின் ஆவியே....
- ஞானமும் வெளிப்பாடும் அருளும் ஆவியே.....
- தேற்றிடும் ஆவியே....

**நன்றி:**

**பதில்** : இயேசுவே உமக்கு நன்றி.

- எமக்காய் மனிதனாய்ப் பிறந்ததற்காக...
- எமக்கு ஆசி வழங்குவதற்காக...
- நித்திய அருள் வாழ்வைத் தந்ததிற்காக....
- மீட்பைத் தந்ததற்காக...
- அன்பினை பொழிந்து காப்பதற்காக....
- கரம் பிடித்து வழி நடத்துவதற்காக....
- நாளும் துணை வந்து காப்பதற்காக....
- வளமையால் என்னை நிறைத்ததற்காக....
- மகிழ்வோடு வாழச் செய்வதற்காக...
- இன்னலில் எம் அருகிருந்து பாதுகாத்ததற்காக....
- எளியோனைத் தேடி வருவதற்காக...
- அச்சத்தைப் போக்கி மகிழ்ச்சிப்படுத்தியதற்காக....
- கண்ணீரைத் துடைத்து தேற்றியதற்காக......

**மன்னிப்பு:**

**பதில்** : என்னை மன்னியும் இயேசுவே

- செய்நன்றி மறந்ததற்காக...
- வெளி வேடமாய் வாழ்ந்ததற்காக...
- எங்களின் பேராசைக்காக...
- எங்களின் வீண் பெருமைக்காக...
- உமது அன்பினை மறந்து சென்றதற்காக...
- நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களுக்காக....
- மனம் போன போக்கில் வாழ்ந்ததற்காக...
- அமைதி வழியை பின்பற்றாமல் வாழ்ந்ததற்காக...
- தன்னலத்தோடு வாழ்ந்ததற்காக.....

**செபிப்போம் :**

ஆண்டவராகிய இயேசுவே உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். என்னை விடுவித்து மீட்டருளும் என் அடைக்கலப் பாறையும் கோட்டையும் அரணும் நீரே. நீரே என் நம்பிக்கை . இளமை முதல் நீரே என் பாதுகாப்பு. நீரே எனக்கு உறுதியான அடைக்கலம். முதிர்வயதில் என்னைக் காப்பவர் நீரே என்னை விட்டுத் தொலைவில் போய்விடடாதீர் உமது பராமரிப்பில் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளேன. எனக்கு முன் செல்லும் உம் பிரசன்னம் என்னை வழி நடத்திக் காக்கும் உம் தூதர்கள் என்னை சூழ்ந்திருப்பதால் எதற்கும் அஞ்சேன்.

**நற்செய்தி வாசகம் (மத் : 6 : 25-46)**

வானத்துப் பறவைகள் வயல்வெளி மலர்கள் சாலமோன் முதலாய் உடுத்தி இராத அவ்வளவு அழகாக உடுத்தி பராமரிக்கும் பாதுகாக்கும் இறைவன் என்னை எப்படியெல்லாம் உடுத்தி போர்த்திப் பாதுகாப்பீர் என நான் ஆழமாய் நம்பி உம்மை போற்றி புகழ்ந்து நன்றி புகழ் சாற்றுகிறோம். தங்கள் ஆடைகளைத் துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள் பேறுபெற்றவர்கள்

**(தி.வெ.பாடு :22:14)**

இயேசுவே எம் இறைவா உம்மையே எமக்கு வழங்கி பாதுகாக்கின்றீரே எம்மை முழுவதும் அர்ப்பணிக்கிறோம். எம் வாழ்வை முழுதும் எடுத்துக்கொள்ளும். எம் வாழ்வு உமக்கு ஒரு புரட்சி பாடலாய் அமையட்டும். ஆண்டவரே எம் அறிவாற்றலை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறோம். உம்மை அறிந்து கொள்ள எங்களுக்கு கிருபை தாரும். எம் நினைவாற்றலை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். நீர் எமக்குக் காட்டிய இரக்கங்களின் நினைவுகளால் எம்மை நிரப்பும்.

ஆண்டவரே எம் விருப்பத்தினை அல்ல மாறாக உமது விருப்பமே எம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் நிறைவேறட்டும் என்று துணிவோடு வாழ அருள் தாரும்.

**பாடல்: இயேசுவே என்னிடம் பேசுவாயா**

**மன்றாட்டு:**

**பதில்** : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. நமது திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ்காகவும், பேராயர்கள், ஆயர்கள் அருள்பணியாளர்களுக்காகவும், இருபால் துறவிகளுக்காகவும்
 மன்றாடுவோம். இறைமக்களை இறையாட்சி

பணியில் இணைந்து செயலாற்ற உருவாக்கும் நற்கருவிகளாய் செயல்பட வரம்பொழிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நாட்டுத் தலைவர்கள் தன்னலம் துறந்து மக்கள் நலனில் அக்கறை கொள்ளவும் நாட்டில் வன்முறை ஒழிந்து சமாதான ஒற்றுமை நிலவவும் பசி பட்டினி வன்முறை லஞ்சம் ஒழிக்கப்பட்டு நல்வாழ்வு மலர உதவும் கரங்களாக உழைக்கும் நல் மனம் பெற அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மறை மாவட்ட பங்குதலங்கள் பங்குப் பணியாளர்கள் அன்பீய குழுக்கள் பக்த சபைகள் இறைஞர் நற்பணிமன்றங்கள் பீடச்சிறார்கள் இயேசுவின் கண்மணிகள் மறைக்கல்வி நற்செய்திமன்றங்கள் முழு ஆர்வத்தோடு சிறப்பான பணியாற்ற அருள்புரிய வரம் அருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அனைத்து நிறுவனங்களிலும் பணி புரியும் ஆசிரியப்பெருமக்கள், பயிலும் மாணவச் செல்வங்கள், அவர்கள் பெற்றோர்கள் பள்ளியில் உடன் உழைக்கும் உழைப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் என அனைவரும் ஒன்றிணைந்து செயல்படும் கூட்டு முயற்சியினால் மாணவச் சமுதாயம் வாழ்க்கையில் முன்னேற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், புலம் பெயர்ந்தோர், ஆதரவற்ற முதியோர் அனைவரும் அடிப்படை தேவைகள் பெற்று உடல் உள்ள

ஆன்ம நலத்தோடு வாழ அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றிப்பாடல்:** நன்றி சொல்லாமல்

**இறுதிசெபம்:**

எங்கள் மீது வைத்த அளவில்லா அன்பின் மிகுதியினால் எங்களுக்காக இரவு பகலாய் நற்கருணையில் மறைந்து வாழும் எங்கள் இறைவா நாங்கள் கரம் விரித்து உம்முன் மண்டியிட்டு மன்றாடும் எங்கள் கரங்களில் அருள் ஆசீர் வழிந்தோடச் செய்ய இறைவா உம்மைத் தாழ்மையாய் மன்றாடுகின்றோம் எங்கள் செபம் கேட்ட அன்பு தந்தையே - ஆமென்.



## 44. பாதுகாப்பின் பரமனை ஆராதிப்போம்

**ஆராதனைப் பாடல்:**

**போற்றி:**

**பதில்: நற்கருணைநாதரே போற்றிப் போற்றி**

- உன் வாழ்நாள் அனைத்தும் நீ பாதுகாப்புடன் இருப்பாய் என்ற வாக்குத் தந்தவரே போற்றி
- இஸ்ரேல் பாதுகாப்புடன் வாழும் என்று மொழிந்தவரே போற்றி
- வழியில் உன்னைப் பாதுகாக்கவும், நான் ஏற்பாடு செய்துள்ள இடத்தில் உன்னைக் கொண்டு சேர்க்கவும், இதோ நான் உனக்கு முன் ஒரு தூதரை அனுப்புகிறேன் என்று சொல்லி நித்தமும் வழிநடத்தி வருகிறவரே போற்றி போற்றி

- தாவீதின் பொருட்டு சாலமோனைப் பாதுகாப்புடன் வாழ வைத்தவரே போற்றி
- உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் என்றவரே போற்றி

**மன்னிப்பு:**

ஆண்டவரின் இரக்கம் எத்துணைப் பெரிது! அவரிடம் மனந்திரும்புவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துனை மேலானது! ஆண்டவரின் பரிவு எல்லையற்றது - எனவே நம் மாபெரும் இரக்கத்தின் ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்போம்.

**பதில்: என்னை மன்னியும் (2)**

- என்னைப் பாதுகாக்கும் கேடயமே இறைவா! என் துன்ப நேரத்தில் உம்மிடம் ஆறுதல் தேடாமல், மனித உறவுகளை நம்பிய தருணங்கள்காக மனம் வருந்துகிறேன்.
- என் சோதனை காலத்தில் நீர் என்னோடு இருக்கிறீர் என்பதை மறந்து, தனிமையில் வாடியதற்காய் மனம் வருந்துகிறேன் என்னை மன்னியும்.
- எனது திறமைகள், ஆற்றல்கள், பணம், பட்டம், பதவி இவைகளே என்னை மேன்மையாய் வைத்திருக்கிறது என நம்பி இவற்றை எமக்கு கொடையாகத் தந்த உம்மை மறந்து உலகப் போக்கிலான வாழ்வு வாழ்ந்ததற்காக மனம் வருந்துகிறேன் என்னை மன்னியும்.
- எம்மைப் பாதுகாத்து வளர்க்க நீ எமக்குத் தந்த எம் தாய், தந்தையரை மதிக்காமலும், அவர்களை முதிர்

வயதில் பாதுகாக்காமலும் போனதற்காய் மனம் வருந்துகிறேன் என்னை மன்னியும்.

- எனது மிகப் பெரும் பாதுகாப்பும் அரணுமான நற்கருணை ஆண்டவரிடம் நாள்தோறும் அமர்ந்து ஜெபிக்க மறந்த நேரங்களுக்காக மனம் வருந்துகிறேன் என்னை மன்னியும்.

**இறைவார்த்தை:**

சீராக்கின் ஞானம்: 34:13 -17

**மௌனம்:** சிலநிமிடங்கள் அமைதியில் வாசிக்கப்பட்ட இறைவனின் வார்த்தையை தியானிக்வும்.

**சிந்தனை:**

பார்த்துப் பார்த்து பக்குவமாய் நம்மை உருவாக்கிய இறைவன் நொடிப் பொழுதும் நம்மை மறப்பதும் இல்லை. பிரிந்து செல்வதும் இல்லை. அதிலும் குறிப்பாய் ஆண்டவருக்கு அஞ்சுபவர்கள், ஆண்டவரை நம்புவர்கள் மேல் ஆண்டவரின் கண்கள் உள்ளது. அவரே அவர்களுக்கு உறுதியான பாதுகாப்பு.

"உன்னைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறார்" என்கிறது இறைவார்த்தை.

**வலிமை மிக்க துணையான கடவுள்:**

தாவீதின் மூலம் கூழாங்கல்லின் வழியாய் இஸ்ரேல் மக்களை கோலியாத்திடமிருந்து காத்த வலிமை மிக்க துணையானார்.

**வெப்பத்தில் மறைவிடம் நண்பகல் வெயிலில் நிழல் - கடவுள்:**

சீனாய் பாலைவனத்தில் பகலில் மேகத் தூனாய், இரவில் நெருப்புத் தூணாய் இருந்து

அவர்களது 40 ஆண்டுகாலப் பயணத்தை பாதுகாப்பாய் மாற்றியவர்.

**தடுமாற்றத்தில் ஊன்றுகோல்.... கடவுள்:**

தாவீது ஊனியல்பின் இச்சையில் தடுமாற்றம் அடைந்த போது, நாத்தான் இறைவாக்கினர் வழியாக தவறை சுட்டிக்காட்டி, அவரை மீண்டுமாய் தலைநிமிரச் செய்தவர் கடவுள்.

**வீழ்ச்சியில் அரண் - கடவுள்:**

கடவுளின் மக்கள் எப்பொழுதெல்லாம் வீழ்ச்சியுற்றார்களோ அப்பொழுதெல்லாம் கோட்டை அரணாய் இருந்து பாதுகாப்புத் தருகிறார்.

இப்படி நம்மை நம் தாயினும் மேலாய் அன்பு செய்து அரவணைத்துக் காத்து வரும் இறைவனை நம்புவோம்.

**தியானப் பாடல்:** நீரே என் புகலிடம்...

இறைவன் நமக்கென்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். நம் இறைவன் ஒரு இமைப்பொழுதுகூட தன் மக்களை விட்டுத் தனது பார்வையை விலக்கிக் கொள்வதில்லை.

நம் வாழ்வில் எத்தனை தான் துன்பங்கள் வந்தாலும் சோதனைகள் நம்மைப் புடமிட்டாலும் நம்மை விட்டு அகலாமல் தனது இறக்கைகளுக்குள்ளாக வைத்து, நம்மைக் கரம் பிடித்து வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு, நமது விண்ணப்பங்களை இறைவனிடம் சமர்ப்பிப்போம்.

**மன்றாட்டு:**

**பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

1. அரவணைக்கும் இறைவா! ஆதரவற்ற குழந்தைகளுக்கும், குடும்பத்தில் இருந்தாலும் அன்பு கிடைக்காமல் அன்புக்காய் ஏங்கும் குழந்தைகளுக்கும் உண்மையான அன்பு கிடைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வாழ்வளிக்கும் இறைவா! ஷஇளமைப் பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே, மனம் விரும்புவதைச் செய்வதற்கே' - என மனம் போன போக்கில் தாறுமாறாக வாழும் இளைஞர் இளம்பெண்கள் கலாச்சார சீரழிவால் தங்கள் வாழ்வைப் பாழாக்காமல் படைத்த உம்மை நினைத்து நல்வாழ்வு வாழ வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. இரக்கத்தின் ஆண்டவரே, எம் பிள்ளைகளில் வேலை வாய்ப்பிற்காக காத்திருப்போருக்கு நல்ல வேலையும், புதிய தொழில் முயற்சிகளைச் செய்பவர்களுக்கு நல்லாசீரையும் பொழிந்து வளமான வாழ்வு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஞானத்தின் ஊற்றாம் இறைவா! பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கும் எம் பிள்ளைகளை அபரிமிதமான ஞானத்தால் நிரப்பி அவர்கள் உலக அறிவிலும், இறை ஞானத்திலும் சிறந்து விளங்கி எதிர்கால வாழ்வை சிறப்பாய் அமைத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. புகலிடமும் தஞ்சமுமான இறைவா! அயல்நாடுகளில் படிக்கும் மாணவ மாணவிகளையும், பணி புரியும் சகோதர சகோதரிகளையும், உமது பேரன்பால் காத்து வழிநடத்தவும், அவர்களின் தனிமையில் நீரே தோழராகவும், உறவாகவும் இருந்து ஆறுதல் அளித்திடவும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. கனிவும் மனத்தாழ்மையும் உடைய இறைவா! பல்வேறு இயற்கைச் சீற்றங்கள், போர்கள், கலவரங்கள் இவற்றில் உறவுகளை இழந்து தவிக்கும் சகோதர சகோதரிகளுக்கு, பல நல்ல உதவிக்கரங்கள் மூலம் உமது உடனிருப்பையும் பாதுகாப்பையும் தந்து மறுவாழ்வு பெற்று வாழ்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மௌனமாக நமது தனிப்பட்ட தேவைகளுக்காய் இறைவனிடம் செபிப்போம்.

**இறுதிசெபம்:**

எம் புகலிடமும் கோட்டையுமான இறைவா! புனிதமிகு நற்கருணை வழியாய் எந்நாளும் எம்முடனிருந்து, எமது பணி வாழ்வின் பரபரப்பில் நாங்கள் உம்மை நினைக்க மறந்தாலும் நீர் எம்மை மறவாமல் நினைப்பதற்காய் நன்றி. இம்மட்டும் எம்மைப் பலப்படுத்தி பாதுகாத்து வழிநடத்தி வருபவரே நன்றி. இனி தொடரும் நாளெல்லாம் எம் கரம் பற்றிக்கொண்டு, உம்மோடு உடன் பயணிக்க

வேண்டுகிறோம். உமது பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து எம் பணிகளைத் தொடர உமது அருள் எம்மைப் புடைசூழ்ந்து காத்துக் கொள்ள வேண்டுமாய் தாழ்த்தி ஒப்புக்கொடுக்கிறோம். எம் செபம் கேளும் ஜீவனுள்ள நல்ல பிதாவே ஆமென்.



## 45. இரவேல் அடிகளார் வழி இறைவனை ஆராதிப்போம்

**துவக்கப் பாடல்**

**புகழ்ச்சி**

**பதில்:** ஆண்டவரே உம்மைப், போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம்.

- நற்கருணை ஆண்டவர் மேல், இறக்கும் தருணம் வரை தீராத அன்பு கொண்டு அவரை நோக்கியே ஏங்கிய ரவேல் தந்தைக்காக…
- அமைதி ஏற்படுத்தும் பணிக்கு உகந்தவர் இவர்தான் என சுட்டிக்காட்டும் வண்ணம், பிரச்சனை உள்ள பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு

அங்கு அமைதியை ஏற்படுத்திய ரவேல் தந்தைக்காக….

- நோயின் கொடுமையினை பொறுமையாக தாங்கி வாழ்ந்து இறுதி மூச்சு வரை உம்மை மட்டுமே புகழ்ந்ததற்காக ரவேல் தந்தைக்காக ….
- புனிதத்தில் சிறந்த வாழ்க்கையைத் தேர்ந்து, இறுதிவரை அதில் நிலைத்திருந்து, இன்று வரை எங்கள் நினைவில் வாழும் ரவேல் தந்தைக்காக….
- சமூகத்தின் அவலங்களைக் களைய மனம் கொண்டு பெண்கல்வி, சமத்துவம், சகோரத்துவத்தின் பாதையில் மக்களை அழைத்துச் சென்று மனிதநேயம் வளர்த்திட்ட ரவேல் தந்தைக்காக….

**முன்னுரை**

தந்தை லூயிஸ் இரவேல் அவர்கள் இறைவன்மேல் வைத்த ஆழமான நம்பிக்கை அவரை இறைமனிதராக உருவாக்கியது. நற்கருணை ஆண்டவர் மீது அவர் அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்தார். மணிக்கணக்கில் நற்கருணை நாதருக்கு முன்பாக முழந்தாள் படியிட்டு செபிப்பார். மனக்குழப்பமும், துயரமும், தனிமையும் இவரை வாட்டிய போதெல்லாம் திவ்ய நற்கருணையின் பிரசன்னத்தை மாபெரும் அருட்கொடையாக பயன்படுத்திக் கொண்டார். தமது பணித்தளங்களில் சாதிய பிரச்சனைகள், மற்றும் பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும்போது, ஆண்டவரின் ஆவியின் வல்லமையை வெளிப்படுத்துக்கின்ற மனிதராக காணப்பட்டார். பொறுமை,

சமிப்புத்தன்மை, இறைபத்தி, உதவும் நற்குணம், சமூகத் தீமைகளை எதிர்த்துப் போரிடுதல் போன்ற உயர்ந்த பண்புகளை இவரில் கண்ட மக்கள் தந்தையை ஒரு புனிதராகவே பாவித்தனர்.

**மன்னிப்பு**

**பதில்:** எம்மை மன்னியும் தெய்வமே

- துன்ப துயர நேரங்களில் நற்கருணை நாதரின் துணையை நாடாததற்காக....
- பிரச்சனைகள் உள்ள இடத்தில் அதனை அமைதிப்படுத்தும் வகையறியாது செயல்பட்ட நேரங்களுக்காக....
- சமூகத்தின் அவலங்களைக் கண்டும் காணாமல் வாழ்ந்ததற்காக....
- நோயில், வேதனையில் உம்மை புறக்கணித்து உமக்கு எதிராக செயல்பட்டதற்காக....
- இத்துறவு வாழ்வில் பாவத்தைக் களைந்து புனிதத்தை நோக்கி பயணிக்காத நேரங்களுக்காக....

**வாசகம்:**

தந்தை ரவேல் சாதீயத்தால் பிளவுபட்டு ஏற்றத்தாழ்வுகளுடன் வாழ்ந்த, சமுதாயத்தை மாற்றி பாகுபாடற்ற சமுதாயத்தை கட்டியெழுப்ப விரும்பினார். தாழ்த்தப்பட்ட ஒருவரை குதிரை காப்பாளராக பணியமர்த்திய, தந்தை ஜெலீஸ் அவர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தபோது, மக்களிடம் சென்று இணக்கமாக கலந்துரையாடி, அவர்களின் தவறுகளை

உணரச்செய்து மனம் வருந்தி மன்னிப்புக் கேட்க வைத்தார்.

பாலக்காட்டில் 1860ல் சாதிப்பிரச்சனையால் பங்குப் பணியாளரை மக்கள் எதிர்த்தபோது, ஆயர் கோதல், தந்தை ரவேலை பாலக்காட்டிற்கு அனுப்பினார். அங்கு அவர் அமைதி பேச்சுவார்த்தை நடத்தி கிறிஸ்தவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தினார்.

அறியாமை, எதிர்சாட்சியவாழ்வு, நற்செய்தி பண்புகளைப் புறந்தள்ளியவை போன்ற மக்களின் குறைகளை ஒரு இறைவாக்கினரைப்போல் சுட்டிக்காட்டி பாலக்காடு மக்களைப் பண்படுத்தினார்.

அத்திக்கோட்டில் திருஅவைக்கு எதிராக செயல்பட்டவர்களை மீண்டுமாக கத்தோலிக்க விசுவாசத்தில் ஆழப்படுத்தினார் தந்தை ரவேல் என்று, மேதகு ஆயர் தெப்போமியர் குறிப்பிட்டுள்ளார்.

கருமத்தம்பட்டியில் ஆதிக்க சாதியினருக்கு எதிராக அவர் நடத்திய அமைதிவழி அறப்போராட்டம் என்றும் நினைவில் கொள்ள வேண்டியது என, ஆயர் மரியன் தே பிரசியாக் மற்றும் ஆயர் கிளமெண்ட் பெர்னார்து பதிவு செய்துள்ளனர். பெண் சிசுக் கொலை, சிறுவர் திருமணம், வரதட்சணை, கைம்பெண்களுக்கு மறுமணம் மறுப்பு போன்ற சமூக அவலங்களைக் கண்ணுற்ற தந்தை ரவேல், பெண்களுக்கு விடுதலையளிக்க கல்வி ஒன்றே தீர்வு என முடிவு செய்து, பெண் கல்விக் கூடங்கள், மாணவியர் விடுதிகள், பள்ளபாளையம், குன்னூர் ஆகிய பகுதிகளில் 1874, 1875ல் அமைத்தார். பெண்களுக்கான

கருணை இல்லத்தை 1859ல் கருமத்தம்பட்டியில் அமைத்து அவர்கள் வாழ்வை உயர்த்துவதில் அக்கறை செலுத்தினார்.

பல்வேறு எதிர்ப்புகளையும் கடந்து தாழ்த்தப்பட்ட மக்களை தமது உடன் பிறந்தவர்களாகப் பாவித்து தம்முடனே தங்க வைத்தார். அவர்கள் சமைத்த உணவை உண்டு, அவர்களின் மாண்பை மற்ற சாதிய மக்களுக்கும் புரிய வைத்தார்.

அருள் தந்தை ராண்டி, தந்தை ரவேல் பற்றி குறிப்பிடுகின்றபோது அவர் அன்பும், எளிமையும், உற்சாகமும் உடையவராக இருந்தார். அவர் இருக்குமிடத்தில் மகிழ்ச்சியும், கலகலப்பும் இருக்கும் என்றார்.

தன் நண்பர் ஆல்பிரண்ட் அவர்களுக்கு 1846 ஜீலை 16ல் எழுதிய கடிதத்தில், “நான் எனக்கென்று தனிப்பட்ட விருப்பமோ வெறுப்பபோ இன்றி நிறைவுடன் இருக்கிறேன்” என எழுதியுள்ளார்.

**மன்றாட்டு:**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

**1.**நற்கருணை நாதரின் வல்லமையை உணர்ந்த நாங்கள் அவரது அன்பில் நிலைத்திருக்கவும் அவரோடு ஒன்றித்து வாழவும் வரம் தர ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**2.**பிரச்சனைகளாக நாங்கள் இல்லாமல் தந்தை ரவேல் போன்று அமைதியின் தூதுவர்களாக வாழ வரம் தர ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்

3.சமூகத்தோடும் மக்களோடும் இணைந்து வாழ்ந்து சமூக பிரச்சனைகளைக் களைய உதவும் சமூக போராளிகளாக தந்தை ரவேல் போன்று வாழ வரம் தர ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4.வியாதியின் வேளைகளில் பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் அதனை ஏற்று தாங்கி இறைவனின் பாடுகளில் பங்கெடுக்க ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5.தந்தை ரவேல் அருளாளராக புனிதராக படிப்படியாக உயர்வதைப் போன்று நாங்களும் அருள்வாழ்வில் முன்னேற்றமடைய ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றிப் பாடல்:**

**செபிப்போமாக!**

இறைவா! தந்தை ரவேல் ஒரு சகாப்தம். இறைவனை அறிவிக்க கடல்கடந்து இந்திய மண்ணுக்கு வந்த தேவபுறா! கடவுள் தந்த மண்ணை தனது பணித்தளமாக மனமுவந்து ஏற்று, அதன் மொழி கலாச்சாரங்களைத் தனதாக்கி, தன் நற்பண்புகளால் மறைபணி செய்த சிறந்த மறைதூதுபணியாளர்.

தனது இன்னுயிரை இந்திய மண்ணில் விட்டு விண்ணகம் அடைந்த அவர்புகழ் இம்மண்ணில் நிலைக்கச் செய்யும் ஆண்டவரே. -ஆமென்.



## 46. கனிவின் கடவுளை ஆராதிப்போம்

**முன்னுரை:**

இறை இயேசுவில் அன்பு நிறை சகோதரிகளே! இவ்வுலகையும், நம்மையும் படைத்துக் காத்து வழிநடத்திவரும் எல்லாம் வல்ல இறைவன் இரக்கம் நிறைந்தவர். கடவுளின் மறுபெயர் கருணை, இரக்கம். இத்தகைய இரக்கம் நிறைந்த இறைவன், நம்மீது தம் அளவில்லாத இரக்கத்தை நாளும் பொழிந்து, பாதுகாத்து வருகின்றார். கடவுளின் இரக்கத்தை தம் வாழ்வில் அனுபவிக்காத மனிதர்களோ, படைப்புக்களோ இவ்வுலகில் இருக்க முடியாது. ஏன் நாம் இந்த நொடி உயிரோடு இருப்பதே இறைவனின் அளவில்லா இரக்கம் தான். இறைவன் நம் நம்பிக்கையின் அடித்தளத்தையும், தூய ஆவியாரின் வல்லமையையும், தந்தையின் இரக்கத்தையும், இயேசுவின் மன்னிப்பையும் கற்றுக்கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கின்றார். எனவே இந்நேரத்தில் நம்மீது தம் அளவில்லா இரக்கத்தைப் பொழிந்து வரும் இறைவனின் திருப்பாதத்தில் அமர்ந்து, அவரைப் போற்றிப், புகழ்ந்து, ஆராதித்து அவரின் அன்பை சுவைப்போம். அவரின் அருளையும் இரக்கத்தையும் பெறுவோம்!

**ஆராதனை:**

- தாயின் கருவில் நாங்கள் உருவாகுமுன்னே
  எங்களை இரக்கத்தோடு நினைவு கூர்ந்த இறைவா உம்மைப் போற்றுகிறோம்!

- இம்மண்ணில் உதித்த நாள் முதல் உம் ஞானத்தால் எம்மை வழிநடத்தி வரும் தூய ஆவியே உம்மைப் போற்றுகிறோம்!
- எங்களுக்கு நல்ல பெற்றோர், உடன் பிறப்புக்கள் மற்றும் உற்றார் உறவினர்களைத் தந்து எங்களைக் காத்து வந்த உம் அன்பிற்காக உம்மைப் புகழ்கின்றோம்!
- எங்கள் குழந்தைப் பருவத்தில், எங்களுக்கு ஞானத்தைத் தந்து, உலகக் கல்வியோடு ஆன்மீகக் கல்வியையும் தந்து ஆசீர்வதித்தமைக்காக உம்மைப் புகழ்கின்றோம்!
- எங்களது இளமைப் பருவத்தில் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து, சரியான பாதையில் எங்களை வழிநடத்தியதற்காக இறைவா உமக்கு நன்றி கூறுகின்றோம்!
- எங்கள் பணிவாழ்விலே எங்களோடு உடன் இருந்து வழிநடத்தியதற்காக இறைவா உமக்கு நன்றி கூறுகின்றோம்!
- எங்கள் இன்பத்திலும், சோதனை நேரங்களிலும் நல் நண்பனாய் உடன் இருப்பதற்காக இறைவா உமக்கு நன்றி கூறுகின்றோம்!

**மன்னிப்பு:**

உண்மையான மனமாற்றம் என்பது செய்த பாவத்தை நினைத்து மனம் வருந்துவது மட்டுமில்லை. இனிமேலும் அந்தப் பாவத்தை செய்வதில்லை என்று உறுதியேற்று நல்வழியில் நடப்பது. தாவீது, இஸ்ரயேலின் அரசராக இருந்த போதிலும், உரியாவின் மனைவி பத்சேபாவோடு பாவம் செய்ததை இறைவாக்கினர் நாத்தான் எடுத்துரைத்தபோது, அதை ஏற்றுக்கொண்டு, மனம் வருந்தி அழுகின்றார். ஆண்டவருடைய மன்னிப்பைக் கேட்கின்றார். அத்தகைய சூழலில் பாடப்பட்டதுதான் திருப்பாடல் 51. தாவீதின் தவற்றை நாத்தான் இறைவாக்கினர் சுட்டிக்காட்டியதும், இரக்கம் நிறைந்த ஆண்டவரிடம் மன்னிப்பு உண்டு என்று தாவீது நொறுங்கிய, குற்றமுணர்ந்த நெஞ்சத்தினராய் ஆண்டவரிடம் மன்னிப்புக் கேட்கின்றார். நம் ஆண்டவராகிய கடவுளும் தம் பேரிரக்கத்தால், அவரை மன்னித்து, புதிய இதயத்தை அவருக்கு அருளி, புதுப்பிக்கும் ஆவியால் அவரை நிரப்புகின்றார். நாமும் மனித பலவீனத்தால், பாவம் செய்திருந்தாலும், அந்த பாவத்தை உணர்ந்தவர்களாய், ஆண்டவரிடம் திரும்பி வந்து, அவரது இரக்கத்தில் நம்பிக்கை வைத்து, மன்னிப்பைக் கேட்கும் போது, நம் கடவுளாகிய ஆண்டவர் தம் பேரிரக்கத்தால் நம்மை மன்னித்து தம் மார்போடு அணைக்க ஆவலோடு காத்திருக்கின்றார். மனம் மாறி அவரிடம் திரும்பிவர நாம் தயாரா?

**வாசகம்: மாற்கு: 5: 21 - 43**

**இறைவனின் இரக்கம் எல்லையற்றது:**

இன்றைய சூழலில் மனித இரக்கம் என்பது சாதி, மதம், இனம் போன்ற எல்லைக்குள் முடங்கிக் கிடக்கின்றது. ஆனால் இறைவனின் இரக்கம் எல்லைகளைக் கடந்தது. எல்லைகளைத் தாண்டி, யாருக்கும் தெரியாமல் தன் ஆடையின் விளிம்பைத் தொட்ட பெரும்பாடுள்ள பெண்ணுக்கு நலமளித்தது. இறந்து போன யாயீருவின் மகளுக்கு உயிர் அளித்தது. இவை இறைமகன் இயேசுவின் எல்லையற்ற இரக்கத்தை சுட்டிக்காட்டுகின்றது. நம் வாழ்விலும் எத்தனையோ தருணங்களில் இறைவன் நம்மீது காட்டிவரும் அளவில்லாத இரக்கத்தை இந்நேரத்தில் நினைத்துப் பார்ப்போம்.

**இறைவனின் இரக்கம் நிபந்தனையற்றது:**

எந்த வித நிபந்தனையுமின்றி நம்மீது தம் அன்பையும் இரக்கத்தையும் பொழிபவர்தான் நம் கடவுள். எனவே தான் இயேசு தீட்டுப்பட்ட பெண்ணுக்கு நலமளிக்கின்றார். ஏன் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை, இனி பாவம் செய்யாதே என்று கூறி, அப்பெண்ணை மன்னித்து அனுப்புகிறார். இது இறைவனின் நிபந்தனையற்ற இரக்கத்தையே வெளிப்படுத்துகின்றது. இறைவன் நம்மீது காட்டிய இரக்கத்தை நாமும் நம்முடன் இருப்பவர்களுடன் பகிர்ந்து கருணையோடு வாழ முயல்வோம்.

**இறைவனின் இரக்கம் தியாகம் நிறைந்தது:**

பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாய்ந்து வருவது போல, தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தை

நோக்கி ஆண்டவரின் அருள் பாய்ந்து வருகின்றது. எனவே நாமும் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு இறைவனின் தியாகம் நிறைந்த இரக்கத்தில் நம்பிக்கை கொள்வோம்.

தந்தையாம் கடவுள் நம்மீது கொண்ட இரக்கத்தினால் தம் ஒரே மகனையே நமக்காக தியாகம் செய்தார். இறைமகன் இயேசுவும் இம்மனுக்குல த்தின் மீது கொண்ட அன்பினாலும் இரக்கத்தினாலும் தன் இன்னுயிரையே சிலுவையில் தியாகம் செய்தார். நாம் அவருக்காக எதை தியாகம் செய்கிறோம்? சிந்திப்போம்!

"நான்" என்ற சுயநலத்தைத் தூக்கி எறிந்து விட்டு, நம்மிடம் இருப்பதை, தேவையில் இருப்போருக்கு இரக்கத்தோடு பகிர்வோம். ஆணவத்தை அகற்றி என் ஆண்டவர்தான் எனக்கு எல்லாம் என அவரைப் பின்பற்றி நடந்து இறைவனின் இரக்கத்தைப் பெறுவோம்.

**மன்றாட்டுக்கள்:**

1. இரக்கத்தோடு எம்மை ஆதரிக்கும் இறைவா! உமது பணியைத் தொடர்ந்தாற்ற திருதந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள். துறவிகள் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். நாங்கள் அனைவரும் இரக்கம் என்னும் மாபெரும் சக்தியை உம்மைப்போல் எங்கள் பணியில், முழுமையாகப் பயன்படுத்தி, நல்ல வழிகாட்டிகளாகத் திகழ்ந்திட வேண்டிய ஆற்றலைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எம் கற்பாறையும், கோட்டையும், அரணுமாகிய இறைவா! எம் முழு மனத்தோடு உம் அணைகடந்த இரக்கத்தின் மீது நம்பிக்கை வைக்கவும், நீர் எங்கள் மீது இரக்கம் காட்டுவதுபோல், நாங்களும் எங்களுடன் இருப்பவர் மீது இரக்கம் காட்டவும் எங்களுக்கு நல் உள்ளத்தைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நீர் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டும் தந்தையே இறைவா! உலகில் உள்ள அனைத்து மக்களுக்காக ஜெபிக்கின்றோம். பல இடங்களில் கடன் பிரச்சனையால் தவிக்கின்ற மக்களை ஆசீர்வதித்து அவர்கள் கடன் சுமையிலிருந்து விடுபட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உங்கள் சகோதர சகோதரிகளுக்கு இரக்கம் காட்டுங்கள் என்ற இறைவா! இவ்வுலகில் உள்ள அனைத்து நோயாளிகள், முதியோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு நாங்கள் இரக்கத்தோடு, எங்களது உடனிருப்பையும், எங்களால் முடிந்த உதவியையும் செய்ய எங்களுக்குத் தேவையான இரக்கம் நிறைந்த இதயத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இறுதி செபம்:**

எங்களை இரக்கத்தோடு நாளும் காத்து வழிநடத்திவரும் எங்கள் அன்பு தெய்வமே, இரக்கமே உருவான உம்மைப் பின்பற்றி வாழ அழைக்கப்பட்டுள்ள நாங்கள். உம்மைப்போல், இரக்கமும் கருணையும் கொண்ட இதயத்தோடு வாழ எங்களுக்குத் தேவையான அருள்தர வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மைப்பார்த்து மன்றாடுகின்றோம். ஆமென்.



## 47. எல்லாமுமான இறைவனை ஆராதிப்போம்

**பாடல்:** கரம் பிடித்து அழைத்தவரே

எங்கள் தாயும் தந்தையுமான இறைவா உம்மை போற்றுகின்றோம். உம்மை துதிக்கின்றோம். உம்மை ஆராதனை செய்கின்றோம். நீர் வல்லவர், நல்லவர், பரிசுத்தர். நீர் மருத்துவர், குணமாக்குபவர், வாழ்வு கொடுப்பவர். ஆண்டவரே இவ்வேளையில் உம்மை போற்றுகின்றோம். உம்மை மகிமைப்படுத்துகிற ஒவ்வொருவரையும் தொட்டு ஆவியின் வல்லமையால் நிரப்பும். கடவுளே - என் கடவுளே என் கூக்குரலைக் கேட்டருளும். என் விண்ணப்பத்திற்கு செவிசாய்த்தருளும் வலிமையான கோட்டை நீரே, அடைக்கலம்

தரும் புகலிடம் நீரே. என் தஞ்சம் நீரே, என் மீட்பரும் நீரே. இயேசுவே எமக்கு உதவி செய்ய விரைந்து வாரும். நம் மத்தியிலே நம் கூக்குரலைக் கேட்பவரும், நமக்கு உதவி செய்பவருமான இயேசு உண்மையிலே பிரசன்னமாய் இருக்கிறார். அவரை ஆராதிப்போம், புகழ்வோம், துதிப்போம். அவரை ஆராதிக்க ஆராதிக்க அவர் நம்மை உயர்த்துவார், திடப்படுத்துவார், புதிய ஆற்றலை, புதிய சக்தியை புதிய இதயத்தை நமக்கு அருளுவார்.

**நன்றி**

**பதில்:** இயேசுவே உமக்கு நன்றி

1.தி.பா.62:5 நெஞ்சே கடவுளுக்காக மௌனமாய் காத்திரு. ஏனெனில் நான் எதிர்பார்க்கும் நலன் வருவது அவரிடமிருந்தே. நாம் அவருக்காக காத்து இருந்தோம் என்றால் என்ன எதிர்பார்த்து நிற்கின்றோமோ அது அவரிடமிருந்து வரும். இதற்காக நாம் இறைவனுக்கு நன்றி கூறுவோம்……

2.தி.பா.62:6

> "உண்மையாகவே, என் கற்பாறையும் மீட்பும் அவரே. எனவே நான் சிறிதும் அசைவுறேன்".

ஆண்டவர் சொல்கிறார் நான் உனக்கு கோட்டையாய் அரணாய் இருக்கிறேன். உன்னை யாரும் அசைக்க முடியாது என்று சொல்லும் இயேசுவை துதித்து நன்றி கூறுவோம்……

இயேசுவை அரணாய் கொண்டிருக்கும் போது எந்த பிரச்சனையும் நம்மை அணுகாது அதற்காக நன்றி கூறுவோம்…..

3.தி.பா62:7

என் மீட்பும் மேன்மையும் கடவுளிடமே இருக்கின்றன என் வலிமை மிகு கற்பாறையும் புகலிடமும் கடவுளே.

எனக்கு மீட்பாக, வலிமையாக, புகலிடமாக, மேன்மையை கொடுக்கக் கூடியவர் ஆண்டவர் அவரைப் போற்றி நன்றி கூறுவோம்....

4.தி.பா.62:8

மக்களே எக்காலத்திலும் அவரையே நம்புங்கள் அவர் முன்னிலையில் உங்கள் உள்ளத்தில் உள்ளதைத் திறந்து கொட்டுங்கள்.

இதயத்தை திறந்து கொட்டினால் எதிர்பார்க்கும் நலன் அசைக்க முடியாத ஆசிர்வாதத்தை நமக்குத் தருவார் அதற்காகப் போற்றி நன்றி கூறுவோம்....

**பாடல்:** நெஞ்சசே நீ ஆண்டவரை வாழ்த்து

**மன்னிப்பு:**

**பதில்:** இயேசுவே என்னை மன்னியும்.

என் இதயம் உனக்காக காத்திருக்கிறது. எனவே அவரிடம் சொல்லுவோம். நாங்கள் பலவீனர்கள் எங்களை கண்ணோக்கிப் பாரும். மகளே கலங்காதே, திகையாதே, வாழ்வு உண்டு, திடம் உண்டு, வாழ்ந்து காட்டு, உன்னைத் தேற்ற, திடப்படுத்த நான் இருக்கிறேன். உன் மனக்காயங்களை ஒப்புக் கொடுத்து செபி.

- ஒரே குழுவாக, குடும்பமாக, நண்பர்களாக உறவை வளர்க்கும்

கருவியாக இல்லாத சூழ்நிலையை நினைத்து மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்....

- உறவோடு வார்த்தைகளைப் பகிர்ந்து கடமையை செய்யாத தருணங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்.....
- பிறருக்கு ஆறுதலாக இருக்கக் கூடிய நான் மனக்கசப்பை கொடுத்த தருணங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்.....
- பிறர் செய்த செயலை பாராட்ட மறந்ததற்காகவும், உற்சாகப்படுத்த மறந்ததற்காகவும் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்.....
- தேவையான நேரத்தில் பிறருக்கு உதவி செய்ய, நன்மை செய்ய தவறியதற்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்.....
- பிறருடைய கடமைகளிலே நாங்கள் தடையாக இருந்ததற்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்.....

**பாடல்:** நீங்க மட்டும் இல்லேனா...

**நற்செய்தி வாசகம்**: லூக். 6:46 – 49

**சிந்தனை:**

யாரின் மீது நம் வாழ்க்கையை கட்டமைத்து இருக்கின்றோம். எதை நம்பி நம் வாழ்க்கை பயணத்தை தொடர்ந்து கொண்டு இருக்கின்றோம். நம் இதயம் யாரை நோக்கி இருக்கின்றது. யார் நம் வாழ்வின்

ஆதாரமாக இருக்கிறார். சில நேரங்களில் நாம் ஆண்டவரை விட்டு பணத்தின் மீது, அதிகாரத்தின் மீது, பதவியின் மீது, மோகம் கொள்வதை பார்க்கின்றோம். நம் அடித்தளம் பணத்தின் மீதோ, சொத்தின் மீதோ, சுகத்தின் மீதோ வைத்து இருக்கிறோம் என்றால் அது மண்மீது கட்டப்பட்டிருக்கும் வீட்டிற்கு ஒப்பாகும். செல்வம் எப்போது அழிந்து போகிறதோ, பதவி எப்போது நம்மை விட்டு போகிறதோ, அதிகாரம், பட்டம், புகழ் எப்போது நம்மை விட்டு போய் விடுகிறதோ அப்போது நாம் கட்டி வைத்து இருக்கிற மண் கோட்டை தகர்ந்து போகிறது, உடைந்து போகிறது. அப்போது நாம் உருகுலைந்து போகிறோம்

நாம் இயேசுவாக மாற நம்மை ஒப்புக் கொடுத்து செபிப்போம் இயேசுவே நமது வாழ்வின் ஒளியும் வழியும் ஜீவனுமாய் இருக்கிறார் என்பதை உணர்வோம்.

**பாடல்:** நீ ஒளியாகும் என் பாதைக்கு விளக்காகும்

**மன்றாட்டு:**

**பதில்:** இயேசுவே குணப்படுத்தும்

இயேசுவே உமது பரிசுத்த வல்லமையோடு எங்கள் விண்ணபத்தை உம் பாதத்தில் வைக்கின்றோம். பலவித நோயினால் க்‘டப்படுகின்ற ஒவ்வொருவரையும் ஒப்புக் கொடுத்து செபிக்கின்றோம், குணமளியும்.

1.கேன்சர் வியாதியால் அவதிப்படுபவர்களுக்கு சுகம் தாரும்..

2.இதய நோயாளிகளுக்கு சுகம் தாரும்..

3. மூளை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகம் தாரும்..

4. சுவாச கோளாறு உள்ளவர்களுக்கு சுகம் தாரும்..

5.சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகம் தாரும்..

6.ர்ஜஏ நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகம் தாரும்..

7.இரத்த சோகை, நரம்பு தளர்ச்சி உள்ளவர்களுக்கு சுகம் தாரும்..

8. தோல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகம் தாரும்..

9. குழந்தை பாக்கியம் இல்லாதவர்களின் கர்ப்பத்தின் கனியை ஆசிர்வதித்து சுகம் தாரும்….

**இறுதி செபம்:**

இயேசுவே எங்கள் விண்ணப்பத்தையும், வியாதிகளையும் உம்மிடம் ஒப்புக்கொடுத்துள்ளோம். எங்கள் வேண்டுதலுக்கு கனிவாய் செவிசாய்த்தருளும். ஆண்டவரே தூய நீரினால் எங்களை கழுவி தூய்மையாக்கும். கசப்பான உணர்வுகள், சாபங்கள் மறைந்து புதிய ஆற்றலை, புதிய உத்வேகத்தை பெறுவோமாக.

**நன்றிப்பாடல்:** என்னில் வந்த நாதனுக்கு...



## 48. தந்தையாம் இறைவனை ஆராதிப்போம்

**பாடல்:** தாய் போலத் தேற்றி....

**துவக்க செபம்:**

தாயின் கருவில் உருவாகும் முன்பே எங்களை அறிந்து தேர்ந்த தெய்வமே! நாங்கள் செய்யும் அனைத்து செயல்களிலும் எங்களோடு இருந்து எங்களை வழிநடத்தும் அன்பு இறைவா! இந்த ஒரு மணி நேரம் நாங்கள் உம்மோடு இருந்து, உம்மையே நினைத்து, நீர் எங்களுடைய அன்பு தந்தை என்பதை உணர்ந்து, உறவாட எங்களையே நாங்கள் தயார்ப்படுத்த அருள் தாரும். எங்களுடைய சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் நீர் ஒருவர் மட்டுமே இருந்து நாங்கள் உம்வழி நடந்திட உமது அருளையும், ஆசீரையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**புகழ்ச்சிப் பாடல்:**

**திருப்பாடல்:** 96 வாசிக்கவும்

எம் அன்பு இறைவா! நன்மைகளுக்கெல்லாம் ஊற்றானவரே! உம்மைப் போற்றி புகழ்ந்து பாட உம்முன் அமரச்செய்து, உம்மை ஆராதிக்க, இந்த மணித்துளிகளை கொடுத்ததற்காக உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம். ஒவ்வொரு புகழ்ச்சிக்குப் பிறகும் நாம் கூற வேண்டிய

**பதில்:** என் தந்தைக் கடவுளே! உம்மைப் போற்றிப் புகழ்கிறோம்.

1. நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் என்ற

உமது இறைவார்த்தைக்காக உம்மைப் போற்றிப் புகழ்கிறோம்....

2. அஞ்சாதே! நான் உனக்குக் கேடயமாக இருப்பேன். உனக்குப் பெரும் கைம்மாறு அளிப்பேன் என்ற உமது
இறைவார்த்தைக்காக...

3. உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே! அஞ்சாதே! ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன் என்ற
இறைவார்த்தைக்காக...

4. துணிவு கொள், அஞ்சாதே! ஏனெனில் கடவுளாகிய உன் ஆண்டவரே,
உனக்கு முன் செல்வார் என்ற உமது
இறைவார்த்தைக்காக....

5. உன் தந்தை கடவுள், உன்னை விட்டு விலக மாட்டார், உன்னைக் கைவிடவும் மாட்டார் என்ற
இறைவார்த்தைக்காக....

6. அஞ்சாதே! நான் உனக்கு வலிமை அளிப்பேன். உதவி செய்வேன். என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத்
தாங்குவேன்
என்ற இறைவார்த்தைக்காக....

7. பாவச் சேற்றிலிருந்து உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன் என்ற உமது தைரியமான
இறைவார்த்தைக்காக....

8. அன்பு மகளே! மகிழ்ந்து களிகூறு, ஏனெனில் ஆண்டவர் பெரிய காரியங்களைச் செய்தார் என்ற மகிழ்ச்சியான இறைவார்த்தைக்காக...

9. இந்த ஏழைக் கூவியழைத்தான், ஆண்டவர் அவனுக்கு செவிசாய்த்தார் என்ற உமது அருள் மிகுந்த

இறைவார்த்தைக்காக...

10. வாழ்வு தரும் ஊற்று என்னிடமே உள்ளது. எனது ஒளியில் நீ ஒளி பெறுவாய் என்ற ஒளியான உமது

இறைவார்த்தைக்காக...

**பாடல்:** உள்ளம் உடையும் போது உறவாய் வா இறைவா!

**மன்னிப்பு:**

தந்தையாம் கடவுளிடம் நம்பிக்கைக் கொள்ளும் அனைவரும் அவரது பெயரால் பாவ மன்னிப்புப் பெறுவர் என்று இறைவாக்கினர் அனைவரும் அவரைக் குறித்து சான்று பகர்கின்றனர் (தி.பணி 10:43) என்ற இறைவார்த்தைக்கேற்ப நம் பாவங்ளை முழுமையாக மன்னிப்பவர் நம் தந்தை கடவுள். நமது பலவீனத்திலும், இயலாமையிலும் தந்தையாகிய கடவுளை பல நேரங்களில் நினைக்க மறந்திருப்போம். அவரை விட்டு விலகிச் சென்றிருப்போம். வேண்டாத சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும் இடம் கொடுத்திருப்போம். அன்பு சகோதர சகோதரிகளே நாம் வாழ்க்கையில் தவறுவதும், வீழ்வதும் இயல்பே. அவற்றிலேயே வீழ்ந்து கிடப்பதை நம் தந்தையாகிய கடவுள் விரும்புவதில்லை, அவற்றிலிருந்து மீண்டு வெளி வர வேண்டும் என்று தான் விரும்புகிறார்.

சில நேரங்களில் நாம் பிறரை மன்னிக்க மறுத்து விடுகிறோம். என் தந்தை கடவுள் என்னை மன்னிக்க வேண்டும், பிறர் என்னை மன்னிக்க வேண்டும் என்று

விரும்புகின்ற நாம், பிறரை மன்னிக்க விரும்புவதில்லை. நமக்கு எதிராக பேசிவிட்டு, நம் மனதை புண்படுத்தி விட்டு பிறகு தான் செய்தது தவறு என்று நினைத்து அதற்காக மனம் வருந்தி நம்மிடம் மன்னிப்புக் கேட்க வந்திருக்கும் நபர்களை நாம் எவ்வளவு ஏளனமாக பார்த்திருப்போம் அந்த நேரத்தை நினைத்துப் பார்ப்போம்.

நம் தந்தையாம் கடவுள் பழிவாங்கும் கடவுள் அல்ல, மன்னிக்கும் கடவுள், அன்பின் கடவுள் இத்தகைய கடவுளை நம் மனதில் நினைத்துக் கொண்டு வாசிக்கப்படும் நல் வார்த்தைகளை அமைதியாகக் கேட்போம். மனம் மாற முயற்சி செய்வோம்.

**பாடல்:** கலங்கின நேரங்களில் கை தூக்கி எடுப்பவரே...

**நற்செய்தி வாசக முன்னுரை:**

படைத்த பொருளுக்காக, படைத்தவர் இவ்வுலகிற்கு வந்தார் பாவத்திலிருந்து மீட்பு அளிக்க, ஆனால் படைப்புப் பொருள் படைத்தவனையே தீர்ப்புக்குள்ளாக்கி சிலுவைச் சாவை கொடுத்தது. இயேசுவைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்த மூடர்களின் மத்தியில், அறிவுப் பூர்வமாக அதுவும் யாருமே எதிர்பார்க்காதவாறு பதில் அளிக்கிறார் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, நாம் அனைவரும் கடவுளாம் தந்தையின் மக்கள் என கூறும் இந்நற்செய்தி வாசகத்திற்கு செவி மடுப்போம்.

**நற்செய்தி வாசகம்: யோவான்: 8:7-11**

வாசிக்கப்பட்ட இறைவார்த்தையை மனத்திதல் இருத்தி அமைதியாக தியானிப்போம்.

**மன்றாட்டு:**

அவர்தமக்கு அஞ்சி நடப்போரின் விருப்பத்தை நிறைவேற்றுவார், அவர்களது மன்றாட்டுக்கு செவிசாய்த்து அவர்களைக் காப்பாற்றுவார் (தி.பா 145:19) என்ற இறைவார்த்தைக்காக நாங்கள் மன்றாடும் பேதெல்லாம் எங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் எம் அன்பு தந்தையே, நாங்கள் கேட்கும் முன்பே எங்களது விருப்பங்களை அறிந்து அதை நிறைவு செய்பவரே! உம்முன் முழந்தாள் படியிட்டு இந்நேரத்தில் எங்கள் மன்றாட்டுக்களை, விண்ணப்பங்களை உம் பாதம் வைக்கிறோம். எங்கள் மன்றாட்டுக்களைக் கேட்டு அதற்கு அருள் புரிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

கூறப்படும் கருத்துக்களுக்காக மௌனமாக மன்றாடுவோம்.

1. அகில உலகத் திருச்சபைக்காக மன்றாடுவோம்

2. நாட்டுத் தலைவர்களுக்காக மன்றாடுவோம்

3. குழந்தைகளின் பாதுகாப்புக்காக செபிப்போம். குறிப்பாக பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்காக மன்றாடுவோம்.

4. குழந்தைகளின் படிப்புக்காக மன்றாடுவோம்.

5. இளையோர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து காலத்தைக் கண்முன் கொண்டு நன்றாக படிக்க மன்றாடுவோம்.

6. திருமண வயது வந்தும் திருமணம் ஆகாமல் இருக்கும்

இளைஞர், இளம்பெண்களுக்காய் மன்றாடுவோம்.

7. குழந்தை வரம் இல்லாது தவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தம்பதியருக்காகவும் மன்றாடுவோம்.

8. சமாதானமும், அமைதியும் இன்றி தவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு குடும்பங்களுக்காக மன்றாடுவோம்.

9. உடல், உள்ள நோயினால் அவுதியுறும் ஒவ்வொரு நோயாளிகளுக்காக மன்றாடுவோம்.

10. இன்றைய நாளில் இறந்து போன ஆன்மாக்கள், யாரும் நினையாத ஆன்மாக்கள், உத்தரிக்கும் நிலையில் உள்ள ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.

11. இறையழைத்தல் பெருக மன்றாடுவோம்

**இறுதி செபம்:**

அன்பு இறைவா! இந்த ஒரு மணி நேரம் எங்களோடு இருந்து எங்களை வழிநடத்தியமைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். உமது உண்மையையும், அருளையும், ஆசீர்வாதத்தையும் உணர்ந்த நாங்கள், உமது இறைகரத்தைப் பற்றியவர்களாய் தொடர்ந்து எங்கள் வாழ்க்கையை நடத்த உமது ஆவியின் கொடைகளை நிறைவாக எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## 49. சிறுமலரின் தியாக இறைவனை ஆராதிப்போம்

**துவக்கப் பாடல்**

**புகழ்ச்சி**

**பதில்:** ஆண்டவரே உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம்

- இறைவா! உம்மை அடைய, புனிதத்தை எய்த, சிறுவழியைக் கண்டு கொண்ட புனித குழந்தை தெரசாள் தந்த எளிய வழிக்காக...
- இந்த சிறுவழி உம்மை சார்ந்து வாழும் வழியாகவும். உமது பராமரிப்பை உணர்த்தும் வழியாகவும் இருப்பதனால்...
- சிறு குழந்தைபோல் உம்மை நாடி வரவும் உமது அன்பில் நிலைத்திருக்கவும் எமக்கு வழிகாட்டிய குழந்தை தெரசம்மாளுக்காக....
- சிறுவழியிலே அன்பு, தாழ்ச்சி, ஏழ்மை நம்பிக்கை நிறைந்திருப்பதற்காக.....
- மறையுண்மைகளை ஞானியர்க்கு மறைத்து சிறுவர்களுக்கு வெளிப்படுத்துபவரே! எம் சபையின் இளம் தளிர்களை தேர்ந்து தந்தமைக்காக....

**முன்னுரை**

அடைபட்ட வாழ்வு வாழ்ந்து என்ன சாதிக்க முடியும்? நான்கு சுவருக்குள் வாழும் மறைந்த வாழ்வு அது என நாம் கருதினாலும் புனித குழந்தை தெரசம்மாள் மறைபரப்பு

பணியாளர்களுக்கு பாதுகாவலியாக திருஅவையால் நியமிக்கப்பட்டிருக்கிறார். குறைந்த ஆண்டுகளே இந்த உலகில் வாழ்ந்திருந்தாலும் குழந்தை ஆன்மீகத்தை கைக்கொண்டு வாழ்வில் செயல்படுத்தி தனக்கென புதுப்பாதை கண்டு புனிதம் எய்தினார். அவரது சிறுவழி பலரும் கண்டு பாவிக்கும் வண்ணம் உள்ளது. உடல் நோய் வருத்தினாலும் உதட்டில் புன்னகை குறையாத மௌனப் புன்னகையாளாக தன்னை நிலைநிறுத்தி புனிதமடைந்தவர் சிறுமலர் தெரசா.

**மன்னிப்பு**

**பதில்:** எம்மை மன்னியும் தெய்வமே

- புனிதமடைய வேண்டும் என்ற எண்ணமில்லாமல் ஏதோ வாழ்கிறோம் என்ற தளர்வுற்ற நிலைக்காக....
- இறைபராமரிப்பை உணராமலும் உம்மைச் சாராமலும் வாழ்ந்த நேரங்களுக்காக.....
- எளிய மனத்தோர் பேறுபெற்றோர் என்ற உம் போதனையை கருத்தில் கொள்ளாமல் கனத்த மனம் கொண்டதற்காக.....
- குழந்தைகளாக மாறாவிடில் விண்ணரசில் நுழைய முடியாது என அறிந்திருந்தும் குழந்தைக்குரிய எளிமை, தாழ்ச்சி, அன்பு ஆகிய புண்ணியங்களை கடைபிடிக்காத தருணங்களுக்காக....

**வாசகம்**

மௌனப் புன்னகையாள் அல்லது புனித லிசியே தெரசாவின் ஆன்மீக வழிமுறைகள் புத்தகத்திலிருந்து...

**மறையுரை**

ஒருநாள் அன்னை ஆக்னஸ் தெரசிடம் கேட்டார்: ஷஉனது மரணத்திற்குப் பிறகு ஆன்மாக்களுக்கு நீ எந்த வழியைப் போதிக்க வேட்கைக் கொண்டுள்ளாய்?' "ஆன்மிகக் குழந்தை வழியைத்தான்", அது நம்பிக்கையின் வழி, கடவுளுக்கு முழு கையளித்தலின் வழி, எனக்கு முழு வெற்றியைத் தந்த அதே சிறு வழிவகைகளை நான் கற்றுத் தர விரும்புகிறேன். இங்கே நாம் செய்ய வேண்டியது ஒன்றே: சின்னஞ்சிறு தியாக மலர்களை இயேசுவின் திருப்பாதங்களில் தூவுவதும், இதமாக அப்பாதங்களை வருடிக் கொடுப்பதன் வாயிலாக அவரது உள்ளத்தைக் கொள்ளை கொள்வதும். இவ்வாறு தான் நான் அவரைச் சிக்கென பற்றிப் பிடித்துள்ளேன்: அதனால் தான் எனக்கு நல்லதொரு வரவேற்பு கிடைக்கும்" என்று பதிலளித்தாள். சில நாள்களுக்குப் பிறகு, சின்னஞ்சிறு குழந்தையாகவே தொடர்ந்து நீடித்திருப்பதைப் பற்றி அவள் நினைப்பது என்ன? என்று கேட்டபோது, **அவள் சொன்னாள்:** "நமது ஒன்றுமில்லாமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். தந்தையிடமிருந்து அனைத்தையும் எதிர்பார்த்திருக்கும் குழந்தை போல் நல்ல ஆண்டவரிடமிருந்து நாம் எதிர்பார்க்க வேண்டும். எதைப் பற்றியும் கவலைப்படாமல், சிறியவராக இருப்பதில் திருப்தி அடைய வேண்டும். சிறு தியாக மலர்களைச்

சேகரிப்பதில் மட்டுமே ஆர்வமுள்ளவர்களாய், நம் நல்ல ஆண்டவரின் மகிழ்ச்சிக்காக அவற்றை ஒப்புக் கொடுத்தலில் அது அடங்கியுள்ளது. மேலும் நம்மால் நன்மை எதுவும் செய்ய இயலாது என்பதால் நாம் செய்யும் நற்செயலுக்கான பேறுபலன்களை நமக்கே உரித்தானதாக கருதாமல் இருக்க வேண்டும். மாறாக அந்த அரிய செல்வத்தை அதாவது நற்செயல்களை நமது கரங்களில் நம் நல்ல ஆண்டவரே வைத்தார் என்பதால் அவற்றை அவருக்கே உரித்தாக்க வேண்டும். அவருக்கே உரிய அச்செல்வத்தை அவர் விரும்பும் விதத்தில் பயன்படுத்த விட்டுவிடவேண்டும். இறுதியாக குழந்தைகள் அடிக்கடி தவறும் இயல்புடையவர்கள். ஆதலால் நாமும் நம் தவறுகளைக் கண்டு மனம் தளரக் கூடாது" என்று விளக்கினார்.

**மன்றாட்டு:**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

1. எம் சபையின் இளம் சகோதரிகள் நல்ல உடல் உள்ள ஆன்ம நலத்தோடு வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

2. நாங்கள் அனைவரும் சிறு சிறு புண்ணிய செயல்களால் நல்ல துறவற வாழ்வு வாழ்ந்து சிறந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**3.** எச்சூழ்நிலையிலும் உம்மைப் பிரியாமல் உம்மைச் சார்ந்து வாழும் நிலையைக் கைக்கொள்ள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

**4.** புனித குழந்தை தெரசம்மாள் காட்டும் சிறுவழியை பின்பற்றி குழந்தை ஆன்மிகத்தில்

நாங்கள் வளர்ந்து திருஅவைக்கு பெருமை சேர்க்க இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5.** இறை அழைத்தலை நன்கு உணர்ந்து அதன் ஆழம் கண்டு அதில் நிலை கொள்ள தேவையான அருள் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி பாடல்**

**செபிப்போமாக!**

இறைவா! குழந்தை ஆன்மிகத்தில் முதலில் சிறியதன்மை அல்லது தாழ்ச்சி உண்டு, வெறுமை உண்டு, உறுதியான நம்பிக்கை உண்டு, அன்பு உண்டு, எளிமை உண்டு. இத்தகைய ஆன்மீகம் சிறுவர்களுக்கும் துவக்க நிலையில் இருப்பவர்களுக்கும் ஏன் பெரியவர்களுக்கும் கூட உகந்ததாக உள்ளது. இச் சிறுவழியை பயன்படுத்தும் கலை அறிந்து உம்மை வந்தடைய அருள்தாரும் - ஆமென்.



# 50. நம்பிக்கையின் நாயகனை ஆராதிப்போம்

**பாட்டு:** அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே

**முன்னுரை:**

படைப்பனைத்தும் இருப்பதும் இயங்குவதும் நடப்பதும் உறங்குவதும், பணி செய்வதும், இறை நம்பிக்கையால் தான். தூய்மைக்கு ஊற்றான மூவொரு இறைவா, உம் அன்பின் மேன்மையையும், நன்மைத்தனத்தையும், உமது அன்பையும், அழகையும் புகழ்வதற்காக நீர் படைத்த படைப்பனைத்தையும் ஆசிர்வதியும்.

**போற்றுதல்:**

1. திருப்பாடல் 11, ஆண்டவர் நேர்மையானவரையும் பொல்லாரையும் சோதித்தறிகின்றார். வன்முறையில் நாட்டக்கொள்வோரை அவர் வெறுக்கின்றார் அவர் பொல்லார் மீது கரி நெருப்பும் கந்தகமும் சொரியும்படி செய்கின்றார். பொசுக்கும் தீக்காற்றே அவர்கள் குடிக்கும் பானமாக்கும். ஏனெனில் நீதியுள்ள ஆண்டவர் நேரிய செயல்களை விரும்புகின்றார் அவர் தம் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர் அவரைப் போற்றுவோம்.

2. திருப்பாடல் 16 இறைவா! என்னைக் காத்தருளும், உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். நான் ஆண்டவரிடம் நீரே என் தலைவர் உம்மையன்றி வேறு செல்வம் எனக்கு இல்லை. என்று சொன்னேன். பூவுலகில் உள்ள தூயோர் எவ்வளவோ உயர்ந்தோர்

அவர்களோடு இருப்பதே எனக்கு பேரின்பம் அவரைப் போற்றுவோம்.

3. திருப்பாடல் 56 கடவுளே! எனக்கு இரங்கியருளும் ஏனெனில் மனிதர் என்னை நசுக்குகின்றனர். அவர்கள் என்னுடன் நாள்தோறும் சண்டையிட்டுத் துன்புறுத்துகின்றனர். என் பகைவர் நாள்தோறும் கொடுமைப்படுத்துகின்றனர். மிகப் பலர் என்னை ஆணவத்துடன் எதிர்த்தும் போரிடுவோர். அச்சம் என்னை ஆட்கொள்ளும் நாளில் உம்மையே நான் நம்பியிருப்பேன். கடவுளின் வாக்கை நான் புகழ்கின்றேன். கடவுளையே நம்பியிருக்கின்றேன். எதற்கும் அஞ்சேன் அற்ப மனிதர் எனக்கென்ன செய்ய முடியும். அவரைப் போற்றுவோம்.

4. திருப்பாடல் 62 கடவுளின் செயலுக்காக நான் மௌனமாய்க் காத்திருக்கின்றேன். எனக்கு மீட்பு கிடைப்பது அவரிடமிருந்தே வருகிறது மக்களே! எக்காலத்திலும் அவரையே நம்புங்கள் அவர் முன்னிலையில் உங்கள் உள்ளத்தில் உன்னைத் திறந்து கொட்டுங்கள் என் தலைவரே! உண்மைப் பேரன்பு உமக்கே உரியது. அவரைப் போற்றுவோம்.

5. திருப்பாடல் 19 உம் ஊழியனுக்கு நீர் தந்த வாக்கை நினைவுகூரும் அதனால் எனக்கு நம்பிக்கை அளித்தீர் உம் வாக்கு என் துன்பத்தில் எனக்கு ஆறுதல் அளிக்கின்றது. ஏனெனில் அது எனக்கு வாழ்வளிக்கிறது. ஆண்டவரே! என்றென்றைக்கும் உள்ளது உமது வாக்கு விண்ணுலகைப்போல் அது நிலைத்துள்ளது. அவரைப் போற்றுவோம்.

**நன்றி**

**பதில்:** நன்றி நன்றி யேசுவே நன்றி என்றும் உமக்கே

1. ஆண்டவரே! உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்குக் கற்பித்தருளும் ஏனெனில் நீரே என் மீட்பராம் கடவுள். உம்மையே நான் நாள் முழுவதும் நம்பியிருக்கிறேன்.

2. எளியோரை நேரிய வழியில் அவர் நடத்துகின்றார், எளியோர்க்குத் தமது வழியைக் கற்பிக்கின்றார்.

3. என் கண்கள் எப்போதும் ஆண்டவரை நோக்கியிருக்கின்றன அவரே என் கால்களை வலையிலிருந்து விடுவிப்பார்.

4. என் கடவுளாகிய ஆண்டவரே உம்மிடம் உதவி வேண்டினேன் என்னை நீர் குணப்படுத்துவீர்.

5. ஆண்டவரே, நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர் சாவுக்குழியில் இறங்கிய எனது உயிரைக் காத்தீர்.

6. என் உள்ளம் உம்மைப் புகழ்ந்து பாடும் மௌனமாய் இராது என் கடவுளாகிய ஆண்டவரே, உமக்கு என்றென்றும் நன்றி செலுத்துவேன்.

**மன்னிப்பு:**

**பதில்: ஆண்டவரே என்னை மன்னியும்**

- ஆண்டவரே என் பாவத்தை அறிக்கையிடாதவரை, நாள்முழுவதும் நான் கதறி அழுததால் என் எலும்புகள் கழன்று போயின. என் பாவத்தை உம்மிடம் அறிக்கையிட்டேன் என் தீச் செயலை நான் மறைத்ததில்லை ஆண்டவரிடம் என் குற்றங்களை ஒப்புக் கொள்வேன் என்று சொன்னேன் நீரும்

என் நெறிகேட்டையும் பாவத்தையும் போக்கினீர் என்னை மன்னியும் ஆண்டவரே.

- கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். என்னை மன்னியும் ஆண்டவரே.
- இறைவா! என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும் என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். ஏனெனில் என் குற்றங்களை நான் உணர்கின்றேன் என் பாவம் எப்போதும் என் மனக்கன் முன் நிற்கின்றது. என்னை மன்னியும் ஆண்டவரே.
- கடவுளே! நான் எரிபலி செலுத்தினாலும் நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை. என்னை மன்னியும் ஆண்டவரே.
- இறைவா! நீர் கொடுத்த கட்டளையின் படி நடவாத குற்றத்திற்காக என்னை மன்னியும் ஆண்டவரே!

**இறைவார்த்தை மத்தேயு 9:18:26**

**சிந்தனை:**

இயேசு நடமாடும் இடமெல்லாம் நன்மை செய்பவர், நம்பிக்கை ஊட்டுபவர், வியாதிகளை குணமாக்குபவர், இறந்தவர்களை உயிர்க்க வைக்கிறார். முடவனை நடக்க வைக்கிறார்.

நம்மிடையே பல புதுமைகளை செய்து கொண்டிருகிறார். இங்கு இரத்தப் போக்குடைய பெண் 12 ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண் பார்க்காத மருத்துவர் இல்லை, பார்க்காத இடமும் கிடையாது மன வேதனைபடுகிறார். கூட்ட நெரிசலில் மக்கள் கூட்டம் இயேசுவை பார்க்க முடியாத நிலையிலும் இயேசுவினுடைய மேலுடையின் ஓரத்தைத் தொட்டால் நலம் பெறுவேன் என்ற நம்பிக்கை அவளிடம் இருந்தது. குணமடைந்தாள்.

**மரியாவே நம் நம்பிக்கை**

அன்னை மரியாவிடம் நாம் அனைவரும் நம்பிக்கையுடன் மன்றாட அவளதுப் பரிந்துரையால் நாம் அனைத்தையும் பெற முடியும். ஏனென்றால் மரியாவின் மகன் இயேசு கிறிஸ்து அருளின் இறை வடிவான ஆண்டவர். அனைத்துக்கும் மேலான உன்னதர்.

**இறை நம்பிக்கையை வளர்த்தெடுப்பதில் புனிதைகளின் பங்கேற்பு**

ஏழு புதல்வர்கள் மாண்ட பின்னும் இறைவனைத் தூற்ற விருப்பமின்றி தன் உயிரைக் கையளித்த தாயின் வீரம் சிலிர்க்க வைக்கிறது. 2மக் 7:1-41 திரு அவையில் புனிதர்களின் பங்கேற்பு மிகவும் வியக்கத்தக்க வகையில் இருக்கிறது. விவரம் தெரிந்த கிறிஸ்தவக் குழந்தைகளுக்கு அனைத்து இறை வேண்டல்களையும் திரு அவைக்கோட்பாடுகளையும் சொல்லிக் கொடுப்பது, அவர்களை ஆழமான நம்பிக்கையில் வளர உதவி செய்வது போன்ற பல செயல்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு அதிகமாக இருக்கிறது. இதற்கும் மேலாக

வெறும் கிறிஸ்தவப் போதனைகளைக் கற்பிப்பதோடு இல்லாமல் அவற்றை வாழ்வாக்குவதிலும் அதிலும் குறிப்பாக இறை நம்பிக்கைக்காக உயிரைக் கொடுத்து கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழ்வதிலும் பெண்களின் வீரம் அளவிட முடியாதது. புனித செசிலியா, புனித ஆகத்தா மற்றும் புதனி ஆக்னஸ் போன்ற பல பெண் புனிதர்களை நாம் உதாரணமாகச் சொல்லலாம்.

**எழுந்திருங்கள் அஞ்சாதீர்கள்", புதுவலுவூட்டப்பட்ட நம்பிக்கை**

இயேசு அணுகி வந்து அவர்களைத் தொட்டு "எழுந்திருங்கள் அஞ்சாதீர்கள்" என்றார். "நாம் இங்கேயே இருப்பது நல்லது" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறும் அளவிற்கு நமது உள்ளார்வம் நம்மை எப்போதும் தனிப்படுத்திக் காட்டுவதாக அமைவதில்லை என்பதை தங்களது வாழ்வின் அனுபவங்கள் மூலம் உருமாறிய நிகழ்வில் அந்த மூன்று சீடர்களைப் போலவே – நாமும் உணர்ந்துள்ளோம். "எழுந்திருங்கள் அஞ்சாதீர்கள்" என்று ஒவ்வொருவரையும் ஆண்டவர் இவ்வாறு ஊக்கமூட்டுகிறார் என்பது வெளிப்படையான உண்மை. ஆண்டவருடன் "மலையிலிருந்து" இறங்கி தாபோரிலிருந்து கல்வாரிக்குச் செல்லும் பாதையில் பயணம் செய்யத் தொடங்கும் போதெல்லாம் இது உண்மையானது.

**மன்றாட்டு**

**1.** அன்பு இறைவா! ஆன்மீக வழிகாட்டியாகவும், அனுபவத்தின் ஆசானாகவும் அன்பு செய்வதில் கடல் அலை போலவும் இருக்கும் எங்கள் தாத்தா, பாட்டிக்காக மன்றாடுகிறோம். எங்களுக்கு நம்பிக்கையை ஊட்டி வளர்த்த

அவர்களுக்கு நல்ல ஆரோக்கியமான மனநிலையையும், உடல் நிலையையும் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையை எடுத்துரைக்கும் இறைவா! உண்மையை மட்டும் பேச, உண்மையான வாழ்வு வாழும் நபர்களை ஆசிர்வதித்து, போராட்டாம் நிறைந்த வாழ்வில் உண்மையாக வாழ்வது என்பது சவால் நிறைந்தது. அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டு உண்மையாக வாழும் மக்களுக்கு ஆற்றலைத் தர ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. இயற்கையில் உறையும் இறைவா! நாங்கள் அனைவரும் இயற்கையை நேசித்து இயற்கையைப் பேணிப் பாதுகாக்கத் தேவையான அறிவையும் ஆற்றலையும், வல்லமையையும் தந்து அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. தம்மையே எங்களுக்கு உணவாகக் கொடுத்த எம் இறைவா! நாங்களும் எங்களிடம் இருப்பதைப் பகிர்ந்து கொடுத்து, உண்மையான இறைவனின் மக்களாக வாழ அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. நம்பிக்கையின் ஊற்றாம் எம் இறைவா! தங்களின் அன்றாடத் தேவைக்காக கடனை வாங்கி, திருப்பித் தர முடியாமல் துன்புறும் மக்களுக்காக மன்றாடுகிறோம் அவர்களுக்கு உழைக்கும் மனத்தையும் சேமிக்கும் பண்பையும் வளர்த்து கடன் பிரச்சினையில்லாமல் நிம்மதியாக வாழ வரம் வேண்டி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**முடிவுரை**

பரிவைக் காட்டும் பண்பான ஆண்டவரே! அயராது எங்களோடு வாழ்ந்து

கொண்டிருக்கும் இயேசுவே! எங்களோடு உம் வார்த்தைகளால் பேசியதற்காகவும், எங்களையும், எங்களைச் சார்ந்தலர்களையும் ஆசிர்வதித்துக் கொண்டிருக்கும் உம் கிருபைக்காக நன்றி கூறுகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## 51. வழியாம் இறைவனை ஆராதிப்போம்

**ஆராதனை பாடல்:**

காலத்தை கடந்தவர் நம் இறைவன், படைப்பு அனைத்திலும் முதற்பேறு. காற்றும் கடலும் இவருக்கு அடிபணிகின்றன, இந்த தெய்வீக நேரத்தில், பிரசன்னம் நிறைந்த கதிர் பாத்திரத்தில் அழகாக, அமைதியாக, அற்புதமாய் வீற்றிருக்கும் நம் மூவொரு தேவனுக்கு எங்களின் தாழ்ச்சி உள்ள ஆராதனை செலுத்தும் விதமாய் சிரம் தாழ்த்தி பணிகின்றோம்.

**பாடல்:** தந்தையே இறைவா...

**முன்னுரை:**

மானிடராய் பிறந்த அனைவருமே இந்த உலகில் வாழ்வின் நோக்கத்தைத் தேடி அலைகின்றனர். ஒவ்வொருவருக்கும் வாழ்வில் நடக்கும் செயல்களும் காரியங்களும்

நிகழ்வுகளும் புதிராக அமையும். இதுவே எதார்த்தம். இந்த ஆராதனை வேளையில் **வழியாம் இறைவன்** என்ற தலைப்பில் இறைவனின் வழிநடத்துதலின் ஆசிர்வாதத்தையும் நன்மைகளையும் குறித்து சிந்தித்து பக்தியுடன் ஜெபிப்போம்.

**போற்றுதல்:**

"இயேசுவின் பெயருக்கு விண்ணவர் மண்ணவர் அனைவரும் மண்டியிடுவர்" **(பிலிப்பியர் 2:10)**

தந்தையாம் கடவுளின் மாட்சியும் இயேசு கிறிஸ்துவின் புகழை எல்லா நாவும் இசைத்துப் பாட அவரைப் போற்றிப் புகழ்வோம்....

**பாடல்:** நானும் என் வீடும்

- ❖ எங்களை நேசிக்கும் அன்பு இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் விதைப்பவர் உவமையில் குறிப்பிட்டது போல வழியோரத்தில் விழுந்த விதையாக, பறவைகள் வந்து விழுங்கி செல்லாமலும், பாறை பகுதியில் விழுந்து கதிரவன் உலர்த்திப் போடாமலும், முட்செடியில் சிக்கிக் கொள்ளாமலும் நல்ல நிலத்தில் எங்களைப் பதிய வைத்து உருவாக்கி பயனடையச் செய்ததற்காக உம்மைப் போற்றி புகழ்ந்து உமக்கு நன்றி கூறுகின்றோம்.
- ❖ எங்களை பாதுகாக்கும் வல்ல இறைவா, எங்கள் வாழ்வில் வயலில் தோன்றிய களைகள் உவமைக்கேற்ப, அறுவடை நேரத்தில் களைகளைப் பறித்து விட்டு கோதுமைகளைக் களஞ்சியத்தில் சேர்ப்பது போல, தீமைகளை எங்கள் வாழ்வில் நீக்கி நன்மையானவற்றை வாழ்வில்

செய்துவருவதற்காக இந்நேரத்தில் போற்றிப் புகழ்ந்து உம்மை ஆராதிக்கின்றோம்.

- எங்களுக்கு வாழ்வளிக்கும் நல்ல இறைவா, நீர் கற்பித்த கடுகு விதையைப் போல நாங்களும் கடுகு விதை வளர்ந்து மற்ற செடிகளின் விட பெரியதாகி பலன் ஈட்டியது போல எங்களையும் உமது கருணையாலும் இரக்கத்தாலும் எங்களை விட்டுக் கொடுக்காமல் உயர்த்தி வைத்து வாழ்வூட்டும் உமக்கு எங்கள் நன்றிகளும் ஆராதனைகளும்.
- மகத்துவமான இறைவா, புளிப்பு மாவு உவமை சொல்வது போல ஒரு துளி புளிப்பு மாவை எடுத்து புளிப்பற்ற மாவில் இணைத்தால் மாவு முழுவதும் புளிப்பேறிவிடும். அதுபோல கிறிஸ்துவின் திருவுடலையும் திரு இரத்தத்தையும் பருகும் நாங்கள் கிறிஸ்துவை போல மாறி எங்கள் வாழ்வில் உம்மைப் பிரதிபலிக்கும் வண்ணம் எங்களை அழைத்த இயேசுவே உமக்கு இந்த வேளையில் எங்கள் நன்றியைக் கூறுகின்றோம்.
- அன்பைப் பொழியும் வல்ல இறைவா, புதையல் மற்றும் முத்து உவமையில் சொல்வது போல எல்லாவற்றையும் விற்று மனமகிழ்ச்சியுடன் புதையலையும் முத்தையும் வாங்கிய வணிகர்களைப் போல எங்கள் வாழ்விலும் எல்லாவற்றையும் விட்டு மிகப்பெரிய செல்வமாகிய உம்மைத் தேடி வந்து கண்டடையச் நீர் தந்த கொடைகள்

அனைத்திற்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

- ❖ எதிர்நோக்கின் தலைவா, வலை உவமை கூறியபடி கடைசி காலத்தில் நேர்மையானவர்களிடமிருந்து தீயவர்களைப் பிரிப்பது போல எங்கள் வாழ்விலும் நல்லது எது தீயது என்று அறிந்து தீமையான வழிகளை விட்டு அகன்று உன்னத உண்மையான வழிகளை அறிந்து புரிந்து வாழ உடனிருந்து வழிநடத்திய உமக்கு நன்றி கூறி உம்மைப் போற்றி ஆராதிக்கின்றோம்

**பாடல்:** வாழ்வின் நோக்கம்

**நற்செய்திப் பகுதி:** மத்: 7:13-14

**வழியாம் இறைவன்** என்ற தலைப்பில் நற்செய்தி வாசகத்தினை தியானிப்போம்.

நீர் தூய்மையானது. பூமியின் வெப்பம் கடல் நீரை ஆவியாக மாற்றி மழையாகப் பொழிகின்றது. அம்மழைநீர் ஆறு, நதி, குளம், ஏரி போன்ற இடங்களில் நீர் பாய்ந்து கடைசியில் கடலில் போய் சங்கமாக இருக்கின்றது. இது அனைவரும் அறிந்த
உண்மையாக இருக்கிறது. இதுவே இயற்கை.

நீருக்கு யாரும் வழி காட்டுவதில்லை அது அதன் வழி அறிந்து கடைசியாக கடலில் சேர்கின்றது. நீர் வழி ஓடும் ஓடம் என்பது நீரின் வழியினிலே அதன் அசைவோடு இசைந்து செல்லும் படகைக் குறிக்கின்றது. நீர் எந்த வழியில் செல்கிறதோ அதே வழியில் அதுவும் போக வேண்டிய இடத்திற்கு போய் சேர்கின்றது. அந்த ஓடத்தை திசை திரும்ப நினைத்தாலோ அதில் எதிர்நீச்சல் போட நினைத்தாலோ அது

வழி மாறி வேறு திசைக்கு போக நேரிடும். அது போல நீர் என்பது இறைவன் நமக்கு அமைத்து தந்த அழகிய வாழ்க்கை நிலையையும், ஓடம் அதற்கேற்ப பயணிக்கக் குறிக்கப்பட்டுள்ள நம் வாழ்வையும் குறிக்கிறது. இறைவனால் திட்டமிடப்பட்ட வாழ்க்கையில் தான் நாம் அனைவரும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். வாழ்வின் நோக்கம் இறுதி கதியாகிய இறைவனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் காட்டும் பாதைகளும் வழிகளும் நற்செய்தியில் கேட்டது போல இடுக்கமான வாயிலாகவும் மிகக் குறுகலான வாயிலாகவும் சவால்கள் நிறைந்த பாதைகளாகவும் அமையும். ஆனால், எந்த தருணத்திலும் எந்த நேரத்திலும் இயேசு நமக்கு போதும் அவர் காட்டும் வழியில் நடப்போம் என்று பயணத்தில் செல்லும் பொழுது இலக்கை அடைந்து விட முடியும்.

நாம் இறை விருப்பத்தற்கு மாறாக அல்லது நான் நினைத்த பாதையில் தான் போவேன் என்று நினைத்தாலோ அல்லது செல்லும் இடம் கடலென்று அறியாது நான் விரும்பிய இடத்திலே நிற்பேன் என்று எதிர்நீச்சல் போட்டாலும், வாழ்வின் எல்லை ஒரு கேள்விக்குறியாக மாறிவிடும்!. இயேசுவின் கரத்தை பிடித்து அமைதியாக இயேசு காட்டும் வழி நடப்போம். வாழ்வின் நோக்கத்தில் பயணித்து வெற்றிவாகை சூடுவோம். இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக.

**பாடல்:** இயேசு எனக்குப் போதும் இயேசு எனக்கு போதும்

என் வாழ்வில் என்றும் நிம்மதி

**மன்றாட்டு:**

**“ஆண்டவரே எமக்கு செவிசாய்த்து பதிலளியும், ஏனெனில் நான் எளியவர், வறியவன்” திருப்பாடல் 86:1**

என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப ஆவியில் நிறைந்து இறை அனுபவம் பெற்று நமது மன்றாட்டுகளை ஏறெடுப்போம்.

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

1. **திரு அவைக்காக ஜெபிக்கின்றோம்:**
   திரு அவையை நீரே கட்டி எழுப்பியுள்ளீர் அதன் மீது நீர் அக்கறை கொண்டுள்ளீர். திரு அவைக்காக உம்மிடம் எப்பொழுதும் ஜெபிக்கின்றோம் திரு அவை எப்பொழுதும் மேன்மைப்படுத்தப்படவும் மறைப்பணி வழியாக உம்மை மகிமைப்படுத்திட வேண்டும் என்றும் இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்

2. **நாட்டிற்காக ஜெபிக்கின்றோம்:**
   உமது சினம் எங்கள் நாட்டின் மேல் வரவிடாதேயும். இறைவா நாட்டு மக்களையும், வழிநடத்தும் நாட்டு தலைவர்களையும் உம்மிடம் ஒப்பு கொடுத்து ஜெபிக்கிறோம் அவர்கள் நீதியினால் ஆளுகை செய்ய உம்முடைய அருளைப் பொழிய வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

3. காணாமல் போன ஆடு போல உண்மையின் வழி தெரியாமல் சிக்கித் தவிக்கும் அனைவருக்காகவும் ஜெபிக்கின்றோம். நீரே உமது பேரன்பை

அவர்கள் மேல் பொழிந்து காத்தருள வேண்டும் என்று இறைவா உம்மிடம்

4. இளையோர் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் சிறந்த நோக்கத்தையும் மேன்மையும் உணர்ந்து சிறப்பான நல்லதொரு வாழ்க்கையை வாழ இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்

5. தனிப்பட்ட தேவைகளுக்காக மௌனமாக மன்றாடுவோம்...

**செபிப்போமாக:**

ஓடும் நீரூற்றுகளில் அருகில் உள்ள வானத்து பறவைகள் கூடு கட்டி, மரம் கிளைகளில் நின்று இன்னிசை பாடுகின்றன. அதுபோல இறைவன் முன்பாக இந்த அழகிய மாலை வேளை இணைந்து அவரின் வார்த்தைகளைப் பாடல் பாடி அவரோடு இணைந்து தியானித்து அவரில் சங்கமித்தோம். நம் வாழ்க்கைப் பயணத்தில் இறை சித்தத்திற்கேற்ப இணைந்து நடந்து அவரது நோக்கத்தை அறிய முயற்சி செய்து இறைவன் விரும்பும் பாத்திரமாய் நம்மையே நாம் உருவாக்கிக் கொள்ள வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.



## 52. இறையன்பில் நிலைத்திட இறைவனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

இரக்கம் என்பது கடவுள் நம்மைச் சிந்திக்க விடுகின்ற அவரின் உயர்வான செயல்பாடு. நாம் அவரைக் கூவியழைக்கும் போதெல்லாம் அவர் நமக்கு உதவ வருகின்றார். இரக்கம் என்பது நமது பாவ நிலையிலும் நாம் அன்பு செய்யப்படுகின்றோம் எனும் நம்பிக்கையை நமக்குள் ஏற்படுத்துகிறது. இறைவனின் இரக்கம் பாவத்தைவிட எப்போதும் பெரிதாய் இருப்பதால் அது அளவுகடந்த விதத்தில் எல்லாச் சூழல்களிலும் மன்னிப்பதற்கு எப்போதும் தயாராகியிருக்கும். இறையன்புக்கு யாரும் எல்லைகளை வரையறுக்க முடியாது. இரக்கம் என்பது கடவுளையும் மனிதரையும் இணைக்கும் பாலமாகும். அவ்விரக்கத்தின் ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிப்போம்.

கடவுளின் இரக்கமும் பரிவும், உடன்படிக்கை அன்பும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவற்றின் நெருங்கிய தொடர்பினால் பரிவு சில வேளைகளில் இரக்கமாக பார்க்கப்படுகிறது. தகுதியற்ற மக்களுடன் உறவை ஏற்படுத்த அழைத்துச் செல்வது அல்லது உந்தித் தள்ளுவது அவருடைய இரக்கம்தான் கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை ஏற்படுத்த இரக்கம் தான் உந்து சக்தியாக செயல்படுகின்றது.

**பாடல்:** இரக்கம் மிகுந்த கரத்திலே...

**மன்னிப்பு:**

உடன்படிக்கை கடவுளின் மன்னிப்பிற்கும் முடிவற்ற உறுதியான அன்பிற்கும் காரணமாகிறது. உடன்படிக்கைதான் கடவுள் தொடர்ந்து மக்களை மன்னிக்கவும் காரணமாகின்றது.

- இரக்கம் என்பது ஒரு கொள்கையோ அல்லது கோட்பாடோ அல்ல மாறாக மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிப்பதற்காக கடவுள் மக்களுக்காக செய்த செயல்கள். ஆனால் கடவுள் மீது காட்டும் அன்பை மேலோட்டமான சடங்குகளில் புதைத்துவிட்ட நேரங்களுக்காக இறைவா எம்மை மன்னியும்.
- பிறர் நலன் என்பதை தன் விருப்பத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்டு, சிலரின் நலன் மட்டும் பேணும் அன்பாக எங்கள் அன்பு மாறியதற்காக இறவைா எம்மை மன்னியும்…
- தான் மட்டுமே நலன் பெற்றவராக நன்மைகள் பெற்றவராக, அனைத்தையும் பெற்றவராக மாற்றிக் கொண்டு கடவுளின் அன்பையும் பிறரின் அன்பையும் தூக்கியெறிந்து ஆசைகளோடும். காழ்ப்புணர்வோடும், தன்னலத்தோடும் வாழ்ந்த நேரங்களுக்காக இறைவா எம்மை மன்னியும்

**திருப்பாக்களில் அன்பிரக்க அனுபவம் - இறைவனின் படைப்பு:**

திருப்பாடல்கள் போற்றுவதும், புகழ்வதும் இறைவனின் இரக்கத்தையே என்பது விவிலியம் நமக்கு எடுத்துச் சொல்லும் சாட்சியம். கடவுளின் இரக்கம் சேமிக்கப்பட்டு தீர்ந்து போவதன்று. மாறாக இறைவார்த்தையில் நாம் வாசிப்பதுபோல கடவுளின் இரக்கம் என்றென்றுமுள்ளது (திபா. 70:1) என்னும் வார்த்தைகளைக் கொண்டு திருஅவை தனது அன்றாட செபத்தைத் தொடங்குவது எவ்வளவு அழகானது. திருஅவை முடிவின்றி உறுதியுடன் "ஆண்டவரே, உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் நிதைத்தருளும். ஏனெனில், இவை தொடக்கமுதல் உள்ளவையே" (திபா.25:1) என்பதை திருமபத் திரும்ப கூறிக் கொண்டேயிருப்பது அழகானது.

ஆண்டவரே! வானளவு உயர்ந்துள்ளது உமது பேரன்பு (திபா.36:5) எங்கள் கடவுளே, நீர் பரிவும் உண்மையும் பொறுமையும் உள்ளவர், அனைத்தையும் இரக்கத்துடன் ஆண்டு வருகின்றீர் (சாஞா 15:1) திருப்பாடல் 103 வெளிப்படையான வகையில் அவரின் இரக்கச் செயல்களை எடுத்துரைக்கின்றது. "அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்.உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கிறார். அவர் உனக்கு பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகிறார்" (திபா 103:3-4). ஆண்டவர் இரக்கமும், அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும், பேரன்பும் உள்ளவர் (திபா

103:8) “பொறுமையான, இரக்கமுள்ள” எனக் கடவுளின் இயல்பை விளக்கும் இவ்விரு வார்த்தைகளும் பழையஏற்பாட்டில் பெரும்பாலும் சேர்ந்தே காணப்படுகின்றன.

**பாடல்:** ஆதாரம் நீதானே என் இயேசுவே

**மன்றாட்டு:**

கடவுளின் இரக்கம் காலத்தையும் நேரத்தையும் கடந்தது இறைவனின் உதவியை நாம் கேட்பது என்பதே கடவுள் நம்மீது கொண்ட இரக்கத்தின் முதல் படி. அவர் நமது பலவீனத்தில் நமக்கு உதவ வருகின்றார். ஒவ்வொரு நாளும் அவரது பரிவிரக்கத்தினால் தொடப்படும் நாம் மற்றவர் மீது பரிவு கொண்டவர்களாய் மாற நற்கருணை ஆண்டவரிடம் நமது வேண்டுதல்களை சமர்ப்பிப்போம்.

1.தொடக்காலத் திருஅவை போல இன்றைய திருஅவையும் இயேசுவுக்கு சான்று பகர தன்னை இரக்கத்தின் கருவியாக மாற்றிகொள்ள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2.இதயத்தில் சாந்தம் பெறுவதற்கு கொடுக்கப்பட்ட கருவிதான் மன்னிப்பு. மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வதற்கு கோபம், பழி, வன்முறை, வன்மம் ஆகியவை தடையாக உள்ளது. அந்த தடைகளை எம் வாழ்வில் களைந்து வாழ தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3.இரக்கம் என்பது கடவுளின் நன்மைத்தனம். அந்த நன்மைத்தனத்தை நன்றியுடனும் முழு நம்பிக்கையுடனும் பெற்றுக் கொள்ள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. திருஅவையின் அருளடையாளங்கள் அனைத்தும் காலத்தால் அழியாதவை. அருளடையாளங்களின் வழியாக நாம் இறைவனை சந்திக்கிறோம். ஒவ்வொரு நாளும் திருப்பலி, ஒப்புரவு அருட்சாதனம் போன்ற அருள்அடையாளங்கள் வழியாக உமது நிறைவான அருளைப் பெற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**முடிவுரை**

இரக்கத்தின் பின்னணியில் இறைவனது அன்பின் மாபெரும் மறையுண்மையை அறிந்தவராய், அதைச் சிலுவையில் நிறைவேற்றுபவராய் இயேசு தம் பாடுகளையும் இறப்பையும் ஏற்றுக்கொண்டார். அன்பின் பெரும் மறை பொருளை நிறைவுள்ளதாக்குகின்றதை அறிந்தவராய் அவர் தனது பாடுகள், இறப்பு ஆகியவற்றுக்குள் நுழைந்தார். புதிய உடன்படிக்கை பற்றியும், பலியும் பலியிடும் குரு பற்றியும் எபிரேயர் ஆசிரியர் தன்னுடைய நூலில் அழகாக விவரித்துள்ளார். எனவே புதிய பாஸ்கா நிகழ்வு முழுதும், இறைவனின் இரக்கச் செயல்பாடே.

**பாடல்** : நன்றி என்று சொல்லி எந்தன் நெஞ்சம்…



# 53. நீயாக நான் மாற உம்மை ஆராதிக்கின்றோம்

**ஆராதனைப்பாடல்:**

ஆராதனைக்கும், போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும், வாழ்த்துதலுக்கும், வணங்குவதற்கும் உரிய உன்னதக்கடவுளை வாழ்த்தி வணங்கி ஆராதிப்போமா.

நற்கருணையில் வீற்றிருப்பவர் உயிரோடிருப்பவர். நாம் இறைச்சாயலை பெற வேண்டும் என்பதற்காக தன் நிலையை விட்டு இறங்கி மனித சாயலை ஏற்றவர் வாருங்கள் நாம் அனைவரும் இணைந்து அவரை ஆராதிப்போம். ஒவ்வொரு ஆராதனைக்கு பிறகும் பாடவேண்டிய வரிகள்:

**பதில்:** ஆராதனை ஆராதனை இதய வேந்தே ஆராதனை, அப்பத்தின் வடிவில் நெஞ்சத்தை பிளக்கும் ஆண்டவா உமக்கே ஆராதனை.

- மூவொரு இறைவா நீர் ஆராதனைக்கு உரியவர் ஆதியில் தனது இறைச்சாயலை மனிதனுக்குள்ளாக வைத்து அழகுபார்த்தவர் மற்ற படைப்பிற்கெல்லாம் மேலான படைப்பாக மனிதன் உயர்ந்து நிற்க காரணம் இறை சாயல் மனிதனுக்குள் இருப்பதால்தான் அத்தகைய உமது இறைச்சாயலை எமக்குத் தந்த இறைவா உம்மை போற்றி புகழ்ந்து ஆராதிக்கின்றோம்…
- விண்ணகம் சென்ற இயேசு அவருடைய பிரசன்னம் எப்போதும் நம்மோடு இருக்க

வேண்டும் என்பதற்காக தன் உடலையும் இரத்தத்தையும் நற்கருணையாக ஏற்படுத்தி, எம் முன்பாக உயிரோடு உறவாடிக் கொண்டிருக்கும் இயேசுவே உம்மை ஆராதிக்கின்றோம்…

- தனது சாயலை மனித சாயலாக நமக்கு தந்து நாம் இறைச்சாயலை இழந்து விடாமல் மனிதத்தில் புனிதத்தை கொண்டு வாழ்ந்திட, வளர்ந்திட மனிதனாக வந்த இயேசுவே உம்மை ஆராதிக்கின்றோம்….
- இறைச்சாயலை என்னில், பிறரில் காணும் கலையை கற்றுக்கொடுக்க பல உவமைகளால் எம்மோடு பேசியவரே, பல புதுமைகள் வழி எமக்கு இறை சாயலை உணர்த்தியவரே இறைச்சாயலை வெளிப்படுத்தும் எமது உடல், உள்ளம், ஆன்மா அழியாமல் காக்கப்பட்டு இறை சாயலை நாங்கள் பெறும் பொறுட்டு இறுதியில் தன்னுயிரையும் தந்த இயேசுவே உம்மை ஆராதிகின்றோம்….

**பாடல்:** பார்க்கும் முகமெல்லாம் இறைச்சாயல் தெரிகிறதே கேட்கும் மொழியெல்லாம் இறை வார்த்தை கேட்கிறதே...

**மன்னிப்பு:**

இறைவா நான் இறைச்சாயலில் படைக்கப்பட்டுள்ளேன். என்னுள் இறைச்சாயல் நிறைந்துள்ளது என்பதை மறந்து வாழந்த தருணங்களுக்காக இறைவா உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம்.

**பாடல்:** மன்னிப்பாயா மன்னிப்பாயா மன்னவனே என்னை மன்னிப்பாயா... இருவரிகள் மட்டும்.

- அன்பு, மன்னிப்பு, இரக்கம், பணிவு, தாழ்ச்சி, போன்றவை இறை குணங்கள் என்பதை அறிந்தும், இவற்றை என்னுள் வளர விடாமல் எனது தான் என்ற அகந்தையோடு வாழ்ந்த நேரங்களுக்காக மன்னிப்பு கேட்கிறோம்.
- என்னுள் இறைச்சாயல் இருப்பது போன்று மற்றவரிலும் இறைச்சாயல் உண்டு என்பதை மறந்து பிறர்மீது கோபம், வெறுப்பு, பகைமையை காட்டியதற்காகவும், உதவி செய்ய மறுத்ததற்காகவும் மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம்...

இறைவார்த்தை: தொ.நூ:1:26-27

கடவுள் மானிடரை தம் உருவிலும் தம் சாயலிலும் உண்டாக்குவோம்... என்கிறார். இறைச்சாயல் என்பது நான் இயேசுவாகவே மாறுவது, கடவுளின் பண்புகளான அன்பு மன்னிப்பு, இரக்கம், பகிர்வு, தாழ்ச்சி போன்ற பண்புகள் மனிதனிலும் மிளிர வேண்டும் என்பதற்காகத்தான் இறைச்சாயலை இறைவன் நமக்குக் கொடுத்தார். தன்னைப்போலவே மனித படைப்பும் இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்பினார். ஆனால் இன்று நம்மிடையே அன்பு, மன்னிப்பு, போன்றவை மறைந்தே போய் கொண்டிருக்கிறது.

கொலேசேயர் 1:15-ல் கூறப்பட்டுள்ளது போல இறைச்சாயல் நமது அன்றாட வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும். யோவான் 20:21ல், தந்தை என்னை அனுப்பியது போல நானும்

உங்களை அனுப்புகிறேன். தந்தை இறைவன் நம்மை எப்படி அனுப்பியுள்ளார் அவருடைய சாயலாக நம்மை அனுப்பியுள்ளார் அப்படியென்றால் நாம் அவராக வாழ வேண்டும். என் வார்த்தையால், வாழ்வால் அவருடைய அன்பை நாம் பிறரிடம் வெளிப்படுத்த வேண்டும். பிறரின் குறைகளை மன்னிக்கும் இறைவனை நாம் அறிவிக்க வேண்டும்.

வரையரை இல்லாத அன்பையும் மன்னிப்பையும் இரக்கத்தையும் என்னை சார்ந்தவர்களுக்கும், என்னை சாராதவர்களுக்கும், என்னை நிந்தனை செய்தவர்களுக்கும், சமுதாயத்தில் விளிம்பில் உள்ளவர்களுக்கும் என்னால் கொடுக்க முடியும் என்றால் நான் இறைச்சாயலை என்னுள் கொண்டு வாழ்கிறேன் என்று அர்த்தம்.

ஒருமுறை அன்னை தெரசாவிடம் அந்த சபையின் நவக் கன்னியர்கள் வந்து திவ்ய நற்கருணைப் பெட்டியில் உள்ள இயேசுவை எங்களுக்கு காட்டுங்கள் என்று கேட்டனர். அதற்கு அன்னை தெரசா அவர்கள் அனைவரையும் தெருவிற்கு அழைத்து சென்று தெருவில் உள்ள கைவிடப்பட்டவர்கள், நோயாளிகள், வீதியோரங்களில் வாழ்வோர் இவர்களில் உன்னால் இறைச்சாயலை காண முடியவில்லை என்றால் திவ்ய நற்கருணைப்பெட்டியில் உள்ள இறைவனையும் உன்னால் காண இயலாது என்று கூறினார். எங்கெல்லாம் இயலாமையின் கூக்குரல் கேட்கிறதோ அங்கெல்லாம் இறைச்சாயல் இல்லாமல் போய்யுள்ளது என்று அர்த்தம்

எனவே இறைச்சாயலை மீட்டெடுக்க இறைவனிடம் மன்றாடுவோம்.

**மன்றாட்டுகள்:**

**பாடல்:** தேவ சாயலாக நானும் மாறி தேவனோடிருப்பேன்…

- இங்கு எனது சாயல் குறைய வேண்டும் கடவுளின் சாயல் வளர வேண்டும். உருவத்தில் மனிதனாக இருக்கிறேன் ஆனால் மனிதத்தோடு இல்லை. புனிதனாக வாழ நல்ல மனிதனாக இருந்தால் போதும். உமது இறைச்சாயலை ஒருபோதும் நாங்கள் இழந்து விடாமல் இருக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- கிறிஸ்துமீது கொண்ட உண்மையான அன்பே கிறிஸ்துவின் அன்பர்களை அவருடைய சாயலாக மாற்றுகிறது. எனவே இயேசுவே உம்மீது நாங்கள் உண்மையான அன்பு கொண்டு வாழவும், உம்மீது கொண்ட அன்பு பிறரிலும் வெளிப்பட வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- அன்பு, இரக்கம், பகிர்வு, பணிவு, மன்னிப்பு போன்ற இறை பண்புகள் மறைந்து போய்விடாமல் அவைகளை எம் வாழ்வாக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மன்றாடுவோமாக:**

நாம் இறைச்சாயலை பெற, இழந்த இறைச்சாயலை புதுபிக்க

தேவையான வரங்களை நாம் இறைவன் முன் சமர்ப்பித்து அவரது அருளை வேண்டினோம். என்றும் இறைச்சாயலோடு வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு இறைவன் முன் நம்மையே அர்ப்பணிப்போம் அவரது அருளை வேண்டுவோம். ஆமென்.



## 54. இறைப்புகழுக்கான இறைவனை ஆராதிப்போம்

**ஆராதனைப்பாடல்:**

**முன்னுரை:**

“மனிதனோடு இருப்பதே” எனது ஆனந்தம் என்று மொழிந்த இயேசு ஆண்டவரே, உம்மைக்கண்டு உம்மில் இணைந்து உறவாட, உரையாட, வந்துள்ள எங்களை வரவேற்று உறவாட, மனம் கொண்டுள்ளீர். எங்கே இருவர் அல்லது மூவர் உமது திரு நாமத்தில் கூடுவார்களோ அங்கே அவர்கள் மத்தியில் இருப்பேன் என மொழிந்த ஆண்டவரே, உமது பாச சங்கலியால் இணைக்கப்பட்டு உமது திருமுன் அமர்ந்திருக்கும் எங்களைக் கண்ணோக்கும்.

உங்கள் நடுவே நான் உலவுவேன் நானே உங்கள் கடவுள்: நீங்கள் என் மக்கள் (லேவி 26:12) இதோ, நம்மை மீட்ட இறைவன் இங்கே இருக்கின்றார். பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த குழந்தை கலிலேயா கடலோரத்திலே சீடர்களோடு உரையாடி, உறவாடி, நன்மைகள், சாதனைகள், பல ஆற்றி வந்த இறைவனின் திருமகன், காற்றுக்கும், கடலுக்கும் கட்டளையிட்ட வல்லவர். சீமோனின் வீட்டில், லேவியின் இல்லத்திலே, சக்கேயுவின் மாளிகையிலே, விருந்துண்ட இயேசு, பாலை நிலத்தில் 5000 பேருக்கு, ஆண்டவர் புதுமையாக உணவளித்தார். (மத் 14 20) மகதலாவை மன்னித்த அதே ஆண்டவர் (லூக் 7 : 48) இதோ இங்கே அப்ப வடிவில் நம்முன் எழுந்தருளியிருக்கின்றார்.

கார் மேகமாய், அக்கினித் தூணாய், எரியும் முட்செடியாய், இடியிலும், மின்னலிலும், வல்லவராய் தோன்றிய ஆண்டவர், (எசாயா அமைதியின் 6.̇.1-3) மிகவும் உயரமானதோர் அரியணையில், ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன்: அவரது தொங்கலாடை, கோவிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேல் சேராபீன்கள் சூழ்ந்து நின்றனர், அவர்களுள் ஒருவர் மற்றவரைப் பார்த்து படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர் தூயவர், மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது என்று உரத்தக் குரலில் கூறிக் கொண்டிருந்தார்கள். **(எசா 6:1.3)** கூறப்பட்டுள்ள மாபெரும் இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்தி, நம் ஆலயத்திலே இப்போது எழுந்தருளியிருக்கும் இறைவனைப் புடை

சூழ்ந்து ஆராதனைக் கீதம் பாடும் வானவரை, மனக் கண்முன் கண்டு, அவர்களுடன் சேர்ந்து, நம் ஆண்டவரை ஆராதிப்போமா!

**புகழ்ச்சி:**

**பதில்:** உம்மை ஆராதிக்கின்றோம்

1.“உன்னதத்திலே இறைவனுக்கு மகிமை” **(லூக் 2:13)** என அவரது பிறப்பிலே, வானகம் நிறைய, இசை முழங்கிய, ஆயிரமாயிரம் வானவரைப் போன்று, மகிழ்ச்சி, உணர்ச்சியோடு இசைபாடி, ஆர்ப்பரித்து அவரை ஆராதிப்போம்….

2. பார்வையற்ற குருடனிடம் இயேசு நீர் அவரைப் பார்த்திருக்கிறீரா? உம்மோடு பேசிக் கொண்டிருப்பவரே அவர் என்றார். பார்வை பெற்றவர் ஆண்டவரே நம்பிக்கை கொள்கிறேன். (யோவின் 9:1, 5-7, 25, 35 - 38) என இயேசு கிறிஸ்துவைக் கண் முன் கண்டு ஆராதித்தாரோ, அதைப்போல வெண் அப்ப வடிவில் நம் முன் எழுந்தருளியிருக்கும் ஆண்டவரை ஆராதிப்போம்…

3. பன்னிரண்டு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண் இயேசுவின் ஆடையை நம்பிக்கையோடு தொட்டு குணம் பெற்று, நடுங்கி வந்து அவர் முன் விழுந்து ஆராதித்தது (மாற்.5:33) போல், நம்முன் எழுந்தருளி இருக்கும் அதே இயேசு ஆண்டவரை ஆராதிப்போம்…

4. உயிர்த்த ஆண்டவரைக் கண்டோம் என சீடர்கள் கூறியதை நம்பாதத் திருத்தூதர் தோமாவிடம், உயிர்த்த இயேசு “இதோ என் கைகள், இங்கே உன் விரலை இடு, உன் கையை நீட்டி, என் விலாவில் இடு, ஐயம்

தவிர்த்து நம்பிக்கை கொள்” என்று கூறிய இயேசுவைப் பார்த்து திருத்தூதர் தோமா நீரே என் கடவுள்! (யோவான் 20:25.27.28) என்று கூறி ஆண்டவரை தாழ்பணிந்து உருக்கமாக ஆராதித்தது போல் நாமும் அவரை ஆராதிப்போம்....

**மன்னிப்பு:**

இயேசு சிலுவையில் தொங்கிய போது தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை, என மன்றாடி நம் பகைவர்களுக்காகவும் நாம் செபிக்க வேண்டும் எனக் காட்டுகின்றார். நம் வேண்டுதல் செய்யும் போது யார் மேலாவது மனத் தாங்கல் கொண்டிருந்தால், மன்னிப்போம். அப்போது நம் விண்ணகத் தந்தையும் நம் குற்றங்களை மன்னிப்பார் என்ற மனநிலையோடு சற்று நேரம் அமைதியாக நற்கருணை நாதர் முன் நம் குற்றங்களை எண்ணி மனம் வருந்துவோம்.

**பாடல்:** மனம் வருந்தி மனம் திருந்தி......

**நற்கருணை நாதரின் மகிமை:**

திவ்ய நற்கருணையை கழுதை வணங்கிய புதுமை:

ஒரு முறை நாத்திகன் சமய ஒழுக்கங்களைத் தவறியவன் ஒருவன் புனித அந்தோனியாரிடம் வந்து நற்கருணையில் இயேசு ஆண்டவரின் பிரசன்னம் இல்லை என்று வாதிட்டான். அவன் அந்தோணியாரிடம் ஒரு போட்டி வைத்தான். நான் ஒரு கழுதையை மூன்று நான் உணவு எதுவும் கொடுக்காமல் பட்டினி போடுவேன். நான் புல் மற்றும் தண்ணீர் வைப்பேன் நீர் நற்கருணையை கொண்டுவாரும். கழுதை

முதலில் புல் தின்றால் நற்கருணையில் இயேசு ஆண்டவரின் பிரசன்னம் இல்லை என்று அர்த்தம். மாறாக உணவு உண்ணாமல் கழுதை நற்கருணையை வணங்கினால் நான் ஒரு கிறிஸ்தவனாக மாறுவேன் என்றான். அதற்கு அந்தோணியார் சம்மதித்தார். மூன்று நாட்களுக்கு பிறகு அந்த வீதியில் மக்கள் பலர் கூடினர். அதில் கிறிஸ்தவர்களும் நாத்திகர்களும் இருந்தனர். கழுதை கொண்டு வரப்பட்டது. அதற்கு முன் புல் போடப்பட்டது. அந்தோணியார், கையில் திவ்விய நற்கருணையுடன், பவணியாக வந்தார். என்ன ஆச்சரியம்! மூன்று நாள் பசியாக இருந்த புல் கட்டுகளைப் பாராமல் அந்தோணியார் வரும் திசையை நோக்கி முன்னங்கால்களை மடக்கி திவ்ய நற்கருணையை ஆராதித்தது கழுதை. அந்த நாத்திகனும் மனம் திரும்பி கிறிஸ்தவன் ஆனான்.

**சிந்தனை:**

இந்த நிகழ்வின் வழியாக அறிவற்ற கழுதை ஆண்டவராகிய இயேசுவை நற்கருணையில் கண்டு ஆராதிக்க ஆறறிவு பெற்ற மனிதர்களாகிய நாம் எத்தனை முறை நற்கருணையின் அமர்ந்திருந்தும் அவரதுப் பிரசன்னத்தை உணராமல் வாழ்ந்து வந்த நேரங்களை நினைத்துப் பார்த்து அவர் முன் சிறிது மனம் வருந்தியவர்களாய் இனிவரும் காலங்களில் நற்கருணையின் மீது தனியா தாகம் கொண்டவர்களாய் வாழ அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டு:**

"நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள்: மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார் என்று கூறிய இறைவனிடம் நமது மன்றாட்டுகளை ஏறெடுப்போம்.

1."ஆவியிலும் உண்மையிலும் பரம தந்தையைத் தொழுவார்கள்" என சமாரியப் பெண்ணிடம் கூறிய இயேசுவே! உண்மையானதை அறிந்து, வழிபடும் நேரமிது என்று உணர்ந்தவர்களாய் ஆவியின் அருளை வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புமிக்க ஆண்டவரே "எங்கள் விசுவாசத்தை அதிகமாக்கும்" என திருத்தூதர்கள் உம்மிடம் மன்றாடியது போல் எங்கள் விசுவாசத்தை அதிகரித்து உம்மில் ஆழ்ந்த பக்தி கொண்டவர்களாய் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பர் இயேசு தனது இவ்வுலக வாழ்விலே போதனையாலும், சாதனையாலும் அன்றாடம் கற்பித்தவர். பகலெல்லாம் போதித்த பின் இரவிலே மலைமேல் சென்று மன்றாடியது போல நாங்களும் நற்கருணை நாதரை இரவும் பகலும் ஆராதித்து, அவரது பிரசன்னத்தில் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். கேளுங்கள் பெற்றுக்

கொள்வீர்கள் என்று கூறிய இறைவா, உலக மக்கள் அனைவருக்கும் வளமான வாழ்வைக் கொடுத்து அனைவரும் உம்மை ஏற்று வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**செபிப்போமாக:**

எங்கள் அன்பான இயேசுவே நாங்கள் உம்மை நன்கு அறிந்து முழு உள்ளத்தோடு நேசிக்கவும் நற்கருணைப் பக்தியில் வளரவும் உமது உதவியை தந்தருளும். என் ஆண்டவரே என் கடவுளே! தேவரீர் உம்முடைய விலையேறப் பெற்ற திரு இரத்தத்தைச் சிந்திய வேதனைகளை மகிமைப் படுத்துவதே எமது விருப்பம் ஆக உதவிச் செய்யும் ஆண்டவரே! உமக்கு நன்றி செலுத்தவும், சேவை செய்யவும், எம் எல்லா தவறுகளையும், சரி செய்து பரிகாரம் செய்யவும், எம் ஆன்மாவையும், உடலையும் உமக்கு காணிக்கையாக்க விரும்புகிறோம். அவ்வாறே எம் எல்லா பாவங்களுக்காவும் மனம் வருந்துகிறோம்! இவைகளை எல்லாம் எங்கள் ஆண்டவரும் பரிசுத்தவருமான இயேசு கிறிஸ்துவின் வழியாக இறைஞ்சி மன்றாடுகிறோம் ஜீவனுள்ள நல்ல பிதாவே ஆமென்.



# 55. சாட்சிகளாக வாழவைக்கும் இறைவனை ஆராதிப்போம்

**முன்னுரை:**

இளம் மாலைப் பொழுதினிலே இறைவனோடு இணைந்து இரண்டறக் கலக்கும் இந்த 60 நிமிடங்கள் பல்வேறு நலன்களின் ஊற்றாகும். அனைத்து நன்மைகளில் தொடக்கமான இறைவன் நம் மத்தியில் பிரசன்னமாயிருக்கிறார். தாழ்ந்து பணிந்து அவரை ஆராதிப்போம். எங்கெங்கோ எவ்வெவற்றிலோ தொலைத்த நம்மை இறையில் கண்டறிந்து மீண்டும் புத்துயிர் பெற்றெழ அழைக்கும் நேரம். மனமாற்றம் ஒன்றே தேவை என ஏங்கி நிற்கும் இறைவனிடம் நம்மை அர்ப்பணிப்போம்! நமக்காக மரித்த அவரிலே நம் பாவங்களோடு நாமும் மரிப்போம். மறு கிறிஸ்துவாக உயிர்க்க நம்மைக் கையளிக்கும் மனதுடனே இவ்வாராதனை வேளையில் பங்கேற்போம்.

**புகழ்ச்சி:**

இறைவனை ஆராதித்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர் செய்த நன்மைகளை நினைத்து நன்றி கூறுவோம்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது என்ற இறை வசனத்தின் உண்மை நிலையை சற்று நம் வாழ்வோடு ஆராய்ந்து பார்ப்போம், இறைவன் நம் ஒவ்வொருவரையும் அவரது பணிக்காக பயன்படுத்தி இருக்கிறார். பயன்படுத்தியும் வருகிறார். கோதுமை மணியைப் போல நமது வாழ்வை புனிதப்படுத்தி நம்மை உருவாக்கிட, உருப்பெற்றிட சிரம் தாழ்த்தி நன்றி கூறுவோம்.

மலைப்போல துன்பம் நமை சூழ்ந்த நேரங்களில் நம்மை பக்குவப்படுத்தி துணிந்து போராட வலுவூட்டியவர் நம் இறைவன். நம்முடைய நன்மைத் தனங்களையும், தீய நெறிகளையும் சரிபார்த்து தகுந்த விதத்தில் நம்மை உருவாக்கியவர் நம் நற்கருணை நாதர். நமது வாழ்வில் எத்தனையோ நபர்கள் நம்மை கடந்து சென்றாலும், விலகி நின்றாலும் கரம்பிடித்து வழி நடத்தியவர் இறைவன், எனவே நன்றி கூறுவோம். நம்மை தந்தைப் போல தாயைப் போல தோளில் தாங்கி வழிநடத்திய இறைவனின் உண்மை அன்பை நினைத்து நன்றி கூறுவோம்.

**மன்னிப்பு:**

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்ற இறைவசனத்தின் படி பாவம் என்னும் சுமையால் பல்வேறு நேரங்களில் நாம் சோர்ந்து, இறைவனை விட்டு பிரிந்து வாழ்ந்திருப்போம், உயிரற்றவர்களைப் போல் நம் எண்ணங்கள் மரித்து போயிருக்கும்.

நம் இயேசு கிறிஸ்து தன்னுடைய இறப்பின் வழி மனிதனிடம் அவர் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தினார். உயிரற்றவராய் அவர் சிலுவையில் மரித்தாலும், அவருடைய அளவில்லா மன்னிப்பின் மேன்மை உயிர்பெற்று இருந்தது. எனவே இத்தகைய செம்மலின் உயரிய நோக்கங்களை பின்பற்றி வந்துள்ள நாம், நமது பாவங்களை அவர்முன் இறக்கி வைத்து அவரில் மரிப்போம். இயேசுவைப் போல் பரிசுத்தமாய் வாழ, நாம் அவரில் உயிர்பெற்று எழ மன்னிப்பினை வேண்டுவோம்.

பாடல்: மன்னிப்பாயா... மன்னிப்பாயா...

**நற்செய்தி:** (யோவான் 12:24 -26)

நற்செய்தி வாசகத்தில் இயேசு கூறுகிறார். தனக்கென வாழ்வோர், தம் வாழ்வை ஒரு பொருட்டாகக் கருதாதோர் நித்திய வாழ்வுக்கு தம்மை உரியவராக்குவார். ஆம் தனக்கென வாழ்வது அல்ல வாழ்வு, பிறருக்காக வாழ்வது தான் நிறைவாழ்வு. இத்தகைய வாழ்வைதான் இறைமகன் இயேசு நமக்கு வாழ்ந்து காட்டினார்கள். நல்லவர்கள் எவரும் புதைக்கப்படுவதில்லை. ஏனெனில் வாழ்ந்து முடிந்த பின்னும் அவர்களின் புகழ், மதிப்பீடுகள் மறையாது. விதைக்கப்படும் கோதுமையானது அழிவதில்லை அது இன்னும் பல கோதுமை மணிகள் தோன்ற காரணமாகின்றது. அந்த விதையானது மீண்டும் முளைத்து வருவது போல நாமும் நம் பாவ வாழ்விலிருந்து விடுபட்டு இறைவார்த்தையின் விழுமியங்களை நமது வாழ்வில் கைக் கொண்டு செயலாற்ற முன் வர வேண்டும்.

நாம் முயற்சி செய்கின்ற போது இறைவன் நம்மை வழிநடத்துவார். ஆகவே விதைகளைப் போல் பாவ வாழ்வில் இருந்து மீண்டு வருவோம். பிறப்போர் யாவரும் இறப்பது நிச்சயம் மண்ணில் மடியும் மனித வாழ்க்கை புனித வாழ்க்கையாக மலர முடியும். எனவே நாம் சிந்திப்போம்.

நாம் நமது வாழ்வில் செபத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செபவீரர்களாக வாழும் போதுதான் ஆண்டவரின் அருளை நிறைவாய் பெறுவோம்.

**செபிப்போமாக:**

எமக்காய் மரித்த எம் அன்பு இயேசுவே! நீர் உடைப்பட்ட போதே உம் அன்பின் ஆழம் இவ்வுலகம் அறிந்தது. உம் அன்பை அறிவிக்கும் கருவிகளாகிய நாங்கள் எம் பாவங்களுக்காய் மரித்து உம்மைப்போல உடைபட்டு உம் அன்பை அறிவிக்கும் அருள் எம்மில் நிறைந்திடவும் தவறுகின்ற நேரங்களில் உம் பேரன்பே எங்களை தேற்றிடவும் எங்களை உம்பாதம் அர்பணித்து வேண்டுகிறோம் எம் செபம் கேட்ட ஜீவனுள்ள நல்ல பிதாவே.



## 56. ஆசிர்வதிக்கும் ஆண்டவரை ஆராதிப்போம்

**ஆராதனைப் பாடல்:** ஆராதனை... ஆராதனை துதி ஆராதனை...

**தொடக்க செபம்**

எங்கள் தாயும் தந்தையுமாய் இருந்து எங்களைப் பலப்படுத்தும் எம் இறைவா! இந்த நாளிலே எம்மீது பொழியும் அபரிமிதமான ஆசீர்வாதங்களுக்காய் தெய்வீக அன்புடன் கூடிய அற்புத அதிசயங்களுக்காய் நற்கருணை வடிவான ஆண்டவரே உம்மைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கின்றோம்.

- ஆபிரகாமின் வழிமரபினரைப் பலுகிப் பெருக வைத்த தேவன் நம் குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக....

- ஈசாக்கிற்கு வழங்கிய அதே ஆசீர்வாதத்தை தம் மக்களுக்கும் வழங்குவாராக.... யாக்கோப்பின் சமூகத்தைப் போல் நம் சந்ததியினரையும் இறைவன் ஆசீர்வழங்கி காப்பாராக..........
- ஆகாரின் இகழ்ச்சியை மகிழ்ச்சியாய் மாற்றிய இறைவன் எங்கள் குழந்தைகளையும் ஆசீர்வதிப்பாராக....
- அன்னாளின் அழுக்குரலுக்கு செவிமடுத்த தேவன் எங்கள் பெற்றோரையும் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக....

பாடல்: இன்று முதல் உன்னை நான் ஆசீர்வதித்திடுவேன்.

பழைய ஏற்பாட்டில் இறைவனின் ஆசீர்:

- "உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன்... நீ ஆசியாய் விளங்குவாய்" எனும் இறைவார்த்தைக்கு ஏற்ப. இறைவன் நம்மை ஆசீர்வதித்து. நாம் ஆசீர்வாதமான வாழ்க்கை வாழ அழைப்புக் கொடுக்கிறார். ஆசீர்வாதமாய் வாழவே அவர் விரும்புகிறார்.
- மோசேயாய் நாமும் மாறி கடவுளின் மேல் நம்பிக்கை கொள்ள வேண்டும்ளு நம்பிக்கை நம் பயத்தை விலக்கி போடும்.
- 'பயம்' ஆசீர்வாதமாய் இருந்த கைக்கோலை 'சாபமாக' மாற்றியது.

**நமது வாழ்வில் ஆசீர்வாதத்திற்கு தடையாக இருப்பது???**

- நம்பிக்கை அற்ற நிலை... இன்றைய பலதரப்பட்ட சூழ்நிலைகளில் சிக்கி தடுமாறி நிரந்தரமற்ற, நம்பிக்கையற்ற மனிதர்களை நம்பி இறைவனையும் அவர் தந்துக்கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களையும் மறந்து விடுகிறோம்.
- நம்பிக்கை உடையோரை ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார். மனம் தடுமாறி குழம்பிய நிலையில் இருந்த சீடர்களுக்கு ஆண்டவர் இயேசு, நம்பிக்கையின் ஆசீர்வாதம் தருகிறார். இதற்காக அவர் நமக்கு அளித்த அற்புதமான வாக்குத்தத்தம்
- "உங்களைத் திக்கற்றவர்களாய் விடமாட்டேன் நம்பிக்கை கொள்ளுங்கள்"
- நாம் சோதிக்கப்படும் நேரத்தில் இறைவன் மீது நம்பிக்கை வைக்கவே அவர் நம்மை அழைக்கின்றார்.
- ஆபிரகாம் பலி ஒப்புக்கொடுத்ததால் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை இரட்டிப்பாக பெறுகிறார். 'விசுவாத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

நமது வாழ்வில் நமக்கு வரும் சோதனைகள் நம் ஆசீர்வாதத்திற்கு தடையாக இருக்கின்றன. ஆனால் அனைத்தும் இறையருளால் கடந்து போகும் என நம்புவோம். நம்மை காக்கும் கடவுள் அனைத்தையும் சீர்படுத்தி, உறுதிப்படுத்தி, பலப்படுத்தி, அனைத்தையும் அனுபவிக்க நல்

அனுபவங்களாய் மாற்றித்தந்து நம்மை ஆசீர்வதிப்பார் என முழுமையாக நம்புங்கள்.

**கடவுள் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார், நாம் ஆசீர்வாதமாக மாறியுள்ளோமா???**

ஆசீர்வதியும் தெய்வமே எங்களை ஆசீர்வதியும். விண்ணப்பங்களைக் கேட்டு விடுதலை தர, துன்பங்கள் விலகி சங்கடங்கள் தீர, போகும் போதும் வரும் போதும் நானே முழுதும் ஆசீர்வாதமாய் மாற, எங்களை ஆசீர்வதியும் எம் அன்பான ஆண்டவரே!

**மகிழ்ச்சியின் ஆசீர்வாதம்!**

நோய் நீங்க, பகைமை மாற, தனிமை நேரத்தில் நீரே எம் துணையாய். நின்று. எங்கள் துன்பம் நீங்கி தூய்மை வாழ்வு வாழ்ந்திட, எண்ணம் முழுதும் இன்பம் பொங்கிட ஆயுள் முழுவதும் எங்களை ஆசிர்வதித்து, உம் சிறகுகளின் அரவணைப்பில் காத்து வழிநடத்தும் இறைவா! உமது கரம் எம்மோடு உடனிருக்கும் போது "எத்தீங்கும் உம்மை அணுகாது" எனும் மகிழ்ச்சித் தைலத்தால் எங்களை ஆசீர்வதியும்.

**மன்னிப்பு:**

**பதில்: மன்னிப்பாயா-2 மன்னவனே என்னை மன்னிப்பாயா..**

- இறைவா! அடுத்திருப்பவருக்கு எதிராக நாங்கள் பாவம் செய்து, பாதை தவறி நடந்த நேரங்களில், தாங்கி பிடித்த உம் உதவிகரத்தை, உதறிவிட்டு, உமது ஆசீர்வாதங்கள் எமக்கு வந்து சேர,

தடையாய் இருந்த தருணங்களுக்காய், எங்களை மன்னியும்…

- ஆண்டவரே எங்கள் உடலால் நாங்கள் செய்த அனைத்து பாவங்களையும் உமது தோளில் சிலுவையாய் சுமந்து மீட்ட தெய்வமே! உமதன்பின் கிருபைக்கு முன்பாக, எங்களது பாவங்கள் “கதிரவன் கண்ட பனிபோல்” மறைந்து விடுகின்றதே... எங்களை மன்னியும் தெய்வமே…
- நல்லாயனே எம் தேவா! மனம் வருத்தப்பட்ட நல்ல கள்வனுக்கு. விண்ணகத்தையே பரிசாக கொடுத்தவர் நீர் மனம் நொந்தழுத சக்கேயுவுக்கு மீட்பின் பாதையை காட்டினீரே! உமது இரக்கத்திற்கு முன்பாக, நாங்கள் செய்த பாவங்கள் எல்லாம் ஒன்றுமே இல்லாமல் போய் விடுகிறது. இறைவா, எங்களை என் தேவனே! உமதுசாயலாய் எங்களைப் படைத்தீரே. ஆனால் நாங்கள் பாவம் செய்தோம். எங்களை மன்னியும்….
- உம் பரிசுத்த இரத்தத்தால் எம்மை கழுவும். தீய எண்ணங்கள். தீயபழக்கவழக்கங்கள், தீயவார்த்தைகள் அனைத்திலிருந்தும் நாங்கள் விடுதலைப்பெறுவதோடு, மீண்டும் மீண்டுமாய் நாங்கள் செய்யும் பாவத்திலிருந்து எங்களை மன்னியும்…..

**எசாயா 41.:.13**

“ஏனெனில் நானே உன் கடவளாகிய ஆண்டவர், உன் வலக்கையைப் பற்றி பிடித்து அஞ்சாதே உனக்குத்

துணையாய் இருப்பேன்" என்று உன்னிடம் சொல்பவரும் நானே!

**செபம் - (நற்கருணை)**

இன்றுமுதல் உன்னை நான் ஆசீர்வதிப்பேன். உன் நிறைவாழ்வு ஆற்றைபோல் பெருக்கெடுத்து ஓடும்! உன் வெற்றிகளோ, வற்றாத கடல் அலைபோல் வந்துக் கொண்டே இருக்கும். உன் வழித் தோன்றல்கள் கதிர் மணிகள் போல் பூத்துக்காட்சியளிப்பார்கள்.
ஏனெனில், இன்றுமுதல் உன்னை நான் ஆசீர்வதிப்பேன்... உன் கூக்குரலுக்கு தகுந்தவேளையில் பதிலளிப்பேன். உன் வேதனைநாளில் துணைநிற்பேன், வளமான வாழ்வினை நலமாகத் தருவேன., செல்வத்தைக் கொடுத்தருள்வேன். ஏனெனில் நான் உன்னை என் உள்ளங்கையில் பொதித்து வைத்திருக்கிறேன். என்று கூறிய நற்கருணை ஆண்டவரே! உமக்கு நன்றி.

**மன்றாட்டு:**

ஆண்டவர் மோசேவழியாக இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கிய ஆசீர்வாதம் நம்மைபின் தொடர, ஆசீர்வதிக்க, வழி நடத்த மன்றாடுவோம்.

- "உனக்கு ஆசி வழங்குவேன் உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாக விளஙகுவாய்" என்று ஆபிரகாமுக்கு வழங்கிய அதே ஆசீரை எம் குடும்பங்களுக்கு தரவும், நாங்கள் ஒவ்வொருவருமே ஆசீர்வாதமாக மாற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- “இன்று உங்களுக்க நான் ஆசி வழங்குவேன்” என்றவரே, ஒவ்வொரு நாளையும் ஆசீர்வாத நாளாய் மாற்றி எம்மவருக்கு வளத்தையும், உடல் சுகத்தையும், மகிழ்ச்சியையும், அன்பையும் தந்து உமதாசீர் பெருக, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- “உன் களஞ்சியங்களிலும் நீர் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் நீ ஆசிபெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார்” என்ற இறைவார்த்தையை எங்களுக்குரியதாய் மாற்றி எங்கள் நாட்டிலுள்ள அனைத்து ஏழை எளியவர்கள் வாழ்விலும், ஏற்றத்தைக் கொண்டுவர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- “நீ உயர்வாயேயன்றி தாழ்ந்து போகமாட்டாய்” என்ற உமது ஆசிர்வாத மொழிகள், இளைஞர்கள் வாழ்வில், புது உற்சாகம் தந்து, ஏமாற்றம், வேலைவாய்ப்பின்மை போன்ற எல்லா நெருக்கடியினின்றும் விடுதலை அடைந்து நிறைவாழ்வுப் பெற்றிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
- தக்ககாலத்தில் உன் நிலத்திற்கு மழை கொடுக்கவும். அதனால் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திற்கும் ஆசிவழங்கவும் நன்மைகளின் கருவூலமாகிய வானத்தை ஆண்டவர் உனக்காக திறப்பார். “நீ

பல்வேறு இனத்தாருக்கும் கடன் கொடுப்பாய் நீயோ கடன் வாங்கமாட்டாய்" என்ற இறை வார்த்தையை எங்கள் குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றி அருள்மழை பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**செபிப்போமாக:**

"உங்களுக்காக வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்கு தெரியும் அன்றோ? அவை வளமான எதிர்காலத்தையும், நம்பிக்கையை அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்கள் அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல" என்ற எரேமியா இறைவாக்கினரின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, நம்மையும், நம் குடும்பங்களையும், நம்மைச் சார்ந்தவர்கள் அனைவரையும், நற்கருணை ஆண்டவர் நிறைந்த ஆசீர்வாதத்தோடு வழி நடத்துவார், பாதுகாப்பார், பராமரிப்பார், பலப்படுத்தி தேற்றுவார், என்ற நம்பிக்கையோடு நம்மை தாழ்த்தி, ஒப்புக் கொடுத்து இறை ஆசீர் பெறுவோம். ஆமென்.






எல்லா வேலையிலும் துதியுங்கள்
பன்மடங்கு ஆசீர் பெறுவீர்கள்!